CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விகடன் பிரசுரம்

ஐயம் போக்கும் ஆன்மிகம்

பாகம் 3

ப்ரம்மஸ்ரீ
சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐயம் போக்கும் ஆன்மிகம் (பாகம் 3)

IYAM POKKUM ANMEEGAM

VOL-3

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐயம் போக்கும் ஆன்மிகம்

பாகம் 3



ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

விகடன்
பிரசுரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Title :
IYAM POKKUM ANMIGAM (Volume 3)
© SESHATRINATHA SASTRIGAL
ISBN : 978-81-8476-068-2

விகடன் பிரசுரம்: 311

நூல் தலைப்பு:
ஐயம் போக்கும் ஆன்மிகம் (பாகம் 3)

நூலாசிரியர்:
© ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

முதற்பதிப்பு : மார்ச், 2008
மூன்றாம் பதிப்பு : செப்டம்பர், 2009
விலை : ரூ. 75

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com

பதிப்பாளர்:	பா.சீனிவாசன்
ஆசிரியர்:	வீயெஸ்வி
பொறுப்பாசிரியர்கள்:	பொன்ஸீ, செங்கோட்டை ஸ்ரீராம்
உதவி ஆசிரியர்கள்:	சா.இலாகுபாரதி, எம்.நாகமணி, கே.பாசுமணி, எஸ்.கோபால், சிவராஜ்
தலைமை வடிவமைப்பு:	மு.ராம்குமார்
வடிவமைப்பு:	அ.அன்பழகன், கா.மங்களேஸ்வரன், கோ.செந்தில்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பதில்களைத் தேடும் மனம்

'தேடலும் கேள்விகளும்தான் மனதை தீவிரமான ஆன்மிக பாதைக்கு அழைத்துச் செல்கின்றன' என்கிறார்கள் பெரியோர்கள்.

ஆன்மிகம் தொடர்பான கேள்விகளும் சந்தேகங்களும் மிக இயல்பாக நம்மோடு இருக்கின்றன. நாம் எல்லோருமே பதில்களைத் தேடும் மனநிலையில்தான் இருக்கிறோம். அதன் காரணமாகவே இறைவனை அறிய ஆவலுறுகிறோம்.

இறைவன் எங்கிருப்பான்... எப்படியிருப்பான்... என்னவெல்லாம் செய்வான்... யாரெல்லாம் அவனை அறிந்தவர்கள்..? பாவம் - புண்ணியம், நல்ல நேரம் - கெட்ட நேரம் என்பதெல்லாம் என்ன..? அன்றாட வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்கள் சரிதானா?

- இதுபோன்ற பல கேள்விகளுக்கு 'சக்தி விகடன்' இதழில் தொடர்ந்து பதிலளித்து வருகிறார் ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள். ஐயம் போக்கும் விதத்தில் அவர் அளித்துவரும் ஆன்மிக பதில்கள் வாசகர்களை பெரிதும் கவர்ந்து வருகின்றன.

இந்த பதில்களின் தொகுப்பு ஏற்கெனவே 'ஐயம் போக்கும் ஆன்மிகம்' என்ற தலைப்பில் இரண்டு பாகங்கள் விகடன் பிரசுரமாக வெளியாகி பரவலான பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன. இப்போது உங்கள் கைகளில் தவழ்வது அதன் மூன்றாம் பாகம்.

இந்த நூலிலும் ஆன்மிகம் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு தெளிவான பதில்களை அளிக்கிறார் சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

படித்துப் பயன்பெறுங்கள்!

–ஆசிரியர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரத்தினக் கல்லில் ஊடுருவும் ஊசி...

முன்னோர்கள் நடந்து சென்ற வாழ்க்கைப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதையாக இருந்திருக்கிறது! அவர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் ஏராளம். துன்பங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு, அந்தக் கரடு முரடான பாதையைச் செப்பனிட்டார்கள்.

இப்போது அந்தச் சீரான வழியில் பயணிப்பவர்களுக்கு அசதி இருக்காது. பயணிகள் தங்கள் இலக்கை எளிதில் எட்டி விடுவார்கள்.

வாழ்க்கைப் பாதைகளைச் செப்பனிடப் பரிந்துரைத்தது வேதம். நடத்திக் காட்டியது இதிகாச, புராண கதாபாத்திரங்கள். தூய்மையான வாழ்க்கை மற்றும் உயர்ந்த சிந்தனைகள் அந்தப் பெரியோர்களிடம் தென்படும். எதிரிகளையும் நல்வழியில் சேர்த்துக்கொள்பவர்கள் அவர்கள்.

'அறக்கல்வியியல் முழு அறிவு பெறுவது கடினம். பெரியோர்கள் சென்ற வழியில் வாழ்க்கைப் பயணத்தைத் தொடருங்கள், முழு பலனைப் பெறலாம். அந்த இனிமையான பயணத்தில் மனம் விரும்பும் விருப்பம் நிறைவேறும்' என்று ஸனாதனம் சொல்கிறது. (மஹாஜனோ யேனகத: ஸபந்தா:)

'ரத்தினக் கல்லில் கூறான ஊசி கடினப்பட்டு ஊடுருவி ஓட்டையை உண்டு பண்ணும். ஊசியைத் தொடர்ந்து வரும் நூல், அனாயாசமாக ஓட்டை வழிப் பயணத்தை முடிக்கிறது!' என்று காளிதாசன் கூறுவான். நூலுக்குக் கூறு இல்லை; திறமையும் குறைவு. இருந்தாலும் ஊசியோடு இணைந்து இலக்கை எட்டி விடுகிறது.

நடந்து நடந்து தேய்ந்த ஒற்றையடிப் பாதை காலுக்கு மெத்தை; நடந்தால் களைப்பு இருக்காது.

கேள்வி, சந்தேகம் இருப்பவர்களிடமிருந்து வெளிவருகிறது... பதில், பலபேருக்கு சந்தேகம் தோன்றவிடாமல் செய்கிறது. பயிருக்காகப் பெய்யும் மழை பலபேருக்குப் பயன்படுகிறது.

ஆன்மிக அறிவு, கேள்வி-பதில் உருவில் வெளிப்படுவது சிறப்பு. உபநிடதங்கள் இம்முறையைக் கையாண்டு வழிகாட்டியிருக்கின்றன.

சமையல் செய்தவன் ஒருவன். பகிர்ந்தளிப்பவர்கள் நாங்கள், உண்பவர்கள் மகிழ்ச்சி எங்களது இலக்கு. சேவை செய்ய தருணம் கிடைத்ததில் பெருமிதம் உண்டு.

– சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதம்,

புராணம்,

தர்ம சாஸ்திரம்,

மனநலம்,

உடல்நலம்,

அன்றாட நடைமுறை,

வழிபாட்டு முறைகள்,

ஆகம விதிகள்,

ஐதீகம்,

சடங்கு,

சம்பிரதாயம்,

கலாசாரம்...

ஆகியவை பற்றி

உங்கள் கேள்விகளுக்கு

விடைகள் உள்ளே...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தலையில் தேங்காய் உடைக்கலாமா?

குடும்பத்தில் ஒருவர் சந்நியாசம் வாங்கிக்கொண்டு ஸித்தி அடைகிறார். அந்த திதியில் சாஸ்திர முறைப்படி சிராத்தம் செய்ய வேண்டுமா, ஆராதனை செய்தால் போதுமா?

- தேதியூர் பாலு, சென்னை-11.

சந்நியாசம் வாங்கிக் கொள்ளாதவர்களுக்குச் செய்வதற்கு சிராத்தம் என்று பெயர்; வாங்கிக் கொண்டவர்களுக்குச் செய்வது ஆராதனை. மாறுதல் சொரூபத்தில்தான். சிராத்தம், நாந்தீ சிராத்தம் என்பதுபோல இறந்தவர்களுக்கு அந்தந்தத் திதி வரும்போது சிராத்தம் செய்வார்கள். மாளயபட்சம் வரும்போது சிராத்தம் செய்கிறார்கள். ஆராதனை என்பது சிராத்தத்துக்கு சமானம்தான்.

வாஸ்தவமாகவே சந்நியாசியாக இறந்துபோனால் சிஷ்யர்கள் ஆராதனை செய்வார்கள். அப்போது வீட்டில் இருப்பவர்களும் சிராத்தம் செய்வது வழக்கம்தான். சந்நியாசியாகப் போய்விட்ட முன்னோர்களின் உறவைத் துண்டித்து விடுவதில்லை. ஏற்கெனவே ஆராதனம் செய்யப்பட்டவர்களுக்கும் மாளயபட்சத்தின்போது சந்யஸ்த மாளயம் (யதி மாளயம்) என்று செய்யப்படுவதுண்டு.

இறந்தவர் கிரகஸ்தராக இருந்தாலும் அவருக்கு ஆராதனை செய்தாலும் செய்பவர் மனதில் அது சிராத்தம் என்கிற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எண்ணம்தான் இருக்கும். சந்நியாசம் வாங்கிக்கொண்டு போனது தாத்தாவானால், தர்ப்பணம் பண்ணும்போது 'சந்நியாசம் வாங்கிக்கொண்டு போன தாத்தா' என்று அடைமொழியே கூறி பண்ணுவதுண்டு.

புராண காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் புஷ்பக விமானங்கள் ஆகாயத்தில் பவனி வந்த விதம் எப்படி? திரைப்படங்களில் காட்டுவதுபோல குதிரைகள் பூட்டியா பறந்திருக்கும்?

– இரா.கல்யாணசுந்தரம், மதுரை-9.



விஷ்ணுவின் உருவம் பார்த்திருக்கிறோம். சிவன் உருவம் பார்த்திருக்கிறோம். அவற்றுக்கு அடிப்படை என்ன? புராணங்களிலும் வேதங்களிலும் அந்தந்த தெய்வங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் சில குறிப்புகளை வைத்து தனது சிந்தனையையும் சேர்த்து ஓர் உருவத்தை வரைந்தார்கள் ஓவியர்கள். இன்னும் சொல்லப்போனால் லட்சுமி, ராமன், பரமேஸ்வரன்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சரஸ்வதி போன்ற தெய்வங்களின் படங்கள் எல்லாம் இன்றும் ரவிவர்மா வரைந்த படங்கள்தான். சரஸ்வதி என்றால் வீணையை இப்படி வைத்து அமர்ந்திருப்பாள் என்பது அவருடைய சிந்தனை. அவற்றை எல்லாம் முதலில் இருந்தே பார்த்துப் பழகியதால் அதைக் கேள்வி கேட்கவில்லை.

ஏழு குதிரைகள் பூட்டி சூரியன் ஆகாயத்தில் போகிறான் என்பது வேதம் சொல்வது. அப்படி வரையப்பட்ட படத்தைப் பார்க்கும்போது சூரியனின் பெருமையிலேயே உங்கள் கவனம் இருந்தது. அதனால் ஆகாயத்தில் எப்படி குதிரை போகும் என்பதுபோல உங்களுக்குத் தோன்றவில்லை. விமானம் என்றதும் இப்போது உங்களுக்கு என்ன தெரிகிறதோ, அதை புஷ்பக விமானம் என்பதோடு பொருத்திப் பார்க்கிறீர்கள். நூறு வருஷம் கழித்தால் இப்போது இருக்கும் விமானத்தின் வடிவமே மாறியிருக்கும். இப்போது உள்ளதை அப்போது கற்பனையில் பார்க்க முடியாது. அதைப்போல புஷ்பக விமானம் வேறு ஒரு வடிவத்தில் இருந்திருக்கலாம்.

ஆகாயத்தில் பறந்துபோகக் கூடியவை எல்லாமே விமானம்தான். விமானத்தை உருவாக்குவது எப்படி, அதை இயக்குவது எப்படி, எந்தெந்த உலோகங்கள் தேவை என்றெல்லாம் தனி ஒரு சாஸ்திரமாகவே எழுதி வைத்திருக்கிறார் பரத்வாஜ மகரிஷி.

விழாக்களில் அன்பளிப்பாக வரும் சேலை, ரவிக்கைத் துணி, தேங்காய் போன்றவற்றை இறைவனுக்குப் படைக்கலாமா?

- கே.நீலா, சென்னை-18.

நாம் சாதாரண நாளிலேயே பகவானுக்கு ஒரு தேங்காய் உடைக்க நினைத்து, அன்று கையில் பணம் இல்லாத நிலை என்றால், தானமாகக் கிடைத்த தேங்காயை உடைக்கிறோம். அப்போது இந்த நெருடல் ஏற்படுவது இல்லை. எல்லாப் பொருட்களும் நமது உழைப்பில் வந்தவை அல்ல. ஏராளமான பொருட்களை இனாமாகப் பெறுகிறோம். நமது உழைப்புக்குப் பத்து ரூபாய் அதிகமாகக் கிடைத்தால், அதுவும் இனாம்தான். அன்பளிப்பாக வருவதால் ஒரு பொருள் தரம் தாழ்ந்தது என்பதில்லை. அன்பளிப்பு என்றாலே 'இந்தப் பொருளை உன் உடைமை ஆக்குகிறேன்!' என்பதுதான். உங்கள் உடைமையை நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாமே... அது கடவுளுக்குப் படைக்கிற தகுதியோடு இருக்கிறதா என்பதைப் பார்த்தால் போதும். ஏதோ வந்தது, தள்ளிவிடுவோம் என்கிற நினைப்போடு பண்ணக்கூடாது.

அன்றாட நடைமுறையிலேயே அன்பளிப்பாகக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கிடைத்ததைத்தான் பகவானுக்குக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். பகவான் அன்பளிப்பாகக் கொடுத்ததுதான் தண்ணீர். நீங்களா உண்டாக்கினீர்கள்? அதைக் கொண்டு பகவானுக்கு அபிஷேகிக்கிறீர்களே... அதுபோல்தான் இதுவும்!

ஓர் ஊரில், மண்டையில் தேங்காய் உடைக்கும் வழக்கத்தை மாற்றிக்கொள்ள மறுக்கிறார்களே... அது பற்றி தங்கள் கருத்து என்ன?

– எல்.ஹேமா, கும்பகோணம்.

பழைய காலத்தில் சில சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். சிலருக்கு அதில் நம்பிக்கை இருந்தது. காலப்போக்கில் நம்பிக்கை இல்லாதவர்களும் இருக்கிறார்கள். கோயிலில் இருக்கும் சிலையை கடவுள் என்பவரும் உண்டு; கல் என்பவரும் உண்டு. சம்பிரதாயத்தில் நம்பிக்கை இருப்பவர்களுக்கு அது உயர்ந்ததாகப்படும். நம்பிக்கை இல்லாதவர்களுக்கு அது தேவை இல்லாததாகப்படும். கண்ணோட்டத்தில் வெவ்வேறு வகை உண்டு.

அபிஷேகம் செய்தால் வீண்... அந்தப் பாலைக் குழந்தைக்குக் கொடுத்திருக்கலாமே என்று சொல்பவர்களும் இருப்பார்கள். என் வயிற்றில் பால் வார்ப்பவரான பகவானுக்கு, நான் பால் அபிஷேகம் செய்வது எவ்வளவு உயர்ந்தது என்று இன்னொருத்தர் சொல்வார். 'ஒன்று உயர்வு; மற்றது தாழ்வு!' என்றெல்லாம் சொல்ல முடியாது.

மனதில் இருக்கும் நம்பிக்கையை வைத்துத்தான் எல்லாம் வந்தது. ஏதோ ஒன்றின்மேல் நம்பிக்கை இல்லாமல் நம்மால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாழவே முடியாது. கடவுள் நம்பிக்கை இல்லையானாலும் யாரோ ஒரு மனிதனை நம்பித்தான் ஆகவேண்டும். மனிதன் ஏமாற்றுவான்; கடவுள் ஏமாற்ற மாட்டார். இதுபோன்ற விஷயங்களில் நமது சொந்தச் சிந்தனையால் ஒரு முடிவுக்கு வருவது சரியாக இருக்காது. முன்னோர் சொல்லி வைத்ததைப் பின்பற்ற வேண்டியதுதான்.

நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைக் கற்றுக் கொள்ளவே உங்களுக்கு நேரம் போதாது.

எனவே, சாஸ்திரங்களுக்குள் எல்லாம் நுழைந்து சிரமப்படாதீர்கள். எங்கேயோ போய்ப் பார்த்துவிட்டு, 'தலையில் தேங்காய் உடைக்கிறாரே... நாகரிகமாக இல்லையே? இதை மாற்ற வேண்டுமே!' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? யோசித்துப் பார்த்தால், நம் ஒவ்வொருவரிடமும் நாகரிகமில்லாத எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன.

எனவே, நம் கண்ணோட்டத்தில்தான் பேதம் இருக்கிறது. 'என் கண்ணோட்டம்தான் சரி, மற்றவர் கண்ணோட்டம் எல்லாம் தவறு!' என்று சொல்லாதீர்கள். உங்கள் தலையில் யாராவது தேங்காய் உடைக்க வந்தால் ஒப்புக்கொள்ளாதீர்கள். நம்பிக்கை இருப்பவர்களுடைய செயலில் குறுக்கிடத் தேவையில்லை.

ஒரு சில கோயில்களில் கூட்டம் அதிகமாக இருக்கும்போது கருவறைக்கு வெளியிலேயே ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்கிறார்கள். இது மனதுக்கு திருப்தியாக இல்லை. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

- வி. ராணி, குடவாசல்

கோயில், மக்களுக்காக ஏற்பட்டது. பரார்த்த பூஜை என்பார்கள்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதாவது பிறருக்காகச் செய்யப்படும் தெய்வ வழிபாடு. தனக்காக தனது வீட்டில் பூஜை செய்வது ஸ்வார்த்த பூஜை.

ஆகம சாஸ்திர விதிகளின்படி எல்லோரும் நேரடி பூஜை செய்ய இயலாது. தகுதியுடையவர்கள் பிறருக்காக பூஜை செய்யலாம் என்பது விதி.

கடவுளின் சாந்நித்தியத்தைக் காப்பாற்றும் தகுதி படைத்தவர்களை பூஜை செய்ய அனுமதிக்கிறது ஆகமம். அத்துடன் பூஜை செய்ய இயலாதவர்களுக்காக, கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும் என்ற கடமையும் அவருக்கு உண்டு. சுருங்கச் சொன்னால் தானும் உயர்ந்து, பிறரையும் உயர்த்தும் பொறுப்பை அவரிடம் சுமத்துகிறது ஆகமம். தனது கடமையை ஆற்றிய பிறகு, நலிந்தோரையும், ஆன்மிகத்தில் இணைக்க அவர்களுக்காகச் செய்யப்படும் சிறப்பு வழிபாடு அது.

அன்றாடம் வாழ்க்கையில் அல்லல்படும் அப்பாவி மக்களுக்கு பண்பாட்டைப் போதிக்கும் பல்கலைக் கழகம் கோயில். கெட்ட எண்ணங்கள் அகன்று நல்ல எண்ணங்கள் வளர, கடவுள் வழிபாடு துணை புரியும். பூஜை செய்வதைப் பக்தர்கள் பார்த்தாலே போதும். அவர்களுக்கு அது முன்னேற்றத்தை அளித்து விடும்.

மெத்தப் படித்தவனின் பலனை, சாதாரண பக்தன் கடவுளை வணங்கியே பெற்று விடுகிறான். தர்ம சாஸ்திரம் பக்தனுக்கு பூஜையில் இருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறது. அவனது அறியாமையை எண்ணி விதியைத் தளர்த்தியிருக்கிறது.

ஊனமுற்றோருக்கும், நலிந்தோருக்கும் விதியை மீறி விலக்கு அளிப்பதுண்டு. வழக்கறிஞர் நமக்காக வாதாடி வெற்றி பெறச் செய்கிறார். அவரது செயலின் பலன் நமக்குக் கிடைக்கிறது. திருமணத்தை நடத்தி வைக்கிறார் புரோகிதர். திருமணத்தின் பயனை நாம் சுவைக்கிறோம். மருத்துவர் பிணியை அகற்றுகிறார். மகிழ்ச்சியை நாம் அனுபவிக்கிறோம். கடமை உணர்வோடு, தெய்வ வழிபாட்டை சிறப்பிக்கிறார் அர்ச்சகர். அதன் பலன் பொதுமக்களுக்கு கிடைக்கிறது. தேவையை உணர்ந்து அன்றைய அரசர்கள், பக்தனுக்கு உதவ கோயிலைக் கட்டினார்கள்.

கோயில்களில் கூட்டம் அதிகமாக இருப்பது இயல்பான ஒன்று. சந்நிதியில் செய்யும் வழிபாட்டை எல்லோராலும் பார்க்க இயலாமல் போகலாம். எனவே, பக்தர்களின் மனத் திருப்திக்காக சந்நிதிக்கு வெளியே பணிவிடை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்.

சில நேரம் விரிவாக பூஜை செய்யும்போது மூலவர் சந்நிதியில் இடப் பற்றாக்குறை ஏற்படும். அப்போது பக்தர்களை வெளியே அர்ச்சனை செய்ய நிர்ப்பந்திக்கலாம். அது தவறல்ல.

முதியோர், குழந்தைகள் என்று கோயிலுக்கு வர இயலாதவர்கள் பலர் இருக்கலாம். அவர்களுக்காகவே கடவுள், வீதி உலா வருகிறார். அவருக்கு தெருவில் பூஜையும், பணிவிடையும் நிகழும். அதையும் அவர் ஏற்றுக் கொள்கிறார்.

எங்கும் நிறைந்த பரம்பொருளை வணங்குவதற்கு குறிப்பிட்ட இடம்தான் வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. நம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மனதைப் பண்படுத்தும் நோக்கத்தில், வழிபாட்டின் இடம் நிர்ணயிக்கப்படுகிறது. மருந்து வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட தெய்வத்துக்கு சில சிறப்பு நடைமுறைகள் இருக்கும். அதுவும் சில நேரத்தில் ஆகமத்துக்குப் புறம்பாகச் செயல்படாமல் பூஜைகளைச் செய்யலாம். எனவே, சந்நிதிக்கு வெளியே வந்து அர்ச்சனை நிகழ்த்துவது தவறில்லை!

சுப காரியங்களின்போது வலக் காலை எடுத்து வைத்து வரச் சொல்வது, ஏன்?

- எம்.எல்.ஏ. நாராயணன், மயிலாடுதுறை-2

உணவு உட்கொள்ள வலக் கரம் பயன்படுகிறது. கொடை வழங்க வலக் கை முந்துகிறது. பிறருக்கு உதவ வலக் கரத்தை நீட்டுகிறோம். மனைவியை வலக் கரத்தால் ஏற்றுக் கொள்கிறோம் (பாணிக்ரஹணம்). அறத்தை செயல்படுத்தும் வேளையில், மனைவியை வலப் பக்கம் இருத்துகிறோம். வில்லில் தொடுத்த அம்பை வலக் கரம் இயக்குகிறது. கடவுளுக்கு வலக் கரத்தால் பணிவிடை செய்கிறோம். வரவேற்பிலும், விடையளிப்பதிலும் வலக் கரம் செயல்படுகிறது. இப்படி, செயல்பாடுகளில் இயல்பாகவே வலக் கரம் முந்திக் கொள்ளும்.

இயற்கைக்கு மாறாக இடக் கையைப் பயன்படுத்துபவர்களும் உண்டு. அது விதிவிலக்கு. மூளையின் உத்தரவை இடக் கை முந்திக் கொண்டு செயல்படுத்த, பிறகு அதுவே பழக்கமாகி நிலைத்து விடும். இப்படித்தான் இடக் கை, வலக் கையின் இடத்தைப் பிடித்திருக்கிறது எனலாம். இடக் கையைப் பயன்படுத்துவதை அநாகரிகமாகக் கருதுபவர்களும் உண்டு. சுத்தம் செய்ய இடக் கை பயன்படுவதால், மற்ற காரியங்களில் அதற்கு முன்னுரிமை இல்லை என்று எண்ணுபவர்களும் உண்டு.

கால்களது செயல்பாடு, கைகளைப் போல் அல்ல. வலக் காலும், இடக் காலும் இணைந்துதான் நடக்க வேண்டும். ஒன்றை பூமியில் அழுத்தி, மற்றதை முன்னே வைக்க வேண்டும். அப்போது, வலக் காலை முன்னே வைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது.

'நல்ல காரியங்களில், முதல் அடி எடுத்து வைப்பது வலக் காலாக இருக்க வேண்டும்!' என்று சாஸ்திரம் கூறும். பல முன்னேற்றங்களுக்கு வலக் கையைப் பயன்படுத்திய அனுபவம் நமக்கு இருப்பதால்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'முதலில் வலக் காலை எடுத்து வைப்பது முன்னேற்றத்துக்கு உதவும்!' என்று நம் மனம் நம்பி விடும். உடலின் இரு கூறுகளில் இடக் கூறை விட, வலக் கூறு பலம் பொருந்தியது என்று வேதம் கூறும் *(தஸ்மாத் தக்ஷிணோர்த்த ஆத்மனோவீர் யாவததர:)*. பக்கவாதம் தாக்கும்போது உடலின் வலப் பக்கம் வீழ்ந்தால், அது நமது நம்பிக்கையை இழக்கச் செய்யும். பலமான பகுதி வீழ்ந்ததாக ஆயுர்வேதம் கூறும். வலக் கூறுகளுக்கு வேதம் பெருமை அளிக்கிறது. எனவே, புதுமனை புகு விழா போன்ற நிகழ்வுகளில், முதலில் நுழைய வேண்டியது காலாக இருப்பதால், 'வலக் காலை எடுத்து வைத்து நுழைய வேண்டும்' என்று பரிந்துரைக்கிறது தர்மசாஸ்திரம்.

அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை நட்சத்திரம்- ஆகிய தினங்களில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாமா?

- எழில்முருகன், கும்பகோணம்

அமாவாசை- முன்னோரை வழிபடும் நாள். பௌர்ணமியும் கார்த்திகை நட்சத்திர நாளும் விரதம் இருக்க வேண்டிய நாட்கள். பஞ்சாங்கத்தில் பௌர்ணமி விரதம், கார்த்திகை விரதம் என்று குறிப்பிடப் பட்டிருக்கும்.வருஷத்தில் வரும் பௌர்ணமி மற்றும் கார்த்திகை தினங்களில் பலதரப்பட்ட விரதங்கள் தென்படும்.

அவற்றைச் செயல்படுத்தும் வேளையில், எண்ணெய் தேய்த்துக் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். விரதத்தின் பயன் முழுமை பெற அது உதவும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உடல் உறுப்புகளை தானம் செய்வது சாஸ்திரத்துக்கு விரோதமானதா?

வீடுகளில் உள்ள சிறிய விளக்குகளை தினமும் தேய்த்து உபயோகிக்க வேண்டுமா? திரி மட்டும் மாற்றி உபயோகிக்கலாமா? தினமும் திரி மாற்றவேண்டிய அவசியம் இல்லை என்று பலர் சொல்கிறார்கள். விளக்குங்களேன்.

- எஸ்.பத்மா, சென்னை-85.

தினமும் நாம் குளிக்கவேண்டும். வேட்டி மட்டும் மாற்றினால் போதுமா? தினமும் வேட்டி மாற்றிக்கொள்கிறோம். குளிக்க வேண்டாமா?

பன்னிரண்டு மணிநேரம் தூங்கி எழுந்தோமானால் குளித்துத்தான் ஆகவேண்டும். துவைத்த வேட்டிதான் உடுத்தவேண்டும். இது புது வேட்டி. ஒரு வாரம் கட்டிக்கொள்வேன் என்று சொல்லலாமா?

விளக்கை சுத்தம் செய்யத்தான் வேண்டும். அது தங்க விளக்காக இருந்தாலும் வெள்ளி விளக்காக இருந்தாலும் துடைக்கவேண்டும். பித்தளையாக இருந்தால் தேய்த்தே ஆகவேண்டும். திரியையும் முந்தைய நாளின் மிச்சமாக விட்டுவிடாமல் தூக்கி எறியத்தான் வேண்டும். ஒரு நாளைக்கு எரியும்படியான திரியைத்தான் போடவேண்டும். போடுவது போடுகிறோம், ஒரேயடியாகப் போட்டுவிடலாம் என்று முழ நீளத்துக்குப் போடக்கூடாது. விளக்கு என்பது வெளிச்சம் சம்பந்தப்பட்ட சமாசாரம் இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அது மங்களகரமானது. கலாசாரம். வெறும் வெளிச்சத்தைக் காட்ட வேண்டுமானால் மின்விளக்கே போதுமே... விளக்கு எரிகிறது என்றால் அங்கே அக்னி பகவான் அமர்ந்திருக்கிறார் என்று பொருள். நேற்றைய கரியிலேயே இன்று அவரைக் கொண்டுபோய் உட்கார வைப்பதா?

தினமும் திரி மாற்றவேண்டும். விளக்கை சுத்தம் செய்யவேண்டும். இதற்கு சோம்பலாக இருந்தால் விளக்கே ஏற்றாதீர்கள். கடவுளை மனதில் நினைத்துக்கொண்டாலே போதும். பரமாத்மாவின் சொரூபமாக விளக்கை ஆராதனம் பண்ணிக்கொண்டிருக்கிறோம். அதற்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டாமா?

வீட்டில் லிங்கம் வைத்து வழிபடலாமா? சிலர் கூடாது என்கிறார்களே?

- வெண்ணிலா.டி, சென்னை-20.

இரண்டு நடைமுறைகள் வைத்திருக்கிறோம். ஒன்று கோயிலுக்குச் சென்று வழிபடுவது. மற்றொன்று வீட்டிலேயே வணங்குவது. கோயிலில் இருக்கும் ஸ்வாமி, மருந்து வைத்து நிரந்தரமாகப் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. இதற்கு அசரம் என்று பெயர். வீட்டில் இருப்பதை எங்கேயும் எடுத்துப் போகலாம். இதற்கு சரம் என்று பெயர்.

வீட்டில் பஞ்சாயதன பூஜை என்று வைத்திருக்கிறோம். ஆதித்யம், அம்பிகாம், விஷ்ணும், கணநாதம், மகேஸ்வரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



என்பார்கள். சூரியன், அம்பாள், நாராயணன், பிள்ளையார், மகாதேவன் ஆகிய ஐந்து உருவங்களை வணங்குவது பஞ்சாயதன பூஜை. விஷ்ணுவுக்கு சாளக்ராமம். சிவனுக்கு பாணன் என்று வைப்போம். இந்த ஐந்து பேரையும் வீட்டில் வைத்து அபிஷேகம் செய்வித்து வழிபடுவது பாரதிய கலாசாரம். இதில் சிவனிடம் அதிக ப்ரீதி இருந்தால், லிங்கத்தை நடுவில் வைத்து மற்றவற்றை நாற்புறங்களிலும் வைப்பார்கள். விஷ்ணு மேல் ப்ரீதி அதிகம் என்பவர்கள், சாளக்ராமத்தை நடுவில் வைத்து மற்றவற்றை நாலு பக்கங்களிலும் வைத்து வணங்குவார்கள். பாகுபாடு ஏதும் இல்லை. இந்த முறையில் சிவலிங்கத்தைப் பூஜை செய்வது அவசியம். சாளக்ராம வழிபாடும் அவசியம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புரட்டாசி மாதத்தில் புலால் உணவைத் தவிர்க்கவேண்டும் என்பதற்குப் பிரத்தியேகக் காரணங்கள் உண்டா?

- கே. தெய்வசிகாமணி, சென்னை-5.

மனித இனத்தின் ஆகாரம் என்பது இன்னோர் உயிரைச் சாப்பிடுவது என்று வைக்கவில்லை. மனிதன் உயிர் வாழ்வதற்கு, தாவர இனங்களில் இருந்து கிடைக்கும் உணவே போதுமானது. தாவர உணவில் அவனது தேவைகள் மொத்தத்தையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு எல்லாமும் இருக்கின்றன. நமக்கு உணவாவதைத் தவிர தாவரங்களுக்கு வேறு விநியோகம் இல்லை. இதுதான் சிருஷ்டியின் விதி.

காட்டு விலங்குகள்கூட, அதிகமாக மாமிசம் கிடைக்கும் சூழல் இருந்தாலும் அதைத் தவிர்த்துவிட்டு தாவரங்களையே உண்டு வாழ்கின்றன. மனிதன் ஆசையினால் புலால் சாப்பிட ஆரம்பித்தான். அது பிடித்துப் போனதால் தொடர்கிறான். 'உடலுக்கு ஊக்கத்தையும் உள்ளத்துக்குத் தூய்மையையும் கொடுக்க என்ன உணவு தேவை?' என்று தேடவே வேண்டாம். தாவரத்தை நமக்கு பகவானே கொடுத்திருக்கிறார். விலங்கினங்களில் சில வகை, மற்ற விலங்குகளைத்தான் உண்ண முடியும் என்பதும் அவர் வகுத்த நியதிதான். பூச்சிகளைத் தவளை சாப்பிடுகிறது. தவளையை பாம்பு சாப்பிடுகிறது. பாம்பை இன்னொரு ஜீவராசி சாப்பிடுகிறது என்று வகுத்திருக்கிறார். அது இயற்கையானதால், சாப்பிடும் பிராணி வகையும் பெருகுகிறது. சாப்பிடப்படும் பிராணி வகையும் பெருகுகிறது.

நம் உடல் உறுப்புகளின் போஷாக்குக்குத் தேவையான அனைத்து விஷயங்களும் தாவரங்களிலேயே உண்டு. மாமிச இனங்களில் இன்னின்ன சத்து இருக்கிறது என்று சொல்வது, நமது வசதிக்காக நாம் சப்பைக்கட்டுக் கட்டிக்கொள்வதுதான். உயிரினங்கள் நம்மை எதிர்த்துக் கேட்காததாலும் அந்தந்தக் காலகட்டத்தில் உள்ள சட்டதிட்டங்கள் நமக்கு அனுகூலமாகப் போனதாலும் மாமிச உணவைப் பழகிக் கொண்டோம்.

புரட்டாசி மாதத்தில் மகாவிஷ்ணுவை ஆராதனம் பண்ணுவது சம்பிரதாயம். கடவுளை வழிபடும்போது சாத்வீக எண்ணம் வேண்டும். எனவே, அந்த ஆராதனைக் காலத்திலாவது, நாம் செய்துகொண்டிருக்கும் தப்பை நிறுத்தி வைக்கலாமே என்றுதான் புலால் சாப்பிடுவதில்லை.

சபரிமலைக்குப் போகும்போது நாற்பது நாள் விரதம் என்கிறார்கள். காலையில் எழுந்ததும் குளிக்காமல் எதையும் செய்வதில்லை. நெற்றிக்கு இட்டுக் கொள்ளாமல் சாப்பிடுவதில்லை. புலால், மது, புகைபிடித்தல் போன்றவை இல்லாமல் விரதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கவேண்டும் என்கிறார்கள். நம் மனமே நமக்குச் சொல்லிக் கொடுக்கிறது. 'இதை எல்லாம் செய்யக்கூடாது!' எனும் உறுத்தல் ஏற்படுகிறது. இந்த உறுத்தலின் வெளிப்பாடுதான் விரத வேளையில் மாமிசம் கூடாது என்கிற எண்ணம்.

எங்கள் அத்தை தேள் கடிக்கு விபூதி மந்திரித்துத் தருவார். மந்திரத்தால் தேள் கடி குணமாகுமா?

- இல.வெங்கட்ராமன், குடந்தை.

விஞ்ஞானம் ரொம்ப முன்னேறாத காலத்தில் மணி, மந்திரம், ஔஷதம் (மருந்து) என்பதைப் பயன்படுத்துவார்கள். மணி என்றால் ரத்தினம். காலில் அடிபட்டு புண் ஆறாமல் இருந்தால் ஒரு ரத்தினத்தை வைத்துக் கட்டுவார்கள். முன்னால் செப்புக்காசு இருந்தது. அதைத் தேய்த்து ரணத்தில் வைத்துக் கட்டுவார்கள். மந்திரத்தை உச்சாடனம் செய்வார்கள். பிறகு உள்ளே சாப்பிட மருந்து கொடுப்பார்கள். இதெல்லாம் சம்பிரதாயம்.

தேள் கொட்டினால், உடனே வேகம் ஜாஸ்தியாக இருக்கும். விஷம் ரத்தத்தில் கலந்து அதன் வீர்யம் குறையும்போது வலி குறையும். 'பன்னிரண்டு மணிக்குக் கடிச்சுதா? நாளை பன்னிரண்டு மணிக்கு சரியாப் போகும்' என்பார்கள். மந்திரித்து விபூதி போடுவது என்பது மனோ ரீதியாக அவரை ஆறுதல் செய்யக்கூடியது. மந்திரத்தை மட்டும் சொன்னால் அது கண்ணுக்குத் தெரியாது. பார்ப்பதற்குக் கொஞ்சம் விபூதி போட்டு மந்திரம் சொல்ல வேண்டும். விபூதி போட்டால்தான் மந்திரம் அந்த இடத்துக்குப் போகும். நம்பிக்கையால் வலி நிச்சயம் போகும்.

உதாரணத்துக்கு ஒருவருக்குக் கை-கால் வலி. நாலு பேரோடு பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் போனவுடனேயே வலிக்க ஆரம்பித்தது. காரணம் என்ன? மனசு வேறொன்றில் லயிக்கும்போது அவருக்கு வலி தெரியவில்லை. அதே தத்துவம்தான் இங்கேயும். விபூதி, மந்திரத்தால் வலி போகும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால், நிச்சயம் வலி போகும்.

ஒருவர் இறந்த பின் அவரது கண், சிறுநீரகம், இதயம் போன்ற உறுப்புகளை பிறருக்கு தானம் செய்யலாமா? என் அம்மாவின் கண்களைப் பொருத்தி இப்போது இருவர் பார்வை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெற்றிருக்கிறார்கள். ஆனால், ஏதோ ஒரு குற்ற உணர்ச்சி என் மனதில் உள்ளது. என்ன செய்வது?

– ஆர்.விஜயா, பாண்டிச்சேரி.

இந்தியாவுக்கு என்று ஒரு தனி மரபு உண்டு. இந்த மண்ணில் பிறந்தவன் அப்படியே மண்ணில் போய்ச் சேர்கிறான். அவன் வேறு எங்கேயும் போகக்கூடாது என்பது நம் கோட்பாடு. ஒரு மனிதன் இறந்த பின், பூத உடல் கிடக்கும்போதே, 'இந்த உடலில் உள்ள பஞ்ச பூதங்கள், அந்தந்த பூதங்களோடு போய்ச் சேரட்டும்' என்று பிள்ளை மந்திரம் சொல்கிறார். 'உயிர் போன உடலை என்ன செய்வது?' என்கிற கேள்விக்கு வேதம் முன்னமேயே பதில் சொல்லியிருக்கிறது. எந்தப் பஞ்ச பூதத்திலிருந்து மனிதன் தோன்றினானோ அதே பஞ்ச பூதங்களில் கரைந்துவிட வேண்டும்.

தற்காலிகமாக ஒருவருக்கு உதவி செய்ய முடிந்தது என்பதில் நீங்கள் சந்தோஷப்பட்டுக்கொள்ள முடியாது. கண்ணை வாங்கியவர், அவரது இயல்பான பார்வையைப் பெறமுடியும் என்பது பொய். எந்தப் பொருளை தானம் செய்வது என்று நியதி உண்டு. 'யானை செத்தாலும் பயனுண்டு, மனிதன் செத்தால் யாருக்கும் பயனில்லை' என்று பழமொழியே உண்டு.

முதல் நாள் தீவைத்து எரிக்கிறோம். மறுநாள் அந்தச் சாம்பலைக் கொண்டுபோகிறோம். எரியாமல் ஏதாவது மிச்சம் இருந்தால், அதையும் எரிக்கிறோம். உங்கள் தாயாரின் கண்ணைக் கொடுத்துவிட்டீர்கள் என்றால், அங்கே அவர் முழுசாக இல்லை. வேறு எங்கேயோ கொஞ்சம் மிச்சம் இருக்கிறது. கர்மாவே பண்ண முடியாது. எல்லாம் எரிந்தால்தானே பாலே விட முடியும்? ஏதாவது குறைபாடு இருக்குமேயானால் பரிகாரம் செய்யவேண்டும் என்று தர்மசாஸ்திரம் வலியுறுத்தும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஒருவரின் உடலுறுப்பை இன்னொருத்தருக்குப் பயன்படுத்துவது நம் சாஸ்திரத்துக்கு விரோதமானது. சாஸ்திர விரோதமாக எத்தனையோ காரியங்கள் செய்யப்படுகின்றன. இதையும் அப்படி எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஒருவருக்குக் கண்ணைக் கொடுத்துவிட்டு ஒதுங்குவதற்குப் பதிலாக அவருக்குக் கண்ணாக இருந்து உதவி செய்யலாமே? கால் இல்லாதவர் என்றால், அவர் உட்கார்ந்து செய்வது மாதிரியான வேலை கொடுத்து அரவணைக்கலாமே..? இப்படியும் சிந்திக்கலாமே!

சமீப காலமாக பெரும்பாலும் மின் இயந்திரங்களைக் கொண்டு தகனங்கள் நிறைவேற்றப்படுகின்றனவே... அதற்கு ஏதேனும் பிரத்தியேக பிராயச்சித்தம் தேவையா?

– கே.நீலா, சென்னை-90.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தகனம் என்றால் எரித்தல் என்று பொருள். அது அக்னியால் நிறைவேற்றப்பட வேண்டும். தினப்படி சாப்பிடுகிறோம். எப்படி சமைத்தோம்? முதலில் விறகு அடுப்பு இருந்தது. பிறகு அது கரி அடுப்பு ஆயிற்று. மண்ணெண்ணெய், கேஸ் என்றெல்லாம் வளர்ந்து இப்போது கரண்ட் அடுப்பிலேயே சமைக்கிறோம். வேகவைக்கத் தேவையான உபகரணத்தை நம் இஷ்டத்துக்கு மாற்றிக் கொண்டிருக்கிறோம். நாளை என்ன செய்வோம் என்று தெரியாது.

சாதம் சமைக்கவே இத்தனை மாறுதலைக் கொண்டுவந்த நாம், தகனத்திலும் அதைக் கொண்டுவந்திருக்கிறோம். அது எப்படி தவறாகும்? எனவே, அதற்கு ஒன்றும் பிராயச்சித்தம் வேண்டாம். மனசு நெருட வேண்டிய அவசியம் இல்லை.

பாதாள உலகம் இன்னும் இருக்கிறது. அதுதான் இன்றைய அமெரிக்காவில் உள்ள சாம்பல் தீவு என்றும், கபில முனிவர் அசுரர்களைப் பார்வையால் எரித்து சாம்பலாக்கிய இடம்தான் ஆஷ் ஐலண்டு என்றும் சொல்லப்படுகிறது. இதேபோல் அன்றைய பாற்கடல், வைகுண்டம் போன்றவை எங்கே உள்ளன?

-இ.நடேசன், குன்னங்குளம்.

ஆராய்ச்சி என்பது வேறு. தத்துவ விளக்கம் என்பது வேறு. ஆராய்ச்சி செய்பவருக்கு தத்துவம் வேண்டாம். அவர் ஆராய்ச்சியிலேயே திருப்தி அடைந்துவிடுவார். ஆராய்ச்சி என்பது மியூஸியம் மாதிரி. தத்துவ விளக்கம் என்பது ஆன்மிகம். ஆன்மிகத்தில் ஆராய்ச்சியைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

ராமாயணத்தில் ராமர் வடக்கே இருந்து வந்து தெற்கே போனார் என்று வருகிறது. இவர் போகாத இடமே இல்லை. கேரளாவில் ராமர் கோயில் இருக்கிறது. திருநெல்வேலியில் இருக்கிறது. ராமாயணக் குறிப்புகளில் அவர் இங்கே போனதாகவெல்லாம் இல்லை. இலங்கைக்குப் போனால், 'அதோ, அனுமார் தீவைத்த பாறை' 'இதோ, அனுமாரின் வால் தடம்' என்றெல்லாம் காட்டுவார்கள். அதே வெள்ளைக்கார ஆராய்ச்சியாளர்கள், 'ராமாயணத்தில் வரும் காடு இந்தியாவிலேயே இல்லை. ஆப்பிரிக்கக் கண்டம்தான் அது. அங்கேதான் அவ்வளவு அடர்ந்த காடு இருக்கிறது' என்று சொல்கிறார்கள். தத்துவ விளக்கம் வேண்டுமானால் ஆராய்ச்சியைத் தூக்கி எறியுங்கள், தத்துவத்துக்கு வாருங்கள். அதுதான் உங்களுக்குத் தேவையானதைக் கொடுக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தெய்வத்தின் கைகளில் ஆயுதங்கள் ஏன்?

அரபு நாடுகளில் நம் நாட்டைச் சேர்ந்த பலர் வசிக்கிறார்கள். அங்கே பித்ரு கடன் செய்ய முடியாமல் இருக்கிறதே... இது நீண்ட காலமாகப் பலருக்கும் உறுத்தலாக உள்ளது. என்ன செய்வது?

– ஆர். ராஜலெக்ஷ்மி, கடப்பா.

உறுத்தலே இல்லை. உறுத்துகிறது என்று சொல்வது பொய். எங்கே எது கிடைக்காதோ, அந்த இடத்துக்கு நீங்களாகத்தான் போனீர்கள். பொருளீட்டுவதற்காக சிராத்தம் செய்ய வசதியில்லாத இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டு, என்னால் செய்ய முடியவில்லையே என்பது எந்த விதத்தில் நியாயம்? பாலைவனத்தில் இருந்துகொண்டு, கங்கை நீர் கிடைக்கவில்லை என்று உறுத்தலாக உணர்வது எப்படிச் சரியாகும்? நமது சௌகரியங்களுக்காக எங்கேயும் போகலாம், எப்படியும் வாழலாம் என்று முடிவெடுத்த திடமான மனதுக்கு உறுத்தல் இருக்கக் கூடாது.

சில கோயில்களில், வசதி உள்ளவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு மட்டும் எளிதாக தரிசனம் செய்து வைப்பவர்களை கடவுள் தண்டிக்க மாட்டாரா? எளியவர்கள் என்ன பாவப்பட்ட பிறவிகளா? கடவுள் முன் அனைவரும் சமம்தானே. ஏன் இந்த வேறுபாடு?

- வி.கோபிநாதன், குடவாசல்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மந்திரி முன் மக்கள் அனைவரும் சமம்தானே, மந்திரியை எளிதாகப் பார்ப்பீர்களா? நாங்கள் எப்படி வேண்டுமானாலும் இருப்போம். கடவுள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று உத்தரவு போடாதீர்கள். கடவுளின் பக்கமாக ஏன் போகவேண்டும்? 'நீ இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு என்னை மனதால் நினைத்தால் அனுக்கிரகம் செய்கிறேன்' என்கிறாரே கடவுள்? அதை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை?

சில சட்டதிட்டங்கள் சில இடங்களில் இருக்கும். ஆளின் தரத்தை வைத்தல்ல, அந்தஸ்தை வைத்து சில பாகுபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஏழையான நீங்களே மந்திரி ஆகிவிட்டால், உங்களை முன்னால் விடுவார்கள். அந்தஸ்தையும் ஒன்றாக வையுங்களேன் என்று நீங்கள் கேட்கலாம். அப்படிச் செய்ய முடியாது. ஒவ்வோர் அந்தஸ்துக்கும் ஒரு வேலை இருக்கும். எனக்கு ஒரு வேலையும் இல்லை. ஊரைச் சுற்றிக்கொண்டு இருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் பகவானைப் பார்க்கலாம். மந்திரிக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. அவரை முன்னால் விடவேண்டாமா?

தொழிலாளர்களும் சேர்மனும் வாசலில் நிற்கிறார்கள். கதவு திறந்ததும் சேர்மனைத்தான் முதலில் விடுவார்கள். 'நானும் வேலைதானே செய்கிறேன். சேர்ந்து போவோம்' என்று சொல்வீர்களா? தொழிலாளர்களைப்போல சேர்மனும் ஏன் காபி சாப்பிடக் கடைக்கு வரக்கூடாது என்று கேட்க முடியுமா? எல்லாரும் சமம் என்கிற உங்கள் பார்வையில் நெருடல் இருக்கிறது.

எல்லா சிவன் கோயில்களிலும் நந்தி சிலைக்கும் கொடி மரத்துக்கும் இடையில் ஒரு மேடைக்கல் இருக்கிறது. கேட்டால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பலிபீடம் என்கிறார்கள். இப்போது பலி கொடுப்பதில்லையே, எதற்காக இந்த பீடம்?

- கே.அருண்குமார், கோவைப்புதூர்.

நீங்கள் நினைக்கும் பலி இல்லை இது. பலி என்றால் அன்னம். ஆகாரம். காக்கைக்கு பலி கொடுக்கவேண்டும். அன்னம் இட வேண்டும். அதை இடும் கல் பலிக்கல். ஆட்டையோ மாட்டையோ வெட்டுகிற பலி இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இறந்த பின் உடல் எரிவது கண்ணுக்குத் தெரிகிறது. உயிர் என்ன ஆகிறது?

- ஆர்.வி.மயில்வாகனன், மதுரை-7.

உடல் எரிவது கண்ணுக்குத் தெரியும். உயிர் போவது கண்ணுக்குத் தெரியாது. உடலில் இருந்து உயிர் எப்படிப் பிரிந்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். கண்ணைத் திறந்தபடி இறந்திருந்தால், உயிர் கண் வழியாகப் போயிருக்கிறது என்று அர்த்தம். வாயைத் திறந்துகொண்டு இருந்தால், வாய் வழியாகப் போயிருக்கிறது. சிறுநீர் கழித்திருந்தால் அந்த வழி. மலம் கழித்திருந்தால் அந்த வழி. சில நேரம் காது வழி. இன்னும் சில நேரம் மண்டையைப் பிளந்துகொண்டும் உயிர் போகும். இப்படியாக உயிர் போன வழியைத் தெரிந்துகொள்ளலாம். உயிர் என்பது காற்று. கண்ணுக்குத் தெரியாது. அந்த உயிர் போன பிறகுதான் உடலை எரிக்கிறோம். நீங்களே உயிர் போய்விட்டது என்கிறீர்கள். பிறகு உயிர் என்ன ஆகும் என்று கேட்டால் எப்படி? உயிர் போய்விட்டது; அவ்வளவுதான்.

கடவுள் அளக்க முடியாத உருவம் உடையவர். அப்படி இருக்க... தெய்வத்தின் கைகளில் அநேக ஆயுதங்கள் இருப்பது ஏன்?

-ஜி.கே.கே, சென்னை.

வேதங்களும் புராணங்களும் தெய்வத்தை எப்படி விளக்குகின்றன தெரியுமா? நெட்டையாக இருக்கிறார்... குட்டையாக இருக்கிறார்... ஜடாமுடி, தாடியோடு இருக்கிறார்... மொட்டை அடித்துக்கொண்டு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கிறார்... ஒல்லியாக இருக்கிறார்... அணு அளவு இருக்கிறார்... இப்படி உலகத்தில் என்னென்ன அளவுகள் இருக்கின்றனவோ அத்தனையையும் சொல்லும். கடவுள் அத்தனை அளவுகளிலும் இருக்கிறார். சமுத்திரத்துக்குப் போனால் டம்ளர் அளவு தண்ணீரும் அள்ளலாம். அண்டா அளவும் அளக்கலாமே. எல்லாவற்றிலும் இருப்பது கடல்தான்.

அவர் அளவிட முடியாதவர் என்பதை உயர்ந்த நிலையில் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். சாதாரண நிலையில் பார்த்தால், அவர் உருவம் உடையவர். அவருக்குக் கை இருக்கிறது. அந்தக் கையில் ஆயுதம் இருக்கிறது. இதெல்லாம் வைத்திருந்தால்தான் அவரிடம் சென்று, 'என் சத்ருக்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று!' என்று கேட்பீர்கள். ஒன்றுமே இல்லை என்றால் பக்கத்திலேயே போக மாட்டீர்களே... நம் மனதில் என்ன எண்ணம் எல்லாம் உதிக்கிறதோ, அதை நிறைவேற்ற அதற்குத் தகுந்த ஆயுதத்தை அவர் வைத்திருக்கிறார். 'உன் கோபத்தை வணங்குகிறேன்' *(நமஸ்தே ருத்ரமன்யவே)* என்று ஸ்லோகம் சொல்கிறோம். அவருக்குத்தான் உருவமே இல்லையே... எங்கிருந்து கோபம் வரும்? கடவுள் தன் பெருந்தன்மையை விட்டுக்கொடுத்து சிறியவர்களான நம் அளவுக்கு இறங்கி வருகிறார். அப்போது நமக்குத் தேவையானதைக் கொடுக்கிற எல்லாம் அவரிடம் இருக்கும். அதற்கு இந்த வேஷங்களெல்லாம் இருந்தால்தான் நமக்குப் புரியும்.

சுத்த சைவமான நம் முன்னோருக்கு, திதி, அமாவாசை நாட்களில் படைக்கும் உணவை, அசைவப் பறவையான காக்கை



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ரூபத்தில் பித்ருக்கள் வந்து சாப்பிடுகிறார்கள் என்பதை எப்படி நம்புவது?

- கே.வேணுகோபால், கோவை-2.

உள்ளபடி பார்த்தால், காக்கை வடிவத்தில் நம் முன்னோர் வந்து உணவைச் சாப்பிடுவதில்லை. நாம் என்ன காரியம் செய்தோமோ அது முடிந்துவிட்டது. உணவை என்ன செய்வது? 'காக்கைக்குப் போடு!' என்று சொல்கிறது தர்மசாஸ்திரம். அதைப் பின்பற்றுகிறோம்.

ஒரு சிறுவனுக்குக் கதை சொல்லும் புராணம், காக்கைக்கு உணவிடும் வழக்கம் அவனுக்கு வரவேண்டும் என்பதற்காக, காக்கை வடிவில் முன்னோர் என்கிறது. வளர்ந்த பிறகு அவன் புரிந்துகொள்வான். குழந்தை இரவில் வெளியே போகிறது. 'அங்கே பூச்சாண்டி இருக்கு' என்று சொன்னால் அது போவதில்லை. ஆனால், பூச்சாண்டி என்ற ஒன்றே இல்லை என்று சொன்னவருக்குத் தெரியும். குழந்தையும் வளர்ந்த பின் இதைப் புரிந்துகொள்ளும். நன்மைக்காகச் சொல்லப்படும் பொய்யும் உண்மையில் சேர்ந்ததுதான். நாளைக்கு ஒரு பெரிய நன்மை கிடைக்கப் போகிறது என்றால் அதைத் தரும் மூட நம்பிக்கையும் தேவையானதே!

ஒரு நல்லவனை, ஒரு முரடன் துரத்தி வருகிறான். இவன் ஒளிந்து கொள்கிறான். இதைப் பார்த்தவர் முரடனிடம், 'நான் யாரையும் பார்க்கவில்லை!' என்று பொய் சொல்கிறார். 'இது தவறு இல்லை!' என்கிறது தர்மசாஸ்திரம்.

எதைச் செய்தாலும் அந்தக் காரியம் முடிந்தவுடன் மிஞ்சியதை என்ன செய்வது என்கிற கேள்வி வரும். எல்லாரும் சாப்பிட்டு முடித்த பின் மிகுந்ததை என்ன செய்வது? ஏழைகளுக்குக் கொடு. ஏரோப்ளேனில் ஸீட் பெல்ட் கட்டிக்கொண்டாகி விட்டது. சிறிது நேரத்தில் கழற்றச் சொல்கிறார்கள். பெல்ட்டை என்ன செய்வது? அங்கேயே வைத்துவிடு என்றார்கள். பழத்தை சாப்பிட்டாச்சு. தோலை என்ன செய்வது? குப்பைத் தொட்டியில் போடு.

சிராத்தத்தன்று பிண்டத்தை நிலத்தில் வை என்றார்கள். நிலத்தில் வைத்தாயிற்று. அந்தப் பிண்டத்தை அதன் பிறகு என்ன செய்வது? மற்ற வேலைகளை விட்டுவிட்டு அங்கேயே நின்று கொண்டிருப்பதா என்ற கேள்வி வரும்போது அதைக் காக்காய்க்குப் போடு என்கிறது சாஸ்திரம். சாதாரண நாட்களில் மிஞ்சிய உணவை நீங்கள் நாய்க்குக் கூடப் போடலாம். ஆனால், சாஸ்திரம் சொன்னபடி சிராத்தம் செய்தவர் பிண்டத்தை என்ன செய்யவேண்டும் என்கிற கேள்விக்கும் சாஸ்திரம் சொன்னபடி காக்கைக்குத்தான் போடவேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நாம் சைவம், காக்கை அசைவம்!

ரூபாயைக் கொடுத்தீர்கள், டிக்கெட் கிடைத்தது. நாம் கொடுத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பணத்தை அவர் யாருக்குக் கொடுப்பாரோ, அதை வாங்கியவர் அந்தப் பணத்தில் குடிக்கப் போவாரோ என்றெல்லாம் சிந்தித்தால் போகிற காரியத்தை எப்படி முடிப்பீர்கள்? பிண்டம் வைக்க வேண்டியது கடமை. வைத்தாயிற்று. காக்கை அசைவமாக இருந்தால் தப்பா? காக்கை அசைவம் என்பது தர்மசாஸ்திரத்துக்கு நன்றாகத் தெரியும். பிறகு ஏன் அப்படிச் சொல்கிறது என்று கேட்டீர்களானால், அது நியாயம். இதற்குக் காரணம் இருக்கிறது. நாம் கொடுக்கிற ஆகாரத்தை வாங்க அலைந்துகொண்டே இருப்பதால் காக்கையை 'பலி புக்' என்பார்கள். அலையும் காக்கைக்கு அதற்குத் தேவையானதைக் கொடுக்கவேண்டும். காக்கை அசைவம் என்பது இயற்கையானது. சிங்கமும் அசைவம்தான். நாம் கொடுப்பதைச் சாப்பிடாது. ஆனால், காக்கை நாம் சாப்பிடுகிற எல்லாப் பொருளையும் சாப்பிடும். நிரந்தரமாகவே காக்கைக்கு அன்னம் இடுபவர்கள் நாம். 'இரவில் நாய்க்கு உணவு இடு!' என்பார்கள். நாயும் அசைவம்தான். அது, இரவில் ஆகாரத்துக்கு அலைவது நாய் என்பது காரணம். பிராணிகளை போஷிப்பதை ஊக்குவிக்கிறது தர்மசாஸ்திரம்.

முருகன் தமிழ்க் கடவுள் என்கிறார்களே, அப்படி என்றால் சிவன், திருமால், பிரம்மா எல்லாரும் தமிழ்க் கடவுள்கள் இல்லையா?

- டி.கே.ராஜன், கோவை-42.

தமிழ்க் கடவுள், தெலுங்குக் கடவுள், சம்ஸ்கிருதக் கடவுள், ஓரிய மொழிக் கடவுள் எல்லாம் கும்பிடுகிறவரின் பக்தியைப் பொறுத்த விஷயம். ஓர் ஈடுபாடு வருவதற்காக 'நீ என்னுடையவன்!' என்கிற பாவத்தைக் கற்பித்துக் கொள்கிறோம். 'உனது இலக்கணப் புலமையைவிட இலக்கணப் பிழைகளோடு கூடிய இவனது பக்தி எனக்குப் பிடித்திருக்கிறது!' என்று குருவாயூரப்பன் மலையாளத்தில் சொன்னதாகக் கதை உண்டு. அவர் மலையாளக் கடவுள் என்பதா? கடவுளுக்கெல்லாம் பாஷையைத் திணிக்காதீர்கள். பேசவேண்டிய அவசியம் இல்லாதவர் அவர்.

நம் நாட்டில் பல ஆயிரம் வருஷங்களாகப் பின்பற்றப்படும் வாக்கிய முறை பஞ்சாங்கத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குறித்த ஜாதகம் உண்மையானதா, இன்று நவீன யுகத்தினரின் திருக்கணித முறை உண்மையானதா?

- ராம், தாம்பரம்.

நவீன முறை, பழைய கால முறை என்பதெல்லாம் நாமாக இட்டுக்கட்டிக் கொள்வது. அந்தந்தக் காலத்தில் ஆகாயத்தில் கிரகங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று நன்றாகத் தெரிந்துகொண்டு கணிக்க வேண்டும். நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொள்வது இது. ஒரு நாளைக்கு காலையில் ஒரு முறை, மதியானம் ஒரு முறை, மாலையில் ஒரு முறை என்றெல்லாம் அவ்வப்போது கணித்தால்தான், கிரகங்களின் சஞ்சாரத்தை துல்லியமாகக் கணிக்க முடியும். அதுதான் சரியாக இருக்கும்.

வாக்கியமும் ஒரு வகையில் சரியானதுதான். வாக்கியத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் தாண்டியாகி விட்டதென்றால், கிரகத்தின் சலனம் இருப்பதால், அதற்குத் தகுந்தபடி வாக்கியத்தை மறுபடி புதுப்பிக்க வேண்டும். இது வரையில் புதுப்பிக்காமலேயே கொண்டுவந்தாகி விட்டது. அதனால் அதில் இருப்பதெல்லாம் தவறுதலாகவே வந்துகொண்டு இருக்கிறது. பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றப்படுவதால் வாக்கிய முறைதான் சிறந்தது என்று சொல்பவர்களும் உண்டு. இந்த சர்ச்சையில் போய் மாட்டிக் கொள்ளாதீர்கள். எங்கள் தாத்தா ஒரு கிணறு வைத்திருந்தார். அதில் உப்புத் தண்ணீர். ‘என் தாத்தாவின் கிணறாகையால் உப்புத் தண்ணீரைத்தான் குடிப்பேன்’ என்று யாரும் சொல்வதில்லை. புத்திசாலியாக இருந்தால் திருக்கணிதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பிடிவாதக்காரராக இருந்தால் வாக்கியத்தைப் பின்பற்றுங்கள்.

காயத்ரி மந்திரம், மிருத்யுஞ்ஜய மந்திரம் ஆகியவற்றுக்கு அர்த்தம் என்ன?

- பி.வி.குப்புஸ்வாமி, திருச்சி.

வேதம் சொல்லும் மந்திரங்களை, ஒரு சிஷ்யனாகப் பணிவுடன் ஒரு குருவிடம் போய், அவருக்கு நமஸ்காரம் பண்ணி வாங்கிக்கொள்ள வேண்டும். வேத மந்திரங்களின் சாரத்தைச் சொல்லவேண்டுமானால் எத்தனை பக்கங்களுக்கு நீளும் தெரியுமா? வேதம் படித்தவரிடம் சென்று காதும் காதும் வைத்த மாதிரி தெரிந்துகொள்ளுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அட்சதைப் போடுவதால் பிராமணர்கள் பட்டினிக் கிடப்பார்களா?

உயர்ந்த பக்தர் என்பதற்கு அடையாளம் என்ன?

- எஸ். ஆறுமுகம், கழுகுமலை.

ஒரு குண்டூசி, காந்தத்தோடு போய் ஒட்டிக் கொள்கிறது. காந்தத்தோடு சேர்வது தவிர வேறெந்த நோக்கமும் அந்தக் குண்டூசிக்கு இல்லை. அதைப் போல எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், எந்த லட்சியமும் இல்லாமல், உலக விஷயங்களில் எந்தப் பிடிப்பும் இல்லாமல் பகவானைப் போய்ச் சேர்வதை மட்டுமே குறிக்கோளாக வைத்திருக்கும் ஒருவர், உயர்ந்த பக்தர்.

சரீரத்தையும் மனதையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தி முழுமையாகத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து பகவானைச் சேர்வது மட்டுமே சாஸ்வதம் என்ற நிலையை அடைந்தவரே உண்மையான பக்தர்.

கோயில்களில் பூஜை செய்யும்போது மணி அடிப்பது நின்றுபோய், மின்சார மணி ஒலிக்கச் செய்வது முறைதானா?

-ஆர். ஜனனி, எரகுடி.

மின்சார மணி அடிப்பது முறைதானா என்று கேட்கிற நீங்கள், கோயிலுக்குப் போனது நடந்தா, வாகனத்திலா? நமது சௌகரியத்துக்கு ஏற்ப மாறிக் கொண்டிருக்கிறோம். முன்னால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நாமே மணி அடித்தோம். பிறகு ஆள் வைத்து அடித்தோம். மணி அடிக்க ஆள் கிடைக்கவில்லை என்றதும் மின்சார மணி அடிக்கிறார்கள். வேறு வழி இல்லை. நமக்கு பக்தி இருந்து, நாமே மணி அடிப்பதுதான் நியாயம். பூஜையை யார் பண்ணுகிறாரோ, அவர் இடக்கையால் மணி அடித்தால் போதும். வெளியில் இருக்கும் மணியை பக்தன் அடிப்பதுதான் உபசாரம். அதுதான் பணிவிடைக்கு அர்த்தம்.

மணி அடித்தல் பூஜையின் ஓர் அங்கம். வாத்யம் கோஷ யாமி என்று சொல்லி மணி அடிப்பதுதான் பூஜையின் முழுமை. ஏதோ சத்தம் வர வேண்டும் என்பதற்காக அல்ல மணி அடிப்பது.

அபிஷேகம் செய்கிறோம். சிவபெருமான் தலையில் ஒரு ஷவரைப் பொருத்திக் குழாயைத் திருகி விடலாமா? ஸ்லோகம் சொல்வதற்கு பதிலாக ஒரு டேப்ரிக்கார்டரை வைத்து விடலாமா? தீபாராதனைக்கு பதிலாக ஒரு எலெக்ட்ரிக் லைட் வைப்போமா? இப்படி எல்லாவற்றையும் வியாபாரமாகச் செய்து, உண்மையான ஆன்மிகம் இருக்க வேண்டிய இடத்தில் எதை எதையோ கொண்டு வந்து திணிப்பது தவறு!

ஆன்மிகம் கொஞ்சமாவது அடுத்த தலைமுறைக்கு இருக்கட்டுமே..!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பிறந்த நாளை பிறந்த நட்சத்திரத்தில் கொண்டாடுகிறோம். இறந்தவர்களுக்கோ அவர்கள் இறந்த திதியை வைத்துச் சிராத்தம் செய்கிறோம். இதன் தாத்பர்யம் என்ன?

- எஸ்.வி. ராஜு, ஸ்ரீரங்கம்.

பிறந்தவனை நட்சத்திரத்தோடு சம்பந்தப்படுத்துகிறது தர்ம சாஸ்திரம். வேறு எதனோடும் சம்பந்தமில்லை. பிறந்தவுடனே ஜாதகர்மாவில் அப்பா, பிள்ளையைத் தன் மடியில் வைத்துக் கொண்டு அவன் வலக் காதில் அவன் பிறந்த நட்சத்திரத்தின் பேரைச் சொல்வார். அந்தக் குழந்தை கேட்கும் முதல் ஒலியே தன் நட்சத்திரத்தின் பெயர்தான். கோயிலில் அர்ச்சனை செய்யும்போது 'நீ எந்த நட்சத்திரம்?' என்று கேட்பார்கள். அதற்கு நட்சத்திர நாமா என்று பெயர்.

நியூமராலஜி பார்த்து நீங்கள் வேறு எந்தப் பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும் உங்கள் அசல் பெயர் உங்கள் நட்சத்திரத்தின் பெயர்தான். அப்படி இருக்கும்போது, உங்கள் பிறந்த நாளை பிறந்த நட்சத்திரத்தில் கொண்டாடுவதுதானே நியாயம்? நட்சத்திர மண்டலம் என்பது எல்லாக் கிரகங்களையும் தாண்டி மேலே இருக்கிறது. அது என்றென்றைக்கும் மாறாமல் நிலையாக இருப்பது. சூரியன், சந்திரன், செவ்வாய் எல்லாம் அவ்வப்போது மாறிக் கொண்டே இருப்பவை. நட்சத்திரம் மாறாது!

சாகிறபோது ஒரு நட்சத்திரம் இருக்கிறதே, அதை வைத்து சிராத்தம் செய்யக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். தயிர்-மோர்க் கணக்கும், பி.காம். கணக்கும் ஒன்றா? அதைப் போல இந்தக் கணக்கிலும் வித்தியாசம் உண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நட்சத்திரத்தோடு சம்பந்தப்படாத காலம் இருக்கிறதே... அதற்குத்தான் சாவின்போது முக்கியத்துவம். ஏனெனில், நட்சத்திரம் 27 நாட்களோடு முடிந்துவிடும். மாதம், முப்பது நாளைக்கு இருக்கும். ஒரு மாதத்துக்குள்ளேயே ஒரு நட்சத்திரம் திரும்பவும் வந்துவிடும். காலக் கணக்கு பிசகும்.

ஆகாயத்தில் சூரியனின் கிரணம் சந்திரனின் மேல் எந்த அளவு விழுந்திருக்கிறது என்று இறப்பில் பார்க்க வேண்டும். அமாவாசை முடிந்து பிரதமை அன்று சூரியனின் கிரணம் சந்திரனின் மேல் ஒரு பங்கு விழுந்திருக்கும். அப்படி ஒரு பங்கு விழுந்திருக்கும் நேரத்தில் ஒருவர் இறந்து போனால், அடுத்த வருடம் அதே சூரியனின் கதிர் அதே சந்திரனின் மேல் அதே ஒரு பங்கு விழுந்திருக்கும் அதே திதியில்தான் சிராத்தம் செய்ய வேண்டும். இயற்கையில் தீர்மானம் செய்யப்பட்ட விதி அது.

ராகு காலத்தில் ஒரு குழந்தை பிறந்தால் என்ன விளைவுகள் ஏற்படும்? அதற்குப் பரிகாரம் என்ன?

- சம்பத், மின்னஞ்சல்.

ராகு காலத்தில் பிறப்பதால் தீய விளைவுகள் ஏதும் இல்லை. பரிகாரமும் தேவையில்லை.

சிசேரியன் முறையில் பிறக்கும் குழந்தையின் ஜனன ஜாதகம் சரியாக இருக்குமா?

- பா. சீனிவாசன், திருச்சி-14.

குழந்தை வெளியில் வரும் நேரம்தான் முக்கியம். சிசேரியன்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



என்பது என்ன? குழந்தை வெளிவர வேண்டிய நேரத்தில் அதனால் வர முடியாத நிலை ஏற்படும்போது செயற்கையாக வெளியில் எடுப்பதுதான் சிசேரியன். யோனி வழியாகக் குழந்தை வெளிவர வேண்டும். உள்ளே வாதம் உந்தித் தள்ளவில்லை என்றால், குழந்தை வெளியே வராது. கர்ப்ப பாத்திரத்தில் நீர் வற்றிப் போயிற்று என்றால் குழந்தை வராது. அப்படியான காலங்களில் குழந்தைக்கோ தாய்க்கோ பாதிப்பு ஏற்பட்டு விடாதபடி, முன்பெல்லாம் கையை விட்டுக் குழந்தையை வெளியில் எடுப்பார்கள். இப்போது சிசேரியன் செய்கிறார்கள். குழந்தை வெளிவர இருக்கும் இடையூறை விலக்குவதுதான் சிசேரியன். அப்படி வெளிவந்து பூமியைத் தொட்ட நேரம்தான் அது பிறந்த நேரம்.

சில ஆலயங்களில் மூலவர் அபிஷேகம், ஆராதனை ஆகியவற்றைப் படம்பிடித்து ஒளிபரப்புகிறார்களே... இது எந்த அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது?

– ஐ.எஸ். சீனிவாசன், சென்னை-82.

கோயிலில் நடக்கும் விசேஷங்களைப் பல பேருக்குத் தெரிவிப்பதற்காகப் படம் எடுத்து ஒளிபரப்புவது என்பது சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு வழக்கம். கோயிலுக்கு வர முடியாதவர்களும் பார்ப்பதற்காகத்தான் உற்சவரை அவரவர் இடங்களுக்கே எடுத்துச் சென்று காட்டுகிறார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'இதைப் பலரும் பார்த்தால் கோயிலுக்கு அதிகம் பேர் வருவார்களே' என்கிற பிரசார நோக்கத்தில்தான் மூலவரைப் படம்பிடித்துக் காட்டும் வழக்கம் உருவானது.

சாஸ்திரக் கண்ணோட்டமே வேறு. சாஸ்திரப்படி கோயிலில் வியாபாரம் என்கிற விஷயமே வராது. படம்பிடித்துக் காட்டுவது வியாபாரத்தோடு சேர்ந்தது. வெளித் தோற்றத்தில் வியாபாரம் தெரியாவிட்டாலும் உண்மை அதுதான்.

மற்றபடி கோயிலைப் பெரிதாக்குவதற்காகத்தான் இப்படிச் செய்கிறோம் என்பார்கள். கோயிலைப் பெரிதாக்க நாம் பிரசாரம் செய்யத் தேவையே இல்லை. முறைப்படி செய்ய வேண்டிய பூஜை புனஸ்காரங்களைச் செய்து வந்தாலே கோயில் பெரிதாகும். காசிக்குப் பிரசாரம் தேவை இல்லை. எல்லாரும் போவார்கள். ராமேஸ்வரத்துக்கு பிரசாரம் வேண்டாம். அவரவரே போவார்கள். படம் பிடிப்பது என்பது நம் கோணல் மாணல் சிந்தனையில் தோன்றியது. பழைய சிந்தனையை மீறி வியாபாரத்தைப் புகுத்தி இருக்கிறோம்.

தர்ப்பணம் செய்யும்போது எள் சேர்க்கப்படுகிறது. பின்பு அதைக் கீழே கொட்டினால் செடியாக முளைக்கிறது. இப்படி முளைப்பது ஆகாது என்கிறார்கள். அந்த எள்ளை என்ன செய்வது?

- எஸ். ஆண்டாள், சென்னை-44.

சாப்பிட்ட எச்சில் இலையை என்ன செய்ய வேண்டும் என்றால், அதைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும். வேட்டி கிழிந்து விட்டது என்றால் அதைத் தூக்கி எறிய வேண்டும். பிண்டம் வைத்தாயிற்று, அதை என்ன செய்ய வேண்டும்? காக்கைக்கு வைக்க வேண்டும். இப்படி எல்லாம் சொன்னவர்கள் தர்ப்பணம் செய்த ஜலத்தை என்ன செய்வது என்று சொல்லாமல் இருப்பார்களா? அதைக் கிணற்றில் விடவேண்டும் அல்லது குளத்தில் விடவேண்டும் என்றார்கள். இதுதான் விதி.

பழைய காலத்தில் எல்லாம் நாம் வாழும் இடத்தில் கிணறு, குளம், நதி இல்லாமல் இருக்காது. அதில் ஜலத்தை விட்டால் அடித்துக் கொண்டு போய்விடும். அல்லது நீர்நிலையில் இருக்கும் ஜீவராசிகள் எள்ளைச் சாப்பிட்டுவிடும். முளைக்காது. அந்த விதியை நீங்கள் மாற்றுகிறீர்கள். நீரில் போடாமல் நிலத்தில் போட்டுவிட்டுச் செடி முளைக்கிறதே என்றால் என்ன செய்வது? ஜலமே இல்லை என்று சொல்லாதீர்கள். கொஞ்சம் தள்ளிப் போனாலாவது நீர்நிலை இருக்கும். அதில் விடுங்கள்.

என் பெற்றோருக்கு நான் மூத்த பெண். சகோதரர்கள் இல்லை. தகப்பனார் இறந்து விட்டார். அவரது இறுதிக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரியத்தையும் திவசத்தையும் என் கணவர், என் தாயாரிடம் புல் (தர்ப்பை) வாங்கி இது நாள் வரை செய்து வந்தார். ஆறு மாதங்களுக்கு முன் என் தாயார் இறந்துவிட்டார். என்னிடம் புல் வாங்கி என் அம்மாவின் இறுதிக் காரியங்களைச் செய்தார் என் கணவர். இந்த ஐப்பசி மாதம் என் அப்பாவின் சிராத்தம் வருகிறது. அதை எப்படிச் செய்வது?

- சரஸ்வதி வேத நாராயணன், லெட்சுமாங்குடி.

உங்களுக்கு மகன் இருக்கிறானா என்ற முக்கியமான விஷயத்தை நீங்கள் குறிப்பிடவில்லை. பிள்ளை இருந்தால் இது அவனுடைய காரியம். உங்களுக்கும் இதற்கும் தொடர்பே இல்லை. பிள்ளை இல்லை என்று வைத்துக் கொண்டு பதில் சொல்கிறேன். எப்போது உங்கள் அம்மாவிடம் புல் வாங்கி உங்கள் தகப்பனாருக்கு உங்கள் கணவர் சிராத்தம் செய்தாரோ, அப்போதே இது உங்கள் அம்மா மட்டுமே செய்ய வேண்டிய சிராத்தமாகி விட்டது. அம்மா இறந்த பிறகு அப்பாவின் திவசம் அம்மாவோடேயே போயிற்று. நீங்கள் அப்பாவுக்குச் செய்யத் தேவை இல்லை. அப்பாவுக்கு இனி சிராத்தமில்லை.

வீட்டில் இறைவனுக்கு அர்ச்சனைப் பூக்கள் கிடைக்காத காலத்தில் அட்சதையால் பூஜை செய்யலாமா? அப்படிச் செய்தால் பிராமணர்களைப் பட்டினி போட்ட பாவம் வரும் என்கிறார்களே... விளக்கம் தரவும்.

- கே. ஜெகதீசன், நாக்பூர்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூக்கள் கிடைக்கிற காலத்திலேயே புஷ்பம் தீர்ந்து போய்விட்டால், புஷ்பத்துக்கு பதில் அட்சதை போடலாம். புஷ்பாம் சமர்ப்பயாமி, அட்சதாம் சமர்ப்பயாமி என்பார்கள். பூ இருந்தாலும் அட்சதையும் போட்டுத்தான் ஆகவேண்டும். தினப்படி பூஜையின்போதே சந்தனம் பூசி, குங்குமம் வைத்து, அட்சதையும் போட வேண்டும்.

தூபம், தீபம் காட்ட இயலாத சூழ்நிலை... பழம் மட்டும் இருக்கிறது என்றால் தூபத்துக்கு பதில் அட்சதை, தீபத்துக்கு பதில் அட்சதை, பிறகு பழம் நைவேத்தியம் என்று செய்யலாம். நைவேத்தியத்துக்கு பதில் அட்சதை என்று சொல்லக் கூடாது. 'அட்சதை போடுவதால் அரிசி குறைந்துபோய் பிராமணர்கள் பட்டினி கிடப்பார்கள். அந்தப் பாவம் வந்து சேரும்' என்பதெல்லாம் தவறு. கவலைப்படாதீர்கள்!

என் மனைவிக்கு முதல் இரண்டு நாள் ஈமச்சடங்கு செய்தேன். சரீர உபாதையால் மீதி பத்து நாட்கள் செய்ய முடியவில்லை. நான் எடுத்து வளர்த்த என் சகோதரர்கள் நன்றி மறந்து தாங்களும் செய்ய மறுக்கிறார்கள். நான் என்ன செய்ய வேண்டும்? பசுமாடு தானம் செய்ய வேண்டும் என்று 'கேள்வி- பதில்' பகுதியில் கூறியிருந்தீர்கள். தானம் வாங்கியவர்கள் பசுவை கோ-சாலையில் விட்டுவிடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்... விளக்கம் தேவை.

- பெயர் வெளியிட விரும்பாத வாசகர்.

ஒருவர் தன் மனைவிக்குத் தானே ஈமச்சடங்கு செய்யலாம். சரீர அசௌக்கியம் இருந்தால், அதற்குத் தகுந்த மாதிரி சடங்குகளைக் குறைத்துக் கொள்ளலாம். சரீரம் இருந்தால்தான் செய்ய முடியும். சரீர சக்தியை அனுசரித்து காரியங்கள் செய்யலாம். உங்களிடம் உதவி பெற்றவர்கள் செய்யவில்லையே என்று குறைப்பட வேண்டியதில்லை.

உங்களிடம் தானம் பெற்றவர் பசுவை என்ன செய்கிறார் என்பது உங்களோடு தொடர்பில்லாதது. ஒரு பொருளைக் கொடுத்து விட்டாலே அது உங்களுடையது அல்ல என்று ஆகிவிடுகிறது. அதை என்ன செய்தால் என்ன? தானம் கொடுத்த பொருளோடு உங்களுக்கு இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுகிறது. தானம் வாங்கியவர் செய்யும் காரியங்களின் பலாபலன்கள் அவரைச் சாருமே தவிர உங்களைச் சாராது. எனவே, பசு தானம் செய்யுங்கள். உடலில் சக்தி இல்லாததால் ஒரு செயலைச் செய்யவில்லை என்றால் அதனால் தவறில்லை. உடல் சரியில்லாதது போல் வேஷம் போடுவதுதான் தவறு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராமரும் கிருஷ்ணரும் நல்ல நாட்களில் பிறந்தார்களா?

பகவானுக்கு சுடச்சுட நிவேதனம் செய்யலாமா? பல கோயில்களில் மிகவும் சூடாக பிரசாதங்களை நைவேத்தியம் செய்கிறார்களே. இது தவறல்லவா? சாப்பிடும் சூடுதானே இருக்க வேண்டும்!

- ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்-2.

பகவானுக்கு நிவேதனம் செய்வதற்கு என்று சட்ட திட்டம் இருக்கிறது. எதெல்லாம் சூடாக வைக்கலாமோ அதை சூடாகத்தான் வைக்க வேண்டும். எதை சூடாக வைக்கக் கூடாதோ அதை சூடாக்கக் கூடாது. பாயசம் சூடாக இருக்க வேண்டும். பழமோ தேங்காயோ புஷ்பமோ சூடாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பது உங்களுக்கே தெரியும்.

நாமே ஒரு விஷயத்தை உட்கொள்ள வேண்டுமானால், சூடாக உண்ண வேண்டிய பொருட்களை சூடாறுவதற்குள் உட்கொள்ள வேண்டும். போண்டா, ஆறிப்போனால் பிரயோஜனமில்லை. சூடு- சூடற்றது என்பது நமக்கும் பகவானுக்கும் ஒரே விதம்தான். அதே நேரம், ஏதோ தாமதத்தால் நிவேதனம் சூடாறி விட்டது, நமக்குச் செய்வது போல அவருக்கும் ரெண்டாவது தடவை சுடப் பண்ணுவோம் என்று சொல்லக் கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆலயங்களில் விழாக் காலத்தில் உற்சவருக்கு அபிஷேகம் நடக்கும் போது சல்லடையில் நீர் ஊற்றுகிறார்கள், சங்கினால் அபிஷேகம் செய்கிறார்கள், மாட்டுக்கொம்பு போன்று வளைவான பொருள் மூலம் நீர் ஊற்றுகிறார்கள். எதற்காக? இதன் தத்துவம் என்ன? சொல்லுங்கள்!

- ஐ.எஸ். சீனிவாசன், சென்னை-82.

ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு விதமான சிறப்புகள் உண்டு. சில இடங்களில் சங்காபிஷேகத்தை முக்கியமாகச் சொல்வார்கள். நூற்றியெட்டு சங்கு, ஆயிரத்தெட்டு சங்கு என்று சங்கில் ஜலத்தை வைத்து அபிஷேகம் செய்வார்கள். சில இடங்களில் தினப்படியாகவே மாட்டுக் கொம்பில் தண்ணீர் எடுத்து அபிஷேகம் செய்வார்கள். இதெல்லாம் அந்தந்தக் கோயிலுக்கு உண்டான நடைமுறையில் வந்தது. அந்தக் கோயில் தவிர மற்ற கோயில்களுக்குமான விதி அல்ல அது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மரணத்தின் ரகசியத்தை அறிய முடியாமல் போனது, மனித சமுதாயத்தின் மிகப் பெரிய தோல்விதானே?

- ப. ராமகிருஷ்ணன், காயக்காடு.

மரணத்தின் ரகசியத்தை நம் முன்னோர்கள் அறிந்து விட்டார்கள். பிறப்புதான் மரணத்தின் ரகசியம். பிறக்காத யாரும் இறக்க முடியாது! அந்தப் பிறப்பின் ரகசியம்தான் அறிய முடியாதது. சோணிதமும் சுக்கிலமும் சேர்வது வரை தெரிகிறது. அதன் பின் அதில் ஒரு சைதன்யம் வந்து உட்கார்வது எப்படி என்று சொல்ல முடியுமா? இருக்கிற சைதன்யம் வெளியே போவதை உங்களால் அறிய முடியும். பஞ்ச பூதங்களால் ஆன உடம்பில் காற்று வடிவில் ஒரு சைதன்யம் அங்குமிங்கும் போய்க் கொண்டு இருக்கிறது. அது வெளியே போய் விடுவதற்கான வாசல்கள் திறந்தே இருக்கின்றன. அது எப்படி போகாமல் இருக்கிறது என்று யாராலும் சொல்ல முடியாதது.

'மரணம் என்பது இயற்கை. ஆனால், இத்தனை வாசல்கள் திறந்திருந்தும் உயிர் வெளியே போகாமல் இருப்பதுதான் ஆச்சரியம்' என்றான் காளிதாசன். பிறப்பு ரகசியம் என்பது பகவானின் லீலை. நமக்கு எட்டாத விஷயம். நமக்கு எட்டக் கூடாது என்றே சில விஷயங்கள் உண்டு. அதை எட்ட முடியாமல் போவது எப்படித் தோல்வியாகும்? நமக்கு எட்டுகிற காரியத்தை நம்மால் செய்ய முடியாமல் போனால்தான் தோல்வி!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்து புராணங்களில் கூறப்படும் 4 வேதம், 6 சாஸ்திரங்கள், 64 கலைகள், 96 தத்துவங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 64 கலைகள் எவை என்று சொல்லுங்களேன்.

- கே.சுப்ரமணியம், சென்னை-106.

எண்ணிக்கையில் குறைவாக இருப்பதைக் கொஞ்சம் எட்டிப் பார்த்தாலே தெரிந்து விடும். நாலு வேதம் என்றால் ரிக், யஜுர், சாம, அதர்வண என்று சொல்லி விடுவீர்கள். எண்ணிக்கை நிறைய இருக்கிற கலைகள் பற்றிக் கவலைப்படுகிறீர்கள். அந்த 64 கலைகள் என்ன என்று கேட்கிறீர்கள்.

லலிதா சகஸ்ரநாமத்துக்கு பாஸ்கர ராயர் விளக்கம் எழுதியிருக்கிறார். லலிதோபயாக்யானம் என்கிற அந்த நூல் மிகவும் புகழ் பெற்றது. அதில் 64 கலைகளின் சொரூபியே என்று புகழும் ஸ்லோகத்தின் கீழே அந்த 64 கலைகளும் என்னென்ன என்று பட்டியல் இட்டிருக்கிறார். அதை சாவகாசமாக இருக்கும்போது எடுத்துப் படியுங்கள். விஷயம் விளங்கிவிடும்.

அஷ்டமி- கிருஷ்ணர் பிறந்த நாள்; நவமி- ராமர் பிறந்த நாள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆனால், அந்த நாட்களில் நல்ல காரியம் செய்யக் கூடாது என்பது ஏன்?

- வி.கோபிநாதன், குடவாசல்.

அவர்கள் பிறந்ததால் அவற்றை நல்ல நாள் என்று கொண்டாடுகிறோம். அவை எப்போதுமே கெட்ட நாட்கள்தான். சாயந்திர நேரத்தில் வாசல் நிலைப்படியில் உட்காரக் கூடாது. ஆனால், நரசிம்மர் அந்த வேளையில் அந்த இடத்தில் உட்கார்ந்துதான் ஹிரண்யகசிபுவை வதம் செய்தார். அதனால் அது நல்ல பழக்கம் என்று சொல்ல முடியுமா? பகவான் நேரம் பார்த்து அவதாரம் செய்வதில்லை. அவருக்கு எப்போது தோன்றுகிறதோ, அப்போது அவதரிப்பார். தேதி, நட்சத்திரம் எல்லாம் நமக்குத்தான். அவருக்குக் கிடையாது.

பகவானுக்கு நல்ல நாள்- கெட்ட நாள் என்று சொல்ல முடியாது. ராத்திரி 12 மணிக்குப் பிறந்தார் கிருஷ்ணர். பகலில் பிறப்பது உசத்தியாச்சே என்றா கேட்க முடியும்?

பூணூல் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?

- இல. வெங்கட்ராமன், கும்பகோணம்-1.

அவரவர் தொப்புள் அளவுக்குப் பூணூல் இருக்க வேண்டும்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தொப்புளுக்குக் கீழே நீளக் கூடாது. தோளுக்கும் தொப்புளுக்குமான தூரம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். பெரிய தொப்பை உள்ளவருக்கு நீளமான பூணூலும் குள்ளமானவருக்கு நீளம் குறைந்த பூணூலும் தேவை. அதனால் பூணூலின் நீளத்தை சென்டி மீட்டர் கணக்கில் சொல்ல முடியாது.

பூணூலைப் பற்றிய விதி உண்டு. கார்த்யாயனர் என்றொரு மகரிஷி, பருத்தியில் இருந்து நூல் எடுப்பது எப்படி, அதைத் தக்ளியால் நூற்பது எப்படி, அதை 96 இழைகளாக்குவது எப்படி என்றெல்லாம் யக்ஞோபவீத நிர்மாணப் பிரகாரம் என்கிற நூலில் விளக்கி இருக்கிறார். அதன் சரித்திரம் பெரியது. அதற்கான சட்ட திட்டங்கள் தர்ம சாஸ்திரத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பூணூலை ஏதோ வெறும் நூல் என்றோ, நீளமாகத் தொங்கவிட்டுக் கொண்டு அதில் ரெண்டு மூணு சாவியைக் கோத்துக் கொள்வது என்றோ நினைத்து விடாதீர்கள். தேவர்களை ஆராதனை செய்ய வேண்டுமானால், கழுத்தில் இது இருக்க வேண்டும். பித்ருக்களை ஆராதனை பண்ண வேண்டுமானால், அதைத் திருப்பிப் போட்டுக் கொள்ள வேண்டும். மனிதர்களை வணங்க வேண்டுமானால், மாலை மாதிரி போட்டுக் கொள்ள வேண்டும். இப்படி எல்லாம் நிறைய நியதிகள் இருக்கின்றன.

நவக்கிரகங்களுக்கு ஸ்லோகம் இருப்பது போல் பஞ்ச பூதங்களுக்கும் ஸ்லோகம் உள்ளதா? உண்டு என்றால், அந்த ஸ்லோகத்தைக் கூறவும். அவற்றை எந்தக் கிழமை, எந்த நேரம் சொல்ல வேண்டும்?

- எம். தர்மலிங்கம், சென்னை-38.

நவக்கிரகங்களையும் பஞ்ச பூதங்களையும் ஒரே தரத்தில் வைத்துப் பார்க்காதீர்கள். நவக்கிரகங்கள் ஆகாயத்தில் சுற்றிக் கொண்டிருப்பவை. பஞ்ச பூதம் என்பது சகலமுமானது. நீங்கள் எந்த ஜீவராசியை எல்லாம் பார்க்கிறீர்களோ, அவை அனைத்தும் பஞ்ச பூதங்களின் கூட்டு. எனவே, பஞ்ச பூதங்களைத் தனியே பிரார்த்தனை செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை. பஞ்ச பூதங்களிலிருந்து வந்தவைதான் கிரகங்கள். அவற்றை ஆராதித்தாலே பஞ்ச பூதத்தை ஆராதித்தது போலத்தான். ‘மண்ணே, உன்னை நான் வணங்குகிறேன்’ என்று சொல்லத் தேவையில்லை. அதற்கு பதிலாகத்தான் தாய் நாட்டை வணங்குகிறோம். தண்ணீரே, உன்னை வணங்குகிறேன் என்று சொல்ல வேண்டாம். அதற்குத்தான் வருண தேவதை வணக்கம் இருக்கிறது. நெருப்பை வணங்குவதுதான் அக்னி ஸ்தோத்திரம். தனித்தனியே பஞ்ச பூதத்தை ஆராதிக்க வேண்டியதில்லை. பஞ்ச பூதங்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தன்மையை வாங்கிக் கொண்டு சைதன்யத்தோடு இருப்பவற்றை வணங்கினால் போதும்.

எத்தனையோ ஸ்லோகங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சொல்லாமல் எங்கே ஸ்லோகம் இல்லையோ அங்கே போய் நின்று ஸ்லோகத்தைத் தேடுகிறீர்களே...

சமீபத்தில் சென்னை- காளிகாம்பாள் கோயிலுக்குச் சென்றபோது, அகோர வீரபத்திரருக்கு ஒரு பெரிய பூசணிக்காயை இரண்டாக வெட்டி, விதைகளை எடுத்துவிட்டு நல்லெண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றி வைத்திருந்தனர். நான் இதுவரை பார்த்திராத அதிசயம். இப்படி எல்லாரும் ஏற்றலாமா? இது வேண்டுதலா?

- வி. பாரதி வீரமணி, சென்னை-61.

லோகத்தில் எல்லா இடங்களிலும் இருக்கும் விஷயத்தை அவர்கள் செய்யவில்லை. வித்தியாசமாகச் செய்கிறார்கள் என்றால், அந்தக் கோயில் குருக்களிடம்தான் அதற்கு விளக்கம் கேட்க வேண்டும்.

ஒரு வீதியில் ஏதேனும் 'மிருத்யு' (மரணம்) நேர்ந்தால், அப்புறப்படுத்தும் வரை ஆலயத்தையே அந்த வீதியில் மூடி விடுகிறார்களே... ஏன்?

- கே. நீலா, சென்னை-18.

ஒரு கிராமத்தில் யாராவது இறந்து விட்டால், அந்த சவத்தை எடுத்துக் கொண்டு போகும்வரை கோயிலில் பூஜை நடக்காது. ஏனெனில், அந்தச் சாவினால் மொத்தக் கிராமமுமே அசுத்தி ஆகிவிடுகிறது. தீட்டுப்பட்டு விடுகிறது. நகரத்துக்கு இந்த விதி கிடையாது. கிராமத்துக்கு மட்டும்தான். கிராமத்தில் இருப்பவர் அனைவருமே தீட்டு என்பதால், கோயிலுக்குப் போகும் தகுதியை ஒவ்வொருவருமே இழந்து விடுகிறார்கள். பகவானுக்குத் தீட்டு இல்லை, பூஜிப்பவனுக்குத்தான் தீட்டு.

நகரத்துக்குப் புது விதி இருக்கிறது. ஒரு தெருவில் வேறுபட்ட, ஒருவருக்கொருவர் தொடர்பில்லாத ஆயிரக்கணக்கான பேர் இருப்பார்கள். அனைவருக்கும் தீட்டு என்பது பொருந்தாது. அதனால் கோயிலை மூடி வைக்க வேண்டிய அவசியமில்லை. கிராமத்திலோ, ஒரு வீட்டில் சாவு நேர்ந்தால் வேறு எந்த வீட்டிலும் அடுப்பே பற்ற வைக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட தொடர்பு ஒருவரோடு மற்றவருக்கு. அதனால் பூஜையை நிறுத்தி வைக்க வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் வாழை மரம், வேப்ப மரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இருக்கலாமா? தோட்டத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு வியாதி வரும் என்கிறார்களே... நிஜமா?

- கே.டி.சீனுவாசன், மடிப்பாக்கம்.

வீட்டுத் தோட்டத்தில் வாழை மரம், வேப்ப மரம் ஆகியவை இருக்க வேண்டும். தினப்படி நாம் செய்யக்கூடிய காரியங்களுக்கு வாழை மரம் தேவை. வாழை இலையில்தான் சாப்பிடுவது என்று வைத்திருக்கிறோம். அது ஆரோக்கியத்துக்கு நல்லது. வாழை மரத்தின் தண்டு, இலை, காய், கனி ஆகியவை பயன்படும். வேப்ப மரம் இருந்தால்தான் வேப்பங்காற்று வீசி நம் ரோகங்கள் அகலும். பவிஷ்ய புராணத்தில் விருட்சாயுர்வேதம் என்கிற பிரிவில் உபமன விநோதம் என்று ஒரு புத்தகமே இருக்கிறது. வீட்டில் எப்படி தோட்டம் அமைப்பது, அதில் என்னென்ன மரங்கள், செடிகளெல்லாம் இருக்கலாம் என்பதைப் பற்றியெல்லாம் அது விளக்கும். அதில் வாழை மரம், வேப்ப மரம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இருக்க... யாரோ ஏதோ சொன்னால் அதையெல்லாம் நம்பாதீர்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுமார் திருமணமானவரா?

உதகையில் ஸ்ரீ செளந்தர்ய லஹரி பூஜா மண்டலியில் உள்ள பெண்கள், பௌர்ணமியன்று நூறு ஸ்லோகங்களையும் பாடி அம்மனை வழிபடுகின்றனர். என் தோழி ஒருவர், பெண்கள் 44 ஸ்லோகங்களைப் பாடலாம். மற்ற ஸ்லோகங்களைப் பாடக் கூடாது என்கிறாள். இது சரியா? நூறு ஸ்லோகங்கள் பாடினால் ஏதாவது கெடுதல் நடக்குமா?

- மீனாட்சி விசுவநாதன், உதகை-1.

நூறு ஸ்லோகங்களையும் சொல்லி வழிபடட்டும். அதனால் எந்த ஒரு கெடுதலும் இல்லை!

வேத காலத்தில் மைத்ரேயி - சாவித்ரி போன்ற ஸ்திரீகள் மந்திர த்ரஷ்டாக்களாக இருந்ததை அறிய முடிகிறது. இந்தக் காலத்தில் பெண்கள் மந்திரங்களைச் சொல்ல முடியுமா? அதற்கு சாஸ்திரங்கள் அனுமதிக்கிறதா?

- தேதியூர் பாலு, சென்னை-11.

வேத காலப் பெண்கள் மாதிரியே நம் பெண்களும் தகுதி வரவழைத்துக் கொள்ள முடியுமானால், இந்தக் காலத்திலும் மந்திர த்ரஷ்டாக்களாக வரலாம். நாம்தான் நமது கலாசாரத்தில் இருந்து வெகுதூரம் விலகி வந்து, மாற்றுக் கலாசாரத்தை வாழ்க்கை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முறையாக ஏற்றுக் கொண்டு விட்டோமே... நம்மால் எப்படி அவர்களை பழைய மாதிரியாக மாற்ற முடியும்?

என் கணவர் 4 வருடங்களுக்கு முன்னால் காணாமல் போனார். தற்போது அவருக்கு ஈமச் சடங்கு செய்யலாமா? ஒருவர் இறந்து விட்டார் என்பதை உறுதிப்படுத்தாமல் ராமேஸ்வரம், காசி என்று போய் 13 நாட்கள் காரியம் பண்ணலாமா?

- உமா, சென்னை-33.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீட்டை விட்டுப் போனார்... ஊரை விட்டே போய்விட்டார். பண்டைய காலத்தில் போக்குவரத்து வசதிகள், இப்போது போல் இல்லாத நிலையில், எப்போது போனார், எங்கே போனார் என்பதே தெரியாது. ஒருவர் காணாமல் போய் 12 வருஷங்கள் அவரைப் பார்க்கவே முடியவில்லை, அவரைப் பற்றிய தகவலே தெரியவில்லை என்றால் 12 வருடம் முடிந்ததும் அவர் மரணம் அடைந்து விட்டார் என்று கருதி அவருக்கு ஈமச் சடங்கு செய்ய வேண்டும் என்கிறது தர்ம சாஸ்திரம். அந்தக் காலத்தில் எல்லாம் 12 வருடங்களாகியும் ஒருவர் திரும்பவில்லை என்றால் அதன் பிறகு திரும்ப மாட்டார். போக்குவரத்து, தகவல் தொடர்பு வசதிகள் குறைந்த காலம் அது. அதனால் 12 வருடங்கள் காத்திருக்க வேண்டும். அந்த இடைப்பட்ட காலத்தில் அவர் உயிரோடு இருப்பதாகவே கருத வேண்டும்.

ஒருவேளை அதற்குப் பிறகு அவர் திரும்ப வந்துவிட்டால், சடங்குகள் எல்லாம் செய்து விட்டோமே என்று கவலைப்படத் தேவை இல்லை. அவர் அன்றுதான் பிறந்திருக்கிறார் என்று கருதி, ஜாத கர்மா, நாம கர்ணம் என்று புதிதாகப் பிறந்த குழந்தைக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து சேர்த்துக் கொள்ளலாம். அப்படி திரும்ப வருவது ரொம்ப அபூர்வம்.

வந்துவிடுவார், வந்துவிடுவார் என்று 12 வருடங்களையும் தாண்டிக் காத்திருந்தால் அவருக்கு காரியம் செய்ய வேண்டிய மகனுக்கு அதற்கான சந்தர்ப்பம் வாய்க்காமல் போய்விடலாம். எந்த விதியும் விதிவிலக்கு இல்லாமல் இருந்தால், சக்தி வாய்ந்ததாக இருக்காது. அதனால் இந்த விதியும் 12 வருடம் கடந்ததும் அவருக்கான காரியத்தைச் செய்துவிட வேண்டும். அல்லது அப்படிச் செய்ய வேண்டிய ஆசாமியும் போய்விட்டால் ஈமச் சடங்கே இல்லாமல் ஓர் ஆன்மா அலைபாய்ந்து கொண்டிருக்குமே... யார் அவரைக் கரை சேர்ப்பது என்கிற கவலையில் 12 ஆண்டுகளோடு நிறுத்திக் கொள்கிறது தர்ம சாஸ்திரம். எனவே, இன்னும் எட்டு வருஷத்துக்கு நீங்கள் கவலைப்படாமல் இருக்கவும்.

24.7.2006 சக்தி விகடன் இதழில் கேள்வி- பதில் பகுதியில் தைலாவரம் எஸ். பெருமாள் என்பவர், அவரது ஊரில் உள்ள ஸ்ரீஆஞ்சநேயருக்கு வருடா வருடம் திருமணம் செய்து வைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆஞ்சநேயர் திருமணம் ஆனவரா? அவர் மனைவியின் பெயர் என்ன என்று கேட்டிருந்தார். அதற்குத் தாங்கள் கொடுத்த விளக்கம் எனக்கு விளங்கவில்லை. மகாவிஷ்ணு உலக நலனுக்காக எடுத்த அவதாரங்களில் ஒன்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அவதாரம். இதில் அவர் பல மனைவியருடன் லீலைகள் பல புரிந்தார். அதுவே பரசுராமர் அவதாரத்தில் அவர் வீரப் பிரம்மச்சாரியாக வந்துள்ளார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஸ்ரீ ஆஞ்சநேயரை இதுவரை பிரம்மச்சாரியாகத்தான் கண்டுள்ளோம். மகாபாரதமும் அப்படியே குறிப்பிடுகிறது. கலியுகத்திலும் அவர் பிரம்மச்சாரியாகவே இருந்து அருள் பாலிக்கிறார். இந்த நிலையில், ஆண்டவனை மனதால் எப்படி நினைத்து பூஜித்தாலும் சரிதான் என்பது போல் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், அப்படிப்பட்ட ஆஞ் சநேயருக்கு திருமணக் கோலத்தில் விழா எடுப்பது இந்து மதத்தை இழிவுபடுத்துவது என்பது எனது தாழ்மையான கருத்து. தங்களது விரிவான விளக்கம் தேவை. ஆஞ்சநேயர் திருமணம் ஆனவரா? அவர் மனைவி பெயர் என்ன? எனது கருத்து தவறு என்றால் மன்னிக்கவும்.

- பி. காளிதாஸ், புதுச்சேரி-9.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புராணக் கதைகள் ஒவ்வொரு யுகத்திலும் மாறி மாறி வரக் கூடியவை. நாரதர் நித்திய பிரம்மச்சாரி... எல்லாருக்கும் தெரியும். அவர் பெண்ணாக மாறி அறுபது குழந்தைகள் பெற்றுக் கொண்டதாகவும் ஒரு புராணம் சொல்லும். இது இந்து மதத்துக்கு இழிவாகாது. குறிப்பிட்ட புராணங்களில் குறிப்பிட்ட பகுதிகளை எடுத்துக் கொண்டு அதன்படி ஆராதனம் செய்வது அவரவர் சிந்தனையைப் பொறுத்தது.

ஜனங்களின் ருசியைப் பொறுத்த விஷயம் அது. நம்மை எல்லாம் விட இந்து மதத்தில் அதிக ஞானம் உள்ள ஒருவர்தான் ஆஞ்சநேயருக்கு மனைவி உண்டு என்று சொல்லி ஆராதனை செய்கிறார். விக்னேஸ்வரருக்கு ஒரு பத்தினி, ஒரு குழந்தை உண்டு என்று ஆராதிப்பவர்கள் உண்டு. பல புராணங்களில் விநாயகர் பிரம்மச்சாரி என்று சொல்லியிருக்கிறது.

எனவே, புராணத்தில் இருப்பதை நாம் இல்லை என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. விஷ்ணுவை நித்திய பிரம்மச்சாரி, அநாதி பிரம்மச்சாரி என்று சொல்கிறோம். அவருக்கு எத்தனையோ மனைவிகள் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லலாம். இது இழிவு என்று சொல்லலாமா? எனவே இழிவு, இழிவு அல்ல என்பது உங்கள் மனதில் இருக்கிறது. உங்கள் மனதைத்தான் மாற்றிக் கொள்ள வேண்டும். ஹனுமாரை நீங்கள் பிரம்மச்சாரி என்று சொன்னால் அந்த எண்ணத்திலேயே வழிபடுங்கள். மற்றவர்கள் கருத்து தப்பு என்று சொல்லாதீர்கள். மற்றவர்களை எதிர்க்க ஆரம்பித்தால், கடவுளை அடைவதற்கான உங்களது முயற்சி பலவீனப்படும்.

எங்கள் ஊர் விநாயகர் கோயிலில் உள்ள நவக்கிரக மண்டபம் பழுதடைந்துள்ளது. எனவே, நவக்கிரக பாலாலயம் செய்து, மண்டபத்துக்குத் திருப்பணி செய்ய ஏற்பாடு ஆகி உள்ளது. ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் சிலர், விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தியோ, விநாயக சதுர்த்தியோ கொண்டாடக் கூடாது என்கிறார்கள். நவக்கிரகம் பாலாலயம் செய்வதற்கும், விநாயகருக்கு விசேஷம் செய்யக் கூடாது என்பதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

- என்.வி. கன்னையர், கீழ்மணம்பேடு கிராமம்.

எந்த தெய்வத்தையும் நாம் புதுப்பிக்க நினைத்தால் அதற்கு பாலாலயம் செய்வது வழக்கம். ஒரே இடத்தில் நாலு தெய்வங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டைத்தான் புதுப்பிக்க வேண்டும், மற்ற இரண்டைப் புதுப்பிக்கத் தேவை இல்லை என்றால், அந்த மற்ற இரண்டு தெய்வங்களையும் எடுத்து வைக்க வேண்டியதில்லை.

பாலாலயம் என்பதே பகவானைப் புதுப்பிப்பதற்கு முன்னதாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அவரை வேறு ஓரிடத்தில் உட்கார வைத்து, உணவு உபசாரம் செய்யும் ஒரு சடங்கு. நவக்கிரகத்துக்கும் விநாயகருக்கும் சம்பந்தமே இல்லை. அது வேறு தெய்வம்; இது வேறு தெய்வம்.

இந்தியா என்ற நமது பாரதத்தை- நமது புனிதமான தாய்த் திருநாட்டை ஆதிகாலத்தில் என்ன பெயரில் அழைத்தனர்?

- கே.வி. நாகராஜ சர்மா, சென்னை-*39*.

ஆரம்பத்தில் இருந்தே இதற்கு பாரதம் என்றுதான் பெயர். 'பாரத வர்ஷே... பரத கண்டே' என்று வேதம் என்றைக்குச் சொன்னதோ, அப்போதிலிருந்தே இதற்கு இந்தப் பெயர்தான். இந்தியா, அக்னி தேவனைப் போற்றும் சமுதாயம். அதனால் அக்னியின் மற்றொரு பெயரான பாரத என்பது தேசத்தின் பெயராயிற்று. அக்னியில் இருந்துதான் கர்மா தொடங்குகிறது. கர்மாவைச் செய்யக் காரணமான அக்னியின் பெயரால் அறியப்படுகிறது. பேர் வைத்ததற்கு அப்பறம்தான் தேசம் உருவாயிற்று. ஊருக்குப் பெயர் வைப்பது, வைத்த பெயரை மாற்றுவது எல்லாம் அப்போது இருந்தவர்கள் செய்யவில்லை. ஊரை நல்லதாக்கும் வேலைதான் அப்போது இருந்தது.

என் வயது 68. நுரையீரல் சுருக்க நோயால் பாதிக்கப்பட்டவன். இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. எந்தப் புகையும் ஆகாது. ஊதுவத்தி,சாம்பிராணி, எண்ணெய் தாளித்தல்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பெட்ரோல் வாடை, சமித்துப் புகை எல்லாம் எனக்குப் பகை.

பெற்றோருக்கு ஹோமம் வளர்த்து சிராத்தம் செய்ய என்னால் முடியவில்லை. ஹிரண்யமாக அன்னமிட்டு சிராத்தம் செய்கிறேன். ஹோமம் வளர்த்து சிராத்தம் செய்ய மிகவும் ஆவல். ஆனால், கர்மவினை ஹோம சிராத்தமாக செய்ய அனுமதிக்கவில்லை.

2 பேருக்கு அன்னமிட்டு ஹிரண்ய சிராத்தம் செய்வதால் பலன் கிடையாதா? இதையே மேலும் சிறப்பாக மகா புண்யத்துடன் விசேஷமாகச் செய்ய (ஹோமம் இல்லாமல்) தர்ம சாஸ்திரங்கள் கூறுவது என்ன? தயை கூர்ந்து தெரிவிக்க பணிந்து வேண்டுகிறேன்.

நான் போதாயண சம்ப்ரதாயம் அனுஷ்டிப்பவன். பித்ரு திதி சமீபத்தில் நடத்த வேண்டியிருப்பதால் ஹிரண்ய சிராத்தம் சிறப்பாகச் செய்யும் வழி விரைவாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

- ந. இராமநாதன், சென்னை-83.

செயல்பட முடியாத நிலையில் நீங்கள் இருக்கும் போது அதில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை. ஒருவரை அழிப்பதற்கான ஒரு விஷயத்தை தர்ம சாஸ்திரம் சொல்லாது. ஒரு மனிதனைத் திடமாக வைத்து தர்மத்தை அனுஷ்டிக்கவே அது விரும்பும். நீங்கள் இருந்து பண்ணுவதற்கு எந்த சிராத்தம் ஒப்புக் கொள்ளுமோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அதைப் பண்ணுவதில் தவறே கிடையாது. ஹிரண்ய சிராத்தம் செய்யுங்கள். உங்கள் உபாதைகள் எல்லாம் தீர்ந்த பிறகு ஹோமம் வளர்த்துச் செய்யலாம்.

நவக்கிரகங்களில் புளூட்டோவைத் தகுதி நீக்கம் செய்துள்ளனர். இதனால் ஆன்மிக உலகுக்கு ஏதேனும் பாதிப்பு இருக்கிறதா?

- ரா. திருவள்ளுவடியோன், பென்னாகரம்.

கிரகம் என்ற சொல்லை வைத்துக் கொண்டு இதையும் அதையும் குழப்பிக் கொள்ளாதீர்கள். நவக்கிரகங்கள் என்பது சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஏழு கோள்களும், சாயா கிரகங்களான ராகு, கேதுக்களும்தான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புதுமணத் தம்பதி தேரோட்டம் பார்க்கலாமா?

அண்மையில் ஐரோப்பாவில் உள்ள ஒரு நகரில் நடைபெற்ற விஞ்ஞானிகளின் கூட்டத்தில், 'புளூட்டோ ஒரு கிரகமே அல்ல' என விஞ்ஞானிகள் வாக்கெடுப்பு மூலம் தீர்மானித்துள்ளனர். எனவே, நமது சாஸ்திரங்கள் புளூட்டோவைப் பற்றி ஏதேனும் கூறியுள்ளதா? வாக்கெடுப்பின் மூலம் புளூட்டோ, கிரகம் அல்ல என முடிவு செய்தது, நமது சாஸ்திரப்படி சரியானதா?

- கே.வி. நாகராஜன் சென்னை-39.

புளூட்டோவை அறிமுகம் செய்தவர்கள் விஞ்ஞானிகள். அதை கிரகம் இல்லை என்று சொன்னவர்களும் விஞ்ஞானிகள். உண்டு என்று சொன்னவர்கள்தான், இல்லை என்று சொல்ல வேண்டும். நமது ஜோதிடம் உண்டு என்று சொல்லவில்லை. ஆகையால் இல்லை என்று சொல்ல வேண்டிய வேலையும் இல்லை.

நமது ஜோதிடத்துக்கும் விஞ்ஞானிகளின் விளையாட்டுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. வாக்கெடுப்பு மூலம் தீர்மானித்துள்ளனர் என்று கூறுகிறீர்கள். தகுதியில் நிர்ணயிக்க வேண்டிய ஒன்றை, வாக்கெடுப்பில் நிர்ணயிப்பது தவறான கண்ணோட்டம். அரசியல் வாடை வீசுகிறது.

எண்ணற்ற விண்மீன்கள் வானத்தில் மிளிருகின்றன. அதில் இருபத்தேழை மட்டும் தகுதியின் அடிப்படையில் பொறுக்கி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



எடுத்திருக்கிறது வேதம்; அதை அறிமுகமும் செய்தது. அதை ஏற்றுக் கொள்கிறது நமது ஜோதிடம். நட்சத்திரம் என்கிற தகுதி எல்லாவற்றுக்கும் இருந்தாலும், பயனளிக்கும் பெருமை அதாவது தனித்தகுதி, இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு மட்டும்தான் உண்டு என்பதை 'நக்ஷத்திரேஷ்டி' வாயிலாக வெளியிட்டது வேதம்.

ஒன்பது கிரகங்களை வேதம் அறிமுகம் செய்தது. ஆகாயத்தில் ஆயிரம் கிரகங்கள் வளைய வந்தாலும் பலனளிக்கும் தகுதியைப் பெற்றவை ஏழுதான் என்பது அதன் முடிவு. வாக்கெடுப்புக்கு இடமளிக்க முடியாத முடிவு. 'கண்டுபிடித்தார்கள்' என்று சொன்னாலே 'இருப்பவை' என்பது திண்ணம். இல்லாததைக் கண்டுபிடிக்க இயலாது. மறைந்திருப்பதை வெளியே கொண்டு வருபவர்கள் விஞ்ஞானிகள். வேதத்தின் கண்களுக்கு எல்லாம் தெரியும். வருங்காலங்களில் எத்தனையோ கிரகங்களை விஞ்ஞானிகள் அறிமுகம் செய்யப் போகிறார்கள். அவற்றின் வரவுகள் நமது ஜோதிடத்தை ஒன்றும் செய்யாது.

ஜோதிடம், வேதக் கருத்திலிருந்து உருப்பெற்றது. அது முழுமையான சாஸ்திரம். அதை நிறைவு செய்ய மற்றுமொரு சாஸ்திரத்தையோ, விஞ்ஞானியின் தகவலையோ எதிர் பார்க்காது.

புதுமணத் தம்பதி தேரோட்டம் பார்க்கக் கூடாது என்பதற்கு அடிப்படைக் காரணங்கள் ஏதேனும் உண்டா?

- ஆர். இராஜேஸ்வரி, எரகுடி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



புதுமணத் தம்பதி தேரோட்டத்தைப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே மகிழ்ச்சியில் கட்டுண்ட மனம், இந்த நிகழ்ச்சியில் மேலும் குதூகலிக்கும். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள்தான் அவர்களுக்குத் தேவை. பார்க்க வேண்டிய நிகழ்ச்சியைப் பார்க்கக் கூடாது என்பது தவறு!

ஆச்சரியம், அற்புதம், பயம் போன்ற உணர்வுகள் திடீரென்று தாக்கும்போது மனம் தடுமாறும். கருவுற்ற பெண்களுக்கு மனம் தடுமாறினால், வயிற்றில் இருக்கும் குழந்தையை பாதிக்க அவகாசமுண்டு என்பதை மனதில் கொண்டு, நம் முன்னோர்கள் முன்னெச்சரிக்கையாக கருவுற்ற பெண்மணிகளைப் பார்க்க வேண்டாம் என்று அறிவுறுத்தினார்கள். அங்கும் அவள் மனம் திடமாக இருந்தால், எந்தத் தவறும் நிகழாது. அப்படியிருக்க புதுமணத் தம்பதி தங்களது மன நிறைவுக்கு தேரோட்டத்தைப் பார்க்காமல் இருப்பது தவறு என்றுதான் சொல்ல வேண்டும்.

பெண்கள் பூஜை அறையில் பூஜை செய்யும்போது மணி அடிக்கலாமா? ஒருவர் என்னிடம் சொன்னார்- 'பெண்கள் பூஜை செய்யும்போது மணி அடிக்கக் கூடாது. ஆண்கள்தான் அடிக்க வேண்டும்' என்று. அப்படியா?

- வி. பாரதி வீரமணி, சென்னை-61.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மணி அடித்தல் என்பது வழிபாட்டின் ஒரு பகுதி. பூஜை ஆரம்பத்தில் மணி அடிக்க வேண்டும். கடவுளின் பணிவிடைகளிலும் மணி ஒலிக்கலாம். இரண்டு கைகளாலும் செய்யும் பணிவிடைகளில் மற்றொருவர் மணி அடித்து உதவலாம். ஆண்-பெண் இனத்துக்கும் மணி அடித்தலுக்கும் சம்பந்தமில்லை.

ஒரு பெண் தனியாக பூஜை அறையில் பணிவிடை செய்கிறார். அவரது பணிவிடை வலக்கையினால் மட்டும் நிகழ்கிறது. அப்போது உதவிக்கு ஆள் இல்லாததால் தன் இடக்கையினாலேயே மணி அடிக்கலாம். ஆண்கள்தான் மணி அடிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டால், பெண்கள் தனியாக பூஜை செய்யும் தகுதி இழக்கப்பட்டுவிடும். ஆகையால் பெண்கள் மணியடிக்கக் கூடாது என்பது தவறு!

பெண்கள் இயற்கையாகவே மென்மையானவர்கள். கடினமான வேலைகளை அவர்களிடம் ஒப்படைக்காமல் இருப்பது நம்மவர்களின் மரபு. அப்படி ஒரு பரந்த எண்ணம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நம்மவர்களுக்கு உண்டு. கனமான பெட்டி- படுக்கைகளைத் தன் தலையில் சுமப்பான் ஆண். அவன் மனைவியிடம் சிறு தண்ணீர் கூஜா மட்டும் இருக்கும். சைக்கிள், கைக்கடிகாரம், தோல் பை, குடை - முதலிய பொருட்களில் பெண்களுக்கென்று தனி ரகம் உண்டு. லேசான பொருள்களையே அவர்களுக்கு ஒதுக்குகிறோம். இங்கெல்லாம் அவர்கள் மென்மை நம்மை அறிவுறுத்துகிறது. அது ஒரு நல்லெண்ணம். அதன் அடிப்படையில் கோயிலில் அடிக்கும் மணியை ஆண்கள் அடிக்கட்டும் என்று வைத்தார்கள். பூஜையிலும் அவர்கள்- அதாவது ஆண்கள் அடிக்கட்டும் என்பது நல்லெண்ணத்தில் எழுந்த ஒன்று. பெண்கள் மணி அடிக்கக் கூடாது என்று யாரும் சொல்லவில்லையே!

வாய்ப்பாட்டு, வயலின், வீணை... இவைதான் பண்டைய காலங்களில் பெண்களிடம் தென்படும் வாத்தியங்கள். இவையெல்லாம் மென்மையான உருப்படிகள். காலப்போக்கில் தவில், மத்தளம், மிருதங்கம், கஞ்சிரா, மூர்சிங்... இவற்றிலும் இப்போது பெண்களைக் காண முடிகிறது. அவர்களை யாரும் தடுக்கவில்லையே!

நம் முன்னோர்களின் நல்லெண்ணங்களைக் குறையாக சித்திரிப்பது தவறு. பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பது நமது பண்பு. தர்ம சாஸ்திரம் பெண்களின் பெருமையை உணர்ந்து, அவர்களது நல்லெண்ணங்களை மதித்து, அவர்களுக்கு பூஜை புனஸ்காரங்களில் சலுகைகளை வழங்கி இருக்கிறது. 'அவர்கள் பூஜைகளில் மணியடிக்க வேண்டாம், மந்திரம் ஓத வேண்டாம். செயல்களை மட்டுமே கடைப்பிடித்தால் போதுமானது. ஆண்களைப் போல் தரையில் கட்டை மாதிரி விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டாம்' என்றுகூட வலியுறுத்தும்.

பெண்கள் விளக்கேற்ற வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் சொல்லும். பெண்களே இல்லாத ஓரிடம்... அங்கு விளக்கேற்ற வேண்டும். எப்படி? பரவாயில்லை என்று அங்கு ஆண்களை அனுமதிக்கும். அதுபோலத்தான் மணியடித்தலும் ஒருவருக்கு உரிமை, மற்றவருக்கு உரிமை இல்லை என்கிற வாதம் இங்கு இல்லை. விளக்கேற்றுவதற்கு பெண்ணுக்கு முன்னுரிமை என்றால், மணி அடிப்பதற்கு ஆணுக்கு முன்னுரிமை. இரண்டையும் இரண்டு பேருமே செய்யலாம். தவறில்லை.

ஆண்கள் ஏன் குடுமி வைத்துக் கொள்கிறார்கள்? அதன் தாத்பர்யம் என்னவென்று விளக்கவும்.

- மீனா பாலு, ஹூப்ளி, கர்நாடகா.

குழந்தை பிறக்கும்போதே தலையில் கேசம் இருக்கும். தலைக்கு பாதுகாப்பு ரோமம். கேசத்தை உடலின் உறுப்பாகப் பார்க்கும் தர்ம சாஸ்திரம். மூளைக்குப் பாதுகாப்பு குடுமி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மூன்றாம் வயதில் குடுமி வைக்கச் சொல்லி வற்புறுத்தும். குடுமிக் கல்யாணம் என்று சொல்லுவார்கள். வேதம் பயின்றவர்கள், அரசர்கள், வியாபாரிகள் அத்தனை பேரும் தங்கள் மூளையின் பாதுகாப்பை எண்ணி, குடுமி வைத்துக் கொள்வார்கள். காலப்போக்கில் அது மறைந்தது.

பின்தலைக்கு உள்ளே இருக்கும் மூளையில், எல்லா நரம்புகளும் சங்கமிக்கும் இடம் உள்ளது. அதற்கு 'அதிபம்' என்று பெயர். அதற்கு நேரே தலையின் கேசங்களில் சுழல் இருக்கிறது. அதை கேசங்கள், அதாவது குடுமி காப்பாற்றுகிறது. கேசம் இல்லையென்றால் அடிபட்டவுடன் அதன் தாக்கத்தில் உயிர் பிரிய நேரிடும். அதிலிருந்து காக்க குடுமி வேண்டும் என்று ஆயுர்வேதம் பரிந்துரைக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பருவ மாற்றத்தால் ஏற்படும் தட்ப வெப்பங்களின் தாக்கம் மூளையை பாதிக்காமல் இருக்க குடுமி உதவும். தாங்க முடியாத வெயிலையும் கேசம் தடுத்து, அதன் உஷ்ணத்தைக் குறைத்து விடும். தலைக்குள் இருக்கும் மூளையைக் காப்பாற்ற குடுமி வேண்டும் என்று உபநிடதம் கூறுகிறது. தெய்வ வழிபாடுகள், முன்னோர்களின் ஆராதனைகள், இவற்றை நடைமுறைப்படுத்தும் வேளையில், குடுமியோடு இருத்தல் சிறந்தது என்று சொல்லும் தர்ம சாஸ்திரம்.

கேசம் நன்றாக வளர்ந்து நரைக்காமல் இருக்க ஆயுர்வேதம் மருந்துகளைப் பரிந்துரைக்கிறது. வாழ்நாள் முழுவதும் தலையில் கேசம் இருக்க வேண்டியது அவசியம். மண்பானையை அடுப்பில் வைக்கும்போது அடுப்புக் கல் பட்டு உடையாமல் இருக்க சாம்பலைப் பூசி வைப்பார்கள். கண்ணாடிப் பொருள்கள், பீங்கான் வகையறாக்களை உடையாமல் பாதுகாக்க, அதன் இடையில் வைக்கோலை வைத்து விடுவார்கள். அதுபோல் தலையின் உள்ளே இருக்கும் மூளையைக் காப்பாற்ற கேசங்கள் வேண்டும் என்று வேதம் சொல்லும். காட்டில் இருக்கும் முனிவர்கள் கேசத்தைக் களைவதில்லை. தலையின் உள்ளே இருக்கும் மூளைக்கு இயற்கை தந்த பாதுகாப்பு - குடுமி.

போஸ்ட்மார்ட்டம் செய்த பிணத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லக் கூடாது என்கிறார்களே... எதற்கு?

- ஆர். பெரியாண்டவர், தேவிபட்டணம்.

பிறப்பும் இறப்பும் வீட்டில் நிகழ வேண்டும். குழந்தைகள் பிறப்பதற்கும், அவர்களை வளர்ப்பதற்கும், வளர்ந்து வாழ்ந்து, கடைசியில் உயிரைத் துறப்பதற்கும் சொந்தமாக வீடு வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் கூறும்.

வீட்டிலிருந்துதான் பிணம் வெளியே செல்லுமே தவிர, எந்தப் பிணமும் வீட்டுக்கு வர வேண்டிய அவசியம் இருக்காது. தற்போது பிறப்பும் இறப்பும் பெரும்பாலும் மருத்துவமனையில்தான் நிகழ்கிறது. விஞ்ஞான வளர்ச்சி, நமது சிந்தனை மாற்றம் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

'இனி பிழைக்க மாட்டார். வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம்' என்று மருத்துவர் பரிந்துரை வழங்கினாலும், அதை ஏற்காமல் மருத்துவமனையிலேயே அவரது முடிவு ஏற்படட்டும் என்று பிடிவாதமாகச் செயல்படும் மனமும் உண்டு. வீட்டுக்கு அழைத்து வந்து நோயாளியைப் பராமரிக்க இயலாமையால் மருத்துவ மனையில் தங்க வைக்க விரும்பும் மனமும் உண்டு. மரணம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நிச்சயம் என்று தெரிந்த பிறகும், நோயாளியை நிம்மதியாக உயிர் பிரிய விடாமல் தொடர்ந்து ஏதாவது சிகிச்சை அளித்துத் துன்புறுத்தும் மனமும் உண்டு.

'நோயாளியைக் கண்காணிக்கவில்லை' என்று மற்றவர்கள் கூறி விடுவார்களோ என்று பயந்து நோயாளிக்குத் தேவையில்லாத சிகிச்சையைத் திணிக்கும் மனமும் உண்டு.

தவறான மரணம், அல்லது சந்தேகத்துக்கு உரிய மரணம்... இவற்றில்தான் போஸ்ட்மார்ட்டம் முளைக்கும். அது ஓர் உண்மையை அறிந்து கொள்ளத் தேவைப்படும் செயல். சொந்த வீட்டில் இறக்கக் கொடுத்து வைக்கவில்லை அவன். இறந்த பிறகாவது அவன் ஆன்மா சாந்தியடைய, சொந்த வீட்டுக்கு அழைத்து வரலாமே. அதை எப்படித் தவறாகப் பார்க்க முடியும். தான் வாழ்ந்த வீட்டுக்கு, இறந்த பிறகு அவன் வரக்கூடாது என்று யார் உத்தரவு போட முடியும்?

இப்படி நீங்கள் நினைக்கலாமே. வீட்டிலிருந்துதான் பிணம் செல்ல வேண்டும் என்று இருப்பதால், அதை வீட்டுக்குக் கொண்டுவந்து எடுத்துச் செல்லலாமே. இப்போது வீட்டில் இருந்து பிணம் சென்று விட்டதல்லவா?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடவுள்கள் எந்த நட்சத்திரத்தில் பிறந்தார்கள்?

பிரச்னம் மூலம் குலதெய்வத்தைக் கண்டுபிடித்து வணங்குவது பலன் தருமா?

- ஆர். பெரியாண்டவர், தேவிபட்டணம்.

'**பி**ரச்னம்' என்பது குறிப்பிட்ட ஒரு காலத்தின் கிரக அமைப்பைச் சுட்டிக் காட்டும் வரைபடம். அதில் உங்கள் குலதெய்வம் தென்படாது. குலதெய்வம் தெரியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம். மறதி அல்லது அறியாமை குற்றமாகாது. அறியாதவன் மற்றும் மறந்தவனை குலதெய்வம் தண்டிக்காது.

உங்களுக்குப் பிடித்த ஒரு குலதெய்வத்தை நீங்களாகவே ஏற்படுத்திக் கொள்ளலாம். எந்தக் கடவுள் உருவத்தில் உங்கள் மனம் லயிக்கிறதோ, அதுதான் உங்கள் குலதெய்வம். குலதெய்வத்தை உங்கள் மனம் நிர்ணயம் செய்ய வேண்டும். 'பிரச்னம்' நிர்ணயம் செய்யக் கூடாது. தெய்வ வழிபாடு ஜோதிடத்துடன் தொடர்புடையது அல்ல. விருப்பமுள்ள தெய்வத்தை குலதெய்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். விரும்பாத பிரச்னத்தின் அடிப்படையில் திணிக்கப்படும் தெய்வம் உங்களுக்குத் தேவையான பலனை அளிக்காது.

வழிபாட்டுக்கு முக்கியம், மனதின் ஒருமைப்பாடு. எந்த தெய்வத்தையும் குலதெய்வமாக்கிக் கொள்ளலாம். கவலையை விடுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராமாயண உபன்யாசம் அடிக்கடி சொல்லப்படுகிறதே... ஏன் இவர்கள், பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்களைப் பற்றி கூறக் கூடாது என தமிழ்ப் புலவரான என் நண்பர் ஆவேசப்படுகிறார். அவருக்கு உங்கள் பதில் என்ன?

_ வி. பாலசுப்ரமணியன், குடந்தை-1.

முன்னோர்களது நடைமுறைகளைப் பயன்படுத்தி பொழுதைப் பயனுள்ளதாகச் செய்வது - கதா-கால க்ஷேபம். கிடைத்த பொழுதை அறவழியில் செயல்படுத்துவார்கள் நம் முன்னோர்கள். முதுமையில் பொழுது இருக்கும்போது காலையில்- மகாபாரதம், மதியம்- ராமாயணம், மாலையில்- பாகவதம் என்று பாகுபடுத்தி மன நிறைவு பெறுவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறத்தின் தொகுப்பு மகாபாரதம். அன்றாடம் தேவைப்படும் அறங்களின் விளக்கவுரை ராமாயணம். ஆன்மிகச் சிந்தனையில் நம்மை மூழ்கடிப்பது பாகவதம். மனிதனின் பிறவிப் பயனுக்கு இந்த மூன்றும் வேண்டும். வேடிக்கையிலும் கேளிக்கையிலும்கூட அறம் ஒளிந்து கொண்டிருக்கும். ராம லீலையிலும், ராஸ லீலையிலும் அறம் உண்டு. அரவாணிகளின் அரவான் வதத்திலும் அறம் தெரியும். குரங்காட்டி, விளையாட்டுக் காட்டி ராமாயணத்தை போதிப்பான். ஒரு செய்யுளை அவன் ஓதும்போது தலைக்குமேல் கை கூப்பி அந்தக் குரங்கு ஆஞ்சநேயராக நடித்து, நமக்குக் களிப்பூட்டும். தடியை மேலே உயர்த்தி 'ஆஞ்சநேயா, கடலைத் தாண்டு' என்று சொன்னவுடன் குரங்கு தடியைத் தாண்டி, அனுமன் கடல் தாண்டியதை நடித்துக் காட்டும். அன்னை சீதையிடம் கணையாழியைக் கொடுக்கும் நிகழ்ச்சியை நடித்துக் காட்டும். கை நீட்டிப் பிழைப்பது இழிவானாலும், அதிலும் அறத்தை போதித்து, தனது பிழைப்பைப் பயனுள்ளதாக்குவான் பண்டைய பிச்சைக்காரன். அப்படியொரு சிறந்த பண்பு பாரதத்தின் முத்திரையாகும்.

தெருக் கூத்திலும் ராமாயணம் உண்டு. எல்லாரையும் ஒரு சேர ஈர்க்கும் தகுதி ராமாயணத்துக்கு இருப்பதால், அடிக்கடி ராமாயண கதாகாலக்ஷேபம் நடைபெறுவது வழக்கம். அதன் கதை தெவிட்டாத ஒன்று.

பெரிய புராணத்தில் வரும் 63 நாயன்மார்களைப் பற்றிக் கூறக் கூடாது என்பது ஏற்புடையது அல்ல. லட்சுமணன், குகன், பரதன், சபரி, விபீஷணன், ஆஞ்சநேயர் - இவர்கள் ராம பக்தர்கள். அவர்களது பக்தியை நமக்கு போதிக்க, 63 நாயன்மார்களை ஒப்பிட்டுக் கூறுவது இன்னும் சிறப்பாகவும், அதே நேரம் மனம் ஏற்றுக் கொள்ளும்படியாகவும் அமைந்து விடும். ஆகையால், நாயன்மார்களின் சரித்திரத்தை இதில் கலப்பது என்பது நல்ல எண்ணத்தில் விளைந்ததே!

எந்தக் கதையிலும் மற்ற புராணங்களின் மேற்கோள்கள் அவசியம் தேவை. குறிப்பாக இன்றைய சிந்தனைக்கு மிக மிக அவசியம். உங்கள் நண்பரின் ஆவேசத்தை தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். ஒன்றில் இருக்கும் அளவுக்கு மீறிய ஈடுபாடு, மற்றொன்றை மதிக்காது. ஒரு கன்னியிடம் ஏற்பட்ட அளவுக்கு மீறிய அன்பு (அதாவது காதல்), அதை விட அழகுடைய மற்றொரு கன்னியை மதிக்காது. நாம் பக்தி செலுத்தும் நாயன்மார்களின் தரம் தாழ்ந்து விடுமோ என்ற தாழ்வு மனப்பான்மை அவரை ஆவேசப்பட வைக்கிறது. இன்னும் தெளிவு பெறும்போது ஆவேசம் தானாகவே மறைந்து விடும். பொறுமை வேண்டும், அவ்வளவுதான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஆவேசப்படுவது அவரது மன இயல்பை மாற்றி விடும். அவரது ஆன்மிகச் சிந்தனையைக் குலைத்து விடும். தனக்கு ஏற்படும் எதிர்விளைவை அவராகவே தெரிந்து கொள்ளும்போது, அவர் மனம் ஆவேசத்தைத் துறக்கும்.

வீட்டின் முன்பகுதியில் ஒரு பாத்திரத்தில் நீர் விட்டு, பூக்கள் போட்டு வைக்கிறார்களே, அது ஏன்? அதில் பிளாஸ்டிக் பூக்களைப் போடலாமா (தினமும் விலை கொடுத்து பூ வாங்கிப் போடுவது என்னைப் போன்ற நடுத்தரக் குடும்பப் பெண்களுக்கு கட்டுப்படியாகாது).

– ஜி. கல்பனா.

பாத்திரத்தில் பூப்போட்டு வைக்கும் சம்பிரதாயத்துக்கும், சாஸ்திரத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. தனி மனிதனின் சிந்தனையில் தோன்றிய செயல் இது. பிற்பாடு அதற்கு ஆன்மிக விளக்கங்களையும், விஞ்ஞான விளக்கங்களையும் அளித்து, செயற்கையாக ஒரு பெருமையை உண்டு பண்ணுவார்கள். பலவீனமான மனித இனம், அதை நம்பி ஏமாந்து விடும். தனது பொழுதை வீணடிக்கும். தண்ணீரில் புஷ்பத்தைப் போட்டு வீணடிப்பதைவிட, கடவுளுக்கு அர்ப்பணிப்பதோ அல்லது தலையில் சூடிக்கொள்வதோ பயனுள்ளதாகும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புஷ்பத்தை தலையில் வைத்து மகிழ வேண்டும். அல்லது அவை தரையில் கிடந்து மடிய வேண்டும். இவை இரண்டும்தான் புஷ்பங்களுக்கு உண்டு என்று பர்த்ருஹரி கூறுவார். இரு கை நிறைய புஷ்பங்களை அள்ளி கடவுளுக்கு புஷ்பாஞ்சலி செய்ய வேண்டும். அவன் பாதம் தொட்ட புஷ்பத்தை முகர்ந்து பார்க்க வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் சொல்லும். கண்ணன், 'புஷ்பத்தை பக்தியோடு எனக்கு அளித்து விடு' என்கிறான். பூக்களை ஆராதனைக்குரிய பொருளாகப் பார்க்கிறது தர்ம சாஸ்திரம்.

ஆற்றங்கரைக்கு குளிக்கச் சென்றான் ஒருவன். அவன் கையில் ஒரு செப்புக்கிண்டி இருந்தது. குளித்த பிறகு காலைக் கடனை நிறைவேற்ற செப்புக்கிண்டி தேவை. 'குளிக்கும்போது கிண்டியை கண்காணிக்க முடியாமல் போனால் என்ன பண்ணுவது?' என்ற சிந்தனையில், கிண்டியை தரையில் புதைத்து அதன் மேல், ஓர் அடையாளத்துக்காக மணலைக் குவித்து கூம்பாரமாக வைத்துவிட்டுக் குளிக்கக் கிளம்பினான். அதைக் கண்ணுற்ற மற்றொருவன், 'ஓகோ... கிண்டியை மறைத்து மணலைக் கூம்பாரமாக வைத்து விட்டுத்தான் குளிக்க வேண்டும் போலிருக்கிறது' என்று நினைத்து, தானும் அப்படியே செய்தான்.

வந்தவர்கள் எல்லாரும் இப்படி தங்களது கிண்டியை மறைத்து வைக்க, அங்கு நூற்றுக்கணக்கான மணல் கூம்பாரங்கள்! குளித்துவிட்டுத் திரும்பி வந்த அவனுக்கு தனது கிண்டி இருக்கும் கூம்பாரம் தெரியாமல் போனது. 'ஐயஹோ... ஒருவன் செய்த செயலை இப்படிக் கண்மூடித்தனமாக எல்லாரும் பின்பற்றுகிறார்களே! உண்மையை அறியாமல் செயல்படுவதுதான் லோகத்தின் இயல்பா? எனது செப்புக்கிண்டி தொலைந்ததுதான் மிச்சம்!' என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினான் என்று ஒரு கதை சொல்வார்கள்.

காரண காரியத்தோடு இணைந்தது தர்ம சாஸ்திரம். அதோடு இணைந்தது சம்பிரதாயம். தாங்கள் பிளாஸ்டிக் பூக்களைத் தேடி அலைய வேண்டாம். அந்த வேளையைப் பயனுள்ளதாகச் செய்யுங்கள். கவலையை விட்டுவிடுங்கள்.

சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை என்றும், மகாவிஷ்ணுவின் நட்சத்திரம் திருவோணம் என்றும் சொல்கிறார்களே... இவர்கள்தான் அண்டம் அனைத்தையும் படைத்தவர்கள் என்றால், இவர்களுக்குப் பிறகுதானே இந்த நட்சத்திரங்களை இவர்கள் படைத்திருக்க வேண்டும்? அப்படி இருக்க, படைக்கும் கடவுள்களுக்கே ஜன்ம நட்சத்திரம் சொல்வது எப்படி என்று புரியவில்லையே?

– கே. சபாபதி, கோவை-42.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சிவபெருமான், மகாவிஷ்ணு - இவர்கள் பிறப்பு- இறப்பு அற்றவர்கள்; என்றும் இருப்பவர்கள்; அழிவற்றவர்கள். பிறந்தவர்களுக்கு மட்டுமே, அவர்கள் பிறந்த காலத்தைக் குறிக்க நட்சத்திரத்தை சுட்டிக் காட்டுகிறோம். பிறக்காதவர்களுக்கு எதற்குக் காலத்தைக் குறிப்பிட வேண்டும்?

எமனுக்கு எமன் சிவபெருமான். அவனை காலகாலன் என்று அழைப்பார்கள். விஷ்ணு என்றால், எங்கும் பரவியிருப்பவர். ஆகாசம் இருக்குமிடமெல்லாம் அவரது சக்தி உண்டு. இடைவெளி இருக்குமிடம், அவரது இருப்பிடம். இடைவெளி அளப்பதற்கு அரிது. அவரும் அளக்க இயலாதவர். விண்வெளியில் தோன்றும் 'ச்ரோணா' என்று சொல்லப்படும் திருவோண நட்சத்திரத்தின் தேவதை விஷ்ணு. திருவோண நட்சத்திரத்தை ஆட்கொண்டவன் என்று பொருள். திருவோண நட்சத்திரத்துக்குப் பணிவிடை செய்ய வேண்டுமானால் விஷ்ணுவை ஆராதிக்க வேண்டும்.

அதுபோல் திருவாதிரை நட்சத்திரத்தின் தேவதை ருத்ரன் அதாவது சிவபெருமான். இந்த நட்சத்திரத்தை ஆராதிக்க, சிவபெருமானை வணங்க வேண்டும் என்பது வேதத்தின் கணிப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திருவோண நட்சத்திரத்தில் விஷ்ணு பிறந்தார். திருவாதிரையில் சிவபெருமான் பிறந்தார் என்ற தகவல் ஏற்புடையது அல்ல. விஷ்ணு ராமனாகத் தோன்றும்போது புனர்வசு நட்சத்திரம். அவர் கிருஷ்ணனாக வந்தபோது ரோஹிணி நட்சத்திரம். இப்படி பல நட்சத்திரங்களில் அவர்கள் தோன்றுவார்கள். அவர்களுக்குக் காலத்தை அளிக்க நம்மைப் போல் நட்சத்திரம் குறிப்பிடப்படவில்லை. ஸ்ரீராமநவமி என்றும், ஜன்மாஷ்டமி என்றும் அவர் தோன்றிய நாளைக் கொண்டாடுகிறோம்.

ஆலயங்களில் மூலவரை வணங்கிய பிறகு பிராகார வலம் வர வேண்டுமா? அல்லது பிராகார வலம் வந்து, கோஷ்ட தெய்வங்களையும் வணங்கிய பிறகு, கருவறை சென்று மூலவரை வணங்க வேண்டுமா? எது சரியான முறை?

– எம். ராஜப்பா, சென்னை-99.

பக்தி மேலிட்டவனுக்கு இந்த இரண்டு முறையும் ஒன்றுதான். அவன் மனதில் பாகுபாடே தென்படாது. எல்லாம் ஒன்றாகவே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

படும். நீங்கள் சொல்கிறபடி எதற்கும் ஒரு நடைமுறை வேண்டும். பிராகாரம் வலம் வருவது மூலவருக்குச் செய்யும் பணிவிடைகளில் ஒன்று. அவரை வலம் வருகிறோம் என்று பொருள். பதினாறு வகைப் பணிவிடைகளில், வலம் வருதல் கடைசியில் வரும். ஆகையால், மூலவரை முதலில் தரிசனம் செய்து, நமது பக்தியை அர்ப்பணித்து வலம் வருதல் பொருத்தமாகும்.

பிராகாரத்தில் இருக்கும் தெய்வங்களை வலம் வரும் வேளையிலேயே வணங்கி, நமது பக்தியைச் செலுத்திவிடலாம். பிராகாரத்தில் தேவதைகளே இல்லாத கோயில்களும் உண்டு, பிராகாரமே இல்லாத ஆலயங்களும் உண்டு. அங்கெல்லாம் மூலவரை தரிசித்த பிறகு வலம் வருவோம். மூலவரை நேரடியாகப் போய் தரிசிப்பதைவிட, அவரை வலமாக வந்து ஆலயம் நுழைவது சிறப்பாகும். ஆனால், வலம் வரும் வேளையில் பிராகார தெய்வங்களை வணங்காது வலம் வருவது சரியல்ல. வணங்கினால் மூலவரைப் பார்ப்பதற்காக வந்த நாம், முதல் வணக்கத்தை பிராகார தேவதைகளுக்கு அளிக்கிறோமே என்று நெருடல் ஏற்படும் மனமும் உண்டு. ஆகவே, முதலில் மூலவரை வணங்கி, பிறகு பிராகார தெய்வங்களை வணங்கும்போது நெருடல் இருக்காது. அதைப் பின்பற்றுவது சிறப்பு.

ஆலயத்தில் முதல் பிரதிஷ்டை மூலவர். பிற்பாடு பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள், பரிவார தேவதைகள். ஆகையால், மூலவருக்கு முதல் வணக்கம் என்ற நடைமுறை சிறந்தது. சில ஆலயங்களில் ஒரு தெய்வத்தை வணங்கி, அவரது அனுமதியோடு மூலவரை தரிசிக்க வேண்டும் என்கிற நியதி இருக்கும். வாவரைப் பார்த்து வணங்கிய பிறகு, சபரிகிரீசரை வணங்க வேண்டும் என்பார்கள். லட்சுமணனை தரிசித்த பிறகு, ராமரை வணங்க வேண்டும் என்று திருவில்வாமலை ஆலயத்தில் சொல்லுவார்கள். திருப்பதி- திருமலையில் ஸ்ரீநிவாஸனை அதாவது மூலவரை தரிசித்த பிறகு அலர்மேல் மங்கையை தரிசிக்க வேண்டும் என்ற சம்பிரதாயம் உண்டு.

இப்படி சிறப்பான விதிமுறைகள் இல்லாத ஆலயங்களில் மூலவருக்கு முதல் வணக்கமளித்து விடுங்கள். மனம் யாரை வணங்க வேண்டும் என்று சங்கல்பம் செய்ததோ, அதை முதலில் செய்துவிட்டு மற்றவர்களுக்கு பிற்பாடு செய்வது தவறாகாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஈரத்துணியுடன் சாமி கும்பிடலாமா?

'வி.ஐ.பி-களுக்குச் சிறப்பு தரிசனம் சரிதானா?' என்ற கேள்விக்கு, சரிதான் என்று பதில் அளித்தீர்கள். ஆனால், கேரள மாநிலத்தில் மந்திரியாக இருந்தாலும் வரிசையில்தான் செல்கிறார்கள். அங்கு உங்கள் பதில் செல்லுபடி ஆகாதா?

- பா. சௌந்தர பாண்டி, மதுரை-1.

வி.ஐ.பி-களுக்கு முன்னுரிமை என்பது சட்டமல்ல. சலுகை என்பது சிறப்பு தரிசனமும் அல்ல. பொது ஜனங்களின் கருணையில் விளைந்த உயர்வு. நிரந்தர வி.ஐ.பி-கள் பொதுஜனம். நீங்கள் குறிப்பிடும் வி.ஐ.பி-கள் 5 வருஷ வி.ஐ.பி-கள் அல்லது 58 வயது வரை விளங்கும் வி.ஐ.பி-கள்.

பக்தர்கள் குழாம் என்றால், எல்லாரும் ஒன்றுதான். பக்தனாக வரும் வி.ஐ.பி-கள் சிறப்புச் சலுகையை விரும்ப மாட்டார்கள். துரதிர்ஷ்டவசமாக நமது கோயில்களுக்கு யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் செல்லலாம். அவர்களுக்கு தனித்தனியாக தீபாராதனை, அர்ச்சனை முதலியன நடைபெறும். பொதுஜனத்துக்கு முன்னுரிமை இருக்கும். ஆகம விதிகளின் பூஜா காலங்களில் நீக்குப் போக்குத் தென்படும். வி.ஐ.பி. வரும் வேளையில் கோயில் திறந்து வைக்க வேண்டும் என்ற அளவுக்கு நாம் வந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விடுகிறோம். வி.ஐ.பி-க்காக தீபாராதனையில் தாமதமும் ஏற்படும். அதையும் ஏற்றுக் கொள்வோம். வி.ஐ.பி-யின் எண்ணத்துக்கு உகந்தவாறு பூஜை புனஸ்காரங்களை நடைமுறைப்படுத்துவதும் உண்டு. கேரள ஆலயங்கள் முற்றிலும் மாறுபட்டவை. அங்கு இருக்கும் வி.ஐ.பி-கள் தனிச் சலுகையை எதிர்பார்க்க மாட்டார்கள். கோயில் திறந்த வேளையில், ஆகமப்படி பூஜை நடக்கும் வேளையில் அவர்கள் வருவார்கள். அவர்களுக்காக விசேஷ பூஜைகள் முளைக்காது. குருவாயூரில் நிர்மால்ய தரிசனம் நடக்கும்போது, பொது மக்களோடு அவர்களும் சேர்ந்து கொள்வர். சபரிகிரியில் நடை அடைத்த பிறகு, வி.ஐ.பி-க்காக சிறப்பு நடை திறப்பு நிகழாது. ஆலய விதிக்கு உட்படாத சிறப்பு தரிசனத்தை அங்குள்ள வி.ஐ.பி-கள் விரும்ப மாட்டார்கள். அவர்கள் தங்களை பக்தனாக, தாசனாக நினைக்கிறார்கள்; வி.ஐ.பி-யாக எண்ணுவதில்லை. கேரளாவில் இருப்பவர்கள் அந்தச் சலுகையை எதிர்பார்ப்பதில்லை. அதனால் அங்கு கேள்வியே எழவில்லை!

சபரிமலையில் ஆண்டுதோறும் நிகழும் மகர ஜோதி, உண்மையில் ஆன்மிக நிகழ்வா? அல்லது கோயில் பூஜைக்கும், இயற்கை நிகழ்வுக்கும் முடிச்சுப் போடப்படுகிறதா? அது எப்படி சொல்லி வைத்தாற்போல் ஐயப்பனுக்கு ஆபரணங்கள் பூட்டி, பூஜை செய்து கற்பூர தீபம் காட்டியவுடன், வெகு தூரத்தில் சரியாக பொன்னம்பலமேட்டில் ஜோதி தெரிகிறது. உடனடியாக மறைந்தும் விடுகிறது. ஐயப்ப பக்தர்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விளக்கம் சொல்லத் தெரியவில்லை. கலியுகத்தில் ஜோதி வடிவில் தெய்வம் தோன்றுவது என்பது மனதை நெருடுகிறது. விளக்கம் தேவை.

- ஆர். ராமசாமி, காரைக்குடி.

ஆராய்ச்சி வேறு; ஆன்மிகம் வேறு. யூகத்தில் கிடைத்த தகவல் என்பது ஆராய்ச்சி. உணர்வு பூர்வமான மகிழ்ச்சிதான் ஆன்மிகம். 'முடிச்சு' போடுவது ஆராய்ச்சி. 'முடிச்சு' அவிழ்ப்பது ஆன்மிகம். தங்களுக்கு ஆராய்ச்சியில் நாட்டம் அதிகம். பிறந்த குழந்தை தாயின் கொங்கையில் வாய் வைத்தவுடன் சப்பிக் குடிக்கிறது. அது எப்படி சொல்லி வைத்தது போல் நிகழ்கிறது. சுக்கிலமும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சோணிதமும் கர்ப்பப் பையில் இணைகிறது. குழந்தைக்குள் உயிர் எப்படி உள்ளே நுழைந்தது?

மென்மையான ரோஜா... அதன் கூடவே முள் எப்படி முளைத்தது? மண்ணில் எல்லாப் பயிரினங்களும் தோன்றுகிறது. ஆனால், ஒன்றுக்குக்கூட மண் வாசனை இல்லையே? மரங்கள் எல்லாம் ஓர் இனம். ஆனால், ஒன்றில் புளி, ஒன்றில் பலா, ஒன்றில் மா - இப்படி ஏன் நிகழ்கிறது? மாம்பழக் கொட்டையிலிருந்து மாமரம் உருவெடுக்கிறது. மாமரத்திலிருந்து மாம்பழம் வருகிறது. மரம் முந்தியதா, கொட்டை முந்தியதா, தெரியவில்லையே?

கோடையில் நடந்து நடந்து தேய்ந்து ஒரு நடைபாதை உருவாகிறது. ஆனால், மழை பெய்தவுடன் அதில் எத்தனை வகை வகையான பயிரினங்கள் முளைத்து வளர்கின்றன. யார் விதைத்தார்கள்? ஆதவன் உப்புத் தண்ணீரை உறிஞ்சுகிறான். மேகமாக மாறி மழை பொழியும்போது, நல்ல தண்ணீர் எப்படி வந்தது? சொல்லிக் கொடுத்ததைத் திருப்பிச் சொல்கிறது கிளி. ஆனால், தானாக ஏன் பேசுவதில்லை? காக்கையும், குயிலும் பார்வைக்கு ஒன்று. ஒன்றின் குரல் இனிமை; மற்றொன்றின் குரல் அப்படி இல்லையே, ஏன்? ஆராய்ச்சியாளர்களும் குழப்புகிறார்கள், ஆன்மிகவாதிகளும் குழப்புகிறார்கள். இரண்டிலும் 'நெருடல்' இருக்கிறது.

ஐயப்ப பக்தர்கள் கற்பூர ஜோதியில் ஐயப்பனைக் காண்கிறார்கள். அன்னதானம் செய்பவனை ஐயப்பனாகப் பார்க்கிறார்கள்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'கற்பூர ஜோதியே! அன்னதானப் பிரபுவே' என்று ஐயப்பனை அழைக்கிறார்கள். 'எல்லாப் பொருளிலும் நான் ஊடுருவி இருக்கிறேன். பொருளில் தென்படும் சிறப்புப் பகுதியில் நான் உறைந்திருப்பேன்' என்ற கண்ணனின் வார்த்தையை நம்பியவர்கள் அவர்கள். அவர்கள் கண்களுக்கு மகர ஜோதியில் ஐயப்பன் தென்படுவார். தீப்பந்தமாக அவர்களுக்குத் தோன்றாது. அவர்கள் மனதில் உறைந்திருக்கும் ஐயப்பன், ஜோதி வடிவில் காட்சி அளிக்கிறான். மியூஸியத்திலும் சிலை இருக்கும். ஆலயத்திலும் சிலை இருக்கும். ஆராய்ச்சியாளருக்கு இரண்டுமே சிலை. ஆன்மிகவாதி ஆலயச் சிலையை ஆண்டவனாகப் பார்ப்பான். வரவேற்பு அறையில் பெரிய அழகான பிள்ளையார் சிலை இருக்கும். பூஜை அறையிலும் பிள்ளையார் சிலை இருக்கும். பூஜையறைப் பிள்ளையாரைக் கடவுளாகப் பார்ப்பான். வரவேற்பறைப் பிள்ளையாரை பொம்மையாகப் பார்ப்பான். பூஜை அறையில் நுழைந்தவுடன் எப்படி கடவுளானார்? நெருடல் இருக்கிறது.

நெசவாளன் பார்வையில் கொடி 'துணியாக'த் தோன்றும். தேச பக்தனின் பார்வையில் அந்தத் துணி மூவர்ணக் கொடியாகத் திகழும். அம்மிக் குழவியும், சிவலிங்கமும் உருவத்தில் ஒன்று, ஆன்மிகவாதியின் பார்வையில் வேறு. ஆயிரம் ரூபாய் நோட்டை கடுதாசி ஆகவும் பார்க்கலாம். பணமாகவும் பார்க்கலாம். மர யானையை வைத்து விளையாடும் சிறுவன், அதை யானையாகப் பார்த்து மகிழ்வான். தச்சனின் பார்வையில் அது மரமாகத் தோன்றும். வெளியில் தென்படும் பொருளைக் கண் பார்த்து மனதுக்கு அளிக்கும். மனம் அந்தப் பொருளை எப்படி அறிந்ததோ, அதே வடிவில் பொருளை இந்தக் கண் பார்க்கும். ஜோதியைப் பார்த்து அதன் உருவத்தை மனதுக்கு அளிக்கும். மனம் அதை தீப்பந்தமாக நினைத்தால் கண்ணும் அதை தீப்பந்தமாகப் பார்க்கும். மனம் ஆண்டவனாக நினைத்தால், கண்ணும் அதை ஆண்டவனாகப் பார்க்கும். தாய், தாரம், பெண் - மூன்றையும் பார்க்கிறது கண். ஆனால், மனதிலிருக்கும் மாறுபாட்டை அறிந்து, கண் மாறுபட்டுப் பார்க்கிறது. ஒருவர் தீப்பந்தமாகப் பார்ப்பதும் உண்மை, ஆண்டவனாகப் பார்ப்பதும் உண்மை. திரும்பவும் நெருடல் தோன்றுகிறது.

கண்ணனின் பட்டணப் பிரவேசம் நிகழ்கிறது. தெருவில் கூட்டம் கூடிவிட்டது. சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள், அத்தனை பேரும் அவனைக் காண இடம்பிடிக்க ஆரம்பித்தார்கள். மாட மாளிகைகளின் முதல், இரண்டாம் தட்டுகளிலும் ஜன நெரிசல் தென்பட்டது. எங்கும் மக்கள் வெள்ளம். கண்ணனைக் கண்ட முதியோர்கள், 'கண்ணா! ஆதிமூலமே!' என்று விளித்து, 'அந்த யானையை ஆட்கொண்டு அபயம் அளித்தாயே! உன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருணையே கருணை. எங்களுக்கும் அபயம் அருள ஏன் தயக்கம்? ஓடி வந்து அபயமளித்து விடு!' என்று கூறினார்கள். இளம் வயதுப் பெண்கள், 'லட்சுமியை மணந்தவன் நீ. லட்சுமியை ஈர்த்த அந்த அழகைப் பார்க்க வேண்டும். அதைப் பார்த்து ரசிக்க வேண்டும். லட்சுமிக்குக் கிடைத்த பாக்கியம், எங்களுக்கும் கிடைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவள் கொடுத்து வைத்தவள்!' என்று இளமையில் தோன்றும் எண்ணத்தோடு கண்ணனைப் பார்த்தார்கள். சிறுவர்கள், 'டேய்! அதோ கண்ணன் வரான்டா! எனது தோழன் கண்ணன் அப்படியே இருக்கான்! டேய்! கண்ணா!' என்று கூவி குதூகலத்தோடு யதார்த்தமாகப் பார்த்தார்கள் என்று இலக்கியங்கள் கண்ணனைப் புகழும்.

இப்போது சொல்லுங்கள்... கண்ணன் என்பவன் கிழவனா? குமரனா? சிறுவனா? எப்படிச் சொல்வது... மூன்று நிலையும் சரி. அதெப்படி? நெருடல் இருக்கிறதே.

இலையில் மல்லிகைப் பூ போன்ற சாதம் பரிமாறினார்கள். அந்தச் சாதம் பொன்னி அரிசியில் வந்ததா, நெல்லூரா, பாஸ்மதியா, அல்லது ஐ.ஆர்.எட்டா? எந்த வயலில் விளைந்தது? யார் அறுவடை செய்தார்கள் என்ற ஆராய்ச்சி அவனது பசியைப் போக்காது. உணவைக் கடவுளின் பரிசாக எண்ணிப் பணிவோடு உண்டால், உள்ளமும் மகிழ்ச்சியில் ஆழ்ந்து விடும். உடலும் வளர்ச்சியை நோக்கிச் செயல்படும்.

அழகான பெண்... ஓர் இளைஞனின் பார்வையில் அவள் காதலியாகத் தோன்றுவாள். துறவியின் பார்வையில் 'மாமிச பிண்ட'மாகத் தென்படுவாள். பெண்ணில் மாற்றமில்லை. பார்வையில் மாற்றம். உண்மை எது? நெருடல்!

இப்படியும் சொல்லலாம். அதாவது ஆராய்ச்சி என்பது ஆன்மிகத்தின் பாதி வழி. ஒரு பொருளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டானல்லவா? அதன் எல்லை ஆன்மிகம். முடிவை எட்டி விட்டானல்லவா? பழுத்த விஞ்ஞானி, ஆன்மிகவாதியாக மாறிவிடுவான். தாங்கள் வாழ்க்கைப் பயணத்தின் பாதி வழியில் இருக்கிறீர்கள். முற்றுப்புள்ளி வைக்காதீர்கள். செமிகோலன்(;)தான். பயணத்தைத் தொடருங்கள். நீங்கள் நிச்சயமாக மகர ஜோதியில் ஐயப்பனைக் காணுவீர்கள். தங்கள் மனதில் இருக்கும் நெருடலுக்கு அதுதான் மருந்து.

வீட்டில் சாமி கும்பிடும்போது ஈரத்துணியுடன் கும்பிடலாமா?

- என். ஸ்ரீதர், சென்னை-61.

உலர்ந்த துணியுடன் கும்பிட வேண்டும். வீட்டில் இருக்கும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தங்களுக்கு மாற்றுத் துணி இல்லாமலா இருக்கும். நம்ப முடியவில்லையே?

குளித்தவுடன் ஸ்வாமிக்கு ஒரு கூழைக் கும்பிடு போட்டு, அப்புறம் சாவகாசமாக உடல் அலங்காரத்தில் ஈடுபடலாம் என்று நினைக்கிறீர்களா? ஈரத்துணியை மாற்றி, உலர்ந்த துணியை அணிந்து, நெற்றிக்குத் திலகமிட்டு, காலைக் கடனை முடித்து ஸ்வாமி கும்பிட வேண்டும். உலர்ந்த துணியை அணிந்த பிறகுதான் ஸ்நானம், அதாவது குளியல் முடிவடைகிறது. அதற்கு இடையில் எப்படி ஸ்வாமி கும்பிடுவது?

மோர் சாதம் உண்ட பிறகு, உணவு முற்றுப் பெறும். சாம்பார் சாதம் சாப்பிட்டவுடன் எழுந்திருந்து தாம்பூலம் தரிக்கலாமா? நீங்கள் வெளியூர் செல்ல நேரிட்டது. மாற்றுத் துணியில்லாமல் ஸ்நானம் செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. குளித்த பிறகு ஈரத்துணியை ஏழு முறை உதறி, சூரியனுக்குக் காட்டி அந்த ஈரத் துணியை உடுத்திக் கொண்டு ஸ்வாமியைக் கும்பிடலாம். இக்கட்டான சூழலில் தர்மசாஸ்திரம் ஈரத்துணியோடு வணங்க அனுமதிக்கிறது. இந்த 'லூப் ஹோலை'ப் பயன்படுத்தி வீட்டிலும் ஈரத்துணியோடு வணங்க முற்படாதீர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கார்த்திகை மாதக் கடைசியில் எனக்கு 70 வயது ஆரம்பமாகிறது. மனைவியை இழந்த நான் 70-வது வயது சாந்தி செய்து கொள்ளலாமா? அதை 70 வயது ஆரம்பத்தில் செய்வதா அல்லது முடிவில் செய்வதா? சாந்தி ஹோமங்கள் அவசியமா அல்லது ஆடம்பரமா? அவசியமென்றால், என்ன ஹோமங்கள் செய்ய வேண்டும்?

- என். ஸ்ரீதரன், நாகப்பட்டினம்.

70 வயது பூர்த்தியில் சாந்தி செய்து கொள்ள வேண்டும். அது அவனது பிறப்புரிமை. மனைவி இருக்கிறாள் அல்லது இல்லை என்பதெல்லாம் இதற்கு சம்பந்தமில்லாதது. மீதமிருக்கும் வாழ்நாளை ஆரோக்கியமாகக் கழிப்பதற்கு சாந்தி உதவும். வரும் பரம்பரைக்கு இந்த தர்மத்தை நடைமுறைப்படுத்த தங்களுக்கு விருப்பமில்லாவிட்டாலும், 'தர்மம்' என்ற நோக்கில் செயல்படுத்த வேண்டும். மனைவி இல்லை என்றால் எல்லாம் போச்சு என்று எண்ணுவது தவறு. மனைவி ஒன்றைத் தவிர, உடலுக்கும் உள்ளத்துக்கும் உகந்தவாறு இன்பத்தைச் சுவைத்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். அதே போல் தர்மத்தையும் அதற்கு இணையாகக் கடைப்பிடிப்பதே முறை.

வெறும் ஆடம்பரமான ஒன்றை தர்ம சாஸ்திரம் அறிமுகம் செய்யாது. எப்படிச் செய்ய வேண்டும் என்பதைத் தங்கள் ஆசார்யரிடம் விண்ணப்பிக்க வேண்டும். அவசியமில்லாத ஒன்று சாஸ்திரத்தில் தென்படாது. நம் முன்னோர் நம்மைவிட புத்திசாலிகள். அவர்கள் இதைச் செய்து வந்தார்கள். அவர்கள் அவசியமில்லாததைச் செய்தார்கள் என்று சொல்ல முடியுமா? தர்மசாஸ்திர நூல்கள் பல ரிஷிகளால் எழுதப்பட்டவை. நுணுக்கமாக ஆராய்ந்தால் அவர்களின் மாறுபட்ட கருத்துகள் தென்படலாம். ஒருவரின் கருத்து தவறு என்று சொல்ல முடியாது. எல்லோருடைய கருத்துகளும் ஏற்கக் கூடியவையாக இருக்கும்.

அடிப்படைத் தத்துவத்தில் மாறாத சில கருத்துகள் தென்படும். அதில் நமக்கு சந்தோஷம் எழும். அப்போது என்ன செய்வது என்ற கேள்வி எழுந்த போது, பெரியோர்கள் எந்தக் கருத்தை வரவேற்றுச் செயல்பட்டார்களோ, அதை எடுத்துக்கொள்ள வேண்டும். 'மஹாஜனோ யேன கத: ஸ பன்தா'- பெரியோர்கள் சென்ற வழியில் நீயும் செல் என்று தர்ம சாஸ்திரம் பரிந்துரைக்கிறது. எழுபது வயதில் பெரியோர்கள் சாந்தி செய்து கொண்டார்கள். ஆகையால் தாங்களும் அதைப் பின்பற்றலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரார்த்தனை செய்தால் பாவம் மன்னிக்கப்படுமா?

இயற்கைச் சீற்றங்களை (புயல், சுனாமி, பூகம்பம்) தடுக்க தெய்வ வழிபாடு, ஸ்லோகங்கள் உண்டா?

- ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

இயற்கைச் சீற்றங்களைத் தடுப்பதைவிட, அது வராமல் இருப்பதற்கு வழி வகைகளைத் தேடுவது சிறந்தது. உடலின் ஆரோக்கியம் சீர்குலைந்த பிறகு, பரிகாரத்துக்கு மருத்துவரை அணுகுவதைவிட, ஆரோக்கியம் சீர்குலையாமல் பார்த்துக் கொள்வது சிறந்தது. தற்காலச் சூழலிலும் இயற்கைச் சீற்றங்கள் தோன்றிய பிறகு, நமது தற்காப்பில் கவனம் செலுத்துவதில் ஈடுபட முடியுமே தவிர, சீற்றத்தின் வேகத்தைத் தணிக்க முடியவில்லை. வருமுன் காப்பது ஆயுர்வேதத்தின் முதல் தகவல்.

சுகாதாரத்தை நிலைநிறுத்தும் நல்லுரைகள் ஆயுர்வேதத்தின் முக்கியப் பங்காக இருக்கும். உடலில் புகுந்திருக்கும் ஜீவன், தப்பான உணவு முறையால் வாத-பித்த-கபங்களைத் தூண்டிவிட்டு, உடலில் பிணியை ஏற்படுத்துகிறது. தப்பான சிந்தனையில் ரஜஸ், தமஸ் என்கிற குணங்களைத் தூண்டிவிட்டு மன உளைச்சலை உண்டுபண்ணுகிறது. உடல் சுகாதாரத்தைக் கெடுப்பது, அதில் குடிகொண்டிருக்கும் ஜீவன். உலக சுகாதாரத்தைக் கெடுப்பவர்கள், அதில் குடிகொண்டிருக்கும் மக்கள் கூட்டம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர்களது உணவுமுறை மாறுதல்கள், சிந்தனை மாறுதல்கள், செயல்பாட்டு மாறுதல்கள் உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கும் வாத-பித்த-கபங்களை அதாவது நீர், நெருப்பு, காற்று- ஆகியவற்றைத் தூண்டிவிட்டு, உலக அமைதியைக் கெடுக்கும் வகையில் இயற்கைச் சீற்றத்தை ஏற்படுத்துகின்றன.

ஜனங்கள் செய்யும் அதர்மம், அதற்குக் காரணம் என்று ஆயுர்வேதம் கூறும். மலைகள், குன்றுகள், காடுகள், செடி கொடிகள், மரங்கள், ஓடும் நதிகள், கடல்கள் - அத்தனையும் இயற்கை வளங்கள். இயற்கையின் படைப்பில் தோன்றிய அத்தனை உயிரினங்களுக்கும் அது சொந்தம். ஓடும் நதிகள் தனது ஓடுபாதை அருகில் குடிகொண்டிருக்கும் அத்தனை ஜீவராசிகளுக்கும், தாகம் தீர தண்ணீரை அளிக்கிறது. மரங்களும் செடிகொடிகளும் அவர்கள் பசியாற காய்- கனிகளை வழங்குகின்றன. காடு, விலங்கினங்களுக்கு அடைக்கலம். விலங்கினங்கள் காட்டுக்குப் பாதுகாப்பு. காட்டை அழித்து, மரங்களை வெட்டி, நாடாக மாற்றுவதும், ஓடும் நதியைத் தடுத்து, தண்ணீரை மற்ற உயிரினங்களுக்குக் கிடைக்காமல் செய்வதும் அதர்மம். அது இயற்கைச் சீற்றத்தைத் தோற்றுவிக்கும்.

நீரோட்டம் இல்லாத நதிகள், செடிகொடிகளாலும் மரங்களாலும் நிரம்பி, காலப் போக்கில் நிலத்தடி நீரையும் இழந்து, அருகில் இருக்கும் கிணறுகளுக்கும் ஊற்று இல்லாமல் செய்து, தேசத்தின் ஒரு பகுதியை தண்ணீர் பஞ்சம் வரும்படி செய்துவிடும். நதிகளின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நீர், கடலை அடைய வேண்டும். கடலை அடைந்த நீர், சூரியனின் கிரணங்களால் உறிஞ்சப்பட்டு மேகமாக மாறி, தேவையான மழையை நமக்குத் தர உதவும். கடலில் தண்ணீர் வீணாகிறது என்கிற விஞ்ஞான வாதம் ஏற்புடையது அல்ல.

தேக்கி வைத்த நீர் கெட்டுவிடும். முதலில் நீர் கெட்டுவிடும். கெட்ட நீரில் விளைந்த பயிர் தரம் குறைந்திருக்கும். தரம் குறைந்த உணவு மனிதனின் சிந்தனையை பாதிக்கும். பாதிப்புக்குள்ளான சிந்தனை அதர்மத்தைச் செயல்படுத்தும். அதர்மத்தின் உச்சகட்டம், இயற்கைச் சீற்றமாக வெளிவரும் என்பது வராஹமிஹிரரின் கருத்து. அக்னி பர்வதம் வெடித்து பிழம்புகள் வெளிவருவதைத் தடுக்க இயலாது. சூறாவளியைத் தடுக்கும் திறன் யாருக்கும் இல்லை. பெருவெள்ளம் நம்மை முழ்கடித்து விடும். தர்ம நியாயத்தோடு வாழ வேண்டும். அப்போது அதர்மம் இருக்காது. இயற்கைச் சீற்றமும் தோன்றாது என்பது தர்ம சாஸ்திரத்தின் கருத்து. காட்டை அழித்து, நாட்டில் மரம் வளர்க்கும் கொண்டாட்டத்தை நிகழ்த்துவதை விட, காட்டை அழிக்காமல் இருப்பதுதான் சிறந்தது. காட்டில் வாழும் உயிரினங்களும் திண்டாடாது. தேவையான மழையும் கிடைக்கும். இப்படி அதர்மங்கள் நிகழாமல் கண்காணிப்பது முதல் பரிகாரம். எல்லாவற்றுக்கும் பரிகாரமுண்டு என்று இருந்தால், தவறுகளைத் தொடர்ச்சியாகச் செய்ய மனம் துணிந்து விடும். அதுவும் தவிர, தவறுகள் அத்தனையையும் ஆராயாமல் பொறுத்து அருள்வது தெய்வங்களின் வேலை என்பதும் சரியாகாது. தெய்வ வழிபாடு பரிகாரத்துக்கு உண்டு என்றால், அதர்மத்தைத் தொடர்ந்து செய்யும் எண்ணம் நிலைத்து விடும். நல்ல முறையில் அதாவது அறவழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு, அறியாமையால் அல்லது துவேஷத்தால் அவர்களின் மீது சுமத்தப்படும் இடையூறுகளை விலக்க, தெய்வ வழிபாடு ஒத்துழைக்கும்.

தீய செயல்களைக் கடமையாகக் கொண்டு செய்யப்படும் கொடூரங்களுக்குப் பரிகாரம் இருக்காது. இருந்தாலும் கருணையுள்ளம் படைத்த கடவுள், பரிகாரத்தால் நமக்கு அருள் புரிவார் என்று தர்ம சாஸ்திரம் சொல்லும். வறட்சிக்கு வருண ஜபம், பெருவெள்ளத்துக்கு 'ஸமுத்ரம் கச்சஸ்வாணா' என்ற மந்திரங்களின் ஜபம், கூட்டுக் கொலைகள், அக்னி பர்வதம், பயிர் நாசம், விஷக்கிருமிகளின் தாக்கம், தொற்று வியாதிகளின் பரவல், விலங்கினங்களின் ஆக்கிரமிப்பு ஆகியவற்றுக்குப் பரிகாரங்களை விளக்குகிறது வராஹமிஹிரரின் பிருஹத்ஸம்ஹிதை. நேரம் கிடைக்கும்போது அதைப் படித்துப் பயனடையுங்கள்.

'இருபத்து நான்காவது தீர்த்தங்கரர் எனப்பட்ட மகாவீரர், 'தலைமுடியைப் பிடுங்க வேண்டுமே தவிர, மழிக்கக் கூடாது'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்று கூறியுள்ளாரே. அதன் தத்துவம் என்ன?

- ஆர்.கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.

பல மகான்களின் உயர்ந்த சிந்தனையில் பல மதங்கள் உருப் பெற்றன. 'மதம்' என்ற சொல்லுக்கு அபிப்பிராயம், கொள்கை என்ற பொருள்களும் உண்டு. சங்கரர் மதம், ராமானுஜர் மதம், மத்வர் மதம், புத்த மதம், ஜைன மதம் என்ற வரிசையில் ஒருவரின் சிந்தனையில் உதித்த கொள்கையை மதம் என்று சொல்வர். அதை நடைமுறைப்படுத்த சில சட்ட திட்டங்களும் சம்பிரதாயங்களும் அடங்கியிருக்கும் அந்தந்த மதத்தில். ஜைன மதத்தில் கடைப்பிடிக்கும் சம்பிரதாயம் தலைமுடியை மழிக்கக் கூடாது என்பது.

செய்த பாவம் போக்குவதற்காகச் சிலர் பிரார்த்தனை செய்கிறார்களே? இதை இறைவன் ஏற்பாரா?

- கீதா முருகானந்தம், திருவைகாவூர்.

இறைவன் தன்னிச்சையாகப் பிரார்த்தனையை ஏற்கவோ, மறுக்கவோ செய்ய மாட்டார். பாவம் செய்தவனின் தரம், பிரார்த்தனையின் நோக்கம் போன்றவற்றை அறிந்து தர்ம சாஸ்திரத்தின் பரிந்துரைப்படி செயல்படுவார். 'வேதமும், தர்ம சாஸ்திரமும் எனது கட்டளைகள். அதை மீறுபவன் எனது பக்தனானாலும் நான் மன்னிக்க மாட்டேன்' என்பது கடவுளின் வாக்கு. இதைப் புராணம் கூறும். நீதிபதி தன்னிச்சையாக தண்டனை அளிக்கவோ, விடுவிக்கவோ செய்ய மாட்டார். சட்டத்தையும், சாட்சியின் தகவலையும் ஆராய்ந்து எது பொருத்தமோ அதை அளித்து விடுவார். சட்டத்துக்கு உட்பட்டுச் செயல்படுபவர்.

சனாதன சட்டத்தை மதித்துச் செயல்படுபவர் கடவுள். தான் பரிந்துரைத்த சட்டத்தைத் தானே மீறுவது தர்மமாகாது. அறியாமையால் செய்த பாவத்தை அவர் மன்னிப்பார். ஆனால், 'இப்படி செய்து விட்டேனே என்று என் மனம் மிகவும் வேதனைப் படுகிறது. அந்தத் தவறின் சிந்தனை என்னை வாட்டி வதைக்கிறது. மீண்டும் இந்தத் தவறை என் மனம் நினைக்காது. சாஸ்திரம் சொல்லும் தண்டனையை நடைமுறைப்படுத்த எனக்குத் தகுதியில்லை. உன்னைச் சரணடைந்து விட்டேன். அருள வேண்டும்!' என்று மனமுருகி வேண்டினால் மன்னிப்பு நிச்சயம். அவன் மனம் வேதனைப்படுவதைத் தண்டனையாக ஏற்று, அவர் மன்னித்து விடுவது சாஸ்திர சம்மதம் ஆகும்.

ஒருவன் உணவுக்காக பசுவை அழித்தான். 'ஐயகோ! பசுவை அழித்தேன். பாபம் செய்து விட்டேன். மனம் வருந்துகிறது. அதற்குப் பரிகாரமாக அதன் தோலில் செருப்பு செய்து மக்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi.

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விநியோகம் செய்து விடுகிறேன். அது புண்யமல்லவா? நான் செய்த பாபத்துக்கு இந்தப் புண்ணியத்தை ஈடாக வைத்து என்னை மன்னித்து விடு!' என்று சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டார். இங்கு அவன் செயல், அவன் பிரார்த்தனை இரண்டிலும் உள் நோக்கம் வேறு. ஆசிரியரிடம் அழுதுகொண்டு ஒரு சிறுவன் ஓடி வந்தான். 'ஐயா! என்னை, பக்கத்திலிருக்கும் பையன் அடித்து விட்டான். அவனைத் தண்டிக்கவும்!' என்றான். அடித்த பையனைக் கூப்பிட்டு விசாரித்தார். அவன் அடிக்கவில்லை என்று சொல்லி விட்டான். ஆசிரியர், 'நீ பொய் பேசுகிறாய். எல்லார் முன்னிலையிலும் மூன்று தோப்புக்கரணம் போட வேண்டும்!' என்று தண்டனை விதித்தார். எல்லார் முன்னிலையிலும் தோப்புக்கரணம் போட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே என்று மனம் வருந்தினான் சிறுவன். அந்த வருத்தம் அவனது தண்டனையாக மாறியது என்று ஒரு கதையுண்டு.

வீட்டைப் பூட்டி விட்டு காசிக்கு யாத்திரை செய்யக் கிளம்பினான் ஒருவன். 'கடவுளே! நான் காசிக்குப் போகிறேன். எனது வீட்டில் திருடன் புகுந்து கொள்ளை போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வந்த பிறகு சிறப்பு பூஜை செய்து உன்னை வழிபடுகிறேன்' என்று பிரார்த்தனை செய்தான். திருடன் ஒருவன் இப்படி கடவுளிடம் வேண்டினான்: 'கடவுளே! நான் வீடு புகுந்து திருடப் போகிறேன். அது என் தொழில், காவலாளி என்னைக் கண்டு கொள்ளாமல் செய்து விடு. உனக்கு சிறப்பு வழிபாடு செய்கிறேன்!' கடவுள் என்ன செய்வார்... பாவம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டு விழிப்பார் என்று ஒரு கதை சொல்லுவார்கள்.

நமது விருப்பத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் கடவுள் என்று எண்ணக் கூடாது. நம்மைப் போல் அவரும் சுதந்திர மனிதர். தனக்கு வணக்கம் செலுத்தும் அத்தனை பேரையும் கடவுள் மன்னித்து விட்டால், யாருக்குத் தண்டனை அளிப்பது? தண்டனை அளிப்பது செயலற்றுப் போகும். அப்போது சட்டம் ஏட்டில் மட்டும் தென்படும். அது சரி என்று தங்களுக்குத் தோன்றுகிறதா? தவறு செய்து கடவுளை வணங்குவதை விட்டுவிட்டு, தவறு செய்யாமல் இருக்கும் மனப்பாங்கைப் பெற்று விடுங்கள். அவர் தண்டிக்கவே மாட்டார். தங்களுக்கு அருள் புரிவார்!

கோயில் சொத்துகளை அபகரிப்பவர்களுக்கும், சாமி சிலைகளைத் திருடி விற்பவர்களுக்கும் என்ன தண்டனை கிடைக்கும்?

- உமரி.பொ. கணேசன், மும்பை-37.

இரு குற்றங்களுக்கும் குறைந்தபட்சமாக கடுங்காவல் தண்டனையும், அதிகபட்சமாக மாறுகால், மாறுகை போன்ற உடலுறுப்பு இழப்பை ஏற்படுத்தும் தண்டனைகள் வரை உண்டு. அதைச் செய்த ஆள், நோக்கம், தரம் - இவையும் ஆராயப்படும். அறியாமை, நிர்ப்பந்தம், தூண்டுதல் போன்ற காரணங்களை ஆராய்ந்து நாடு கடத்தல், அபராதம், சாதாரணக் காவல் என்று தண்டனையில் குறைவும் இருக்கும்.

பண்டைய பாரதத்தில் இருந்த நிலை தற்போது இல்லை. கோயில் என்பது பொதுச் சொத்து. அன்பு, பண்பு, அடக்கம், ஆன்மிகம், ஆஸ்திகம் - ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு ஊட்டும் பள்ளிக்கூடமாக அது செயல்படும். அங்கு நடைபெறும் உற்சவங்களும், கலை விழாக்களும் பொதுமக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி, அரசின் ஸ்திரத் தன்மையை நிலை நாட்டும். ஆகையால் அவை அரசாங்கக் குற்றமாகவும் கருதப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது. அரசின் கண்களிலிருந்து தப்பினாலும் கடவுள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. கடவுளின் தண்டனை இதைவிடக் கடினமாக இருக்கும்.

சிறையில் அடைத்தால் அவனது உணவுக்கும் சுகாதாரத்துக்கும் அரசு பொறுப்பேற்க வேண்டி வரும். அது அரசுக்குச் சுமை. தெய்வம், திறந்தவெளிச் சிறையில் அவனை வாட்டி வதைக்கும். பிச்சைக்காரனாக, தீராத நோய் உடையவனாக, ஊனமுற்றவனாக, முட்டாளாக - பல உருவங்களில் அவன் வளைய வருவான். அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும். அவனது அடுத்த பிறவியில் தண்டனையளிக்கும் தெய்வம். அவனுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உணவளிக்கும் பொறுப்பையும், சுகாதாரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் தெய்வம் ஏற்காது. அதற்காக அவனை அலைய விடும். பாதையோரமாகச் சென்று கொண்டிருக்கும் ஆட்டின் மீது காரை ஏற்றி மரணமடையச் செய்வான். அரசாங்கத்தின் கண்ணுக்குத் தென்பட மாட்டான். தப்பித்து விடுவான். இதுபோல் கோழி, பசுமாடு, சிறுவர்கள், அப்பாவிகள் - போன்றவர்களுக்கு துன்பம் விளைவிக்கும் தனவான்களும் உண்டு. இவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தால் அரசிடம் சிக்காமல் இருந்து விடுவார்கள். அவர்களை கவனிப்பது தெய்வம். ஆடு, கோழி போன்றவை கடவுளின் படைப்புகள். சுதந்திரமாக அவையும் வாழ அவகாசம் உண்டு. பல வருடங்கள் வாழ்ந்து மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டியவை. பல பேருக்கு பால் அளித்து உதவ வேண்டியவை - அவற்றை அழிப்பது பாவம். ஆகையால், அவற்றின் மெய்க்காப்பாளரான கடவுள் உரியவர்களுக்குத் தண்டனை அளித்து விடுவார்.

பிச்சைக்காரனாகவோ, நோயாளியாகவோ அவன் இருக்கும்போது காரணம் தெரியாமல் திண்டாடுவான். காரணம் முன் ஜன்ம வினை என்பதை அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். முற்பிறவியில் செய்த பாபம் இந்தப் பிறவியில் பிணியாகத் தோன்றி அவனுக்குத் தண்டனை அளிக்கும் என்று கர்மவிபாகம் சொல்லும். அவர்கள் தண்டனை அனுபவிக்கவில்லையே என்று நீங்கள் ஏங்க வேண்டாம். அவர்களுக்கும் உண்டு தண்டனை!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரணவத்தின் பொருள் என்ன?

வேதங்களின் தலைவனான பிரம்மாவுக்கு பிரணவத்தின் பொருள் தெரியாததால், முருகன் அவரை சிறையில் அடைத்து, அவரின் தலையில் குட்டி பிரணவத்தை உபதேசித்ததுடன், தம் தந்தையான சிவபெருமானுக்கும் அதை உபதேசித்தார் என்று புராணம் கூறுகிறது. அப்படி என்றால், முருகனுக்குத் தெரிந்த அளவு மற்றவர்களுக்கு வேதத்தின் பொருள் தெரியாது என்றல்லவா ஆகிறது?

– கே. பாலசுப்ரமணியன், கோவை-42.

புராணங்களின் நடைமுறை அலாதியானது. விஷ்ணு புராணம், விஷ்ணுவை உயர்வாகச் சொல்லும். சிவ புராணம், சிவனை உயர்த்திக் காட்டும். தேவி பாகவதம், அம்பாளை உயர்வாக மதிக்கும். கந்த புராணம், முருகப் பெருமானை பரம்பொருளாக விளக்கும். முத்கல புராணம், பிள்ளையாரை முழுமுதற் கடவுளாகச் சித்திரிக்கும். பிரம்ம புராணம், எல்லாவற்றுக்கும் முதல்வனாக பிரம்மாவை ஏற்றுக் கொள்ளும். பிரமாண்ட புராணம், சபரிகிரீசனை உலகை இயக்கும் தலைவனாகப் பார்க்கும். வேங்கடேச மகாத்மியம், ஏழுமலையானை தெய்வங்களில் சிறந்தவராக விளக்கும். இப்படி புராணங்கள், எல்லா தெய்வங்களையும் உயர்ந்ததாகவே கருதும்.

'ஒரு தெய்வம், பல வடிவங்களில் தோன்றுகிறார்' என்ற

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விளக்கம் வேதத்தில் உண்டு. மனித இனம் ருசியில் மாறுபட்டது. ருசிக்கு உகந்தவாறு கடவுளை வழிபடும் வகையில், ஒரு தெய்வத்தைப் பல வடிவங்களில் காட்டுகின்றன புராணங்கள். பக்தனுக்கு, தான் வணங்கும் தெய்வம் உயர்ந்தது என்ற எண்ணம் வேண்டும். அப்போதுதான் அவன் மனம் அதில் ஊன்றி நிற்கும். தெய்வங்களில், சிறியது- பெரியது என்ற பாகுபாடு கிடையாது. மனமே சின்னதாகவும், பெரிதாகவும் எண்ணும்.

தாரகாசுரனை அழிக்க பவனி வரும் தெய்வக் குழாமுக்கு தகுதி பற்றாது என்ற நிலை வந்தபோது, ஈசனின் முக்கண்ணிலிருந்து முருகன் வெளி வந்தான். அசுரனை அழிக்கும் தகுதியுடைய தெய்வ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வடிவத்தை முக்கண்ணன் தோற்றுவித்தான். இப்போது அந்த முருகன் மற்ற தெய்வங்களைவிட சிறந்தவன் என்பது உண்மை. அவனை உயர்ந்தவனாகச் சித்திரிக்க பிரணவ மந்திர சச்சரவைப் பயன்படுத்தினர். எல்லாம் அறிந்தவன் முருகன். அவனைத் தோற்றுவித்தவனும், எல்லாம் தெரிந்தவனாகவே இருக்க முடியும். வேதம் ஓதும் பிரம்மா, முருகன் தோன்றும் முன்பே தோன்றியவன். அவன், பிரணவத்தைச் சொன்ன பிறகுதான் வேதம் ஓதுவான்.

முருகனின் பெருமையை விளக்க இப்படியொரு நடைமுறையைப் புராணம் கடைப்பிடிக்கிறது. அது அதன் இயல்பு. மாப்பிள்ளை அழைப்பு. திறந்த காரில் மாப்பிள்ளை ஊர்வலம் வருகிறான். அவன் ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் தொழிலாளி. முதலாளி அவன் காரைப் பின்தொடர்ந்து நடந்து வருகிறார். இங்கு தொழிலாளிக்கு உயர்வு. ஆனால், முதலாளி தாழ்த்தப்படவில்லை. தாழ்த்தப்பட்டார் என்று நினைப்பதும் தவறு. சிவன் கோயிலில் பிள்ளையாரும், முருகனும் பரிவாரத் தேவதைகளாக இருப்பார்கள். முருகன் கோயிலில் சிவனும், பிள்ளையாரும் பரிவாரத் தேவதைகளாக இருப்பதும் உண்டு. பிள்ளையார் கோயிலில், மற்ற தேவதைகள் பரிவாரத் தேவதைகளாக மாறுவதும் உண்டு. முன்னுரிமையை வைத்து பெருமையை உயர்த்திக்காட்ட வேண்டி இருக்கும்.

மும்மூர்த்திகளும், தேவர்களும் மகிஷாசுரனை அழிக்க இயலாது என்ற நிலை ஏற்பட்டது. அத்தனை தேவர்களின் அம்சமும் (சக்தியும்) ஒன்றாகக் கூடி, ஒரு பெண் வடிவம் பெற்றது.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதற்குப் பெயர் துர்க்கை. தற்போது துர்க்கை உயர்ந்தவள் ஆகிவிடுகிறாள். முப்புரத்தை எரிக்க யாராலும் இயலவில்லை. அப்போது, 'நான் செயல்படுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. அத்தனை உயிரினங்களுக்கும் நான் தலைவன் என்பதை நீங்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டு என்னை மதித்து, 'பசு பதி' என்ற வெகுமதியை அளிக்க வேண்டும்' என்றார் பரமேஸ்வரன். தேவர்கள் குழாம் ஒப்புக் கொண்டது. இப்போது பசுபதி அதாவது சிவன் பெரிய தத்துவமாக விளங்கினார். ராவணனை அழிக்கும் தகுதி தேவர்கள் குழாமுக்கு இல்லை. அத்தனை தேவர்களும் பாற்கடலை அடைந்து, பரந்தாமனை வணங்கி, துயரத்தை எடுத்துரைத்தனர். 'நான் ராமனாகத் தோன்றி, தங்களது துயர் துடைக்கிறேன்' என்றார் விஷ்ணு. இப்போது ராமர் எல்லா தெய்வங்களையும் விட உயர்ந்தவர். தாங்கள் இன்னும் கொஞ்சம் புராணங்களையும், அதன் விளக்கங்களையும் அறிந்து கொண்டால் தெளிவு பெறுவீர்கள்.

கோயிலில் பெறப்படும் மாலைகளை நமது பூஜையறையில் வைக்கலாமா அல்லது வீட்டு வாயிற்படியில் தொங்க விடலாமா?

– ரேவதி சங்கர், சென்னை-13.

கோயிலில் சொற்பொழிவின்போது கௌரவத்துக்காக மாலை அணிவிப்பது உண்டு. பெரிய மனிதர்களை மாலை அணிவித்து வரவேற்பதும் உண்டு. தெய்வத்துக்கு அர்ப்பணித்த மாலையைப் பிரசாதமாக மற்றவருக்கு அணிவித்து வரவேற்பதும் உண்டு. நீங்கள் எந்த மாலையைக் குறிப்பிடுகிறீர்கள் என்று விளங்கவில்லை. பிரசாதமாக வரும் மாலையைத் தவிர மற்றவற்றைத் தங்கள் விருப்பப்படி பயன்படுத்தலாம். பிரசாத மாலைகளுக்குத் தனித் தகுதி உண்டு. உடம்பில் அணிந்து அதன் வாசனையை முகர்ந்து பிரசாதத்தை கௌரவிக்க வேண்டும். அந்த மாலையை பூஜை அறையிலும் வைக்கக் கூடாது. வாயிற்படியிலும் தொங்கவிடக் கூடாது. குளம், குட்டை, ஆறு போன்றவற்றில் சேர்க்க வேண்டும். அருகில் நீர்நிலைகள் இல்லாதபோது அரச மரம், பிருந்தாவனம், துளசி, வில்வம்- போன்றவற்றின் கீழே வைக்க வேண்டும். பிரசாதத்தை- அதாவது தெய்வத்தின் அருளுக்கு அடையாளமாகக் கிடைத்த மாலையை வாயிற்படிக்கு அணிகலனாக்குவது உசிதமல்ல. துர்வாச மகரிஷி கொடுத்த தேவி பிரசாதத்தை யானையின் தலையில் வைத்தான் இந்திரன். யானை, அதை துதிக்கையால் எடுத்து, தனது காலடியில் போட்டு மிதித்தது. அதனால், இந்திரன் மேலுலகத்தை இழந்து பரிதவித்தான் என்பது புராணம். பூஜையறை சுத்தமானது என்றாலும் நாம் பிரசாதமாகப் பயன்படுத்திய பிறகு அங்கு வைப்பது பொருத்தமில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நாம் பயன்படுத்திய பிரசாதப் பொருளின் மாற்றுக் குறையும். ஆகவே, நாம் பயன்படுத்திய பொருளைச் சேமிக்கும் இடமாக பூஜையறையை பாவிக்கக் கூடாது. அதை நமது வீட்டில் இருக்கும் கோயிலாக பாவிக்க வேண்டும். பிள்ளையாரை பூஜை செய்த பிறகு தண்ணீரில் சேர்க்கிறோம். அன்னாபிஷேகத்தில் அன்னத்தை தண்ணீரில் சேர்ப்பதுண்டு. தண்ணீரில் சேர்த்தல் என்பது தர்ம சாஸ்திரத்தின் அறிவுரை.

எந்தக் கோயிலுக்குப் போனாலும், கோயிலின் வாயிற்படியைத் தொட்டு வணங்குகிறோமே, ஏன்?

- தி.க. வேல்முருகன், திட்டக்குடி.

துயில் எழுந்ததும் பூமித் தாயைக் காலால் மிதிக்கிறோம். தாயைக் காலால் மிதிப்பது தவறு என்பது நமது எண்ணம். ஆகையால் எழுந்தவுடன் பூமிக்கு வணக்கம் செலுத்துவது வழக்கம். ‘பூமித் தாயே! என்னை மன்னித்து விடு. நான் பல அலுவல்களில் ஈடுபட வேண்டி இருப்பதால் உன்னை மிதிக்காமல் செயல்பட இயலாது, எனது பாத ஸ்பரிசத்தைப் பொறுத்துக் கொள்!’ என்று பூமித் தாய்க்கு முதல் வணக்கம் அளிப்பது நமது மரபு.

கோயில் வாசலில் படியைத் தாண்டிப் போக வேண்டும். சிலர், படியில் கால் வைத்துப் போக நேரிடும். கால் வைப்பதும், தாண்டுவதும் மனதுக்கு நெருடலை உண்டு பண்ணும்.

கோயிலில் வீற்றிருக்கும் தெய்வத்தின் உடலாகக் கோயிலை நினைக்கிறோம். அப்போது அதன் வாசலில் இருக்கும் படியை



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மிதிக்கும்போது அபசாரமென்று மனம் எண்ணுவதுண்டு. அதைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுவதற்கு படியைத் தொட்டு வணங்குகிறோம். அது மனதில் ஏற்பட்ட நெருடலால் வந்த செயல்.



'பகைவனைக் கொல்!' என்கிறது பகவத் கீதை. 'பகைவனை நண்பனாக்கிக் கொள்!' என்கிறது திருக்குறள். விளக்கம் தேவை.

_ கே. பாபு, கோவை-42.

'**பொ**ய்யை, வாய்மையால் வெல்ல வேண்டும். பகையை, நட்பால் வெல்ல வேண்டும்' என்று உபநிடதம் அறிவுரை வழங்கும். *(ஸத்யேனான்ருதம்... அக்ரோதேன க்ரோதம்...)* மிகப் பழைமையான தகவல் இது. உயிரினங்களை மனதால்கூடத் துன்புறுத்தக் கூடாது என்பது வேதக் கருத்து *(மாஹிம்ஸ்யாத்ஸர்வாபூதானி).* தன்னைப் போல் பிற உயிரினங்களையும் பார்க்க வேண்டும். மற்றவர்கள் கண்கள் இருந்தும் பார்க்காதவர்கள் என்பது தர்ம சாஸ்திரத்தின் விளக்கம் *(ஆத்மவத் ஸர்வபூதானிய: பச்யதி ஸபச்யதி).*

விராட் புருஷனிடமிருந்து (எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் இறைவன்) வேதம் வெளிவந்தது. அவன் மூச்சுக் காற்று வேதம் *(யஸ்யநிச்வஸிதம் வேதா:).* பகவத்கீதை, அதே விராட் புருஷனிடமிருந்து வெளிவந்தது. வேதம் அவரது எண்ணங்களின் தொகுப்பு. கீதை- அவரது விரிவுரை. இரண்டும் அவரிடமிருந்து தோன்றியது. வேதத்துக்கு மாறுபட்ட கருத்து கீதையில் தென்படாது.

தற்கொலையை பாவம் என்று சொல்லும் வேதம், பிறரை அழிக்க உத்தரவிடாது. உத்தரவிடவும் இல்லை என்பது உண்மை. தனி மனிதனின் சிந்தனையோடு கலந்த கீதையின் மொழிபெயர்ப்பு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தங்களையும் ஏமாற்றி இருக்கிறது. நீங்கள் நேரடியாக கீதையைக் கற்றுக் கொள்ள வேண்டும், உண்மை புலப்படும்.

எந்த ஒரு விஷயத்தையும் அலசி ஆராயாமல், அதில் இல்லாத ஒன்று இருப்பதாகக் கூறுவது தவறான நடைமுறை. விபீஷணன், ராவணனின் தம்பி. ராமன், அவனை தன்னிச்சையாக மட்டும் நண்பனாக ஏற்கவில்லை. சிரஞ்சீவியாக்கினார். ராவணனை அழிக்க விரும்பவில்லை ராமன். அவனது பகையை எதிர்த்தார். சமாதானமாகப் போக முதலில் அனுமனை அனுப்பினார். அது தோல்வியில் முடிந்தது. அடுத்து அங்கதனை அனுப்பினார். அதுவும் தோல்வியைத் தழுவியது. கடைசியில் யுத்த களத்தில் அவனோடு நேரடிப் பேச்சுவார்த்தையில் இறங்கினார். 'சீதையை ஒப்படைத்து விடு, மன்னிக்கிறேன்' என்றான் ராமன். அது மட்டுமல்ல, 'உனக்கு சிந்திக்க அவகாசம் அளிக்கிறேன். இன்று போய் நாளை வா!' என்று கால அவகாசமும் அளித்தார்.

எல்லாரையும் இழந்து தனி மரமாக இருக்கும் ராவணனை அழிப்பது மிக எளிது. 'ஒருவனை ஹிம்சிப்பது தவறு' என்ற வேதத்தின் அறிவுரை செயல் வடிவில் அங்கு தென்பட்டது. ராவணன் தானாகவே மரணத்தை எதிர்கொண்டான். விட்டில் பூச்சி தானாகவே விளக்கொளியில் விழுந்து மாண்டு விடுகிறது.

'முருகன் எதிரியின் பூத உடலை அழித்து, மயிலாகவும், கோழியாகவும் மாற்றி தன்னோடு இணைத்துக் கொண்டான்' என்று புராணம் கூறும். நடராஜரின் காலடியில் ஓர் அரக்கனைப் பார்க்கலாம். அந்த அரக்கனை அழிக்காமல் தன் காலடியில் அடைக்கலம் அளித்திருக்கிறார் என்று ஆகமம் எடுத்துரைக்கும்.

பாண்டவர்களின் மனதில் பகையுணர்ச்சி கிடையாது. கௌரவர்களிடம்தான் பகையுணர்ச்சி தென்பட்டது. ஒருதலைப்பட்சமான பகை. பாண்டவர்கள் தங்களது பங்கை அடைய பேச்சுவார்த்தையைப் பின்பற்றினார்கள். விதுரன், பீஷ்மர் -ஆகியோர் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பலனளிக்கவில்லை, கடைசியில் கண்ணனை அனுப்பினார்கள். அதுவும் தோல்வியைத் தழுவியது. யுத்த களத்தில் அர்ஜுனன், கௌரவர்களைப் பகைவராகப் பார்க்கவில்லை. தன் நண்பனாக, தம்பியாக, அண்ணனாக, குருவாக, சித்தப்பாவாக, தாத்தாவாக, உறவினராகவே எண்ணினான். அவன் மனதில் எள்ளளவும் பகை இருக்கவில்லை.

'போர் என்றால் மரணம் நிச்சயம். அது ஹிம்சை. பிறரை ஹிம்சிப்பது பாவச் செயல். நான் அதில் ஈடுபட விரும்பவில்லை' என்று கண்ணனிடம் அவன் சொல்வதைக் கவனிக்க வேண்டும். பாரதக் குடிமகனுக்கு ஹிம்சிக்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றாது. வேதம், அந்தப் பண்பை அவனுக்கு அளித்திருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'பகைவனை அழிக்காதே. முதலில் நல்லுரைகள் வழங்கி, அவனை நல்வழிப்படுத்த முயற்சி செய். அது பலனளிக்காவிட்டால் சலுகைகளை வழங்கி நல்வழிப்படுத்த முனைய வேண்டும். அதுவும் தோல்வியைத் தழுவினால் அவனை மிரட்டி, பயம் காட்டி எதிர்விளைவுகளை எடுத்துரைத்து சிந்திக்க வைக்க வேண்டும். அப்படியும் தோல்வி அடைந்தால் தற்காப்புக்காக அவனை எதிர்கொள்ள வேண்டும்' என்று சாணக்கியன் நான்கு படிகளை வகுத்து, ஹிம்சையைத் தவிர்க்கப் பரிந்துரைக்கிறார். சாம, தான, பேத, தண்டம்- என்று அவரது அரசியல் நூல் அலசி ஆராய்கிறது.

'தற்காப்புக்காக ஏற்படும் ஹிம்சை, ஹிம்சை அல்ல!' என்று வேதம் கூறும். இன்றும் நமது சட்டம் தற்காப்புக்காக ஏற்பட்ட ஹிம்சையை மன்னித்து விடுகிறது. போலீஸ் அதிகாரி கொள்ளையனை சுட்டுவிட்டால், அது கொலைக் குற்றமாகாது. அவருக்கு வீர சக்கரம் விருது வழங்கப்படுகிறது. குழந்தையிடம் நல்ல வார்த்தை சொல்வான். அது கேட்காது. பல சலுகைகளை அள்ளி வீசுவான். அதை ஏற்காது. மிரட்டுவான், பணியாது. கடைசியில் ஓங்கி அடிப்பான் பணிந்து விடும். ஓங்கி அடிப்பது ஹிம்சையாகாது.

கொசுக்கள் நமது பகைவர்கள். நண்பனாக்க முடியுமா? சிங்கம் கிராமத்தில் புகுந்து அட்டகாசம் செய்கிறது. பல அப்பாவி உயிர்களை பலி வாங்கி விட்டது. அதை நண்பனாக்க இயலுமா? பிற உயிரினங்களை உணவுக்காக அழிக்கிறான். அவன் செயலை ஏற்றுக் கொள்கிறது சமுதாயம்.

மனிதனின் உயிருக்கு தனிச் சிறப்பு ஒன்றும் இல்லை. எந்தச் சட்டமும் விதிவிலக்கோடு இருந்தால் மட்டுமே செயல்படும். விதிவிலக்கு இல்லாத சட்டம் காலப்போக்கில் உருமாறி விடும். ஹிம்சைக்கு சில இடங்களில் விதிவிலக்கு வேண்டும். எல்லாப் பகைவர்களையும் நண்பனாக்க இயலாது. இயலாத சூழலில், கொலை அதர்மமாகாது.

பகைவனை அழிப்பதல்ல நோக்கம். மற்றவர்களைக் காப்பாற்ற அது நிகழ வேண்டும். குழந்தை பிடிவாதமாக அழுது கொண்டிருக்கிறது. பல முயற்சிகள் செய்தும் அழுகையை நிறுத்தவில்லை. தகப்பனார் 'பளார்' என்று அடித்தவுடன் அழுகை நின்று விடுகிறது. அடித்தால் அழ வேண்டும். ஆனால், இங்கு அடித்தால் அழுகை நின்று விடுகிறது. ஆகையால், சில இடங்களில் ஹிம்சை நல்ல பலனை அளிக்கும். சந்தன மரத்தை கோடரி பதம் பார்க்கிறது. கோடரியின் உச்சியை முகர்ந்து பாருங்கள். சந்தன மணம் வீசும். பகைவனுக்கு தனது மணத்தை இனாமாக அளிக்கிறது அது. பகையுணர்வோடு தன்னை அணுகுபவனையும் மகிழ்விக்கிறது பகவத்கீதை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவர்களும் அசுரர்களும் சகோதரர்களா?

வீட்டில் மகாபாரதம் படிக்கக் கூடாது... படித்தால் சண்டை வரும் என்கிறார்களே! விளக்கம் தேவை.

- தேதியூர் பாலு, சென்னை-11.

திண்ணைப் பேச்சு உரையாடல் நிகழ்ந்து கொண்டிருந்தது. அதில் வெளியூர்க்காரர் ஒருவரும் இடம் பெற்றிருந்தார். அவர் உள்ளூர்க்காரரிடம் வினா எழுப்பினார். "பெரியோர்கள் நிறைந்த ஊர் என்று கேள்விப்பட்டிருக்கேன். அவர்களின் அன்றாட அலுவல்கள் பற்றி அறிய விருப்பம்!" என்றார்.

"காலையில் சூதாட்டம், மதியம் பெண்களைப் பற்றிய வினாவுரை. மாலையில் திருட்டு பற்றிய சர்ச்சை - இப்படித்தான் அவர்கள் பொழுது போக்குகிறார்கள்!" என்று உள்ளூர்க்காரர் பதிலளித்தார்.

திடுக்கிட்ட வெளியூர்க்காரர், "அறிஞர்கள், பெரியோர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால்..." என்று முடிப்பதற்குள் இடைமறித்த உள்ளூர்க்காரர் அதற்கு விளக்கமளித்தார்:

"அறிஞர்கள் எப்போதும் தப்பான வழியைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள். சூதாட்டம் என்பதற்கு மகாபாரதம் என்று பொருள். சூதாட்டம், மகாபாரதத்தின் திருப்புமுனை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பெண்களைப் பற்றிய வினாவுரை என்றேனே... சீதாதேவியைக் கடத்திச் சென்றது, ராமாயணத்தின் திருப்பு முனை. சீதையைக் கவர்ந்த தகவல் மட்டுமல்ல, அவளது அருமை பெருமைகளையும், ராமாயணம் சொல்லும்.

திருட்டு பற்றிய சர்ச்சை என்று சொன்னேனே... கண்ணன் வெண்ணெயை மட்டும் திருடவில்லை. கோபியர்களின் மனதையும் திருடி விட்டான்."

பகவத் கீதை, மகாபாரதத்தில் வரும் ஒரு நிகழ்வு. விஷ்ணு சஹஸ்ரநாமமும் பாரதத்தின் சிறு பகுதி.

இவை இரண்டையும் நாம் தினமும் வீட்டில் பாராயணம் செய்வதுண்டு. உடல் ஆரோக்கியத்துக்கு விஷ்ணு சஹஸ்ரநாமமும், உள்ளத் தெளிவுக்கு கீதையும் பயன்படுகிறது. விஷயம் இவ்வாறிருக்க இப்படியொரு வினா எழுந்தது ஆச்சரியம்!

'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று சைவர்கள் சொல்கிறார்கள்! அப்படியானால், சிவபெருமானுக்கும் வட இந்தியாவுக்கும் தொடர்பு இல்லையா?

_ கே. அனிதா, கோவை-42.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உலகம் முழுமைக்கும் பொதுவான இறைவனை 'தென்னாட்டுக்கு உடையவன்' என்று சொல்லுவது உண்மைதான். நான் பிறந்த ஊருக்கு அவன் தலைவன் என்பது எனக்குப் பெருமிதம். அல்லது அவர் ஆதிக்கத்திலிருக்கும் ஊரில் நான் தோன்றியது எனது பாக்கியம். ஆகாயத்தில் பவனி வரும் ஆதவன் ஒருவன். ஆனால், உலகத்தின் ஒளிவிளக்கு. அந்தந்த ஊரில் இருப்பவர்களுக்கு அவன் அந்த ஊரில் இருப்பவனாகவே தென்படுவான். அவனது ஒளி அந்தந்த ஊர்க்காரர்களுக்கு நெருங்கி இருப்பதால், அவனை தன்னுடையவனாக எண்ணுவதில் தவறில்லை. 'என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்ற வரியையும் படிக்க வேண்டும். இதில் வட மாநிலமும் அடங்குமல்லவா?

கேரள மாநிலம் கொடுங்கல்லூரில் உள்ள அம்மன் ஆலயத்தில், அர்ச்சகர்கள் கெட்ட வார்த்தையால் அம்மனை பிரதிஷ்டை செய்ததாகவும், ஆதலால் இப்போதும் கெட்ட வார்த்தைகளால் பாட்டுப் பாடுவதும், அர்ச்சனை செய்வதாகவும் சிலர் கூறுகிறார்களே... இது உண்மையா?

- எஸ். சுரேஸ்குமார், ஜெய்ஹிந்த்புரம்.

அம்மனை பிரதிஷ்டை செய்ய ஆபாச வார்த்தைகள் சொல்ல மாட்டார்கள். ஆலயங்களில் கடவுள் உருவத்தை பிரதிஷ்டை செய்ய சிறப்பான நடைமுறைகளை ஆகம சாஸ்திரம் எடுத்துரைக்கும். ஆகமம் ஆபாசத்தை ஏற்காது. அர்ச்சனை என்பது தெய்வத்தின் உயர்ந்த பண்புகளை எடுத்துரைக்கும் சொற்றொடர் ஆகும். உயர்ந்த பண்புகள் ஆபாச வார்த்தையாகாது. ஆபாச வார்த்தைகளை சொல்லக் கூடாது என்பது வேதத்தின் விதி. *(நாச்லீலம் கீர்த்தயேத்)* ஆபாசமான விஷயங்களை விளக்கும் தறுவாயிலும், ஆபாசமில்லாத வார்த்தைகளைப் பயன்படுத்தி அதை விளக்க வேண்டும் என்று வலியுறுத்தும். பகம் என்றால் ஆபாச வார்த்தை. 'பகம்' என்றால் பெண்ணின் 'குறி' என்று சம்ஸ்கிருதத்தில் அர்த்தம். அது கேட்பதற்கு ஆபாசம் ஆகும். அதை அப்படியே சொல்லாமல் எழுத்தை மாற்றிப் போட்டுச் சொல்ல வேண்டும் என்று வேதம் வற்புறுத்தும். 'பகம்' என்பதை 'கபம்' என்றும், 'கபாலம்' என்பதை 'பகாலம்' என்றும், 'அபத்ரம்' என்பதை 'பத்ரம்' என்றும் சொல்லுமாறு நம்மை அறிவுறுத்தும்.

செத்துப் போனவனை அமரர் ஆனார் என்று சொல்லுவோம். இறைவனடி அடைந்தார், வைகுண்டம் சென்றார், கயிலாயம் சென்றார் என்றெல்லாம் வழக்கில் உண்டு. இப்படி உரையாடலிலும் ஆபாசம் கூடாது என்ற பண்பு சிறந்தது. அப்படியிருக்க 'ஆபாசச் சொற்களால் அர்ச்சனை செய்யப்படுகிறது' என்கிற தங்கள் கூற்று உண்மைக்குப் புறம்பானது. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அம்மனை வழிபடுவார்கள். தகுதிக்கு ஏற்றவாறு அவர்களின் வார்த்தைகளில் மாறுதல்கள் இருக்கும்.

தாயார், அம்மா, ஆத்தா என்று ஈன்றவளைக் குறிப்பிடுவது உண்டு. 'ஆத்தா' என்பதை ஆபாசம் என்று சொல்ல முடியுமா? ஆவுடையாளுடன் இணைந்த லிங்கம் ஆபாசம் என்று சொல்ல முடியுமா? கோயிலுக்கு வரும் பக்தர்கள் அத்தனை பேரும் படித்தவரல்ல. பாமரர்களும், படிக்காதவர்களும் இருப்பார்கள். அவர்களது பழக்க வழக்கத்தில் இருக்கும் சொற்களைப் பயன்படுத்தி அம்மனை வழிபடுவார்கள். அவர்களுக்கு எது ஆபாசம், எது ஆபாசமில்லை என்கிற பகுத்தறிவு இருக்காது. உண்மையான பக்தர்கள் அவர்கள். மெய்ம்மறந்து தங்களுக்குப் பரிச்சயமான சொல்லால் அம்மனைப் புகழ்வார்கள்.

காலையில் 'பிரேக் ஃபாஸ்ட்' அல்லது 'டிபன்' சாப்பிட்டாயா என்று கேட்கலாம். 'நாஸ்தா' ஆச்சா என்றும் கேட்கலாம். நாஸ்தா ஒருவருக்கு அநாகரிகமானாலும், அதைப் பயன்படுத்துபவனுக்கு அது அநாகரிகம் அல்ல. பாமரர்கள், கள்ளம் கபடம் அற்றவர்கள். அம்மனை வழிபடத் தங்களுக்குத் தெரிந்த சொற்களைத்தான் பயன்படுத்த முடியும், அது தவறாகாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொடுங்கல்லூர் பரணியன்று அம்மன் பக்தர்கள் பல ஊர்களில் இருந்தும், கூட்டம் கூட்டமாக ஆடிப் பாடிக் கொண்டு, ஆவேசமாக பவனி வருவார்கள். மற்ற நாட்களில் அவர்கள் வாயிலிருந்து இந்தக் கொச்சையான செய்யுள்கள் வெளிவராது. பரணியன்று அம்மனை கொச்சைச் சொற்களால் பாடி துதிக்க வேண்டும் என்பது அவர்களது நம்பிக்கை. பக்திப் பரவசத்தில் அவர்கள் வாயில் இருந்து வெளிப்படும் அத்தனை சொற்களும் அம்மன் துதியாகவே அவர்கள் எண்ணுவார்கள். படித்தவர்கள், விஷயமறிந்தவர்கள் யாரும் ஆபாச வார்த்தைகளைச் சொல்லி அம்மனை வழிபடுவதில்லை.

ஒருவர் கண்ணோட்டத்தைப் பொதுக் கண்ணோட்டமாக மாற்றக் கூடாது. ஏதுமறியா அப்பாவி பக்தர்களின் ஆபாசம் கேட்டு, தங்களுக்கு நெஞ்சு பொறுக்கவில்லை என்கிறீர்கள். அந்தப் பாமரர்களும் கொஞ்சம் கொஞ்சமாகக் கல்வி பயின்று தரத்தில் உயர்ந்து, உலக விஷயங்களில் அனுபவம் பெற்று விளங்கும் காலம் வரும்போது தாங்கள் ஆறுதல் அடைவீர்கள். அதுவரை பொறுத்திருங்கள்.

இரண்யகசிபும் இந்திரனும் காசியப முனிவருக்குப் பிறந்தவர்களாமே. அப்படியானால், அவர்கள் சகோதரர்கள். தேவர்களும் அசுரர்களும் சகோதரர்கள் என்றால், அவர்கள் ஒருவர் மீது ஒருவர் ஏன் பகை கொள்ள வேண்டும்? நாம் தேவர்களைப் போற்றுவதும், அசுரர்களை ஒதுக்குவதும் பொருந்தி வரவில்லையே?

- கே. சபாபதி, கோவைப்புதூர்.

தேவர்களும் அசுரர்களும் சகோதரர்கள்தான். காசியப முனிவருக்கு இரு மனைவிகள். அதிதிக்குப் பிறந்தவர்கள் தேவர்கள்; திதிக்குப் பிறந்தவர்கள் அசுரர்கள். உண்மையில் ஒன்றாக, நட்புடன் வாழ வேண்டியவர்கள். ஆனால், அவர்கள் ஏன் ஒருவருக்கு ஒருவர் பகைவர்கள் ஆனார்கள்? அசுரர்களால், தேவர்களைப் போல வாழ இயலவில்லை. தேவர்களை, எல்லாரும் போற்றுகிறார்கள். நேசிக்கிறார்கள். தேவர்கள் மற்றவர்களுக்கு உதவுகிறார்கள். பிறரை மகிழ்விக்கிறார்கள். எல்லாரும் வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

இந்த நல்ல பண்புகள் அசுரர்களிடம் இல்லை. மற்றவர்களது தகுதியைத் தன்னால் அடைய முடியாமல் போனால், அவர்கள் மீது பொறாமை ஏற்பட்டு பகையைத் தோற்றுவிக்கும். அப்படியொரு பகை, அசுரர்களிடம் வளர்ந்து விட்டது. தங்கள் மகிழ்ச்சிக்காகப் பிறரைத் துன்புறுத்தும் எண்ணம் அவர்களிடம் குடி கொண்டிருந்தது. காரணமில்லாமலே பகையை வெளிப்படுத்துபவர்களாக மாறி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi.

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விட்டார்கள். அவர்களால் உலகத்துக்கும், அவர்களுக்குமே பயனில்லை. இதை அறிந்து கொள்ளும் திறனும் அவர்களிடம் வளரவில்லை. பகையுணர்வு அவர்களது சிந்தனையை மங்கச் செய்து விட்டது.

ராவணன் தவம் செய்தான். கடவுள் தோன்றினார். வரத்தைத் தருவதாக வாக்களித்தார். அழியா வரம் கேட்டான் ராவணன். அவர் மறுக்கவே, 'அப்படியானால் மனிதனைத் தவிர மற்ற யாராலும் நான் மடியக் கூடாது!' என்று வரம் கேட்டான். கொடுத்து விட்டார் கடவுள். ராமனால் மடிந்தான். கடவுளை சந்தித்த ராவணனுக்கு நல்லவனாக மாற வேண்டும் என்று தோன்றவில்லை. எல்லாரையும் அடக்கி ஆள வேண்டும் என்ற அகங்காரம்தான் முன் நின்றது. ஆணவமும் அகங்காரமும் பகையைத் தோற்றுவிக்கும்.

அந்தப் பகை தங்களை அழித்துவிடும் என்று அசுரர்கள் புத்தியில் தோன்றவில்லை. அவர்களை ஓரம்கட்டாமல் எப்படிப் போற்றுவது? விபீஷணன் அரக்கன். ஆனால், அவன் மனதில் பகை இல்லை. பகையை அழிக்க முற்பட்டான், முடியவில்லை. ராமனை சரணடைந்தான். அவர் ஓரம்கட்டப்படவில்லையே, போற்றப்படுகிறார். ஹிரண்யகசிபு பகையை வளர்த்தான், அவன் அசுரன். பிரஹலாதன் அவன் புதல்வன். அவன் பகையை வெறுத்தான், பண்பை வளர்த்தான். அவன் போற்றப்படுகிறான். நல்லெண்ணங்கள் போற்றப்பட வேண்டும். பகையை ஓரங்கட்ட வேண்டும். பகையை வரவேற்பது எப்படி பண்பாகும்?

தண்ணீரில் வாழும் மீன்கள், காட்டில் வாழும் மான்கள், உலகை உய்விக்க எண்ணும் நல்லவர்கள் ஆகியோருக்குக் காரணம் இல்லாமலே பகைவர்கள் இருக்கிறார்கள். மீன் பிடிப்பவர்கள், மீன்களுக்குப் பகைவர்கள். மான்களுக்கு, வேடன் பகைவன். கோள் சொல்லுபவன் நல்லவர்களுக்குப் பகைவன். இப்படி இன்னும் நம்மில் பகைவர்கள் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அசுரர் கூட்டத்தின் பகை வலுக்காமல் தடுத்து நிறுத்த தேவர்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நல்லெண்ணங்கள் தேவைப்படுவதால் தேவர்களைப் புகழ்கிறோம், அசுரர்களை ஓரம்கட்டுகிறோம்.

ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நட்போடு வாழாமல், பகையோடு இருப்பதைக் காண்கிறோம். எத்தனை பாகப் பிரிவினைகளை கோர்ட் தீர்மானிக்க நேர்ந்தன. அண்ணன்-தம்பி பகை, குடும்பத்தில் நிரந்தர விரிசலைத் தோற்றி வைத்து, அலைக்கழிப்பதைப் பார்க்கிறோம். பொறாமை, தாழ்வு மனப்பான்மை ஆகியவை பகையை வலுவாக்கி, அண்ணன்-தம்பிகளை நிரந்தர எதிரிகளாக மாற்றிய நிகழ்ச்சிகள் ஏராளம்.

படிக்காமல், ஊர் சுற்றி, குடியும் கும்மாளமுமாகக் குலத்தை அலைக்கழிக்கும் பிள்ளையை ஓரம்கட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படும். தனக்கும், குடும்பத்துக்கும், நாட்டுக்கும் நல்லதையே செய்து, குலத்தின் பெயரை உயர்த்தும் பிள்ளையைப் போற்றத்தான் வேண்டும். போற்றுவதும் ஓரம்கட்டுவதும், அவர்களில் தென்படும் நல்லது- கெட்டது எண்ணத்தின் வெளிப்பாட்டில் நிகழ்வதாகும். அசுரர்கள் பகையை மறந்தால் அவர்களும் போற்றப்படுவார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராமர் ஏன் புனர்வசுவைத் தேர்ந்தெடுத்தார்?

'பரணி- பூரம்- பூராடம்- புனர்பூசம்- சுவாதி- உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரக்காரர்களுக்கு மரண யோகம் கிடையாது. ஆதலால், ஸ்ரீராமர் புனர்பூச நட்சத்திரத்தில் அவதரித்தார்' என்று பிரும்மஸ்ரீ லட்சுமிபதி தீட்சிதரின் உபன்யாசத்தை மேற்கோள் காட்டி வாசகர் ஒருவர் எழுதியுள்ளார். இது பற்றிய தங்களது கருத்து?

- கே. வேங்கடராமன், சென்னை-8.

யோகம் என்ற சொல்லுக்கு, சேர்க்கை என்று பொருள். குறைந்தபட்சம் இரு பொருள்கள் சேர வேண்டும். இரு பொருள்களின் கூடுதலால் வரும் பலனை, யோக பலன் என்று சொல்லலாம். யோக பலனை- அதாவது இரண்டின் சேர்க்கையால் தோன்றும் பலனை, இரண்டில் ஒன்றுக்கு உரிய தனி பலனாகச் சொல்ல இயலாது.

நெய், ஆயுளை அதிகமாக்கும் அல்லது நிலைபெறச் செய்யும். தேன், மேதா விலாசத்தைத் தோற்றுவிக்கும். இரண்டும் சம அளவில் சேர்ந்தால், அதாவது யோகம் ஏற்பட்டால், நச்சுத் தன்மையை வெளிப்படுத்தும் என்று ஆயுர்வேதம் கூறும். நச்சுத் தன்மையை நெய்க்குத் தனியாகவோ, தேனுக்குத் தனியாகவோ கூற இயலாது. அதுபோல் யோக பலத்தை நட்சத்திரத்துக்குத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi.

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தனியாகக் கூற இயலாது. நட்சத்திரங்கள் திதியோடு சேரும்போதும், வாரத்தோடு சேரும்போதும், அதன் சேர்க்கையில் தோன்றும் பலன் மாறுபட்டிருக்கும்.

மரண யோகமோ, சித்த யோகமோ, அமிர்த யோகமோ எந்த நட்சத்திரத்துக்கும் தனியாக இல்லை. குறிப்பிட்ட நட்சத்திரக்காரர்களுக்கு மரண யோகம் கிடையாது என்றால், அவர்கள் அத்தனை பேரும் சிரஞ்ஜீவியாக இருக்க நேரிடும். 'பிறந்தவனுக்கு இறப்பு உண்டு *(ஜாதஸ்யஹி த்ருவோ ம்ருத்யு;)* என்பது ஸ்ரீகண்ணன் வாக்கு. சித்த- அமிர்த - மரண யோகங்கள் சூரிய உதயத்துக்குப் பிறகு மூன்றேமுக்கால் நாழிகை, அதாவது ஒரு முகூர்த்தம் தாண்டி விட்டால், செயலற்று விடும் என்பது சிலரது கருத்து.

முகூர்த்த சாஸ்திரம் இந்த மூன்று யோகங்களுக்கு முன்னுரிமை அளிக்கவில்லை. திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம், லக்னம்- ஆகியவை நன்றாக இருந்தால், நல்ல வேளையாகக் கருதப்படும். மூன்று யோகத்தில் மரணம் தவிர மற்ற இரண்டும் இருந்தால் சிறப்பு. இல்லையானாலும் தவறு இல்லை என்று சொல்லும் நூல்களும் உண்டு. குறிப்பாக தமிழ்நாட்டு ஜோதிட அறிஞர்கள் இந்த மூன்றுக்கும் தனிச் சிறப்பு அளித்திருக்கிறார்கள். எல்லா வித நன்மைகளையும் அளிக்கவல்ல சுபமுகூர்த்தம் ஆனாலும், 'மரண யோகம்' என்றால், அந்த நல்ல நாளைத் தவிர்ப்பது தமிழக மக்களின் நம்பிக்கை.

நம் முன்னோர், இதை வரவேற்றதால் நாமும் கடைப்பிடிக்கிறோம். சித்த- அமிர்த- மரண யோகங்கள் தவிர, அதிர்ஷ்ட யோகம், ப்ரபலா நிஷ்ட யோகம், தக்த யோகம், மிருத்யு யோகம் போன்றவையும் நட்சத்திரங்களின் சேர்க்கையில் ஏற்படுவது உண்டு. பரணி நட்சத்திரம், ஞாயிற்றுக் கிழமையுடன் சேர்ந்தால் - ப்ரபலா நிஷ்ட யோகம். திங்களும் பூராடமும் சேர்ந்தால்- மரண யோகம் தென்படும். பூராடமும் வெள்ளியும் சேர்ந்தால்- ப்ரபலா நிஷ்ட யோகம் தோன்றும். 'மரண யோகம் இல்லாததால் ராமர் புனர்வசுவைத் தேர்ந்தெடுத்தார்' என்று எழுதியிருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படியானால் அவர், 'ரிக்தை' அதாவது 'குறை' என்று சொல்லப்படும் 'நவமி'யை ஏன் விலக்கவில்லை என்ற கேள்வி எழும். அதற்கொரு விடையை தாங்கள் தேட வேண்டி இருக்கும்.

நட்சத்திரத்தின் பெருமையை வைத்து ராமரின் பெருமையைப் பெருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் என்றும் எங்கும் நிறைந்த பரம்பொருள். அவர் மானிடனாகத் தோன்றினாலும், அவரை சாதாரண மானிடனோடு ஒப்பிட்டுக் கூற இயலாது. அவர் நம்மைப் போல் பிறக்கவில்லை. வேள்வியில் உதித்த பாயசத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருந்து தோன்றினார். உலக வழக்குக்கு உட்பட்டு கர்ப்பவாசம் இருந்தார் என்று சொல்வதுதான் பெருமை. பிறந்தவனுக்குத்தான் நட்சத்திரம். எப்போதும் இருப்பவனுக்கு நட்சத்திரம் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் அவர் தோன்றுவார். தோன்றுவதற்கு நல்ல நேரம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நல்லதுக்குத் தோன்றுவதால் அவர் தோன்றும் வேளை நமக்கு நல்ல நேரம்- நல்ல காலம். கிருஷ்ணன் ரோகிணியைத் தேர்ந்தெடுத்தான். அது வாரத்தோடு சேரும்போது மரண யோகமாகும். வியாழனும் வெள்ளியும் சேர்ந்தால் யோகம் மாறும். இப்படி ஆராய்ச்சியில் இறங்கினால் கேள்வி வந்து கொண்டே இருக்கும். எல்லை இருக்காது.

பிரம்மஸ்ரீ லட்சுமிபதி தீட்சிதர் சிறந்த அறிஞர். அவரிடம் இருந்து தவறான தகவல்கள் வெளிவராது. அறத்தை அறிமுகம் செய்யும் அவரிடமிருந்து வரும் தகவல் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகத்தான் இருக்கும். அவரது விளக்கங்களில் அவரது நோக்கத்தைக் கவனிக்க வேண்டும். கேட்பவரின் நோக்கத்தோடு அவரது விளக்கவுரையை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. 'பெரியோர்கள் சொல்லும் வார்த்தைகளில் அவர்களது கருத்துகளை ஆராய வேண்டும் *(விவக்ஷாபர தந்த் ரத்வாத் லௌகிக வாக்யானாம்)* என்று சாஸ்திரம் கூறும். உபன்யாசம் கேட்பவர்களில், ஒன்றும் அறியாச் சிறுவர்களும் இருப்பார்கள். அவர்களை ஈர்க்க நட்சத்திரத்தின் பெருமையை விளக்கி ராமர் பெருமையைக் கூறுவது பொருந்தும். காலப்போக்கில் அந்தச் சிறுவர்கள், ராமனது பெருமையைத் தெரிந்து கொள்ள அவரது விளக்கவுரை பயன்படும்.

தீட்சிதர், தனது உபன்யாசத்தில் என்ன சொன்னார் என்று உங்களுக்குத் தெரியாது. தவிர, அந்த வாசகர் எழுதியது சரிதானா என்பதும் உங்களுக்குத் தெரியாது. அப்படி இருந்தும், அதை இரண்டையும் உண்மையாகத் தாங்கள் எடுத்துக் கொண்டு, அதில் ஒரு வினாவை எழுப்பி, விளக்கம் அறிய விரும்புகிறீர்கள். ஒரு பொதுவான கருத்து சொல்கிறேன்... பலதரப்பட்ட மனிதர்களை ஈர்க்க வேண்டிய தருணங்களில், சில தற்காலிகச் சிறப்புகளைப் பயன்படுத்தி மையக் கருத்தை ஊக்குவிப்பதில் தவறில்லை!

அமாவாசை அன்று, குளித்துவிட்டு நெற்றியில் திருநீறும், குங்குமமும் இட்டுக் கொண்டு தர்ப்பணம் செய்யச் செல்கிறேன். ஆனால், 'நெற்றியில் திருநீறு, குங்குமம் இட்டுக் கொண்டு தர்ப்பணம் பண்ணக் கூடாது!' என்கிறார்கள் சிலர். விளக்க வேண்டுகிறேன்.

- வி. வீரமணி, சென்னை-61.

'**த**ர்ப்பணம்' என்ற சொல்லுக்கு முன்னோர்களைத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



திருப்திப்படுத்துதல் என்று பொருள். அதற்கான வழிமுறைகளை தர்ம சாஸ்திரம் எடுத்துரைக்கும். காலையில் நீராடி நெற்றியில் திலகமிட்டு, முறைப்படி காலைக் கடனை முடிக்க வேண்டும். மதிய நேரத்தை முன்னோர்களது ஆராதனைக்கு உகந்த வேளை என்று சாஸ்திரம் சொல்லும். அவர்களை ஆராதிப்பது தலைநிகழ்வு. அதை நமது அன்றாடக் கடமைகளோடு இணைக்கக் கூடாது. அவர்களது ஆராதனைக்காகத் திரும்பவும் ஒரு முறை நீராட வேண்டும். அதை 'மத்தியான ஸ்நானம்' என்று குறிப்பிடுவார்கள்.

ஆண்டுக்கு ஒரு முறை வரும் நம் முன்னோர்களின் ஆராதனையில், ஆராதனைக்கு அழைத்த விருந்தினரை நீராடச் செய்வோம். அவர்களோடு நாமும் ஒரு முறை நீராடுவோம். ஆராதனையை முன்னிட்டுச் சிறப்பு நீராடல் உண்டு. நீராடி முடித்ததும் அவர்கள் பணிவிடைக்கு முன்னுரிமை அளிப்போம்.

அந்தத் தருணத்தில் நம் நெற்றியில் திலகம் இருக்காது. அவர்களுக்கு அளித்த பிறகுதான் நாம் அணிந்து கொள்ளலாம். ஆராதனையில் ஈடுபட்ட மனதுக்கு அலங்காரத்தில் நாட்டம் இருக்காது. அது பொருத்தமும் அல்ல. ஆராதனையை முடித்து, விருந்தினரை வழியனுப்பிய பிறகு நெற்றியில் திலகமிடுவது சிறப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர்களைப் பெருமைப்படுத்தவே நமது நெற்றித் திலகத்தைத் தள்ளிப் போடுகிறோம்.

அமாவாசையன்று மதியம் செய்ய வேண்டிய சிறப்பு நீராடலைத் தங்களால் செயல்படுத்த முடியவில்லை அல்லது தற்காலச் சூழலின் காரணமாக நேரம் ஒதுக்க இயலாது என்றால், அதற்காக தர்ப்பணத்தையே இழக்கக் கூடாது. நீராடல் முக்கியமில்லை; தர்ப்பணம் முக்கியம். மந்திரம் சொல்லி உடம்பில் ஜலத்தைத் தெளிப்பது நீராடலுக்குச் சமம். தவிர்க்க முடியாத தருணங்களில் தண்ணீரை உடம்பில் தெளித்துக் கொள்வதை நீராடலுக்கு ஈடாக தர்ம சாஸ்திரம் மதிக்கும்.

காலையில் அணிந்த திலகம் நெற்றியில் இருந்தால் அதை அழிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. அமாவாசை தர்ப்பணம் செய்ய வேண்டும். அதற்காக காலையில் குளித்தவுடன் நெற்றியில் திலகம் இல்லாமல் காலைக் கடன்களை முடிப்பது தவறாகும். தர்ப்பணத்துக்குத் திலகம் வேண்டாம் என்பதால், காலைக் கடனுக்கும் திலகம் வேண்டாம் என்று நீங்களாக தர்ம சாஸ்திரத்தை அவமதிக்கக் கூடாது.

சிராத்த தினத்தன்று காலைக் கடனான ஔபாசனத்தை நெற்றியில் திலகமில்லாமல் செய்து பழக்கப்பட்ட இந்த நாளில் சாஸ்திரக் கட்டுப்பாடுகள் கசக்கும். மிரண்டு போய் தர்ப்பணத்தை விட்டு விடாதீர்கள். நெற்றியில் திலகம் அணிந்தோ, அணியாமலோ, எப்படியானாலும் சரி... தர்ப்பணத்தைக் கடைப்பிடியுங்கள். காலப் போக்கில் உண்மையை அறிந்து படிப்படியாக மத்தியானம் நீராடி, திலகமில்லாமல் செய்யும் பாங்கைப் பெற்று விடுவீர்கள்.

சமீபத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்... பார்த்திருப்பீர்கள். இந்த (விய வருட) தை மாதம் பிறந்தது சரியில்லை என்பதால், வீட்டு வாசலில் வாழையிலை வைத்து அதன் மீது அரிசியைத் தூவி, அகல் விளக்கு ஏற்றி வைத்திருந்தனரே... இது ஏன்? விளக்கமாகச் சொல்லவும்.

- வி. எழில்ராணி வேல்முருகன், திட்டக்குடி.

ஒவ்வொரு வருஷமும் தை மாதப் பிறப்பின் பலன் சொல்வது பஞ்சாங்க நடைமுறை. ஆதவன், ஒவ்வொரு மாதத்திலும் நுழைந்து வெளிவருவது போல் தை மாதத்திலும் வெளிவருகிறான். 'தை பிறந்தால் வழி பிறக்கும்'. உத்தராயணம் நல்ல காரியங்களைச் செய்ய உகந்த வேளை என்று தர்ம சாஸ்திரம் சொல்லும். ஆதவன் வடக்குத் திசையில் சாய்ந்தபடி தனது பயணத்தைத் தொடர்கிறான். அது, நல்ல வேளை. அதை நாம் எதிர்பார்த்து, வரவேற்கிறோம். உலகம் நல்ல வழியில் செயல்பட வடக்கே நகர்கிறான் அவன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பருவ காலங்கள் ஒன்றோடு ஒன்று மோதாமல் சீராகச் செயல்பட அவன் வடக்கே நகர்வது அவசியம் என்று வேதம் சொல்லும்.

'ஆதவன் ஆறு மாதங்கள் தெற்கு நோக்கியும், ஆறு மாதம் வடக்கு நோக்கியும் நகர்கிறான். பருவ காலங்கள் எதிரும் புதிருமாக மோதிக் கொள்ளாமல் இருப்பதற்காக இந்த நிகழ்வு தேவைப் படுகிறது' என்ற தகவல் வேதத்தில் உண்டு *(தஸ்மாதாதித்ய: ஷண்மாஸோ தக்ஷிணேநைதி ஷடுத்தரேண)*. தை முதல் ஆனி முடிய ஆறு மாதங்கள், நல்ல காரியங்களை நிறைவு செய்ய ஒத்துழைக்கின்றன. நன்மைகளும்- தீமைகளும் கலந்ததுதான் உலகம். 'ஒருவனது வாழ்வில் முழுக்க முழுக்க நன்மை மட்டுமோ, தீமை மட்டுமோ இருக்க முடியாது!' என்று காளிதாசன் கூறுவான் *(கஸ்யைகாந்தம் சுகமுபனதம் துக்க மேகாந்ததோவா)*. இரண்டும் கலந்து தென்படுவது நியதி. அதை மாற்ற இயலாது. அதற்குப் பரிகாரமும் கிடையாது.

தை மாதப் பிறப்பு பலனும் நன்மை- தீமை கலந்துதான் தென்படும். அது ஒரு தகவல். இரண்டும் நிகழ வேண்டியது கட்டாயம். பொதுமக்களுக்கும் அதற்கும் எந்தவொரு தொடர்பும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இல்லை. 'பலவீனமான மனம்... எதையும் ஆராயாமல் நம்பும் மனம்... இப்படி சொல்லப்படும் பரிகாரங்களையும் நம்பும்' என்ற தெம்புதான், பரிகாரம் சொன்னவர்களுக்கு ஆதாரம்.

நமது கடமைகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் கவனம் செலுத்தவே காலம் போதவில்லை. பிற உயிர்களைத் துன்புறுத்தாத மனம் படைத்தவர்கள், புலனடக்கம் உள்ளவர்கள், அற வழியில் செல்வத்தை ஈட்டுபவர்கள், கடமை தவறாதவர்கள் ஆகியோரை நவக்கிரகங்கள் எப்போதும் ஆசீர்வதிக்கின்றன என்று ஜோதிட நூல் அறிவுறுத்துகிறது. நமது நன்னடத்தையே உண்மையான பரிகாரம். உலகத்தின் வாயை அடைக்க முடியாது. நாம்தான் விழிப்பாக இருக்க வேண்டும்.

நாம் சந்திக்கும் இடர்ப்பாடுகள் அத்தனையும், நம் மனதில் எதிரிடையான விளைவுகளை ஏற்படுத்தும். அவற்றை மனதுக்குள் நுழைய அனுமதிக்கா விட்டால், நிச்சயமாக வென்று விடலாம், கவலைப்படாதீர்கள்!

பக்தி இல்லாத ஆசாரம்; ஆசாரம் இல்லாத பக்தி- எது நம்மை உயர்த்தும்?

_ பி. ராஜலெக்ஷ்மி, சென்னை-61.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கடவுளோடு இணைந்து விடுவது பக்தி.

விஷயமறிந்த முன்னோர்கள், சான்றோர்கள் கடைப்பிடித்த பழக்க வழக்கங்கள், தனக்கும் சமுதாயத்துக்கும் பெருமையளிக்கும் சிறந்த செயல்பாடுகள் ஆகியவை ஆசாரத்தில் அடங்கும்.

ஆசாரத்தோடு இணைந்த பக்திதான் உண்மையானது.

தனது கடமைகளை தாரை வார்த்து பக்தி செலுத்துவது பலனளிக்காது. 'பிணி அகல வேண்டும் என்ற எண்ணத்தில் பக்தி செலுத்துபவர், கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் இருப்பவர், செல்வம்- கல்வி- மனை- மனைவி ஆகியவற்றைப் பெற பக்தி செலுத்துபவர் ஆகியோரை என் பக்தர்கள் என்று ஏற்றுக்கொள்ள மாட்டேன். அறிவாளியாக இருந்து எதையும் விரும்பாமல், பக்தி செலுத்துபவனே எனக்குப் பிடித்தமானவன்!' என்று ஸ்ரீகண்ணன் கூறுவான்.

ஆசாரத்துடன் ஸ்வதர்மத்தை அதாவது கடமைகளை நிறைவேற்றாத பக்தனை அவர் ஏற்க மாட்டார். 'ஆசாரத்திலிருந்து அறம் தோன்றுகிறது' என்று வியாசர் கூறுவார் *(ஆசாரப்ர பவோ தர்ம:)*. இரண்டும் சேர்ந்தால் நன்மை. ஒன்று மட்டும் பயனளிக்காது!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'விஷ்ணு சகஸ்ர நாம'த்தை பெண்கள் சொல்லலாமா?

நகர்ப்புறங்களில் வீட்டு வாசலில் கோலமிடும் பெண்கள் செருப்பு அணிகிறார்களே... இது சரிதானா?

- டி. முருகேசன், திருவாரூர்.

தற்போது செருப்புகள் பல கோணங்களில் பயன்படுத்தப் படுகின்றன. வெளியே நடந்து செல்ல ஒரு வகை செருப்பு. வீட்டுக்குள் நடமாட ஒரு வகை செருப்பு. நோயினால் பாதிக்கப்பட்ட கால்களுக்குப் பாதுகாப்பாக ஒரு வகை செருப்பு. கழிப்பிடம் சென்று வர ஒரு வகை செருப்பு. நிலத்தில் கால் வைக்க இயலாத முதியோருக்கு ஒரு வகை செருப்பு. நகரத்தின் சூழலுக்கு எல்லா இடங்களிலும் செருப்பு தேவைப்படுகிறது. செருப்பு போட்டுக் கொண்டு கோலமிடுவதில் தவறில்லை. அவளது ஆரோக்கியத்துக்கு செருப்பு தேவை என்பதால், அது தவறாகாது.

கிராமங்களில் சாணித் தண்ணீர் தெளித்து, பிறகு கோலம் போடுவது வழக்கம். சாணி தெளித்த இடம் சுத்தமாக இருப்பதால், செருப்பு இல்லாமல் கோலம் போடலாம். சாணி, காலுக்குப் பாதுகாப்பு. நகரத்திலும் வாசலில் சாணி தெளித்த பிறகு கோலம் போடும்போது செருப்பு தேவை இல்லை. இருக்கவும் கூடாது. அப்போது செருப்போடு இருந்தால், அவள் செருக்கோடு செய்வதாக ஆகிவிடும். மற்ற சந்தர்ப்பங்களில் தற்காப்புக்காகச் செருப்பு அணிவது தவறில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அகங்காரத்தில் அணிவது தவறு. கடவுளை வழிபடும் பூசாரி சட்டையோ, கோட்டோ அணிந்து பூஜை செய்வதில்லை. அப்படிச் செய்வது தென்னாட்டில் தவறாகக் கருதப்படும். ஆனால், வடநாட்டில் குறிப்பாக பத்ரிநாத், ஹரித்வார், காஷ்மீர் போன்ற இடங்களில் பூசாரிகள் கோட்டு அணிந்து கொண்டு பூஜை செய்வதுண்டு. அது தற்காப்பு; அகங்காரமல்ல. அதுபோல் இதிலும் தவறான கண்ணோட்டம் கூடாது.

செருப்பு அணியாமல்தான் கோலம் போட வேண்டும் என்ற விதியைக் கட்டாயமாக்கினால், பாதுகாப்புக் கருதி காலப்போக்கில் கோலம் போடும் பழக்கமே மறைந்து விடலாம். தற்போது தவறாகவாவது நடைமுறைப்படுத்தப் பட்டால்தான், அடுத்த பரம்பரைக்குக் கோலம் போடும் கலாசாரம் தெரிய வரும்.

மனிதன் இறந்து விட்டால், திரும்பவும் மனிதப் பிறவிதான் கிடைக்கும் என்று உறுதியாகச் சொல்கிறார்கள் சிலர். இது சரிதானா?

- ஆர். தேக்கமலை, துவரங்குறிச்சி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இறந்தவர்கள் அத்தனை பேரும் திரும்பவும் பிறக்கிறார்கள் என்று சொல்ல இயலாது. சிலர் மறு பிறப்பில்லாத ஆனந்தத்தில் லயித்திருப்பார்கள். மோட்சத்தை அடைந்திருப்பார்கள். மற்றும் சிலர் உயர்ந்த எண்ணம் படைத்த பெரிய மனிதர்களாகவும், முனிவர்களாகவும், அரசர்களாகவும் இருப்பார்கள். வேறு சிலர் மனிதர்கள் ஆகவும், கெட்ட எண்ணங்கள் உடையவர்கள் ஆகவும், விலங்கினம், பறவை, ஊர்வன, புழு-பூச்சிகள், மரம்-செடி-கொடிகள் ஆகவும் உருவெடுக்கலாம் என்று புராணம் கூறும்.

இரண்டு கண், இரண்டு காது, இரண்டு மூக்கு துவாரங்கள். வாய், மூத்திர துவாரம், மல துவாரம் - இப்படி ஒன்பது ஓட்டைகள் நம் உடலில் காற்று போய் வருவதற்காக உள்ளன. இவற்றுக்கு அடைப்பு கிடையாது. கதவு இல்லை. எப்போதும் திறந்தே இருக்கும். உயிர் வெளியே செல்ல ஒன்பது வழிகள் உண்டு. எப்போது வேண்டுமானாலும் அது வெளியே செல்லலாம். திறந்த வாயில் அதற்கு வழி வகுக்கும். அப்படி இருந்தும் வெளியே செல்லாமல் உடலில் தங்கி இருப்பது ஆச்சரியம் என்று காளிதாஸன் கூறுவான்.

தலையில் அடைப்போடு ஓர் ஓட்டை இருக்கிறது. சிறு குழந்தையின் தலையில் கையால் தொட்டுப் பார்த்தால் அந்த அடைப்பை அறியலாம். உன்னிப்பாகக் கவனித்தால் குழந்தை மூச்சு விடும்போது அந்த இடத்தில் அசைவு தென்படும். இறக்கும் தறுவாயில் தலையில் இருக்கும் அடைப்பைப் பிளந்து கொண்டு உயிர் வெளியே வந்தால், அவனுக்கு மறுபிறவி கிடையாது என்று சாஸ்திரம் சொல்லும். துறவிகளுக்கு அந்த வழியாக உயிர் பிரியும் என்பார்கள். தற்போது துறவியின் தலை அடைப்பு திறக்கவில்லை என்று தோன்றினால், தேங்காயால் அதை திறக்கும் சம்பிரதாயம் நடைமுறையில் இருக்கிறது.

மூச்சுப் பயிற்சியில் தேறியவர்கள், இறக்கும் தறுவாயில் மூச்சை அடக்கி இந்த ஒன்பது ஓட்டைகள் வழியாகவும் உயிர் போவதைத் தடுத்து, தலையின் அடைப்பைப் பிளந்து கொண்டு போகச் செய்வார்கள். ஒன்பது வழிகளிலும் தடைப்பட்ட ப்ராணன் (உயிர்) வேறு வழியின்றி வேகம் பெற்று, தலையின் ஓட்டை அடைப்பைப் பிளந்து வெளியேறும். அப்படிச் சென்றால், அவருக்கு மறுபிறவி இல்லை. அதற்காகவே சிறு வயதிலிருந்தே மூச்சுப் பயிற்சியை (பிராணாயாமம்) அறிமுகம் செய்தது தர்ம சாஸ்திரம். இறக்கும் தறுவாயில் கண் திறந்திருந்தால், அதன் வழியாகவும், வாய் திறந்திருந்தால் அதன் வழியாகவும், சிறுநீர் அல்லது மலம் கழித்திருந்தால் அததன் வழியாகவும் சென்றிருக்கிறது என்று அறிய முடியும்.

கழுத்துக்கு மேல் இருக்கும் அறிவுப் புலன்கள் வழியாக உயிர் பிரிந்தால், தேவனாகவும் உயர்ந்த மனிதனாகவும், அவன் பிறக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாய்ப்பு உண்டு. கீழ் உடலில் செயல் புலன்கள் வாயிலாக உயிர் வெளியேறினால் பறவை, விலங்கு, ஊர்வன போன்றவையாகத் திரும்பவும் பிறக்க வாய்ப்புண்டு. அவன் செய்த வினையின் அடிப்படையில் அவனது மறுபிறவி நிச்சயிக்கப்படுகிறது. நல்வினை- கெட்ட வினை என்பதைச் சுட்டிக்காட்ட உதவுகிறது, உயிர் பிரியும் வழித்தடங்கள்.

புலனடக்கம் பெற்றவன் நல்லவனாக வாழ்வான். அவனது நல்வினை அவனது உயிரை தலை ஓட்டை வழியாகச் செல்ல வைத்து, அவனைக் கரையேற்றுகிறது. புலனடக்கம் இல்லாமல் தன்னிச்சைப்படி செயல்பட்டு, நல்லது- கெட்டது என்று ஆராயாமல் செயல்படுபவனின் உயிர், மற்ற வழிகளில் செல்லும். நல்ல மனிதனாகப் புலனடக்கத்துடன் வாழ்பவன் மறுபிறவி அற்றவனாகிறான். ஆகையால், எல்லோருக்கும் மறுபிறவி- மனிதப் பிறவி என்பது ஆராயாமல் சொன்ன வார்த்தையே! அது நம்பிக்கைக்கு உகந்ததல்ல.

'மாதர்மே மாதரிச்வன் பிதரதுலகுரோ ப்ராத நிஷ்டாப்த பந்தோ ஸ்வாமின் ஸர்வாந்தராத்மன் அஜர ஜரயிதர் ஜன்ம மிருத்உ ஆமயானாம் கோவிந்தே தேஹி பக்திம் பவதிச பகவன் ஊர்ஜிதாம் நிர்நிமித்தாம் நிர்வ்யாஜாம் நிச்சலாம் ஸத்குண கணப்ருஹதீம் சாச்வதீமாசு தேவ' -இந்த ஸ்லோகம் யாருக்கானது... இதன் பொருள் என்ன?

- பி.வி.வி. ராவ், ஈரோடு-1.

வாயுதேவனை பரம்பொருளாக பாவித்து, பக்தி செலுத்தும் அன்பர்கள் அநேகம். குறிப்பாக மத்வ சம்பிரதாயத்தைப் பின்பற்றுபவர்கள், வாயுதேவனை வழிபடுவார்கள். உயிரினங்களுக்கு உயிர் வாயுதேவன். அவனை 'முக்ய ப்ராணன்' - என்று போற்றுவர். 'மாதர்மே மாதரிச்வன்' என்கிற செய்யுள் அவனது புகழ் பாடுகிறது. 'மாதரிச்வா' என்பது அவன் பெயர்.

இந்த ஸ்லோகத்தின் பொருள்: 'என் தாய் நீ. உன்னால் அன்றோ நான் தோன்றினேன். என் தந்தை நீ; ஒப்பில்லா என் குரு நீ. எனது விருப்பங்களை ஈடேற்றும், நெருக்கமுள்ள உடன்பிறப்பு நீ. உலகில் இருக்கும் அத்தனை பொருள்களும் உனது உடைமை. நீ இல்லாவிட்டால், அத்தனை ஜீவராசிகளும் படுத்துவிடும். எல்லோரின் உடலிலும் ஊடுருவி விளங்குகிறாய். நீ இல்லையேல் அது உயிரற்றதாகி விடும். உனக்கு மூப்பு இல்லை. என்றும் இளமையில் மிளிர்பவன். பிறப்பு- இறப்பு, பிணி- ஆகியவற்றைச் சீரணிப்பவன் நீ. வேதப் பொருளான கடவுளிடம் எனக்கு பக்தியை உண்டு பண்ணு. எல்லாம் அறிந்த உன்னிடமும் அசையாத பக்தியை நிலைநிறுத்து.'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒருவனிடம் எப்படிப்பட்ட பக்தி இருக்க வேண்டும் என்பதை நினைவு கூர்கிறது இந்த ஸ்லோகம். மேலும் எதிர்பார்ப்பில்லாத, காரணமில்லாத, அழுத்தமான, உண்மையான, அசையாத, நல்ல குணங்கள் நிரம்பி வழிவதால் என்றும் அழியாத பக்தி வேண்டும். அதுவும் இப்போதே வேண்டும் என்றும் வாயு பகவானிடத்தில் பக்தியை வேண்டுகிறது.

தெய்வப் படங்கள் உள்ள பழைய திருமணப் பத்திரிகைகளை சிலர், குப்பைத் தொட்டிகளில் போடுகிறார்கள். இது அபசாரம் இல்லையா?

- ஏ.பி. கலாநிதி, திருப்பாலைத்துறை.

பண்டைய திருமணங்களில் 'அழைப்பு' நேரடியாக இருக்கும். குங்குமம் மற்றும் அக்ஷதையைக் கையிலேந்தி நேரடியாக அழைப்பார்கள். பழம்- பாக்கு- வெற்றிலை- புஷ்பம் ஆகியவற்றைக் கையிலேந்தி திருமண அழைப்பு நிகழும். தூரத்திலிருக்கும்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உறவினர்களை கடிதாசில் கைப்பட அழைப்பிதழ் தயாரித்து தபாலில் அனுப்புவார்கள். அச்சடித்த அழைப்பிதழ்கள் பிற்பாடு அறிமுகமானது. அது வளர்ந்து கடவுள் படமும் அதில் இடம் பெற்றது. கடவுளுக்கு அதில் இடமளித்தது நாம்தான். அழைப்பிதழில் ஆடம்பரம் நுழைந்து அன்பையும், பண்பையும் அகற்றி விட்டது.

தபால்காரன் அழைப்பிதழ் கொடுத்தால் போதும் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். 'நேரில் வர இயலாததால் இந்த அழைப்பை நேரில் வந்து அழைத்த மாதிரி எண்ணிக் கொண்டு திருமணத்துக்கு தாங்கள் வர வேண்டும்' என்று மற்றுமோர் அழைப்பையும் சேர்த்து அனுப்ப ஆரம்பித்து விட்டோம். திருமண அழைப்பிதழைக் குப்பையில் போடுவதைத் தடுத்து நிறுத்த இயலாது. கடைசியில் குப்பையில் போடும் பொருளில் கடவுள் படத்தைச் சேர்த்தவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். தவறான நடைமுறையை அறிமுகம் செய்தார்கள். விளைவு, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானத்தை ஏளனம் செய்கிறது. தங்களது மன உறுத்தல் தேவையற்றது. நமது கட்டுப்பாட்டுக்கு உட்படாத விஷயங்களில் தென்படும் விபரீதங்களைப் பார்த்து மனம் வருந்துவது தேவையற்றது.

அமாவாசை மற்றும் பௌர்ணமி அன்று பித்ருக்களை வழிபடும் முறையை, என் முன்னோர் பின்பற்றியதாகத் தெரியவில்லை. கணவர் மற்றும் பிள்ளைகளை இழந்து நிற்கும் ஓர் அபலை நான். அமாவாசை அன்று அவர்களை வழிபடலாமா? வழிபடும் முறையை விளக்கவும்!

- நிர்மலா தேவி, பெங்களூர்.

முன்னோர்கள், குறித்த காலத்தில் பித்ருக்களை வழிபடவில்லை என்பதால், அதையே நாமும் பின்பற்றுவோம் என்பது சரியல்ல. 'என் தந்தை என்னைச் சரியாக கவனிக்கவில்லை. பிறர் உதவியால் நான் வளர்ந்தேன். ஆகையால், என் மகனைக் கவனிக்க மாட்டேன் அல்லது கவனிக்க வேண்டிய அவசியமில்லை' என்று சொல்வது பொருந்தாது.

அவர்கள் பித்ருக்களை வழிபடாமல் இருக்க என்ன காரணம் என்று தங்களுக்குத் தெரியாது. ஏழ்மையா, அவநம்பிக்கையா, அறியாமையா என்பதும் தெரியாது. பித்ருக்களை வழிபட வேண்டும் என்பது பொது விதி. அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. ஆகையால், தாங்கள் பித்ருக்களை வழிபடலாம். ஆடி அமாவாசை அன்றும், தை அமாவாசை அன்றும், கணவன் இறந்த அன்றும் பித்ருக்களை வழிபடுங்கள். நோய் நொடியின்றி மீதமிருக்கும் ஆயுளைத் தாண்ட அது பயன்படும். மனோபலம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வளர்ந்து வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படும். எல்லாரும் என்னிடமிருந்து பிரிந்து விட்டார்கள் என்று வருத்தத்தில் மூழ்காதீர்கள். அவர்களது பிரிவு இயற்கையின் செயல். அதை வெல்ல நம்மால் இயலாது. தனிக் கட்டையானாலும் தகுதி குறையாது. தனிப்பட்ட தனது வாழ்க்கையை துயரத்தால் மாசுபடுத்தக் கூடாது. எல்லாவிதக் கடமைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.

பெண்கள், 'விஷ்ணு சஹஸ்ர நாமம்' சொல்லக் கூடாது என்று சிலர் கூறுகிறார்கள். சமீபத்தில் ஸ்ரீ தேசிகர் ஸ்லோகங்கள் சொல்லித் தரும் பெண்மணி ஒருவர், 'விஷ்ணு சஹஸ்ர நாமம் சொன்னால், கர்ப்பப்பை சம்பந்தமான பிரச்னைகள் ஏற்படும்' என்றார். இது உண்மையா?

பெண்கள் விஷ்ணு சஹஸ்ர நாமத்தை உரக்கச் சொல்லாமல், மனசுக்குள் சொல்லலாமா?

- ஜெயலக்ஷ்மி.

விஷ்ணு சஹஸ்ர நாமத்தை ஒருவர் படிக்க, பெண்மணிகள் கேட்டு, அதில் லயிப்பது சிறந்தது. காதால் கேட்கும்போது நம் மனம் அதன் பெருமையை அசை போட்டு ரசிக்கும். 'இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' - என்ற வரிகள் தங்களுக்கு ஞாபகம் இருக்கும். கடவுள் பெயர் காதில் விழும்போது தேனாக இனிக்கும். படிக்கும்போது அவ்வளவு இனிமையை எட்ட முடியாது.

ஆகையால், ஒருவர் படித்து, பெண்கள் குழாம் கேட்டு மகிழ்வது முதல் தரம். படிக்க ஆள் இல்லாத சூழலில் பெண்மணிகளே படித்து, மற்ற பெண்மணிகளுக்கு கேட்கச் செய்யலாம். தனிமையில் நாமே படித்தும் மகிழலாம். வியாசர் பெண்களுக்கென்றே அதை அறிமுகம் செய்திருக்கிறார். அதைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் அவர்களுக்குத்தான் முன்னுரிமை. பெண்களுக்காகவே இயற்றியிருக்கும் இந்த ஸ்தோத்திரத்தை, அவர்கள் படிக்க அனுமதிக்காவிட்டால், வியாசரின் படைப்பு பொருளற்றுப் போகும். 'விஷ்ணு சஹஸ்ர நாமத்தை கேட்கலாம்' எனும்போது படிக்கவும் செய்யலாம்; தவறில்லை.

குலசேகரப் பெருமாள் இயற்றிய முகுந்த மாலையில், படிக்கவும் சொல்கிறார், கேட்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். 'ஏ... எனது நாவே! கேசவனைச் சொல், என் இரண்டு காதுகளும் அச்சுதனின் கதையைக் கேட்க வேண்டும்' *(ஜிஹ்வே கீர்த்தய கேசவம்... ச்ரோத்ர த்வய த்வம் ச்ருணு)*. நம் நாக்கும், காதும் அவனது பெயரைச் சொல்லியும் கேட்டும், அவனிடம் பக்தி செலுத்த வேண்டும். பேச- கேட்கத் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் விஷ்ணு சஹஸ்ர நாமத்தைப் படிக்கலாம்; கேட்கலாம். பக்தி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செலுத்தும் முறைகள் ஒன்பது. அவற்றுள் ஒன்று, கேட்பது. படிப்பது மற்றொரு முறை. பாகவதத்தைக் கேட்டு துந்துகாரி எனும் பக்தன் முழுமை பெற்றான். நாராயணா என்று சொல்லி, பிரகலாதன் பெரும்பேறு பெற்றான். படித்தவர்களும் சிந்தனையாளர்களும் அடையும் உயர்ந்த பெருமையையும் பேரின்பத்தையும், படிக்கத் தெரிந்த பாமரர்களும் அடைவதற்கான பக்தி நெறியை உலகுக்கு அளித்தார் வியாசர்.

எல்லோருக்கும் பக்தி செலுத்த உரிமையுண்டு. அதில் பெண்ணினமும் அடங்கும். பிணி அகல நாராயண பட்டத்ரி விஷ்ணுவைப் பாடினார். அப்படியிருக்க விஷ்ணு சஹஸ்ர நாமம் பாடினால், பிணி வர வாய்ப்பு உண்டு என்ற கூற்று சரியில்லை. விஷ்ணு சஹஸ்ர நாமம் படித்தால் பிணி அகலும் என்று விஷ்ணு சஹஸ்ரநாம பலனில் சொல்லப்பட்டிருக்கிறது *(ரோகார்த்தோ முச்யதே ரோகாத்)*. ஆகவே, தாங்கள் இஷ்டப்படி விஷ்ணு சஹஸ்ர நாமத்தைப் படியுங்கள்; கேளுங்கள். அதை இயற்றியவரே படி என்கிறார். அதை இயற்றாதவர் சொல்வதையெல்லாம் கேட்காதீர்கள். எல்லாரும் கேட்கும்படியாக உரக்கச் சொல்லுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆராதித்த சாமி படங்களை மரத்தில் மாட்டலாமா?

அமிர்த யோகம்- சித்த யோகம்- மரண யோகம் என்கிறார்களே... அவற்றால் என்ன விளைவு?

- துரை. இராமகிருட்டிணன், எரகுடி.

ஏழு வாரங்கள், பதினைந்து திதிகள், இருபத்தேழு நட்சத்திரங்கள், இருபத்தேழு யோகங்கள், பதினோரு கரணங்கள் - இவை ஐந்துக்கும் பஞ்சாங்கம் என்று பெயர். காலத்தை அளக்கும் கருவிகள் இவை. சூரியன், சந்திரன், நட்சத்திரம் என்ற மூன்று ஒளிப் பிழம்புகளிலிருந்து இந்த ஐந்தும் உருவாயின.

சூரியன் நகர்வதை வைத்து வாரங்கள் தோன்றின. கதிரவனின் கதிர்கள் சந்திரனில் விழும் அளவை வைத்து திதிகள் உருவாயின. திதியின் ஒரு பகுதி ஒரு கரணம், மறு பகுதி மற்றொரு கரணம். நட்சத்திரத்தின் சேர்க்கை, யோகம். இந்த ஐந்தின் சாதகமான கூட்டு, நமது அன்றாட அலுவல்களுக்கு நல்ல நேரத்தை சுட்டிக் காட்டுகிறது. ஜோதிடத்துக்கு, 'கால விதான சாஸ்திரம்' என்ற பெயர் உண்டு. அதாவது நமது செயல்பாடுகளுக்கு உகந்த வேளையைப் பரிந்துரைக்கும் சாஸ்திரம் என்று பொருள். நல்ல நேரத்தை முடிவு செய்ய இந்த ஐந்தும் போதுமானவை.

அமிர்த யோகம், சித்த யோகம், மரண யோகம் போன்றவை குறிப்பிட்ட தேசத்தில், குறிப்பிட்ட பிரிவினர் மட்டும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கடைப்பிடிக்கும் சம்பிரதாயம். அதை தேசாசாரம் என்பார்கள். பொதுவான சாஸ்திரத்தை விட்டுக் கொடுக்காமல், தேச சம்பிரதாயத்தையும் சேர்த்துக் கொள்ளும்படி அந்தந்த தேசத்தில் இருப்பவர்கள் பரிந்துரைப்பார்கள். தமிழ்நாட்டில் இந்த யோகங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள். மற்றவர்களுக்கு இது அவர்களது தேசாசாரமாக இல்லாததால், புறக்கணிப்பார்கள். மற்றவர்கள் புறக்கணிப்பதால், அவர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படுவதில்லை. குறிப்பிட்டவர் ஏற்றுக்கொள்வதால் எந்தச் சிறப்பும் ஏற்படுவதில்லை. தேசாசாரத்தைக் கடைப்பிடித்தோம் என்ற மன நிறைவு இருக்கும்; அவ்வளவுதான்.

நாம் தைப்பொங்கல் கொண்டாடுகிறோம். மற்றவர்கள் அதை வேறுவிதமாகக் கொண்டாடுவார்கள். கேரளத்தில் விஷுக்கணி, வேறு சிலருக்கு வருஷப் பிறப்பு, மற்றும் சிலருக்கு மேஷ சங்கிரமணம் - இப்படியும் மாறுதல் உண்டு. இந்த மூன்றையும் வைத்து நல்ல நேரத்தின் முடிவை நடைமுறைப் படுத்தக் கூடாது.

சனி- செவ்வாய் போன்ற நாட்கள், கேட்டை- பூராடம் போன்ற நட்சத்திரங்கள், அஷ்டமி- நவமி போன்ற திதிகள் ஆகியவை சுபகாரியங்களில் விலக்கப்படும். ஆனால், அவற்றின் சேர்க்கையில் சித்த யோகமும், அமிர்த யோகமும் தென்படும். அதை வைத்து அவற்றை நாம் நல்ல நாளாக ஏற்றுக்கொள்வதில்லை. சாஸ்திரம் சொல்லும் நல்ல நாளில் தேசாசாரமான சித்த- அமிர்த யோகங்களும் தென்பட்டால், சிறப்பு. இல்லையென்றாலும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அந்த நாளை விலக்கவேண்டிய அவசியம் இல்லை. இந்த யோகங்கள் முக்கியம் என்றால், பஞ்சாங்கத்தில் இருக்கும் தகவல்களைக் கண்டுகொள்ளாமல் யோகத்தை மட்டும் வைத்து நிர்ணயிக்கலாமே. அப்படிச் செய்யவும் நமக்குத் துணிவு இல்லை. இரண்டும் வேண்டும். இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிராகத் தென்படும் இடத்தில் பஞ்சாங்கத்தின் பரிந்துரைக்கு முன்னுரிமை. தேசாசாரமான யோகங்களைப் பற்றிக் கவலைப்படக் கூடாது.

பல அலுவல்களில் ஈடுபடும் இன்றைய சமுதாயத்துக்கு நல்ல நேரம் கிடைப்பது அரிது. அமிர்த- சித்த யோகங்களுக்காகக் காத்திருந்து, பஞ்சாங்கம் சொல்லும் நல்ல நேரத்தைப் புறக்கணித்து, செயற்கையான பரபரப்பை ஏற்படுத்துவது சரியல்ல. அவசரமான காரியங்களை யோகப் பிசகு என்று தள்ளிப்போட்டு, புதுப்புது இடையூறுகளுக்கு அவகாசம் அளிக்காதீர்கள். நிறைய கால அவகாசமும், காலம் கடந்து செய்தாலும், இழப்பு இல்லாததுமான விஷயங்களுக்கு இந்த மூன்று யோகங்களுக்கும் முன்னுரிமை அளிக்கலாம். மற்றவற்றில் இதை வைத்துத் தள்ளிப்போடக் கூடாது.

கடமையைச் செய்வதற்கு காலம் பார்க்கவேண்டாம். காலம் வரும்வரை காத்திருந்து, கடமைகளைத் தள்ளிப்போடக் கூடாது. காலத்துக்காகக் கடமை அல்ல என்பது உண்மை. 'வேலையில் உடனே வந்து சேரவேண்டும்' என்று அரசாங்க உத்தரவு வருகிறது. அப்போது நாள் நட்சத்திரம் பார்க்காமல் உடனே செல்ல

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லும். 'திடீர்ப் பயணத்தால் ஏற்படும் விளைவுகளை அகற்றிவிடு!' என்று கடவுளை வேண்டி, பயணத்தைத் தொடரவைக்கும் சாஸ்திரம். இப்போது பஞ்சாங்க நல்ல நாளும், சம்பிரதாய சித்த யோகமும் புறக்கணிக்கப்படும்.

'ஞாயிறு மாலை ஐந்து மணிக்குப் பரிசளிப்பு விழா, அதில் கலந்துகொண்டு, பரிசைப் பெற்றுக்கொண்டு பெருமையை அளியுங்கள்' - என்று அரசு தங்களை அழைக்கிறது. 'ராகு காலத்தில் எப்படி பரிசு பெறுவது?' என்று தயங்கக்கூடாது. அதைப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஞாயிறு ராகு காலத்தில், தொடர்வண்டி கிளம்புகிறது. அந்த வேளையில் எப்படி பயணம் செய்வது என்று பயணத்தைத் தள்ளிப்போடக் கூடாது என்று சாஸ்திரம் சொல்லும். 'தந்தையின் நிலை கவலைக்கிடம் உடன் வரவும்' என்று தகவல் வருகிறது. அப்போது நேரம் பார்க்காமல் கிளம்பவேண்டும். சந்திராஷ்டமம், மரண யோகம், அஷ்டமி, நவமி என்று சொல்லித் தள்ளிப்போடக் கூடாது. இவை எல்லாம் கடமைகள். கடமை ஆற்ற வேண்டிய நேரத்தில் செயல்பட வேண்டும். இந்த நேரம்- காலம் எல்லாம் அதற்கு விதிவிலக்கு. தாய்- தந்தையரின் கவனிப்பு, நமது காலைக் கடன்கள், குடும்பப் பராமரிப்பு, அரசாங்க உத்தரவு, அலுவலக வேலைகள், கடவுள் வழிபாடு, கொடை வழங்குதல், பிறருக்கு உதவி செய்தல் - இவை எல்லாம் கடமையில் அடங்கும். இவற்றுக்குக் கால- நேரம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

விஜயதசமி அன்று வித்யாரம்பம். குழந்தைக்கு எழுத்தறிவை அன்று ஆரம்பிக்கிறோம். அன்று மரண யோகம் வரும். நாம் கண்டுகொள்வதில்லை. திருமண முகூர்த்தத்தின் முதல் நாள் சனி- செவ்வாய் ஆகவும், பிரதமை- நவமியாகவும், கேட்டை- பூராடம் போன்ற நட்சத்திரங்களாகவும், மரண யோகமாகவும் அமைவதுண்டு. முதல் நாள் முன்னிரவு நிச்சயதாம்பூலம், மாப்பிள்ளை அழைப்பு, புது ஆடை அணிதல், புது அலங்காரம் செய்தல் போன்ற அத்தனையும் நிகழும். யோகப் பிசகு நம்மை உறுத்துவதில்லை. கேட்டை நட்சத்திரம்- செவ்வாய் கிழமை யோகப் பிசகும் சேர்ந்து இருக்கும். அன்று அறுபதாம் கல்யாணம் நடைபெறும். தாலி கட்டும் விழாவும் இருக்கும். அங்கு யோகம் கவனிக்கப்படுவதில்லை.

தெய்வ வழிபாட்டுக்கு உகந்த ஜன்மாஷ்டமி, ராமநவமி போன்றவற்றில் யோகம் பார்ப்பதில்லை. புது வருஷப் பிறப்பு, திருமண நாள் ஆகியவற்றிலும் யோகம் பார்ப்பதில்லை. இவற்றில் யோகத்தைத் தவிர, மற்றவற்றுக்கு முதலிடம் அளித்துச் செயல்படும் மனப்பாங்கு பளிச்சிடுகிறது. முகூர்த்தங்களிலும் பஞ்சாங்கத்தின் தகவலுக்கு முன்னுரிமை அளிக்கும் மனப்பாங்கு நம்மில் வளரவேண்டும். மரண யோகம் என்பதைக் கண்டவுடன்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பஞ்சாங்கம் சொல்லும் நல்ல வேளையைப் புறக்கணிக்கும் பழக்கம் நம்மில் வேரூன்றி விட்டது. பாமரர்கள் மத்தியில் இந்த யோகம் பிரபலமானதால், எளிதில் இந்த யோகம் புரிவதால், மரணம் என்ற சொல்லைக் கேட்டதும், மனம் சுருங்கிவிடுவதால், அந்த யோகத்துக்கு தமிழ்நாட்டில் யோகம் வந்துவிட்டது. தர்மசாஸ்திரம் எதையும் காரண காரியத்தோடுதான் பார்க்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கிழமையும் நட்சத்திரமும் சேரும்போது இந்த மூன்று யோகங்கள் தோன்றுகின்றன. சூரியன் தோன்றும் வேளையில் இருக்கும் ஹோரையை வைத்து கிழமை நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக திங்கட்கிழமையில் சூரியன் சந்திர ஹோரையில் தோன்றுகிறார். பிறகு படிப்படியாக ஹோரை மாறினாலும், அன்று முழுவதும் திங்கள் கிழமைதான். சூரியன் உதிக்கும்போது நட்சத்திரமும் இருக்க வேண்டும். அப்போது இரண்டுக்கும் சேர்க்கை. அதாவது யோகம் ஏற்படுகிறது. சூரியன் உதிப்பதற்கு முன்பு அந்த ஹோரை இருக்காது. சூரியன் உதித்து பல மணி நேரம் சென்ற பிறகு அந்தக் கிழமையில் நட்சத்திரம் சேர்ந்தால் அப்போது யோகம் மாறி விடும். ஆனால், அந்த நட்சத்திரத்துக்கு உதயத்தோடு தொடர்பு இல்லாததால், அதை உண்மையான யோகமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

உதயத்தோடு எந்த நட்சத்திரம் சேருகிறதோ, அதற்குத்தான் யோகத்தின் தகுதி உண்டு என்பது சிலரது கருத்து. அதற்கு அத்தாட்சியாக ராத்திரியில் யோக பலன் கிடையாது. ராத்ரௌ வார பலம் நாஸ்தி என்ற ஜோதிட விளக்கத்தை எடுத்துக்காட்டுவது உண்டு. பஞ்சாங்கங்களில் ஒருநாளில் இரு யோகங்கள் தென்படுகின்றன. சில நாட்களில் மூன்று யோகங்களை அபூர்வமாகப் போடுவதும் உண்டு. திதி - வாரம் சேர்ந்தாலும், யோகம் மாறுபடும். சில பஞ்சாங்கங்களில் இந்த மாற்றத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். தக்த யோகம் போன்றவை திதி வாரச் சேர்க்கையில் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் திதி- வார யோகத்துக்கு முன்னுரிமை இல்லை. சிலவற்றை ஏற்பது, சிலவற்றை துறப்பது என்பதற்கு அடிப்படை நாட்டு நடப்புதான். அவற்றைக் கடைப்பிடித்து பழக்கப்பட்ட மனம், அதைப் புறக்கணிக்க விரும்பாது. பின்விளைவு விபரீதமாக அமைந்துவிடுமோ என்ற பீதி, அதைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கிறது. மனோதிடம் இருப்பவர்கள் சாஸ்திரத்துக்கு முதலிடம் கொடுக்கலாம். மனதில் நெருடல் இருக்காது. பழக்கப்பட்டவர்கள்- பலவீனமான மனம் படைத்தவர்கள் இந்த மூன்றையும் கடைப்பிடிப்பது நல்லது. மனம் நிறைவு இல்லாமல் செயல்பட்டால், செய்யும் காரியத்தில் நிறைவைப் பாதிக்கும். நமக்கு காரியத்தின் நிறைவு முக்கியம்; யோகமல்ல.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நம்பிக்கையோடு பஞ்சாங்கத்தைப் பின்பற்றுபவர்கள் படும் பாடு சொல்ல இயலாது. அப்படியொரு துரதிருஷ்டம் தமிழ்நாட்டுக்கு இருக்கிறது. இந்த மூன்று யோகங்களைச் சரியாகக் காட்ட யாரும் துணியவில்லை. ஒரு பஞ்சாங்கத்தில் சித்த யோகம் இருக்கும். மற்றொன்றில் மரண யோகம் தென்படும். மாதம் 31 நாள் காட்டும் ஒரு பஞ்சாங்கம். மற்றொன்று முப்பதாகக் காட்டும். கரிநாள், பஞ்சாங்கத்துக்கு பஞ்சாங்கம் மாறுபடும். 'வாக்கியம்' சிறந்தது என்று ஒரு சாரர். 'த்ருக்கு' சிறந்தது என்று மற்றொரு சாரார். திண்டாடுவது பொதுஜனம். யோகத்தால் கிடைக்கும் பெருமையை இழக்க வேண்டாம். முடிந்த அளவுக்கு அதையும் சேர்த்துக் கொள்ளப் பாருங்கள். முடியவில்லை என்றால் விட்டு விடலாம். தவறல்ல.

வீட்டில் கண்ணாடி போட்டு, வழிபடப்பட்ட கடவுள் படங்களைத் திடீரென்று கோயில் உட்பிராகாரச் சுவர் ஓரமாகவும், அரச மரத்தடி விநாயகரைச் சுற்றியும் கொண்டு வந்து வைக்கிறார்களே! ஆராதித்த படங்களை இப்படி வைப்பது சரியா?

- ஐ.எஸ். சீனிவாசன், சென்னை-82.

ஆலயங்களில் மூலவர் என்றும், உற்சவர் என்றும், கடவுளின் இரண்டு உருவங்கள் இருக்கும். மூலவரை நகர்த்தக் கூடாது. அதை 'அசரம்' என்று ஆகமம் குறிப்பிடும். உற்சவர் நகரக் கூடியவர். அதற்கு 'சரம்' என்று பெயர். சாமி படங்களை எங்கும் எடுத்துச் செல்லலாம். ஓர் இடத்தில் வைக்கவும் செய்யலாம். வீட்டில் நமது சௌகரியப்படி வழிபட சித்திரமாக கடவுள்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உருவத்தை வரைந்திருக்கிறோம். கடுதாசியில் தென்படும் உருவம். கடுதாசி அழியக் கூடியது. அதோடு சித்திரமும் அழிந்துவிடும். அது தெரிந்துதான் கண்ணாடி சட்டத்துக்குள் வைக்கிறோம். கண்ணாடியில் சந்தனம்- குங்குமம் வைக்கிறோம். அதன் உருவத்தில் வைப்பதில்லை. எதிரில் படம் வாயிலாக உருவத்தைப் பார்த்து, அதன் வாயிலாக அருவமான கடவுளை மனதில் வரவழைக்க உதவுகிறது படம். படம் களையிழந்தால், அதை மாற்றலாம். சிலையில் நிலைத்திருக்கும் சாந்நித்யம் அங்கு இருக்காது. எனவே, படங்களைக் களைவதில் தவறில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயில் பிராகாரங்களிலும், அரச மரத்தடியிலும், விநாயகரைச் சுற்றிலும் வைப்பது தவறுதான். கண்ணாடியை வைத்துக்கொண்டு படங்களை மட்டும் ஆறுகள், குளம் குட்டைகளில் சேர்ப்பது நல்லது. குப்பைத் தொட்டியில் போடாமல் பரிசுத்தமான இடத்தில் வைத்தது அவர்களின் நல்ல எண்ணம். பழைய தெய்வப் படங்களை என்ன செய்யவேண்டும் என்று தெரியாததால், இப்படி பொது இடத்தில்- அதுவும் பலபேர் வந்து போகும் இடத்தில் வைத்து விடுகிறார்கள். தேவைப்படுபவர்கள் எடுத்துச் செல்லத் தோதாக வைத்திருப்பது நல்லது. படம் வாங்க வசதி இல்லாதவர்கள், அதைப் பயன்படுத்த இயலும். அப்படியும் ஒரு நல்லெண்ணம் அதற்கு உண்டு. என்ன இருந்தாலும் பொது இடத்தில் அலட்சியமாகப் போடுவது சரியல்ல. அதைத் தவிர்க்க வேண்டும். அந்த இடங்களைப் படங்களால் நிரப்பி வழிபடுபவர்களுக்கு இடையூறு விளைவிப்பது தவறு. புதுப்புது படங்களின் வரவு, பழைய படங்களை அகற்றக் காரணமாகிறது. இட நெருக்கடியும், படத்தைக் களையக் காரணமாகும். ஒரு படத்தை பூஜையறையில் வைத்து, மற்ற புது வரவுகளை சுவரில் மாட்டுவது நல்லது. கிராமங்களில் இருக்கும் வீடுகளில் சுவரில் மாட்டி வைத்திருப்பார்கள். புது வரவுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

நமது முன்னோர்களை மனதில் இருத்தி வழிபட்ட காலம் உண்டு. தற்போது அவர்களது வரைபடங்கள் பூஜை அறையை அலங்கரிக்கின்றன. மனதில் இருக்க வேண்டிய முன்னோரைப் படத்தில் வைத்து, மனதிலிருந்து அகற்றிவிட்டது விஞ்ஞானம். மெய்ஞ்ஞானத்துக்கு ஊக்கமளிக்கும் விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்ளலாம். அறுவடையானதும் நெல்லை எடுத்துக்கொண்டு வைக்கோலைக் களைந்து விடுவோம். தகவலை வாங்கிக்கொண்டு புத்தகத்தை மறந்து விடுவோம். கட்டடம் கட்டி முடித்ததும் சாரத்தை அகற்றி விடுவோம். அதுபோல் கடவுளின் உருவத்தை படத்தில் பார்த்து மனதில் வாங்கிக்கொண்டு வழிபட வேண்டும். பல அலுவல்களில் சிக்கித் தவிக்கும் இன்றைய மனிதனுக்கு மனதில் கடவுளை நிரந்தரமாக வைக்க இயலாததால், பூஜையறையிலாவது நிரந்தரமாக அது இருக்கட்டுமே என்ற எண்ணம்தான் படத்தை அங்கு வைக்கும் நோக்கம். நிச்சயமாக பூஜை அறையில் படம் வேண்டும். அதற்கும் ஓர் எல்லை வேண்டும். பூஜையில் சாமி படங்களை நிரப்பி, மின் விளக்குகளாலும், மாலைகளாலும் அலங்கரிப்பது அவசியம். ஆனால், அதுவே வழிபாடு ஆகாது. அதன் முன் இருந்து மனதில் அவரை நினைத்து தியானம்- ஜபம்- அபிஷேகம்- அர்ச்சனை- தீபாராதனை ஆகியவற்றை அளித்து வணங்க வேண்டும். அந்த எண்ணத்தை கடவுளது அலங்காரம் தூண்டிவிடும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வடக்குத் திசையின் சிறப்பு என்ன?

தெரிந்தே தவறு செய்துவிட்டு, அதற்குப் பரிகாரம் தேடுவதால் பயன் உண்டா?

- கே.எல். கந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்.

தவறு செய்தவன் திருந்த வேண்டும். திரும்பவும் தவறு இழைக்காமல் செயல்பட வேண்டும் என்பதுதான் பரிகாரத்தின் நோக்கம். ஒவ்வொரு முறையும் தெரிந்தே தவறு செய்துவிட்டு, அதற்குப் பரிகாரம் செய்வதில் பலன் இல்லை!

'தவறு செய்வதால் பாதகமில்லை! உரிய பரிகாரம் செய்து விடலாம்!' என்ற ஒருவனது மனோபாவம், பரிகாரம் செய்யும் நோக்கத்தை அவனது சிந்தனையில் இருந்து அகற்றிவிடும். இதனால் அவன் செய்யும் பரிகாரத்துக்கு பலன் இல்லாமல் போகிறது. பள்ளிக்குத் தாமதமாக வந்தால், அபராதம் கட்ட வேண்டும் என்பது விதிமுறை. பள்ளிக்கு தினமும் தாமதமாக வரும் ஒருவன், அபராதம் பற்றிக் கவலைப்படுவதில்லை. அபராதம் செலுத்தவே அவன் தினமும் தாமதமாக வருகிறான்! அவன் மனம் தாமதமாகப் போக வேண்டும் என்பதில் லயித்து இருக்கும். அவன் தேர்வில் தோல்வியைச் சந்திப்பான்; பரிகாரம் பயனளிக்காது!

கடவுளுக்கு உணவைப் படைத்துவிட்டு, நாம் அதை ஏற்க வேண்டும் என்பது நடைமுறை. கடவுளுக்கு நிவேதனம் அளிக்காமல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நாம் உண்ணுவது அபசாரம் என்று சாஸ்திரம் கூறும். அது மட்டுமா... ஓர் அதிதிக்காவது- எதிர்பாராமல் வீடு தேடிவரும் பெரியோர்களுக்கு அன்னம் அளித்த பின்பே நாம் உண்ண வேண்டும் என்றும் தர்மசாஸ்திரம் வற்புறுத்தும். அது பாரதப் பண்பு. அறம் என்று புராணம் சொல்லும். இதைச் செயல்படுத்தும் வேளையில், சில தவறுகள் நிகழலாம். அது நமக்கும் தெரியும். அந்தத் தவறுகளை நிவர்த்திக்கப் பரிகாரமும் சொல்லும் தர்ம சாஸ்திரம். அந்தப் பரிகாரத்துக்கு பயன் உண்டு.

பானையில் உலைநீர் கொதிக்கும். அரிசியைக் களைந்து நீரில் சேர்ப்பார்கள். வெந்த பிறகு கஞ்சி வடிப்பார்கள். அப்போது சோற்றுப் பானையை மாற்றிவைக்கும் வேளையில், அதில் சிக்கி தரையில் இருக்கும் எறும்பு போன்ற உயிரினங்கள் அழிவதுண்டு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அதேபோல் சாதம் வடிக்கும் வேளையில், அடுப்பில் விறகு எரிக்கும்போது, கத்தரிக்காய் போன்ற காய்களை நறுக்கும்போது, அம்மி அரைக்கும் வேளையில் முறம், துடைப்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது நம்மையும் அறியாமல் கண்ணுக்குப் புலப்படாத சில உயிரினங்கள் அழிய வாய்ப்பு உண்டு. இதை தவிர்க்க முடியாமல் போவதால், அதற்குப் பரிகாரம் சொல்கிறது தர்மசாஸ்திரம். அதாவது, பறவை இனத்துக்குப் பிரதிநிதியாகக் காக்கைக்கும், விலங்கினத்துக்கு பிரதிநிதியாக நாய்க்கும், மனித இனத்துக்கு பிரதிநிதியாக அதிதிக்கும், தேவ இனத்துக்கு பிரதிநிதியாக தேவதைகளுக்கும், அன்னம் அளிக்க வேண்டும். இதை, 'வைச்வ தேவம், அதிதி பூஜனம்' என்று தர்மசாஸ்திரம் குறிப்பிடும்.

கணவன்- மனைவி இருவரும் சேர்ந்துதான் கயாவில் சிராத்தம் செய்யவேண்டுமா? முடியாத சந்தர்ப்பத்தில் கணவன் மட்டும் தனியே கயா சிராத்தம் செய்தால், தவறு இல்லையே?

- கே.வி. நாகராஜ சர்மா, சென்னை-39.

திருமணமானால் மனைவியோடு சேர்ந்துதான் சிராத்தம் செய்யவேண்டும். ஔபாஸனம்- அதாவது காலையிலும் மாலையிலும் வழிபடும் தெய்வம் அக்னி. இருவரும் சேர்ந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஔபாஸனாக்னியை உருவாக்கினர். அந்த அக்னியில் சிராத்தம் செய்ய வேண்டும். அவளோடு சேர்ந்துதான் ஔபாஸனம் செய்ய முடியும். அதில் அவளுக்குச் சம உரிமையுண்டு. அவள் இறந்தால், அவளோடு ஔபாஸனாக்னியும் சென்றுவிடும். இருவரும் சேர்ந்துதான் கயா சிராத்தம் செய்ய இயலும்.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் எது என்பதைத் தாங்கள் சுட்டிக் காட்டவில்லை. பல வருஷங்களாக 'கோமா'வில் இருக்கிறாள் மனைவி... மனைவி காணாமல் போய்விட்டாள்; தேடியும் கிடைக்கவில்லை... திருமணத்துக்குப் பிறகு கருத்து வேறுபாடுகளால் பிரிந்து போய்விட்டாள்; மன நோயால் பாதிக்கப்பட்டு நடைப் பிணமாக இருப்பவள்... தன்னைப் பிரிந்து மாற்றானுடன் வாழ்பவள்... வெளிநாடு சென்றாள் மனைவி; எதிர்பாராமல் போர் மூண்டது, அந்த நாட்டுடன் தொடர்பு அற்றுவிட்டது, அவள் உயிருடன் இருக்கிறாளா இல்லையா என்ற தகவல் தெரியாது...

- இப்படி நமது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களால் மனைவியின் வரவு தடுக்கப்பட்டால், அவள் இல்லாமல் கயா சிராத்தம் செய்யலாம். மனைவி வேலை பார்க்கிறாள்... ஆபீஸில் லீவு கிடைக்கவில்லை... மனைவியுடன் பிணக்கம்... கோபத்தில் வரமாட்டேன் என்கிறாள்; அவளை சமாதானப்படுத்தாமல் சந்தடி சாக்கில் அவளை ஓரம் கட்டுவது... மனைவி வெளிநாடு சென்றாள். அவள் வர ஆறு மாதம் அல்லது ஒரு வருடம்கூட ஆகலாம்... பேரக் குழந்தைகளைப் பராமரிக்கச் சென்றவள்; 'எஸ்கர்ஷன்' போல் ஊர் சுற்றப்போனவள்... அங்கு வேலை பார்ப்பவள்... உள்ளூரில் இருந்து கொண்டு உடன்பட மறுப்பவள்... இவையெல்லாம் 'தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள்' என்று சாஸ்திரம் ஒப்புக் கொள்ளாது. குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் அத்தனையும் தற்காலச் சூழலில் பண பலத்தாலும், ஆற்றலாலும் சரிக்கட்டக் கூடியவையே. நமது அதிகார வரம்புக்கு உட்படாத விஷயங்கள் மட்டுமே 'தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில்' அடங்கும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தை மனம்தான் நிர்ணயிக்கிறது. ஒரு செயலில் இறுக்கமான பிடிப்பு இருந்தால், தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் என்பது முளைக்காது!

நமது காலத்துக்குப் பிறகு மகன்கள் சிராத்தம் செய்ய மாட்டார்கள் என்று தோன்றினால், நமக்கு நாமே 'ஆத்ம பிண்டம்' செய்து கொள்ளலாம் என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். அது உண்மையா?

- ஆர். நாராயணன், சென்னை-61.

தாய்- தந்தை இல்லை. மனைவி- மக்களும் இல்லை. உற்றார்- உறவினர்களும் இல்லை. அந்தக் குலத்தில் அவன் மட்டுமே மிஞ்சி இருக்கிறான். அவனுக்கு ஈமச் சடங்குகளை யார் செய்வார்கள்? அவன் இப்போது அநாதை. அநாதைக்குக் கொள்ளி வைப்பது,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அச்வமேத வேள்விக்கு ஈடாகும். அவனது பூத உடலைப் பார்த்தவர்கள், அவனை அடக்கம் செய்யத் தகுதி பெற்றவர்கள் என்று தர்மசாஸ்திரம் கூறும் *(அனாத ப்ரேத ஸம் ஸ்காராத் அச்வமேத பலம் லபேத்)*. தாய்- தந்தை, அண்ணன் - தம்பி, உற்றார் உறவினர் - இவர்களை இழந்து, உயிர் துறந்தவர்களுக்கு இந்த தர்ப்பையோடு இணைந்த புனித நீரை உணவாக அளிக்கிறேன். *(யேஷாம் நமாதா நபிதா நப்ராதா...)* என்று அநாதையான முன்னோருக்கு தர்ப்பணம் செய்வதுண்டு.

புனித நாட்களிலும், அமாவாசை அன்றும் தர்ப்பணம் செய்பவர்கள், அநாதைகளுக்கும் சேர்த்து தர்ப்பணம் செய்கிறார்கள். எனது குலத்தில் பிறந்து, உயிர் துறந்து புதைக்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்டவர்கள் அத்தனை பேருக்கும் இந்த உணவு உருண்டையை தரையில் வைத்து, அது வழியே அவர்களைத் திருப்திப்படுத்துகிறேன் *(யே அக்னிதக்தா யே அனக்ஸதக்தா...)* என்று தன் பெற்றோரின் நினைவு நாள் ஆராதனையில், விடுபட்ட முன்னோரையும் சேர்த்துக்கொள்ள வைக்கிறது தர்மசாஸ்திரம்.

வீட்டில் இருந்து வெளியேறிய பெண்கள், காணாமல் போனவர்கள், ஈமச்சடங்குகளுக்கு இலக்காகாமல் இருந்தவர்கள் ஆகியோருக்காக இந்த உணவைத் தரையில் இறைக்கிறேன் *(அஸம்ஸ்கிருதப்ரமீதா...)* என்று அவர்களையும் சேர்த்துக்கொள்ளப் பரிந்துரைக்கிறது தர்மசாஸ்திரம். எனக்குத் தெரியாதவர்கள், எனது குலத்தைச் சார்ந்தவர்கள், இறந்த பிறகு கவனிக்கப்படாதவர்கள் ஆகியோருக்கும் தர்ப்பணம் மற்றும் நினைவு நாள் விருந்தில் இடமளிக்கச் சொல்கிறது தர்மசாஸ்திரம். பண்டைய நாட்களில் உயிர் துறக்க காசிக்குப் போவார்கள். கங்கையில் நீராடி, ஈசனை வணங்கி உயிரைத் துறக்கக் காத்திருப்பார்கள். அங்கு உயிர் பிரிந்தால் அவனுக்கு மோட்சத்தை அளிப்பான் ஈசன். கங்கை, அவர்களது கர்ம வினையை அழித்துப் புனிதப்படுத்துகிறாள் *(காச்யாம்து மரணாத்முக்தி:)*. புராணம், மறுபிறப்புக்கு அவகாசம் இருக்காது என்று சொல்லும். காசி, ராமேச்வரம் போன்ற புனித நீர்த்தடங்களில் நம் முன்னோர்கள் அத்தனை பேருக்கும் 'க்ஷேத்ர பிண்டம்' என்ற உணவு உருண்டையை அளித்து வணங்குவதுண்டு. 'மஹாளயம்' என்ற புண்ணிய நாளில், விடுபட்டுப்போன இறந்தவர்களைக் கவனிக்க 'காருணிக பித்ருக்கள்' என்ற வரிசையில் சேர்த்து உணவு அளித்து வழிபடுவதுண்டு.

பீஷ்மர் ஒரு பிரம்மச்சாரி. அவருக்கு மகன் இல்லை. ஆனால், பிறந்தவர்கள் அத்தனை பேரும் 'பீஷ்ம தர்ப்பணம்' செய்கிறார்கள். ராவணன் வாளுக்கு இரையான ஜடாயுவின் பூத உடலை சந்தித்த ராமன், அவனுக்கு ஈமச்சடங்கு செய்து கௌரவித்தான். ராவணன் இறந்த பிறகு அவனுக்கு ஈமச்சடங்கு செய்ய விபீஷணன் தயங்கினான். உயிரோடு இருக்கும் வரையில் பகையைக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கொண்டாடலாம். உயிர் பிரிந்தால் பகையும் மறைந்துவிடும் *(மரணாந்தம் வைரம்)* என்று பகையை மறந்து ராவணனுக்கு ஈமச் சடங்கு செய்யவைத்தார் ராமர்.

பங்காளிகளிடையே பகை இருக்கும். ஆனால், இறந்த பிறகு பகை மறந்து, அவருக்கு தர்ப்பணம் செய்வதுண்டு. தோன்றிய உடல், எரிந்து சாம்பல் ஆவதில் முற்றுப்பெற வேண்டும் என்று வேதம் கூறும் *(பஸ்மாந்தம் சரீரம்)*. எரியூட்டுவது சிறப்பு என்பது வேதத்தின் பரிந்துரை. நாம் எரியூட்டாமல் பிற உயிரினங்கள், பூத உடலைத் தீண்ட வழி வகுத்தால், அவர்களது வயிற்றில் இருக்கும் எரிபொருளில் எரிந்துவிடும். புதைத்தாலும் மண்ணில் இருக்கும் புழு பூச்சிகளின் வயிற்றில் இருக்கும் எரிபொருளுக்கு இரையாகி விடும். ஆகையால் தர்மசாஸ்திரம் எரியூட்டலுக்கு முன்னுரிமை அளித்தது.

தந்தையின் உடலிலிருந்து உருவானவன் மகன். அவனால் தந்தை எரியூட்டப்படுவது சிறப்பு என்று சாஸ்திரம் எண்ணுகிறது. போர் மற்றும் விபத்தில் உயிரிழந்தவர்கள், அநாதைகள்- ஆகியோரின் பூத உடலை அரசாங்கம் அடக்கம் செய்கிறது. இறந்த பிறகு செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றத் தகுதி படைத்தவர்களைப் பட்டியலிட்டுக் காட்டி, அதை நடைமுறைப்படுத்த வற்புறுத்தும் தர்மசாஸ்திரம். இறந்த பிறகு மகன் ஈமக்கடன் செய்யமாட்டான் என்ற சந்தேகம் தங்களுக்குத் தேவையில்லை. அவன் செய்யா விட்டாலும் தங்கள் நற்கதியைக் கருதி, மற்றவர்கள் செய்வார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இறப்புக்குப் பிறகு மனம் திருந்தி, மகன் செய்வதற்கு வாய்ப்பு உண்டு. அதையும் மறுப்பதற்கு இல்லை.

இறந்த பிறகு செய்யும் கடமைக்காகவே மகப்பேறு என்று இருக்கிறது. திலீபன் தன் மனைவியோடு, குலகுரு வசிஷ்டரை அணுகினான். தனக்கு குழந்தை இல்லாத குறையை நிறைவு செய்ய வேண்டினான். 'எனக்கு வாரிசு இல்லாததால் என் முன்னோர் கவலைப்படுகிறார்கள். எனக்குப் பிறகு தொடர்ந்து அவர்களுக்கு உணவளிக்க ஆள் இல்லாமல் போகுமோ என்று அஞ்சுகிறார்கள். முன்னோரை ஆராதனம் செய்யும் வேளையில் என்னைப் பார்த்து கவலையில் ஆழ்ந்து, அவர்கள் போதுமான அளவு உணவை ஏற்பதில்லை *(ந ப்ரகாம் புஜ: ச்ராத்தே...)*. எனவே. அவர்கள் கவலையைத் தீர்க்க வேண்டும்!' என நினைத்தான் திலீபன் என்று காளிதாஸன் ரகுவம்சத்தில் கூறுகிறார்.

வாரிசு இல்லாதவரை கவனிக்க பலரை சிபாரிசு செய்து ஆன்மப் பிண்டத்துக்கு வாய்ப்பு இல்லாமல் செய்துவிட்டது தர்மசாஸ்திரம். தங்களுக்கு மகன் இருக்கிறார். ஆனால், அவன் செய்யமாட்டான் என்று தங்கள் மனம் முடிவெடுக்கிறது. இறந்த பிறகு என்ன நடக்கும் என்று உங்களால் கூற இயலாது. தனது அதிகார வரம்புக்கு உட்படாத விஷயங்களைச் சிந்தித்துக் கவலைப்படுவது வீண். பிண்டம் போடுவது மகனின் கடமை. தவறினால், அவன் துன்பத்தைச் சந்திப்பான். மகன் செய்யாமல் விட்டால், அந்த இழப்பை சரிசெய்ய மாற்று வழிகளில் தர்ம சாஸ்திரம் காத்திருக்கிறது.

நாம் முக்கியமான பூஜை தொடங்குமுன், முதலில் கணபதிக்கு நைவேத்தியம் சமர்ப்பித்து, தீபாராதனை காட்டி வழிபடுகிறோம். பிறகு, பூஜை செய்த அந்த கணபதி விக்கிரகத்தை அல்லது மஞ்சள் பிள்ளையாரை வடக்கு முகமாக நகர்த்தி வைப்பது ஏன்?

- மீனாட்சி விஸ்வநாதன், ஊட்டி.

சூரியன் வடக்கே நகர்கிறான். அது நமது ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழி வகுக்கிறது. எல்லாவற்றுக்கும் வடக்கே மேரு பர்வதம் இருக்கிறது என்று புராணம் கூறும் *(ஸர்வேஷா மேவ வர்ஷாணாம் மேருருத்த ரத: ஸ்தித:)*. வடக்கில் இருக்கும் மேரு, மற்ற திசைகளை அடையாளம் காட்டுகிறது. 'வடக்கு நோக்கி யந்திரம்' (திசை காட்டும் கருவி) தற்காலத்திலும் பயன்படுகிறது. வடக்கைச் சுட்டிக்காட்டுவது அதன் வேலை. பரதேசிக் கோலத்தில் வடக்குத் திசையில் பயணம் தொடர்கிறது. காசியும் கயையும் வடக்கில் இருக்கின்றன. வடதிசையைப் பார்த்து ஆசமனீயம் (அந்தணர்கள் செய்யும் நித்ய கர்மாவின் ஒரு பகுதி) செய்யவேண்டும். துருவ நட்சத்திரம் வடக்கில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தென்படும். அதிலிருந்து ஈர்ப்பு சக்தி வெளி வருகிறது. கிழக்குப் பார்த்து அமர்ந்திருக்கும் தம்பதியில் கணவன் வடக்குப் பக்கம் அமருவான். திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர் வடக்கு நோக்கி அமர்ந்திருப்பார். முன்னோர்களின் நினைவு நாள் விருந்தில் தேவர்களின் பிரதிநிதியான விருந்தினர், வட திசை பார்த்து உட்காருவர். சுபகாரியங்களில் தென்படும் வேள்வியில் அதற்குப் பயன்படுத்தும் தர்பை, கிண்ணம் போன்றவற்றை வட திசையில் பரப்பவேண்டும். குபேரன் வடக்கே குடி இருக்கிறான். சுபகாரியங்களை நிறைவுசெய்த இடத்தில் இருந்து நகரும்போது வடக்கே நகரவேண்டும் என்று சாஸ்திரம் சொல்லும். வலம் வரும்போது வடக்கு நோக்கிச் செயல்படுகிறோம். ஆரத்தி எடுத்து முடித்தவுடன், வடக்கே நகர்ந்து, வாசலில் வடக்குத் திசையில் அந்தத் தண்ணீரைக் களையவேண்டும். பந்தியில் அன்னம் பரிமாறுதல் வடக்கில் முடிவடைய வேண்டும்.

பழத்தை, கடவுளுக்கு நிவேதனம் செய்கிறோம். பிறகு அந்தப் பழத்தை என்ன செய்வது? அதைப் பிரசாதமாக உட்கொள்ள வேண்டும். பூஜை நிறைவு பெற்றது. விளக்கை என்ன செய்ய வேண்டும்? அணைக்க வேண்டும். சமையல் முடிந்துவிட்டது. கியாஸ் அடுப்பை என்ன செய்யவேண்டும்? மூட வேண்டும். இவை நமது சிந்தனைக்கு எட்டும் விஷயங்கள். ஆனால், பூஜைகள் முடிந்த பிறகு அந்த மஞ்சள் பிள்ளையாரை என்ன செய்யவேண்டும் என்ற வினா எழும்போது, 'அதை வடக்கே நகர்த்தி விடு' என்று தர்ம சாஸ்திரம் பரிந்துரைக்கும். அதை வடக்கில் நகர்த்துவது நமது எதிர்பார்ப்பை நிறைவு செய்யும்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அஷ்டமியில் தொடங்கும் காரியத்துக்கு வெற்றி கிடைக்குமா?

சித்தர், யோகி, சாது, மகான், ஞானி, முனிவர், ரிஷி- இவர்கள் சாமியார்களா? அப்படியெனில் ஏன் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள்?

- பி.கே. ரங்கநாதன், சென்னை-39.

ஒரு விதை. அது முளைத்துச் செடியாகிறது. பூவாக, காயாக மாறுதலைச் சந்திக்கிறது. காலத்தின் தாக்கத்தால் வாட்டமுறுகிறது, மறைகிறது. மனித இனமும் இந்த ஆறு நிலைகளைச் சந்திக்கும் (*அஸ்தி, ஜாயதே, வர்த்ததே, விவரிணமாத, அபக்ஷீயதே, நச்யதி*). வளர்ச்சியின் மாறுதலுக்கு இணைந்த நடைமுறைகளை மனிதன் கடைப்பிடிக்கிறான். சிறுவயதில், வாங்கியதை மனதில் பதிய வைக்கும் திறன் அதிகம். எனவே, வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைப் பெற்று, மனதில் சேமிக்கிறான். அது பிரம்மச்சர்ய ஆச்ரமம்.

மனதில் எண்ணங்கள் மலர ஆரம்பிக்கும் பருவம் இளமை. இளமையில் இணையைப் பெற்று இன்பமுறுகிறான். அது குடும்ப வாழ்க்கை. கிரஹஸ்தாசிரமம்.

மனம் முதிர்ந்து நுகர்பொருளில் பிடிப்புத் தளரும் தறுவாயில் வீட்டை விட்டு மனைவியோடு காட்டை அடைகிறான். இயற்கையின் காய் - கனிகளை உண்டு, மனைவியோடு அறத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஆற்றுகிறான். அமைதியான சூழலை, மன அமைதிக்காக பயன்படுத்துகிறான். தற்போது அவன் மனம், உலக விஷயங்களில் பற்றைத் துறக்கும். இது வானப்ரஸ்தாசிரமம்.

முதிர்ந்த நிலையில் துறவியாகி விடுவான். இது சன்யாஸாசிரமம். அதை நமது மொழியில் சாமியார் எனலாம். இயற்கையே இந்த நான்கு ஆசிரமங்களுக்குத் தூண்டுகோல். 'தான் யார்' என்று புரிந்து கொண்டவன் அவன்; மற்றவர்களுக்கும் புரிய வைப்பவன்; ஆன்மிகத்தின் ஆழத்தை உணர்த்துபவன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸித்தி பெற்றவர்கள் சித்தர்கள். மந்திரம், மருத்துவம், வருங்காலம் ஆகியவற்றில் ஸித்தி பெற்றவர்கள். செயற்கையாகத் தங்கம் உருவாக்கும் திறன் பெற்ற சித்தர்களும் உண்டு. மூலிகை, ரசாயனம் ஆகியவற்றைப் பயன்படுத்தி பிணி அகல, மருந்துகளை உருவாக்கிய சித்தர்களும் உண்டு. தவத்தால் மற்றவர்களைத் தன் வசப்படுத்தும் சித்தர்களும் உண்டு. விரும்பியவற்றைக் கண்முன் காட்டும் திறமையும் அவர்களிடம் இருக்கும். தவப்பெருமையை உலக வாழ்க்கைக்கு பயன்படுத்தி தன்னை உயர்த்திக்கொள்ளும் சித்தர்களும் இருக்கிறார்கள். வாழ்வின் இலக்கு, அதன் இலக்கணம் ஆகியவற்றை அறிவுறுத்தி, பொதுச் சேவை புரிபவர்களும் உண்டு.

'யோக சூத்திரம்' நூலை இயற்றியவர் பதஞ்சலி முனிவர். மூச்சுப் பயிற்சியால் புலன்களை அடக்கி மனதைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை இதில் விளக்குகிறார். மன அழுக்கை அறவே அகற்றி ஆன்ம லாபம் அடைவது 'யோகம்'. இத்தகையவர்களே யோகிகள். ஹடயோகம் என்ற பிரிவில் தேர்ந்தவர் மூச்சுப் பயிற்சியால் உடலை லேசாக்கி, நீரில் நடப்பது, ஆகாயத்தில் உலவுவது போன்றவற்றை நிகழ்த்திக் காட்டுவர். யோக சமாதியில் ஆழ்ந்து சிரஞ்ஜீவியாகத் திகழ்பவர்களும் உண்டு. உலகவியலில் பற்றற்ற நிலை இவர்களில் தென்படும். தவ ஆற்றலை, அற்ப விஷயங்களில் திருப்பிவிட்டு, தன்னைத் தாழ்த்திக் கொள்பவர்களும் உண்டு. யோகம், பிறவிப்பயனை அடையும் மாற்று வழி.

சாது, உயிரினங்களைத் துன்புறுத்த மாட்டார். நன்னடத்தை அவரது இலக்கணம். பிறரையும் நன்னடத்தையில் திருப்பி விடுவார். ஆலயம் சென்றால் ஆண்டவனை அடிபணிய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கங்கையை நெருங்கினால் நீராட வேண்டும். அப்போதுதான் நன்மை பயக்கும். ஆனால், சாதுக்களைப் பார்த்தாலே போதும். நன்மைகள் நம்மைத் தேடி வரும் *(தரிசனாதேவ ஸாதவ:)* அவர்களது எண்ணம், பேச்சு, செயல் ஆகியவை நன்மை பயப்பவை. உலக நண்பன், சாது.

உயர்ந்த செயலை உலகுக்கு அளிப்பவரை மகான், பெரியவர் எனலாம். காந்தி மகான், அஹிம்சை வழி நாட்டை மீட்டவர். பொதுச் சேவையில் இன்பம் கண்டவர். பீஷ்மர் மகான், வாக்குறுதியைக் காப்பாற்றியவர். ஹரிச்சந்திரன் மகான், இன்னல்களால் துவளாமல் வாய்மையில் நிலைத்து நின்றவர். பகீரதன் மகான், விண்ணக கங்கையை மண்ணுக்குக் கொண்டு வந்தவர்.

தன் முன்னோர்களை கரையேற்றியவர் ஆதி சங்கரர்- ஞானி. இயற்கையின் ரகசியத்தை உணர்ந்தவர்- உணர்த்தியவர். துயரிலிருந்து விடுபடும் வழி சொன்னவர். அறிவியல் தகவல் மையம், வேதம். அதன் மூலம் பரம்பொருளைச் சுட்டிக் காட்டியவர். கரை காணாத கடல். அதிலிருந்து அலைகள் எழும்பி அதிலேயே ஒடுங்குகிறது. பொருள்கள் அத்தனையும் பரமாத்மாவிடமிருந்து தோன்றி, பின்னர் அவரிடமே லயிக்கிறது. கடல் ஒன்று; பரம்பொருளும் ஒன்று என்ற தத்துவத்தை மெய்ப்பித்தவர்.

புத்தன், ஜைனன், சார்வாகனன், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வர், நிம்பார்க்கன், கௌதமர், கணாதர், ஜைமினி, பாதராயணர், பதஞ்சலி, கபிலர் போன்றோர் ஞானிகள். தங்களது சிந்தனை வாயிலாக மற்றவர்களைச் சிந்திக்க வைத்து முன்னேற்றியவர்கள். தோன்றில் புகழுடன் தோன்றுக என்பது அவர்களது கொள்கை. இலக்கு ஒன்று. வழிகள் பல என்பதுதான் இவர்களது பாகுபாடு.

அகத்திய முனிவர், குடத்திலிருந்து தோன்றியவர். கடலைக் குடித்து சாகசம் செய்து, தென்னாட்டில் குடிபுகுந்து விந்திய மலையை வளராமல் தடுத்தவர். அரசர்களுக்கு அஸ்திரங்களை அளித்து ஆதரித்தவர் விஸ்வாமித்திரர். மறையின் சாரத்தை- காயத்ரியை அறிமுகம் செய்தவர். ராமனுக்கு திருமணம் செய்வித்து மகிழ்ந்தவர்.

துர்வாச முனிவர், தவத்தால் ஆன்மபலத்தைப் பெருக்கிக் கொண்டவர். வியாசர், வேதத்தை வகுத்தவர். புராணங்களை அறிமுகம் செய்தவர். தத்துவ விளக்கம் அளித்தவர். சந்திர வம்சத்தைச் செழிக்க வைத்தவர். அத்தனை மதங்களுக்கும் ஆதாரமான நூலை இயற்றியவர்.

ரிஷிகள் மந்திரங்களை அறிந்து வெளியிடுபவர்கள். மௌத்கல்யர், மறைந்திருந்த மந்திரங்களை வெளிக்கொண்டு வந்தவர். எட்டாத ஒலிகளைப் பெற்று உலகுக்கு அளித்தவர் பரத்வாஜர். மூன்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆயுளை வேதம் கற்கப் பயன்படுத்தியவர். விண்ணில் இருக்கும் வேத ஒலிகளை வாங்கி, மக்களுக்கு வழங்கிய ரிஷிகளின் குழாம் ஒன்று வேதத்தில் உண்டு. தாங்கள் குறிப்பிட்ட அத்தனை பேரும் தூய வாழ்வு பெற்று பிறரையும் தூய்மைப்படுத்திய தனிப் பிறவிகள்.

அஷ்டமியில் தொடங்கும் காரியத்துக்கு வெற்றி கிடைக்குமா?

- கீதா முருகானந்தம், திருவைகாவூர்.

பதினைந்து திதிகள், ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிரதமை, சஷ்டி, ஏகாதசி- நந்தா. துவிதியை, சப்தமி, துவாதசி- பத்ரா. திருதியை, அஷ்டமி, திரயோதசி - ஜயா. சதுர்த்தி, நவமி, சதுர்தசி- ரிக்தா. பஞ்சமி, தசமி, பூர்ணிமா - பூர்ணா. சில முகூர்த்தங்களுக்கு அஷ்டமியைச் சேர்ப்பதில்லை. 'ஜயா பிரிவில் தென்படும் திருதியையும், திரயோதசியும் முகூர்த்தங்களில் இடம் பிடித்திருப்பதால், அஷ்டமியும் சேர்க்கப்படுவதில் தவறில்லை' என்று முகூர்த்தப்பதவி நூல் விளக்குகிறது.

'இஷ்டா கிருஷ்ணாஷ்ட மீன்த்தோ' என்று ஆரம்பிக்கும் செய்யுளின்படி, தேய்பிறை அஷ்டமியில் திருமணம் செய்யலாம் என்கிறார்கள் கேரள தேசத்தவர்கள். அஷ்டமி, துவாதசி போன்றவை பேச்சுவார்த்தையில் வெற்றிபெறப் பயன்படுகின்றன. அவர்கள் வெற்றி பெறுவதால் அதை நிராகரிப்பதற்கில்லை. அம்பாள் பூஜைக்கு அஷ்டமி சிறப்பு என்பார்கள். *(சதுர்தச்யாம் அஷ்டம்யாம் வா விசேஷத:)* கொல்கத்தா- காளி பூஜையில் அஷ்டமிக்கு சிறப்புண்டு. துர்கா, லட்சுமி, சரஸ்வதி பூஜையில் (நவராத்திரியில்) நடுநாயகமாக விளங்குவது அஷ்டமி. இங்கு வெற்றி தேடித் தருவதில் அஷ்டமிக்கு பங்கு இருக்கிறது. முகூர்த்தப் பொதுப் பட்டியலில் அஷ்டமி இடம் பெறாததால், அது விலக்கத் தக்கது என்ற தோற்றம் பரவிவிட்டது. ஜன்மாஷ்டமி, அசோகாஷ்டமி போன்ற விரதங்கள் அஷ்டமிக்குப் பெருமை சேர்க்கின்றன. திதிகளுக்கு வெற்றி-தோல்வி என்ற பாகுபாடு இல்லை. பயணத்துக்கு திருதியை, சஷ்டி சுபம். சஷ்டி கலகத்தை உண்டு பண்ணும் *(சஷ்ட்யாம் கலகபந்தனம்)*. எனினும், முகூர்த்தத்துக்கு சஷ்டி சுபம். ஆகையால் வெற்றியைத் தரும் என்று சொல்ல வேண்டும்.

நல்ல நாள்- கெட்ட நாள் என்று நிர்ணயிப்பது திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தின் கூட்டணியே. திதி- செல்வச் செழிப்பை அளிக்கும். வாரம்- வாழ்க்கையின் நீட்டிப்பு. நட்சத்திரம்- தவறுகளை மன்னிக்கும். யோகம்- பிணியை அகற்றும். கரணம்- வெற்றி தரும் என்று பலன் சொல்வதுண்டு. ஐந்தில் ஒன்றை மட்டும் வைத்து முடிவுக்கு வரக்கூடாது. 'அஷ்டமியில் தொடங்கும் காரியத்துக்கு வெற்றி கிடைக்காது!' என்று அஷ்டமியின் பலனை மட்டுமே நடைமுறைப்படுத்துவது தவறு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அமாவாசை அன்று போருக்கு நாள் குறித்துக் கொடுத்தான் சகாதேவன். கண்ணனின் சூதால், கௌரவர்களின் போர் பிரதமையில் நிகழ்ந்தது. பிரதமையில் பயணம் வெற்றியைத் தராது (ப்ரதமாயாம் கமனம் நஷ்டம்). ஆனால், தேய்பிறை பிரதமையில் திருமணம் செய்வதுண்டு. அங்கு அது வெற்றி தரும். சதுர்த்தி- ரிக்தை அதாவது குறை. அதில் முகூர்த்தம் வைப்பதில்லை. நவமி, சதுர்த்தசி- ரிக்தை. இவற்றிலும் முகூர்த்தம் இருக்காது. அதுபோல் பூசம் நட்சத்திரத்தில் திருமணம் இருக்காது; பும்ஸுவனம், சீமந்தம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கும். பொது அட்டவணையில் சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகிய திதிகள் மற்றும் பூசம் நட்சத்திரம் முகூர்த்தத்துக்கு உகந்தது அல்ல என்று சொல்லும். அதே பஞ்சாங்கத்தில், உதாரணமாக *18.6.2007*-ல் சதுர்த்தி பூசம் இரண்டும் இருக்கும் வேளையில் திருமண முகூர்த்தத்தைக் காணலாம். அதுபோல் *6.5.2007*-லும் சதுர்த்தியில் திருமண முகூர்த்தத்தைப் பரிந்துரைத்திருக்கிறார்கள். அட்டவணையை ஒட்டி முகூர்த்தம் இருக்கவேண்டும். அல்லது முகூர்த்தத்தை ஒட்டி அட்டவணையை மாற்றவேண்டும். ஏன் இந்த தடுமாற்றம்? சாஸ்திரத்தில் ஒன்று; நடைமுறை வேறு என்று தென்படுகிறது. நடைமுறை அஷ்டமியை விலக்கியதால், தங்கள் மனதில் நெருடல் ஏற்படுகிறது.

பார்வதியை, ஹிமவான் மகள் என்கிறார்கள். மகாவிஷ்ணுவை, பார்வதியின் சகோதரர் என்கிறார்கள். அப்படியானால், விஷ்ணுவின் தந்தை ஹிமவானா?

- லலிதா தியாகராஜன், நவிமும்பை.

பிரம்மாவுக்கு பிதாமகன் என்று பெயர் உண்டு. பிதாமகன் என்றால், தமிழில் 'தாத்தா' என்று பொருள். அத்தனை பேருக்கும் அவர், எப்படி தாத்தா ஆவார்? ஆனால், அவர் எல்லா ஜீவராசிகளுக்கும் தாத்தாதான். முதல் மனிதனை அவர் படைத்தார். அதன் பிறகு அவர் மகன் அடுத்த படைப்பை ஏற்றுக் கொண்டார். ஆகையால் அவர் முதற் படைப்பாளி என்பதை 'தாத்தா' என்கிறார்கள்.

பார்வதி, தாட்சாயணியின் மறுதோற்றம். அவள் பிறப்புக்கு பர்வதராஜனை தகப்பனாக ஏற்றுக்கொண்டாள். அதனால் தனது பெயரை பார்வதியாக மாற்றிக்கொண்டாள். உலகத் தாய்-தந்தையர் பார்வதி- பரமேச்வரன். அவர்களுக்கு தாய்- தந்தை கிடையாது. கந்தனை உலகுக்கு அளிக்க, திரும்பவும் ஈசனை அடைய ஹிமவானுக்கு மகளாகத் தோன்றினாள். ஆகையால், அவளுடைய தோற்றத்தை வைத்து ஹிமவானுக்கு தகப்பன் ஸ்தானம் கிடைத்தது.

கிருஷ்ணனுக்கு வாசுதேவன் என்று பெயருண்டு. கம்சனை அழிக்க அவன் தோன்றவேண்டும். அதற்கு வசுதேவனைத் தேர்ந்தெடுத்தார் (அதாவது வாசுதேவனின் தந்தை). வசுதேவனுக்கு தகப்பன் ஸ்தானத்தை அளித்தார். தகப்பனைப் பெருமைப்படுத்த கிருஷ்ணனை 'வாசுதேவா' என்று அழைத்தால் மிகவும் மகிழ்வார். வாசுதேவன் என்ற பெயர் தகப்பனாரை (வசுதேவன்) ஞாபகப்படுத்துகிறது. அது அவருக்குப் பெருமை.

கிருஷ்ணனாகத் தோன்றுவதற்கு முன்பு அம்பிகை தோன்றிவிட்டாள். அம்பிகை, கிருஷ்ணனை யசோதையிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனுப்பிவிட்டு, கண்ணனின் ஸ்தானத்தில் அமர்ந்து கம்சனிடம் அகப்பட்டுக்கொண்டாள். அவளைத் துன்புறுத்தும் வேளையில், கம்சனின் கையில் இருந்து நழுவி விண்வெளியில் தோன்றி, 'உன் எதிரி கோகுலத்தில் வளர்கிறான்!' என்ற முதல் தகவலை கம்சனுக்குச் சொன்னவள். இப்போது கண்ணன், பார்வதிக்கு சகோதரன். கண்ணன் விஷ்ணுவின் அவதாரம். பாமர ஜனங்களுக்கு அவர்கள் உறவைச் சுட்டிக்காட்ட சகோதரியாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது. தந்தை, தாய், சேய் போன்ற உறவுகள் நாம் புரிந்துகொள்ளப் பயன்படும் என்பதால் அப்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வோர் அவதாரத்திலும் ஒரு தகப்பன் இருப்பான். ராமாவதாரத்தில் தசரதன். பரசுராமாவதாரத்தில் ஜமதக்னி. கிருஷ்ணாவதாரத்தில் வசுதேவன். ஆகையால், கதையை கதையாகப் பார்க்காமல், அதன் கருத்துக்கு முதலிடம் அளித்தால் ஹிமவான், விஷ்ணுவின் தகப்பன் என்று தாங்கள் சொல்ல மாட்டீர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீட்டுத் தோட்டத்தில் வில்வ மரம் வைக்கலாமா?

இறைவனின் பாதங்களை, 'பாத கமலம்' என்று தாமரை மலரோடு ஒப்பிடுவது ஏன்? மற்ற மலர்களுடனும் ஒப்பிடலாமே..?

- லலிதா தியாகராஜன், நவிமும்பை.

நூறு இதழ்கள் கொண்ட தாமரை, ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை என்று புஷ்பங்களில் தாமரைக்குத் தனிச் சிறப்புண்டு *(ஸஹஸ்ர பத்ரம் கமலம் சதபத்ரம் குசேசயம்)*. செந்தாமரையின் அழகு எல்லோரையும் கவர்ந்துவிடும். காலையில் கதிரவனின் ஸ்பரிசத்தில் மலர்ந்த தாமரையில் லட்சுமி வாசம் செய்கிறாள். சிவப்பு- மென்மை- அழகு மூன்றும் ஒருங்கே அமைந்த தாமரைப் பூவை இறைவனின் பாதங்களுக்கு ஒப்பிடுவது தனிச் சிறப்பு.

தொன்றுதொட்டு கவிகள் எதை உவமையாகச் சொல்லி உலகில் பரவச் செய்தார்களோ, அதைப் பின்பற்றவேண்டும். எல்லாரும் எளிதில் உவமையின் பெருமையைப் புரிந்து கொள்வதால், அதைப் பின்பற்றுவது சிறப்பு என்பார்கள். அதற்கு 'கவிசமயப்ரஸித்தி' என்று பெயர்.

ஆம்பல் புஷ்பத்தோடு ஒப்பிட்டுக் கூறக்கூடாது என்றும் சொல்வார்கள். கவிகள் குழாம் அதைப் பின்பற்றாததால் அதைத் தப்பான உவமை என்று ஒதுக்கிவிடுவார்கள். ரசிகர்கள்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பாதங்களைத் தாமரையோடு ஒப்பிடுவதை ஏற்பார்கள். தாமரை மலரை ஒப்பிடும்போது மென்மை, சிவப்பு, அழகு -இவை மூன்றும் ஒருங்கே பாதத்தில் இருக்கிறது என்ற எண்ணம் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்துவிடும். பாதத்தின் பெருமை அவர்களை ஈர்க்கும்.

ரசிகர்களின் மனோநிலையை அறிந்து கவிகள் செயல்படுவார்கள். ஆகையால், வேறு மலர்களோடு பாதங்களை ஒப்பிட முனையாதீர்கள். ரசிகர்கள் ஏற்க மாட்டார்கள்.

படுக்கை அறையில் சாமி படங்களை வைக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இது சரியா?

- க.சு. மணியன், பெரணமல்லூர்.

சுத்தமான அறை. இருவர் படுக்க வசதியான கட்டில். வெல்வெட் மெத்தை. அதில் நறுமணம் கமழும் பூக்கள். வாசனைப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பொருட்களால் மணம் வீசும் சூழல். நாவுக்கு ருசியான இனிப்பு வகைகள். சுண்டக் காய்ச்சிய பால். குங்குமப் பூவும் பாதாமும் அதில் சேர்ந்திருக்கும். குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கும். சுவரில் படங்கள் தொங்கிக் கொண்டிருக்கும். அவற்றில் வள்ளி-தெய்வானையுடன் முருகன், ருக்மணி- சத்யபாமாவுடன் கண்ணன் ஆகியோர் படங்கள் இருக்கும். பார்வதி பரமேஸ்வரன், பிள்ளையார், முருகன் அவர்களது வாகனங்கள் புடைசூழ சோமாஸ்கந்த பரமேஸ்வரர் வீற்றிருப்பார். முன் நெற்றியில் வளைந்த கேசத்துடன் மிளிரும் குழந்தை முருகன் படமும் இருக்கும். கையில் வெண்ணெய், தலையில் மயில் தோகையுடன் விளங்கும் கண்ணன் படமும் இருக்கும். இது முதலிரவில் சந்திக்க வேண்டிய அறை. அடுத்த அறையில் பெண்கள் மெல்லிசை எழுப்பிப் பரவசப்படுத்துவார்கள். சாந்தி கல்யாணத்தில் கடைப்பிடிக்கும் மரபு இது. கண்ணின் குளிர்ச்சிக்கு சூழல் ஒத்துழைக்கும். விளக்கின் ஜோதி- கண்ணுக்கு விருந்து. நறுமணம்-மூக்குக்கு, இனிப்பு- நாவுக்கு, மெத்தை சுகம்- உடலுக்கு, இசை-காதுக்கு. சாமி படங்கள் மனதுக்கு.

இருவரின் புலன்களும் அப்போது புத்துயிர் பெற்று விளங்கும். இருவரது மனம், பிறக்கப் போகும் குழந்தையின் மனப்போக்கை நிர்ணயிக்கும். தெய்வப் படங்கள், தம்பதியின் நல்லெண்ணங்கள், கண்ணன், முருகன் போன்ற, தங்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் நினைவு அத்தனையும் அவர்களது மனதை ஈர்த்து முதலிரவு சந்திப்பை நிறைவு செய்யும். அதன் பலனாகக் கிடைக்கும் குழந்தைச் செல்வம், ஆற்றல் படைத்த புலன்களோடும் தெளிந்த மனதோடும் சிறக்கும். முதலிரவில் படுக்கை அறையில் படம் மாட்டியிருப்பதை வரவேற்பது நமது மரபு. படங்களைப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பார்த்தால் கடவுள் நினைவு வரும். ஆகையால், படங்கள் இருப்பது அவசியம். இயற்கையில் விளைந்த இணைசேரல் அல்ல, நமது முதலிரவு. அன்பும் பண்பும் கலாசாரமும் நாகரிகமும் ஆன்மிகமும் கலந்த ஒரு தனித்தோற்றம் அதற்கு உண்டு. தர்மசாஸ்திரம், அது நல்ல நேரத்தில் நிகழவேண்டும் என்று சொல்லும். வருங்காலக் குடிமக்களைத் தோற்றுவிக்கும் வேளை. அது நல்ல வேளையாக இருக்கவேண்டும்.

'உனது அருளால் இன்றைய பொழுது நன்றாக இருந்தது. நாளைய பொழுதையும் நல்லதாகச் செய்துவிடு' என்று இரவில் படுக்கும்போது இறைவனை வணங்கவேண்டும் என்பது நமது மரபு. கோலாகலமான இன்றைய உலகில் - மனம் அல்லல்படும் சூழலில், படுக்கும்போது மனதில் கடவுள் நினைவு வருவது கடினம். ஆகையால், படுக்கை அறையில் தென்படும் கடவுள் படம் கடவுளை நினைவூட்டும். மரபும் செயல்படும்.

கடவுளை நினைவில் இருத்தி, பாதுகாக்க முடியுமானால் படுக்கை அறையில் சாமி படங்கள் தேவைப்படாது. கல்வி கற்கும் வேளையில் கிடைத்த நினைவாற்றல் தாய்- தந்தையரையும், கடவுளையும் மறக்காமல் வைத்திருக்கும். அந்தப் பண்பு நம்மில் வளரட்டும். அப்போது படங்களை அகற்றிவிடலாம்.

தியானம், வழிபாடு, பிரார்த்தனை- விளக்குங்களேன்?

- க. குமரேசன், சென்னை-49.

கடவுளை மனதில் இருத்தி, அந்த மனதை மற்றவற்றில் இருந்து அறவே விலக்கி, கடவுளில் ஒன்றிவிடுவது தியானம். அருவமான கடவுளுக்கு உருவம் தந்து, நமது அனுபவங்களை அவருக்கும்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அளித்து மகிழ்வது வழிபாடு. 'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!' என்று மனமுருகிக் கடவுளை வேண்டுவது பிரார்த்தனை.

மனம், உலக சுகங்களை புலன்களின் வாயிலாகப் பெற்று மகிழும். சுவைக்கும்போது சந்தோஷமாகத் தோன்றும். ஆனால், சங்கடத்தில் முற்றுப்பெறும். உலக சுகங்கள் அனைத்திலும் சங்கடம் கலந்திருக்கும். அது அதன் இயல்பு. சங்கடம் கலக்காத சந்தோஷம் வேண்டும்.

அமைதி, மகிழ்ச்சி, சுகம் இவற்றை நிரந்தரமாகப் பெற வேண்டுமானால், நம் மனம்- உலக விஷயங்களின் இணைப்பைத் துண்டித்து, கடவுளோடு இணையவேண்டும். அப்போது மனதுக்கு புலன்களோடு தொடர்பு அற்றுவிடும். ஆசை, செயல்பாடு - இரண்டையும் துறந்து கடவுளில் கரைந்துவிடுவதால் மனது, முழு அமைதியைத் தொட்டுவிடும். 'ஒன்றில் ஊன்றி நிலைத்தல்' என்று தியானத்தைச் சொல்லலாம். 'த்யை சிந்தாயாம்' என்ற பொருளில் அந்தச் சொல் வழங்கப்படுகிறது. காதலியை நினைக்கும் மனம் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறது. தாயின் நினைப்பில் குழந்தை சூழ்நிலையை மறக்கிறது.

'வித்யை உள்ளவன், விசாரமுள்ளவன். அர்த்தமுள்ளவன், அனர்த்தமுள்ளவன்- தூங்கான்' என்பார்கள். கல்வியில் மனம் ஒன்றிவிட்டால் தூக்கத்தை மறப்பான். கவலையில் ஆழ்ந்த மனமும், செல்வம் அளவுக்கு அதிகமாக இருந்தாலும், தனக்கு அழிவு காத்திருக்கிறது என்ற எண்ணமும் தூக்கத்தைக் கெடுத்து விடும். ஒன்றை நினைத்த மனம், அதிலேயே ஒன்றி இருப்பதால் வரும் விளைவைச் சுட்டிக் காட்டுகிறது, இந்த வழக்குச் சொல்.

கேட்கும் தறுவாயில், காதோடு இணைந்திருக்கும் மனம். அப்போது பார்வையில் விழுந்ததை மனம் அறியாது. மனம் ஒன்றில் லயித்தால், மற்றொன்றை மறக்கும். அணு அளவு மனம், அதற்கு ஒரே நேரத்தில் எங்கும் பரந்து விரிவடையும் திறமை இல்லை. மனம் என்பது நமது எண்ணத்தின் குவியல் என்றும் சொல்லலாம். எண்ணங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொள்ள புலன்களைக் கருவியாகப் பயன்படுத்துகிறது மனம். புலன்கள் ஏவலாட்கள்; வெறும் உறுப்புகள். அவை மனதின் ஆணைக்குக் கட்டுப்பட்டவை. மனம் விரும்பினால் அதை அடக்கலாம். பொங்கி வழியும் ஆசைகள், புலன்களை அடக்க முற்படாமல் அலைய விட்டுவிடும். அதில் சிக்கிய மனம் வெளிவர விரும்பாது. ஆசைகளுக்கு அடிமையாகாமல் புலன்களை அடக்கினால், தொடர்பற்ற மனம் கடவுளில் லயித்துவிடும்.

அசைந்துகொண்டே இருப்பது மனதின் இயல்பு என்று கண்ணன் சொல்வான் *(சஞ்சல ஹிமன: பார்த்த)*. ஒன்றைத் திரும்பத் திரும்பச் செய்வதை 'அப்யாஸம்' என்பார்கள். உலக விஷயங்களில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பற்றற்று இருப்பது வைராக்கியம். இவை இரண்டாலும் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். அடிக்கடி தியானத்தில் ஈடுபடுவது, பற்றற்று இருப்பது - இவற்றால் மனம் அடங்கிவிடும் என்று கண்ணன் சொல்வான் *(அப்யாஸேன சகௌந்தேய வைராக்யேணச க்ருஹ்யதெ)* புதுப்புது விஷயங்களில் தாவிக் கொண்டிருக்கும் மனம். தியானத்தில் கட்டுக்குள் அடங்கி விடும். காட்டில் வாழும் முனிவர்கள், தியானத்தில் கடவுளைப் பார்ப்பார்கள். ஆன்ம ஞானம் பெற்றவர்கள் அறிஞர்கள். நமது பிறப்பின் பயன், ஆன்ம லாபம். அதை ஈட்டித் தருவது தியானம். அலைந்துகொண்டிருக்கும் மனதை பிற விஷயங்களிலிருந்து திருப்பி, மனதை ஒருமுகப்படுத்தும் வழிமுறைகளை ஆராய்ந்து உலகத்துக்கு அளித்தவர் பதஞ்சலி. அவரது யோகசாஸ்திரம் பிறவிப்பயனைப் பெற்றுத்தரும்.

நமது உடலுறுப்புகள் பஞ்சபூதங்களால் உருவானவை. கண், காது, மூக்கு, நாக்கு, த்வக் (தோல்)- இந்த ஐந்தும் நுகர்பொருள்களை அறிந்து வாங்கிக்கொண்டு மனதுக்கு மகிழ்ச்சியளிக்கும். கண், உருவத்தைப் பார்த்து மகிழும். காது, சொற்களைக் கேட்டு மகிழும். மூக்கு, முகர்ந்து இன்பத்தை சுவைக்கும். நாக்கு, சுவைத்து மகிழும். த்வக் (தோல்), உணர்ந்து மகிழும். கடவுளுக்கு வடிவம் தந்து, ஆடை- அலங்காரங்களை அணிவித்து, அவருக்கு இருக்கை அளித்து, நீராட்டி, ஆடை அணிவித்து குங்குமம், சந்தனம் போன்ற அலங்காரப் பொருட்களுடன் தூபம், தீபம், நைவேத்தியம், கற்பூரம் அளித்து மகிழ்கிறோம். நமக்கு இன்பம் அளிக்கும் நுகர்பொருட்கள் அவருக்கும் இன்பமளிக்கும் என்று எண்ணி, அவற்றை கடவுளுக்கு அர்ப்பணித்து மகிழ்வதை வழிபாடு எனலாம்.

சிறு வயதில் வெண்ணெயைத் திருடி உண்டான் கண்ணன். குசேலனிடம் அவலைப் பெற்று மகிழ்ந்தான். ஆகையால் அவனுக்கு வெண்ணெய், அவல் போன்றவற்றை அளித்து மகிழ்வதும் உண்டு. பிள்ளையார், கையில் கொழுக்கட்டையை வைத்துக் கொண்டிருப்பதால் 'மோதகம்' அளித்து அவரை வழிபடுகிறோம். இப்படி புராணங்கள் மற்றும் அவதார லீலைகளில் கிடைக்கும் தகவல்களை வைத்து இறைவனை வழிபடுவதுண்டு.

ராம லீலை, கிருஷ்ண லீலை, உறியடி, அம்பு போடுதல், தேர் பவனி, பிரம்மோத்ஸவம், ஜன்மாஷ்டமி, மகா நவமி போன்ற அவதார நாட்களில் விழா எடுத்தல், அவர்களது திருமணங்களை நடத்தி மகிழ்தல், அவதார கதைகளை நாடகமாக நடித்துக் காட்டுதல், நவராத்திரி, சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, பங்குனி உத்திரம், தைப்பூசம் இப்படி அவர்களது விசேஷ நாட்களின் சிறப்பு ஆராதனைகளும் வழிபாட்டில் அடங்கும். நமது விருப்பங்களை அடைய கடவுளை பிரார்த்திப்பதும் உண்டு. நமது பிறந்த நாள், திருமண நாள், அறுபதாம் கல்யாணம், சதாபிஷேகம் போன்ற தருணங்களில் வாழ்வின் செழிப்பை வேண்டி, இறைவனை வேண்டிக்கொள்வதும் பிரார்த்தனையில் அடங்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏழுமலையானுக்கும் பழனிமலையானுக்கும் முடியை காணிக்கை அளிப்போம். திருவண்ணாமலையில் கிரிவலம் வருவோம். சபரிமலையிலும் வலம் வருவோம். காஞ்சியில் காமாட்சியையும், மதுரையில் மீனாட்சியையும், காசியில் விசாலாட்சியையும் தரிசிப்போம். சிதம்பரத்தில் நடராஜரை வணங்குவோம். ஸ்ரீரங்கம் ரங்கநாதனைப் போற்றுவோம். இப்படி அந்தந்த தேசங்களில் அருள் பாலிக்கும் தெய்வங்களை க்ஷேத்ராடனம் சென்று வழிபடுவோம். ராமேஸ்வரம் சென்று கடலில் முழுகி ஈஸ்வரனை வணங்கி, அங்கிருக்கும் மணலை எடுத்துக்கொண்டு, காசி விஸ்வநாதனை தரிசித்து, கங்கையில் முழுகி தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு ராமநாத ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து, கால பைரவ ப்ரீதி செய்து வழிபடுவோம். அதுவும் பிரார்த்தனைதான்.

உலகத்திலிருக்கும் அத்தனை உயிரினங்களிலும் மகிழ்ச்சி பொங்கவேண்டும் என்று புராணம் நம்மை பிரார்த்திக்கச் சொல்கிறது *(லோகா: ஸமஸ்தா: ஸுகினோபவந்து)* சிரமமில்லாமல் உயிர் பிரியவேண்டும். பிறரது உதவியை எதிர்பார்க்காமல் வாழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்யச் சொல்கிறார் வியாசர். *(அனாயாஸேன மரணம் வினா தைன்யேன ஜீவனம்)* கடவுளிடம் அசையாத பற்று இருக்க வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தனை செய்யவேண்டும் *(த்வயி பக்திமசஞ்சலாம்)*. 'தியானம்' செய்ய இயலாதவர்கள் வழிபாட்டைத் தேர்ந்தெடுக்கலாம். அதுவும் முடியாவிட்டால் பிரார்த்தனையில் இறங்கலாம். இப்படி நமது பிறவிப்பயனைப் பெற எளிதான வழிகளை நமது புராணங்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றன.

என் பெற்றோரை எனது செலவில் காசிக்கு அனுப்ப உள்ளேன். இது சரியா?

- என்.வி. முரளீதரன், உடுமலைப்பேட்டை.

சாஸ்திரத்தின் கோட்பாட்டை நிலைநிறுத்தி தாய்- தந்தையரைச் சிறப்பிக்க ஒரு மகன் போதும். 'சீமந்த புத்திரன் வந்து விட்டால், தந்தையின் விருப்பம் நிறைவேறிவிடும்!' என்று மநு கூறுவார் *(ஏகஏவ ஒளரஸ: புத்ர: காமஜான் இதரெவிது:)*. அடுத்து அடுத்துப் பிறக்கும் மகன்கள் தாய்- தந்தையரின் விருப்பத்தில் விளைந்தவர்கள் என்றும் அவர் சொல்வார். ஆனால், தர்மசாஸ்திரம் நிறைய மகன்களை ஈன்றெடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது *(ஏஷ்டவ்யா பஹவ: புத்ரா: யத்யேகோபி கயாம் வ்ரஜேத்)*.

நிறைய மகன்கள் இருந்தால் ஒருவனாவது காசி, கயை சென்று முன்னோர்களை வழிபடுவான் அல்லவா... ஒருவனாக இருந்தால் அது நிகழ வாய்ப்பில்லாமல் போகலாம். ஆகையால், ஏதாவது ஒரு பிள்ளையாவது காசி, கயை சென்று தன் முன்னோர்களை வழிபட வேண்டியது அவசியம் என்று தர்மசாஸ்திரம் சொல்லும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உயர்ந்த அறத்தை நடைமுறைப்படுத்தும் தங்களது முயற்சி பாராட்டுக்குரியது. தங்களுக்கு அவகாசம் இருந்தால் பெற்றோரை தாங்களே அழைத்துச் செல்வது இன்னும் சிறப்பாக இருக்கும். கங்கையில் முழுகி விஸ்வநாதனை தரிசித்தால் அவர்களுக்குப் பிறவிப்பயன் கிடைத்துவிடும்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பெருமாளுக்கு உகந்த துளசிச் செடியை வளர்க்கிறோம். அங்கு ஈசனுக்கு உகந்த வில்வ மரக்கன்றையும் வளர்க்க விரும்புகிறோம். வீட்டுத் தோட்டத்தில் வில்வ மரம் வைக்கலாமா?

- பி. ஜெயவேல், ஆவடி.

தோட்டத்தில் துளசியும் வளர்க்கலாம், வில்வமும் வளர்க்கலாம். இவை இரண்டும் இரு தெய்வ வடிவங்களின் ஆராதனைக்குச் சிறந்தது. அதுமட்டுமல்ல சுகாதாரத்துக்கும் அவை உதவும். உடல்- உள்ளத்தின் உபாதைகளை விலக்கும் தகுதி இரண்டுக்கும் உண்டு.

அவற்றால் கடவுளை வழிபட்டால், உள்ளம் தெளிவுபெறும்; மருந்தாக உட்கொண்டால் உடல் உபாதை அகலும். நல்ல காரியத்தைத் தொடர்ந்து செய்யுங்கள். உயர்வு பெறுவீர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தேவர்களின் தாய்மொழி என்ன?

நாள்காட்டிகளில் மரண யோகம் உள்ள நாட்களில்கூட நல்லநேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், அந்த நேரத்தில் நல்ல காரியங்கள் செய்யலாமா?

- ஐ.எஸ். சீனிவாசன், சென்னை-82.

பாயசத்தில் பல்லி விழுந்து மடிந்திருக்கிறது. உணவில் நச்சு கலந்திருக்கிறது. பல்லியின் நச்சு, பாயசத்தில் முழுமையாகப் பரவி விடும். அங்கு பாயசத்தை முழுமையாகத் தவிர்க்கவேண்டும். மாங்கனியை கிளி அல்லது ஓணான் கடித்துவிட்டது. அல்லது கீழே விழுந்து, ஒரு பக்கம் சிதைந்துவிட்டது. இங்கு கெடுதல் தென்படும் பகுதியை மட்டும் களைந்துவிட்டு, அவை தொடாத பகுதியைப் பயன்படுத்தலாம்.

கரும்பில் அதன் 'கணு' பயன்படாது. கத்திரிக்காயின் காம்பு பயன்படாது. பலாப்பழத்தின் தோல் பயன்படாது. இலந்தையில் கொட்டை பயன்படாது. முருங்கைக்காயின் சதையை மட்டும் பயன்படுத்துவோம் - இவற்றை முற்றிலுமாகத் துறப்பதில்லை. குறையைக் களைந்துவிட்டுப் பயன்படுத்துவோம். சில பொருள்களில் கெடுதல் முற்றிலும் பரவிவிடும். சிலவற்றில் குறிப்பிட்ட அளவுதான் அதன் பரவல் இருக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தினசரி நாட்களில் குறிப்பிடும் யோகங்கள், நாள் பூராவும் இருக்கும் என்று சொல்வதற்கு இல்லை. நட்சத்திரம்- திதி- ஆகியவற்றின் பரவுதலில் யோகங்கள் அளக்கப்படுகின்றன. ஆகையால், ஒருநாளில் முற்பகலில் மரண யோகமும், பிற்பகலில் சித்த யோகமும் தென்படலாம். நட்சத்திரத்தின் அளவு அல்லது திதியின் அளவு யோகத்தின் அளவாக மாறிவிடும். ஆகையால், மரண யோகம் முற்பகலில் இருந்து மதியத்துக்கு மேல் யோகம் மாறினால், மதியத்துக்குப் பிறகு நல்ல காரியங்கள் செய்யலாம். நாள் பூராவும் மரண யோகம் இருந்தால் மட்டுமே அதை விலக்க வேண்டும்.

யோகம் என்பது, முழு நாளையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. கெட்ட நேரத்தை விலக்கி அதே நாளில் நல்ல நேரத்தில் நல்ல காரியங்கள் செய்யலாம்.

‘தவறு செய்யவில்லை' என்பதை, ஒளிரும் கற்பூரத்தில் கை வைத்துச் சத்தியம் செய்வதை ஏற்றுக் கொள்ளலாமா?

- ச.ஆ. கேசவன், இனாம் மணியாச்சி.

ஒளி வடிவில் கடவுளை வழிபடுவது உண்டு. கற்பூர ஜோதியையும் கடவுள் வடிவம் எனலாம். அவனது ஒளியை அவனுக்கு அளிக்கிறோம். கற்பூர ஆரத்தி எடுக்கும்போது ஒளியில் அவன் முகம் மிளிர்கிறது. பக்தன் பரவசப்படுவான். இறைவனின் பார்வை பட்ட கற்பூர ஒளியை நாம் ஏற்று மகிழ்கிறோம். அக்னி



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாட்சியாகத் திருமணம் நடந்தேறும். எல்லாச் செயல்பாடுகளுக்கும் அக்னி சாட்சியாக இருக்கிறான். 'நான் தவறு இழைக்கவில்லை' என்று கடவுளை சாட்சியாக்குகிறான் அவன். நேர்மையானவன், கற்பூரத்தை அணைத்து சத்தியம் செய்தால், அவன் வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாம்.

சத்தியம் தவறாதவன் பேரில் வீண் பழி சுமத்தப்பட்டால், அவனை யார் காப்பாற்றுவது? தவறு செய்யாதவனைத் தண்டிப்பது பாவம். தவறு செய்தான், அல்லது செய்யவில்லை என்பதற்குத் தடயங்கள் கிடைக்கவில்லை. அப்போது எப்படி தீர்ப்பு அளிப்பது? அந்தச் சூழலில் அவனை, கடவுள் பெயரால் சத்தியம் செய்யும்படி வற்புறுத்துவார்கள். தவறு செய்தவன் மன உறுத்தலுக்கு ஆளாகி, கடவுள் முன் சத்தியம் செய்யத் தயங்குவான். தவறு செய்யாதவனுக்கு மன உறுத்தல் இருக்காது. கடவுளை வேண்டிக்கொண்டு சத்தியம் செய்வான். இப்போது தீர்ப்பு கிடைத்துவிடும்.

நீதியும் நேர்மையும் வாய்மையும் கடைப்பிடிக்கும் மக்கள் சமுதாயத்துக்கு, இந்தச் சத்தியம் செய்தல் பொருத்தமாக இருக்கும். தற்காலச் சூழலில் இதில் நம்பிக்கைக்கு இடம் இல்லை.

சபரிமலைக்குச் சென்ற பக்தர்களது வேன் மற்றும் இதர வாகனங்கள் எங்காவது மோதியோ, கவிழ்ந்தோ சிலர் பரிதாபமாக இறந்துவிடுவதாகச் செய்திகள் அவ்வப்போது வருகின்றன. 'ஐயப்ப பக்தர்கள் விரத நாட்களில் குற்றம் செய்திருப்பார்கள். அதனால் ஐயப்பன் தண்டித்துவிட்டார்' என்கிறார் நண்பர். 'விதி முடிந்துவிட்டது' என்றேன் நான். இதில் எது சரி?

- வி. பாலு, குடந்தை-1.

விரத நாட்களில் குற்றம்- இறப்புக்குக் காரணம் என்பது பக்தர்களது முடிவு. இறப்புக்குக் காரணம் அவர்களது 'விதி' என்பது தங்களது முடிவு. வேன் ஓட்டுநரும், இதர வாகன

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஓட்டுநர்களும்கூடக் காரணமாகலாம். பக்தனுக்கும் தங்களுக்கும் உண்மைக் காரணம் தெரியவில்லை. அதனால், தங்களுக்குத் தோன்றியதைக் காரணமாகச் சொல்கிறீர்கள்.

உண்மைக் காரணம் நமக்குப் புலப்படாத வரை, இந்தக் காரணங்களுக்கு மதிப்பு உண்டு. பெரியவர் கழிப்பறையில் தவறி விழுந்தார், இறந்தார். இங்கு விழுந்தது காரணமா? விதியா? யார் தீர்மானிப்பது. குழந்தையை வயிற்றிலிருந்து எடுக்கும்போது இறந்து விட்டது. காரணம் மருத்துவரா? விதியா?

வெப்பத்தின் தாக்கம் அல்லது குளிரின் இறுக்கம் காரணமாக ஒருவர் இறந்துவிட்டார். எதைக் காரணமாக்குவது? இயற்கைச் சீற்றம், இடி, மின்னல்- ஆகியவற்றின் தாக்கம், நச்சுப் பிராணிகளின் பாதிப்பு, சாலை விபத்துகள், கொலை, தற்கொலை அத்தனைக்கும், அந்தந்த நிகழ்வுகளோடு 'விதி'யையும் சேர்த்துக் காரணம் சொல்ல இயலும். இறப்புக்குக் காரணம் தெரியாத இடத்தில் விதி எனலாம். காரணம் தெரிந்தால், விதி அங்கு காரணமாகாது. தெரிந்த காரணமும், தெரியாத காரணமும் சேர்ந்துகொண்டால் நம் மனம் தெரிந்ததை ஏற்றுக்கொள்ளும். தெரியாததை மறுக்கும்.

இறந்த பிறகு காரணத்தை ஆராய்வதில் சுரத்து இல்லை. வந்த பாதிப்பை இல்லாமல் செய்ய முடியுமானால், அந்த பாதிப்புகளின் காரணத்தை ஆராயலாம். காரணம் தெரிந்து இறந்தவனை உயிர்ப்பிக்க இயலாது. நமது சிந்தனையும், செயல்பாடும், பயனுள்ள விஷயங்களில் சிறக்கவேண்டும். 'விரத நாட்களில் குற்றம்' மற்றும் 'விதி' என்கிற காரணங்களை ஏற்றுக்கொண்டால், இறந்தவரின் குடும்பத்தினருக்கு இழப்பீடு கிடைக்காது. ஓட்டுநரின் அஜாக்கிரதையைக் காரணமாகக் காட்டினால்தான் இழப்பீடு கிடைக்கும். கண்ணுக்குப் புலப்படும் காரணத்தை மட்டுமே நீதிமன்றம் ஆராயும்.

தெரிந்த காரணத்தோடு, தெரியாத 'விதியும்' அதில் ஒட்டிக் கொண்டுதான் இருக்கும். காரணம் எதுவானாலும் காரியத்தை முடித்து வைப்பது விதி. அடிபட்டவர்களில் உயிர்பெற்றவர்களும் இருக்கிறார்களே! எப்படி? விதி என்ற காரணமும் பொய்யல்ல. இறந்தவரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்தவர்களை சமாதானப்படுத்த உதவும். சமாதானம் அடைந்த மனம் துக்கத்தை மறந்து சரியான சிந்தனையில் திரும்பிவிடும். இருந்தவன் இறந்துவிட்டான். இருப்பவனைக் காப்பாற்ற வேண்டாமா?

சதாசிவ பிரம்மேந்திரர், ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் 'பரமஹம்ஸ' என்கிறார். மேலும் அடிக்கடி ராமகிருஷ்ண பரமஹம்சர், பரமஹம்ஸ நித்யநந்தர் என்கிறார். 'பரமஹம்ஸ' என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்?

- லலிதா தியாகராஜன், நவிமும்பை-6.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'**ஸோ**ஹம்- அந்தப் பரம்பொருளே நான். ஹம்ஸ- நானே அந்தப் பரம்பொருள்!' என்று விளக்கமளிப்பார்கள் பெரியோர்கள். 'பரமாத்மாதான் ஜீவாத்மா' என்று மட்டும் சொல்லி நிறுத்தினால் போதாது. 'இந்த ஜீவாத்மாதான் அந்தப் பரமாத்மா' என்று திருப்பிச் சொல்லவேண்டும். அப்போது அவர்கள் இருவரும் ஒருவரே என்பது நிச்சயமாகும். ஸோஹம் என்று சொன்னால் மட்டும் போதாது; 'ஹம்ஸ:' என்றும் சொல்லவேண்டும்.

ஆன்மிகத்தின் எல்லையை வரையறுத்து, மங்கள வடிவான பரம்பொருளை உணர்த்துவது அது *(ஹம்ஸோநாம ஸதாசிவ:)*. ஒவ்வொரு மனிதனும் மூச்சுவிடும் தறுவாயில் 'ஹம்ஸ' என்ற ஒலி எழும்புகிறது. மூச்சை உள்ளிழுத்து விடும் தறுவாயில், காற்றின் ஒலி 'ஹம்ஸ' என்று இருப்பதாக யோக சாஸ்திரம் கூறுகிறது. '*ஹன ஹிம்ஸா கத்யோ*' என்ற தாதுவில் இருந்து வெளிவந்தது ஹம்ஸ சப்தம். அதற்கு 'சென்றுகொண்டே இருப்பவன்' என்று பொருள். துறவி சென்றுகொண்டே இருப்பவன். அவனை பரமஹம்ஸன் என்று சொல்லலாம்.

சம்ஸ்கிருதத்தை ஏன் தேவபாஷை என்கிறார்கள்? தேவர்களுக்கு அது மட்டும்தான் புரியுமா?

– கலை. அரசு, கோவை-42.

கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு கருவி பாஷை; அதாவது மொழி. நமது நாட்டில் மாறுபட்ட மொழிகளைப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். பதினான்கு மொழிகள் சிறப்பாக இயங்குகின்றன. அவற்றைத் தவிர 'லிபி' (எழுத்து) இல்லாத மொழிகளும் உண்டு. கொங்கிணி, துளு போன்றவை பேசப்படும் பாஷைகள். நமது ஊரில் குருவிக்காரர் மொழி என்று தனியாக இருக்கிறதே!

அதுபோல் தேவர்களுக்கும் ஒரு மொழி உண்டு. அது தேவ பாஷை- சம்ஸ்கிருதம். எல்லா மொழிகளும் கடவுளுக்குப் புரியும். அவருக்குப் புரியவைக்க மொழி தேவையே இல்லை. நம் மனம் எண்ணியதை அவர் தெரிந்துகொள்வார். எண்ணங்கள்தானே வார்த்தைகளாக மலர்கின்றன. வார்த்தை வடிவில் வெளிவரும் வரை காத்திருக்காமல், எண்ணம் தோன்றியதும் அவர் அதை அறிந்துகொள்வார். நாம் அவருடன் உரையாடும்போது அவரது தாய்மொழியான சம்ஸ்கிருதத்தில் இருந்தால் உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொண்டு, பக்தரது எண்ணம் சரிதான் என்ற முடிவுக்கு வருவார்.

'தேவர்கள் இனம் அழியவேண்டும்!' என்று வரம் கேட்க எண்ணினான் கும்பகர்ணன். ஆனால், மொழியில் தவறாக விளக்கிவிட்டான். 'நான் எப்போதும் தூங்கிக்கொண்டே இருக்கவேண்டும்' என்ற கருத்தை அவன் தனது மொழியில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சொன்னான். மனதில் இருப்பதுதான் மொழியில் வரும். ஆகையால், அவன் எப்போதும் உறக்கத்தை விரும்புகிறான் என்று நினைத்து, அவனுக்கு உறக்கத்தை அளித்துவிட்டான் தேவன் என்பது கதை. மொழியைக் கையாளும்போது தனது எண்ணம் அதில் முழுமையாகப் பளிச்சிடுகிறதா என்று பார்க்கவேண்டும். தாய்மொழியைக் கையாளும்போது அதில் நமக்கு நம்பிக்கை இருக்கும். ஆகையால், அவர்களது தாய்மொழியில் அவர்களோடு உரையாடுவது நல்ல பலனை அளிக்கும்.

தமயந்தியின் சுயம்வரம் நிகழ்ந்தது. 'பல தேசங்களிலிருந்தும் அரசகுமாரர்கள் வந்து குவிந்தனர். தேவர்களும் சுயம்வரத்தில் கலந்துகொண்டனர். பல்வேறு மொழி பேசும் அரசகுமாரர்கள், தங்களது மொழி பிறருக்குப் புரியாது என்பதால், எல்லோருக்கும் புரியும் விதமாக சம்ஸ்கிருத மொழியை பயன்படுத்தினர். அப்போது அங்கு தேவர்கள் யார், மனிதர்கள் யார் என்று அடையாளம் தெரியாமல் போய்விட்டது!' என நைஷதம் என்ற நூலில் ஸ்ரீஹர்ஷன் குறிப்பிடுகிறார்.

தவத்தில் மகிழும் தேவன், நாம் கேட்கும் வரத்தை, 'அப்படியே தந்துவிட்டேன்' என்று சொல்வார். நாம் சொன்னதை அவரும் திரும்பச் சொல்லமாட்டார். கல்யாணப் பத்திரிகையில் 'தங்கள் அன்புள்ள முருகன்' என்று எழுதிய பிறகு, யானும் அவ்வண்ணமே என்று கையெழுத்துப் போடுவது உண்டு. இரண்டாவது தடவை சொல்வது இல்லை. திருப்பிச் சொல்லும்போது தவறு ஏற்படாமல் இருக்க அப்படிச் சொல்வது வழக்கம். கடவுள் அருளால் இவருக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்க ஆசீர்வதிக்க வேண்டும் என்று சொன்னால் 'ததாஸ்து' - அப்படியே வரட்டும் என்று சொல்வதும் மரபு. இங்கெல்லாம் மொழியைவிட எண்ணத்துக்கு முதலிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொடுக்கப்படுகிறது. 'ஓம் நமோ நாராயணாய.' 'ஓம் நம சிவாய' - என்று வாய்விட்டுச் சொல்லியும் கடவுளை மனதில் இருத்தியும் தவம் செய்வது உண்டு. இரண்டிலும் தேவன் மகிழ்கிறார். பல மொழிகளில் நாம் தேர்ச்சி பெற்றிருந்தாலும், நமது தாய்மொழியில் கேட்கும் விளக்கம், பிற மொழிகளில் கேட்கும் விளக்கத்தைவிட தெளிவாக விளங்கும். தேவனை அறிவுறுத்த அவன் தாய்மொழி சிறந்தது.

பெண்கள் தினமும் காயத்ரி மந்திரம் ஜபிக்கலாமா?

- சுபா, திருவல்லிக்கேணி.

வேதக் கல்வி பயில விரும்பும் மாணவனுக்கு நுழைவுத்தேர்வு காயத்ரி மந்திரம். நான்கு வேதங்களின் சாரம் காயத்ரி. சிறப்புக் கல்விக்கு, சிறப்புத் தேர்வு இருக்கும். அந்தக் கல்வியைப் பயில தகுதி நிர்ணயிப்பது சிறப்புத் தேர்வு. வேதம் கற்பவன், காயத்ரியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறப்புத் தேர்வில் வென்று, உயர்கல்வி பயிலாமல் விட்டு விட்டால், சிறப்புத் தேர்வு பயனற்றுப் போய்விடும். பயனற்ற செயலில் யாராவது ஈடுபடுவார்களா? காயத்ரி மந்திரத்தால் நாம் விரும்பும் பயன் கிடைக்காது. வேதம் படித்தவனும் தினமும் காயத்ரியைச் சொல்வான். அதனால் அவனுக்கு எந்த பயனும் கிடைக்காது. தனது தகுதி அதாவது வேதம் கற்ற பெருமை காப்பாற்றப்படும். அவ்வளவுதான். வேதம் கற்கும் தகுதியை அவனுக்கு உண்டு பண்ணுவதோடு அதன் செயல்பாடு நின்று விடும்.

தர்மசாஸ்திரம், 'கடமைகளுக்கு' பலன் சொல்லாது. கடமைகளைத் தவறவிட்டால், பரிகாரம் செய்யச்சொல்லும். காயத்ரியை ஜபித்தால் விசேஷ பலன் கிடையாது. தவறினால் பாவம் உண்டு என்று சொல்லும் *(அகரணே ப்ரத்யவாய:)*.

நம் மாணவர்கள் பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற சிறப்புக் கல்வி பயில நுழைவுத் தேர்வு எழுதுகிறார்கள். வெற்றியடைந்த பிறகு அதில் சேராமல் இருந்தால் என்ன பயன்?

உயர்கல்வியில் விருப்பம் உள்ளவர்கள் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். தங்களுக்கு வேதம் கற்க விருப்பமானால், காயத்ரி மந்திரத்தை ஏற்றுக்கொள்ளலாம். தங்கள் தகப்பனாரை அணுகி, காயத்ரி மந்திரத்தை முறையாகப் பெறவேண்டும். வேதக் கல்வி பயில, பல சட்ட திட்டங்கள் உண்டு. அதைத் தாங்களும் பின்பற்ற வேண்டும். தற்காலச் சூழலில் அது சாத்தியமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் கற்கலாம் என்ற புதுச்சிந்தனை தங்களுக்குப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிடித்திருக்கலாம். தவறில்லை. வேதக் கல்வி பயில ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டத்தை மாற்றியமைக்க நமக்கு அதிகாரம் இல்லை. அதன் குறிக்கோளை நிறைவேற்ற நமக்குத் தகுதியும் இல்லை.

விஞ்ஞான வளர்ச்சியில் மாறுபட்ட சூழலைச் சந்திக்கும் நம் சந்ததியினருக்கு அது பொருந்தாது. சமுதாயத்தில் அங்கீகாரமும் நிறையப் பொருளை ஈட்டித் தருவதுமான கல்வியையும் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். உலக நன்மைக்காகப் பயன்படும் வேதத்தைக் கற்றுப் பாதுகாப்பது மிகவும் கடினம். அதற்கு வேண்டிய மனோபலம் தங்களிடம் இருந்தால் காயத்ரி மந்திரத்தைப் பெற்று, வேதக் கல்வியைக் காப்பாற்ற முற்படலாம். வேதத்தைக் கற்று, அதன் பெருமையைத் தக்கவைக்க தினமும் காயத்ரியை ஜபிக்கலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிதம்பர ரகசியத்தை அறிய முடியுமா?

என் பெண்ணின் ஜாதகத்தை நான்கு ஜோதிடர்களிடம் கொடுத்தேன். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஜாதகப் பொருத்தம் எழுதிக் கொடுத்துள்ளனர். ஒரே குழப்பமாக இருக்கிறது. இந்த சிக்கலைத் தீர்ப்பது எப்படி?

- பெயர் வெளியிட விரும்பாத பெங்களூர் வாசகர்.

திருமணத்துக்கு ஜாதகப் பொருத்தம் பார்ப்பதற்குச் சில நடைமுறைகள் உண்டு.

இரு ஜாதகங்களிலும் நீண்ட ஆயுள் இருக்கிறதா என்று ஆராய வேண்டும். இதற்கான குறிப்புகள் ஹோரா சாஸ்திரங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. அதை ஆராய்ந்து ஆயுளை நிர்ணயிக்க வேண்டும் *(பூர்வமாயு: பரீக்ஷேத பச்சாத் லக்ஷ்ணமா திசேத்).*

திருமணத்துக்கு வாய்ப்பு உள்ளதா? இல்லற இன்பத்தைச் சுவைக்கும் தகுதி உள்ளதா? இல்லறம் தொடருமா? குழந்தைச் செல்வத்துக்கு வாய்ப்பு இருக்கிறதா? இருவர் மனமும் ஒன்றிணைந்து செயல்படுமா? பிறந்த நட்சத்திரங்கள் ஒன்றிணைந்து செயல்படுமா? அவர்களது இயல்புகள், சிந்தனை ஓட்டம், நல்ல குணங்கள், பண்பு, அடக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியவற்றையும் ஆராய வேண்டும். *(தம்பத்யோர் ஜன்ம தாராத்யை: ஆனுகூல்யம் பரஸ்பரப்.)*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தாம்பத்யத்தின் செழிப்பை, அதன் இறுக்கத்தை இருவரது பிறந்த லக்னத்தில் இருந்து ஏழாம் பாவம் தெளிவுபடுத்தும். 'ஏழாம் வீடு' என்பது வேறு. சில ஜாதகங்களில் 'பாவம்' - இரு வீடுகளிலும் பரவியிருக்கும். ஏழு மற்றும் எட்டாம் வீடுகளில் தென்படும். சில நேரம் 6-ஆவது வீட்டிலும் பரவியிருக்கும் பாவத்தையும் நிர்ணயிக்க வேண்டும். 'பாவத்தை' வைத்து பலனை ஆராயவேண்டும் *(பாவப்ரவ்ருத்தௌஹி பலப்ரவ்ருத்தி:).*

வீட்டின் விளிம்பில், இரு பாவங்களின் சந்திப்பில் கிரகம் இருந்தால், அதன் பலன் வீணாகிவிடும் *(பாவஸந்தௌவிபலோ க்ரஹேந்த்ர:)* பாவ நிர்ணயம், பல நிர்ணயத்தை ஈட்டித்தரும். பாவத்தில் இருக்கும் கிரகங்கள், பாவத்தைப் பார்க்கும் கிரகங்கள், பாவாதிபதி நின்ற ராசிநாதன், பாவாதிபதியின் அம்சக நாதன், பாவாதிபதியின் கேந்திர திரிகோண கிரகங்கள், பாவாதிபதியின் சுப-பாப யோகங்கள், பாவாதிபதியின் உபய பாபித்வம், பாவாதிபதியின் பாப மத்ய ஸ்திதி, லக்னாதிபதியின் தரம், அதன் ஆதிபத்தியம், லக்னாதிபதிக்கும் பாவாதிபதிக்கும் உள்ள தொடர்பு, காரக கிரகத்தின் ஆதிபத்தியம், காரக கிரகத்தின் அபாசுப யோகம், காரக கிரகத்துக்கும் பாவாதிபதிக்கும் உள்ள தொடர்பு, லக்னாதிபதிக்கு காரக கிரகத்துக்கும் உள்ள தொடர்பு, லக்னாபதி, பாவாதிபதி, காரக கிரணம், பாவத்தில் இருக்கும் கிரணம், பாவத்தைப் பார்க்கும் கிரணம் - ஆகியவற்றின் ஷட் பலங்கள், ஷோடச பலங்கள், ஷஷ்ட்யம்ச பலங்கள் ஆகியவற்றையும் ஆராய வேண்டும். கிரகங்கள் தாம்பத்தியத்துக்கு அனுகூலமாக இருந்தால், தாம்பத்தியம் செழிக்கும் என்ற முடிவுக்கு வரலாம்.

வாழ்க்கை முறையை அறிய வேதம் வேண்டும். எப்படி வாழ வேண்டும் என்பதற்கு தர்மசாஸ்திரம், உலகவியலை அறிய சாங்கய சாஸ்திரம், மன இயலுக்கு யோக சாஸ்திரம், இல்லறத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அறிய மீமாம்ஸா சாஸ்திரம், ஆன்மாவை அறிய வேதாந்தம், மனப்போக்கு- பண்பாட்டை அறிய புராணங்கள், ஆராய்ச்சிக்கு தர்க்க சாஸ்திரம், சுகாதாரத்துக்கு ஆயுர்வேதம் ஆகியவை பற்றி தெரிந்திருக்க வேண்டும். இவை தவிர நாட்டு நடப்பு, சம்பிரதாயம் ஆகியவையும் அத்துடன் ஜோதிடத் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். இவையெல்லாம் ஆராயப்பட்டால் திருமணப் பொருத்தத்தைத் துல்லியமாகச் சொல்லலாம்.

'ஜோதிடம், கடல் போன்றது. தெளிவான- பாரபட்சமற்ற உள்ளம், உண்மையைக் கண்டறியும். நன்னடத்தையும் பரோபகாரச் சிந்தனையும் ஜோதிடரிடம் இருக்கவேண்டும். ஜோதிடம் தொடர்பான பல புத்தகங்களைப் படித்திருப்பதுடன் வான சாஸ்திரம் பற்றியும் அலசி ஆராயும் திறன் இருக்கவேண்டும்.

தினம் தினம் மந்திரம் ஓதி மனம் தெளிவு பெற்றிருக்க வேண்டும்' என்று ஜோதிடனின் இலக்கணத்தை விளக்கியிருக்கிறது சாஸ்திரம்.

திறமையான ஜோதிடர் தெளிவாக பலன் சொல்வார். நாம்தான் அப்படிப்பட்டவரைத் தேடிப்போக வேண்டும்.

குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாவிட்டால் உடனே குழந்தை வைத்தியரைத் தேடிப்போவோம். நம் மீது அபாண்டமாக குற்றம் சுமத்தப்பட்டால் நீதிமன்றம் செல்லவேண்டும்; திறமையான வழக்கறிஞரைத் தேடிப்போவோம். வீடுகட்ட நேர்மையான பொறியாளரைத் தேடுவோம். இந்த மனப்போக்கு ஜோதிடத்திலும் தேவை.

தன் அருமை மகளுக்கு ஜாதகப் பொருத்தம் பார்க்கும் தந்தை, சிறந்த ஜோதிடரை அணுகத் தயங்கக்கூடாது. தன் மகளது முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி, தக்க ஜோதிட வல்லுநரை அணுகவேண்டும். தெளிவு பெறுவீர்கள். ஜாதகங்களை, போதுமான தகவல்களோடு ஆராய்ந்தால் மாறுபட்ட தகவல்கள் தோன்றாது.

காதல் திருமணம், கலப்புத் திருமணம், விதவை மறுமணம், விவாகரத்து, டெஸ்ட் ட்யூப் பேபி, கருவில் இருக்கும் குழந்தையை ஏற்கவோ இழக்கவோ வசதி, தனிக்குடித்தனம், முதியோர் இல்லம் - இத்தனையும் இன்றைய சமுதாயத்தில் அங்கீகாரம் பெற்றுவிட்டது.

அழகு, இளமை, படிப்பு, வேலை, பணம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கிறது இளைஞர் சமுதாயம். ஜோதிட நம்பிக்கை இல்லாதவர்களும் ஏராளம். பொருத்தம் பார்க்காமல் திருமணம் செய்தால், விபரீதங்கள் நிகழுமோ என்ற பயம், பொருத்தம் பார்க்கத் தூண்டுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நம்பிக்கையுடன் பொருத்தம் பார்ப்பவர்களை விரல்விட்டு எண்ணலாம். பொருத்தம் பார்த்து செய்த திருமணத்தில் அன்பும் பண்பும் அரவணைப்பும் மகிழ்ச்சியும் நிச்சயமாக இருக்கும்!

சிவபெருமான் தலையில் பிறைச்சந்திரன் எந்தப் பக்கம் இருக்கவேண்டும். ஒருசில ஓவியங்களில் வலப்பக்கமும் இடப் பக்கமும் மாறி மாறி உள்ளதே?

- கே. சபாபதி, கோவைப் புதூர்.

புலி எதிரே வருகிறது. இப்போது 'நாம் அதன் இடப்பக்கம் போகவேண்டுமா, வலப்பக்கம் போகவேண்டுமா?' என்று யோசிப்போமா? உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பக்கமாக போகவேண்டும். சிவபெருமானின் தலையில் கங்கை, பாம்பு, சந்திரன் மூன்றும் இருப்பதுண்டு.

ஓவியன் அழகுக்கு முதலிடம் கொடுத்து, விருப்பமான இடத்தைத் தேர்ந்தெடுப்பான். இரு பக்கங்களிலும் ஆகலாம். மேலும் அன்னை உமையின் தலையிலும், பிள்ளையார் நெற்றியிலும் சந்திரக்கலை உண்டு.

இந்த மூவரும் அலங்காரமாக வைத்திருப்பதை அழகு மிளிர எந்தப்பக்கம் தோதுவாக இருக்குமோ அப்படியே வைத்துக் கொள்ளலாம். இடப்பக்கம் அம்பாளுக்கு இடம் அளித்திருக்கிறார் ஈசன். ஆகையால், வலப்பக்கத்தில் வைப்பது பொருத்தம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பெண்ணைச் சிறப்பிக்க, 'நீ மகாலட்சுமி மாதிரி இருக்கிறாய்' என்கிறார்கள். ஆனால், 'பார்வதிதேவி மாதிரி இருக்கிறாய்!' என்று எவரும் சொல்வதில்லையே... ஏன்?

- கே. அனிதா, கோவை-42.

குழந்தைகளை, 'கண்ணா வா... வா!' என்கிறார்கள். ஏன் 'ராமா வா...வா!' என்று அழைப்பதில்லை?

தமிழுக்கு அமுதென்று பெயர் என்கிறார்கள். ஏன் வேறு இனிப்பு வகைகளைக் குறிப்பிடுவதில்லை.

குழந்தைகளை அரவணைக்கும்போது, 'என் கண்ணு!' என்பார்கள். ஏன், 'என் மூக்கு!' என்பதில்லை? இருக்கைகளில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எத்தனையோ சிறப்பு இருந்தும், ஏன் 'சிம்மாசனம்' என்கிறார்கள்? புலியாசனம் என்று ஏன் சொல்வதில்லை?

எல்லா உயிரினங்களுக்கும் சக்தி இருக்கிறது. இருந்தாலும் 'குதிரை சக்தி' என்றுதானே கூறுகிறார்கள். யானை சக்தி என்று கூறக்கூடாதா?

எத்தனையோ நடைகள் அழகாகத்தான் இருக்கிறது. ஆனாலும் 'அன்னநடை' என்றே சொல்கிறார்கள். திருடனை இகழ்வாகப் பார்க்கிறோம். ஆனால், கண்ணனை மட்டும் 'நவநீத சோரா!' என்று புகழ்ச்சியுடன் பார்க்கிறோம்.

'என் தங்கம், என் சொக்கத்தங்கம்' என்று குழந்தையைப் பாராட்டுகிறான். 'என் வைரம், என் கோமேதகம்' என்று ஏன் சொல்வதில்லை? வீரசிம்மன், பிரதாபசிம்மன் என்று பெயர் உண்டு. வீரப்புலி, பிரதாபக்கடுவா என்று ஏன் சொல்வதில்லை?

உணவுண்டு பசியாறியவன், உணவளித்தவனின் உணவை, 'தாங்கள் அளித்த உணவு அமுதமாக இருந்தது!' என்று போற்றுகிறான். இருவரும் அமுதத்தைச் சுவைத்ததில்லை. இருந்தும் ஏன் அப்படிச் சொல்கிறார்கள். தெரிந்த ஓர் உயர்ந்த சுவையைச் சுட்டிக்காட்டலாமே!

முருகனை அழகன் என்கிறோம். ராமனை வீரன் என்கிறோம். ராமன், அழகன் இல்லையா, முருகன் வீரன் இல்லையா? ஏன் இந்தப் பாகுபாடு? 'நீங்கள் பாட ஆரம்பித்ததும் கச்சேரி, களைகட்டியது!' என்று சொல்வதுண்டு. வீட்டுக்குள் நுழைந்தவுடன் மனநிறைவு அனுபவத்தில் தோன்றுகிறது. வீடு லட்சுமிகரமாக இருக்கிறது என்கிறோம். சில வீடு, களை இழந்து காணப்படுகிறது.

பால் வடியும் முகம் பிரகாசமாக இருக்கிறது. அவள் முகத்தில் அழகு மிளிர்கிறது. இப்படியெல்லாம் நாம் சொல்வதுண்டு. 'களை' என்ற சொல், லட்சுமியைக் குறிக்கும். களையோடு தென்படும் பொருளில் லட்சுமி வாசம் செய்கிறாள்.

நெல் கதிரில் தான்ய லட்சுமி, செல்வத்தில் ஐஸ்வர்ய லட்சுமி, வீரத்தில் வீரலட்சுமி, வாளில் கடக லட்சுமி, யானையில் கஜ லட்சுமி- இப்படி எல்லாவற்றிலும் அதன் திறமை தென்படும். மகாலட்சுமி உன்னிடத்திலும் உறைந்திருக்கிறாள் என்ற அர்த்தத்தில் அழகான பெண்ணை மகாலட்சுமிக்கு ஒப்பிட்டுக் கூறுவது மரபு. அதற்கு அழகு மட்டும் காரணமல்ல.

பார்வதியும் அழகானவள்தான். பிரம்மச்சாரியான பிள்ளையாரிடம் கல்யாணம் செய்ய வற்புறுத்தினர். 'அன்னையின் அழகுக்கு ஈடான ஒரு பெண் எனக்குக் கிடைத்தால், நான் திருமணத்துக்குத் தயார்!' என்றார் அவர். அன்னைக்கு ஈடான அழகுடைய பெண், இன்னோர் உலகத்தில் இல்லை. ஆகையால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிள்ளையார் பிரம்மச்சாரியாகவே காலம் தள்ளுகிறார் என்று சுவையான ஒரு கதை உண்டு.

'சௌந்தர்யலஹரி' என்ற தலைப்பில் அன்னையின் அழகை வர்ணிக்கிறார் ஆதிசங்கரர்.

'ஈடு இணையற்ற அழகின் பிரவாகம் பார்வதியிடம் மட்டும்தான் தென்படுகிறது!' என்பது சங்கரரது கணிப்பு. விளக்க முடியாத ஏதோ ஒரு சிறப்பு, மகாலட்சுமியிடம் இருப்பதால் பெண்களை மகாலட்சுமியாகப் பார்க்கிறார்கள்.

'கலிகாலம்', 'கலி முற்றிவிட்டது' என்றெல்லாம் கூறுகிறார்களே... தயவு செய்து விளக்கவும்.

- திலகவதி, தேனி.

அவனவன் கடமையைச் சரிவர ஆற்றமாட்டான். அறத்தைக் கடைப்பிடிக்க மாட்டான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவான். சுயநலத்துக்காகப் பொதுநலத்தை அழிப்பான். பொய், பித்தலாட்டம், சண்டை- சச்சரவு, கொலை, கொள்ளை, திருட்டு போன்றவை தலைதூக்க ஆரம்பிக்கும். வாங்கிய கடனைத் திருப்பித் தரமாட்டான். நன்னெறிகளை மதிக்கமாட்டான். போட்டி- பொறாமை வலுப்பெற்றிருக்கும். வேத சாஸ்திரங்கள் புறக்கணிக்கப்படும். நல்லவர்கள் துன்பத்தைச் சந்திப்பார்கள். நற்பண்புகளுக்கு தவறான விளக்கம் அளிப்பார்கள். புலனடக்கம் இருக்காது.

உறவு முறைகள் சீரழியும். தவறான முறையில் செல்வம் ஈட்டத் தோன்றும். வயதில்- அறிவில் முதிர்ச்சி பெற்றவர்கள்- நன்னடத்தையாளர்கள் அவ்வளவு பேரும் செல்வந்தர்களுக்கு அடிபணிந்து நடக்க ஆரம்பிப்பார்கள். ஊண், உறக்கம், புலன்களின் வேட்கையைத் தணித்தல் - இந்த மூன்றும் வாழ்க்கையின் லட்சியமாகக் கருதப்படும். பொறுப்பற்ற சுதந்திரத்தோடு நடமாடுவர். மனிதனின் தனித்தன்மை மாய்ந்து போகும். அரக்க உணர்ச்சி வளரும். கடவுள் நம்பிக்கை அழியும்.

சட்டத்துக்குப் புறம்பான திருமணங்கள் பெருகும். சம்பாதிக்க வேண்டிய வயதில் படிப்பான். படிக்க வேண்டிய வயதில் விளையாடுவான். காலம் கடந்து திருமணம் செய்துகொள்வான். உணவு வகைகள் தாறுமாறாகிவிடும். சிறுவயதிலேயே பிணிகள் தொற்றிக் கொள்ளும். அதர்மம் தலை தூக்கும். அநியாயத்தையும், அக்கிரமத்தையும் நியாயப்படுத்துவர். ஜீவ நதிகளை அணைகட்டித் தடுப்பார்கள். இயற்கைச் செல்வங்களான மரம், செடி, கொடிகளை அழிக்க முற்படுவர். பருவ காலங்கள் தாறுமாறாக மாறி சுற்றுச் சூழல் கெட்டு விஷக்கிருமிகளும் நச்சுப்பொருள்களும் பெருகும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கலியின் உச்சகட்டத்தில் பஞ்சம் தாண்டவமாடி உணவின்றித் தவிக்கும் வேளையில், வேறு வழியில்லாமல் மனிதன், மனிதனையே சாப்பிடுவான்- இப்படி விபரீதங்கள் தோன்றும் யுகத்தை கலி காலம், கலி முற்றிவிட்டது என்பார்கள்.

தர்மசாஸ்திரத்தில் *'நிபந்தக்ரந்தம்'* என்ற வரிசையில் கலிகாலத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. பவிஷ்ய புராணத்திலும், அதன் விளக்கத்தைக் காணலாம். இவற்றின் நோக்கம், நாம் எச்சரிக்கையோடு இருந்து நற்பண்புகளை வளர்ப்பதே! கலியின் உருவம் அப்படித்தான் இருக்கும். நாமும் அதற்கு உகந்தவாறு இருப்பது நியதி என்று எண்ணி, அதோடு கலந்துவிடக்கூடாது. நல்லவற்றை உரைக்கும் நேரம் வந்துவிட்டது என்று நினைத்து, நல்லதை கடைப்பிடிக்க வேண்டும்.

சிதம்பர ரகசியத்துக்கு ஆன்மிக ரீதியாக உங்களது விளக்கம் என்ன?

- கே.எல்.கந்தரூபி, மேலக்கிருஷ்ணன்புதூர்.

பஞ்ச பூத வடிவான ஐந்துமுகன்- பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என தனித்தனியாக ஐந்து இடங்களில் விளங்குகிறான். இவற்றில் சிதம்பரம்- ஆகாச வடிவமாக விளங்குகிறது. ஆகாசத்துக்கு தனிச்சிறப்பு உண்டு. ஆகாயம் இல்லாத இடம் இல்லை. அது வெட்டவெளி- மாறுபடாதது- கண்ணுக்குப் புலப்படாதது. அங்கு எதுவும் ஒட்டாது. உருவம் இல்லாத அதைப் பரம்பொருளுக்கு ஒப்பிடலாம்.

நாம் வாழும் வெட்டவெளியை மட்டுமே பயன்படுத்த இயலும். டம்ளரில் காபி இருக்கிறது. அங்கும் வெட்டவெளியில் காபி இருக்கிறது என்று பொருள். அது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அசையாது. ஏன் என்றால் இடைவெளி இல்லாமல் உலகெங்கும் வெட்டவெளி பரவி இருப்பதால், அது அசையத் தனி இடைவெளி தேவை இல்லை. நாம் அசைய அது உதவுகிறது.

ஆகாச லிங்கத்தைச் சுட்டிக்காட்ட வெட்டவெளியைக் காட்டுவார்கள். அதுதான் சிதம்பர ரகசியம்.

மரக்காலால் நெல்லை அளக்கிறோம். நெல்லை அளப்பது ஆகாசம், வீட்டு அறைகளில் ஆகாசத்தை பயன்படுத்துகிறோம்.

பரம்பொருளில் இருந்து வெட்டவெளி தோன்றியது. பாக்கி நான்கு பூதங்களும் அதிலிருந்து வெளிவந்தன என்று படைப்புத் தத்துவம் விளக்கும். ஆகையால், பூதங்களுக்கு ஆதியான ஆகாய வடிவில் தென்படும் பரம்பொருளைச் சுட்டிக்காட்டுவது ரகசியம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முன் வினையின் பயனை அனுபவிப்பது யார்?

மகாபாரதத்தில் திருதராஷ்டிரனுக்குக் கண் தெரியாததால், கண்ணுக்குக் கண்ணாக இருந்து அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டிய மனைவி காந்தாரியும் தன் கண்களைக் கட்டிக் கொண்டது முறையா?

- எஸ். தியாகராஜன், ஸ்ரீரங்கம்.

'**க**ண்ணுக்குக் கண்ணாக இருந்து கணவனுக்குப் பணிவிடை செய்யவேண்டியவள் காந்தாரி!' எனும் தங்களது கருத்து புதுச் சிந்தனையாளர்களின் பார்வையில் உயர்வாகப்படலாம். நமது பண்புதோய்ந்த பார்வையில் அதன் விளக்கம் வேறு. கணவனுக்கு உள்ளுணர்வோடு உதவவேண்டுமானால், அவள் கண்களைக் கட்டிக்கொள்ளத்தான் வேண்டும். கணவனால் பார்க்க முடியாத ஒன்று, தனக்கும் தேவை இல்லை என்று நினைக்கிறாள். அவள் மட்டும் பார்த்து, ரசித்து, அதன் விளக்கத்தை கணவனுக்கு வெளிப்படுத்தினால் அப்போது, 'தனக்குப் பார்வை இல்லையே?' என்ற துயரம் கணவனை ஆட்கொள்ளும். பார்ப்பதை விளக்காமல் இருக்க அவளால் இயலாது. அதனால் ஒவ்வொரு முறையும் 'கண்ணில்லை' என்ற எண்ணத்தைப் புதுப்பித்தவாறே கணவனை நித்திய துயரத்தில் ஆழ்த்த நேரிடும்.

தன் அழகைப் பார்க்கவேண்டியவன் கணவன். 'அவனால் பார்க்க இயலாத அழகு தனக்கு வேண்டாம்' என்று நினைக்கிறாள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



முகத்தின் முழு அழகையும் மிளிரவைப்பது பார்வைதான். அதை பிறர் பார்க்கக்கூடாது என்று அவள் கண்களைக் கட்டிக் கொண்டாள்.

மனம் குரங்கு போன்றது. புது விஷயங்களைக் காண நேர்ந்தால் அதில் பிடிப்பு ஏற்பட்டு, அது கடமையைக் கழற்றிவிடும். கண்களைக் கட்டாவிட்டால் வெளியுலகைப் பார்க்கும் ஆர்வத்தில் கணவனுக்குப் பணிவிடை செய்ய வேறொருவரை நியமித்து, கடமையில் இருந்து நழுவ வாய்ப்பு இருக்கும். விஷப்பரீட்சையில் அவள் இறங்கவில்லை. கண்களைத் திறப்பது, ஆசைகளுக்குக் கதவைத் திறந்து விடுவதுபோல். அது கணவனை பாதிக்கும். அதை அவள் விரும்பவில்லை. ஆடை- ஆபரணங்களால் மனைவியின் அழகைப் பெருக்கி, அதை கணவன் பார்த்து... ரசித்து... அதை உணர்ந்து மனைவியும் மகிழ்ச்சியில் பொங்கிப் பூரிப்பாள். அது அவர்களது உறவை உறுதிப்படுத்தும். இந்த நோக்கில்தான் திருமணத்தில் மனைவியின் அலங்காரம் முக்கியத்துவம் பெறுகிறது.

அலங்காரம் கணவன் ரசிப்பதற்காகவே. வீட்டுக்குள் சாதாரண உடையிலும், வெளியே செல்லும்போது அலங்காரத்துடன் தென்படுவது பழைய நடைமுறை இல்லை. கணவன் ரசிக்காத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இடங்களில் அலங்காரத்தைத் தவிர்ப்பார்கள். பிறவியிலேயே பார்வையற்றவர்களுக்கு, விபத்தில் பார்வை இழந்தவர்களைப் போல் மனம் பாதிப்பு அடையாது. ஒரு புலன் செயலிழந்தால், அதை ஈடுகட்ட மற்ற புலன்கள் கூர்மை அடையும். அன்றாட அலுவல்களை பார்வையற்றவர்கள் அனாயாசமாகச் செய்வார்கள். இதனால், காலப்போக்கில் குறை என்ற எண்ணம் படிப்படியாக மறையும். அதனால் சிந்தனை வளம் பெறுவதும் உண்டு. தன்னுடன் இருந்த சஞ்சயன் மூலம் மகாபாரதத்தைக் காதால் கேட்டு, நிலவரத்தையும் முடிவையும் அறிந்தான் திருதராஷ்டிரன்.

இங்கு பதிவிரதையின் சிறப்பு மிளிர்கிறது காந்தாரியிடம். சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் பண்டைய தம்பதிகளில், ஒருவருக்குத் தகுதி குன்றிவிட்டால், மற்றவரும் அந்தத் தகுதியை இழப்பாரே தவிர, அதில் ஒருவர் மட்டும் இழக்காமல் ரசிப்பது அவர்களிடம் தென்படாது. குழந்தைக்காக தாயார் 'பத்தியம்' இருப்பது நடைமுறை.

பொதுவாக நமதுநாட்டுத் தம்பதியிடம் உள்ளும் புறமும் தென்படும் நெருக்கம் வலுவானது. கணவனுக்குப் பணிவிடை என்பது, எதிர்பார்ப்பு இல்லாத ஒத்துழைப்பு. மனம் ஒன்றிய பின் தானாக மலரும் பண்பு. அந்தப் பண்பின் சிகரம் காந்தாரி. காந்தாரி கண்களைக் கட்டிக்கொண்டதால் அவளும் உயர்ந்தாள்; கணவனையும் உயர்த்தினாள்.

நான் *15* வருடங்களாக ருத்ராட்ச மாலை அணிகிறேன். *2003*-ல் காட்மண்டுவில் வாங்கிய 'ஏகமுக'



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ருத்ராட்சத்தை டாலராகக் கோத்து அணிந்தேன். 'ஏகமுக ருத்ராட்சத்தை அணியக்கூடாது' என்று சிலர் சொன்னதால் ருத்ராட்ச மாலை அணிவதை நிறுத்திவிட்டேன். (கௌரிசங்கர ருத்ராட்சமும் ஏகமுக ருத்ராட்சமும் என்னிடம் உள்ளன) அணியலாமா, கூடாதா?

- ஜே. சங்கரன், சென்னை-59.

எத்தனை முகம் ஆனாலும் ருத்ராட்சம் அணிவது சிறப்பு. முகங்களின் பாகுபாட்டை வைத்துச் சொல்லப்படும் விளக்கங்கள் ஏற்புடையது அல்ல. அதை அணிந்து கடவுளை வழிபடுவதும் சிறப்பு. சிறுநீர், மலம் கழித்தல், நீராடல், உணவு, உறக்கம் ஆகிய வேளைகளில் ருத்ராட்சத்தைத் தவிர்த்து விடுங்கள். மற்ற நேரத்தில் கழுத்தில் ருத்ராட்சம் இருக்கலாம். கௌரி சங்கரம் கழுத்தில் அணியலாம்.

தற்போது, தனக்குத் தெரியாத விஷயங்களில் விளக்கம் அளிப்பவர்கள் அதிகம். அப்பாவி மக்களுக்கு அவர்களை அடையாளம் காண முடியாது. ருத்ராட்சத்தின் மேல் தங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்? ருத்ராட்சம் அணியுங்கள். உணவுடன் கோபித்துக் கொண்டு உணவைத் தவிர்க்க மனம் வருமா... சிந்தியுங்கள்!

உடல்- மனம்- புத்தி ஆகியவற்றின் கூட்டு முயற்சி செயல். ஆன்மா வெறும் சாட்சி; அதனால் பாதிப்பு இல்லை. மரணத்தால் உடலும், சம்ஸ்காரங்களால் நுண்ணுணர்வும்- கூடும் போய்விடுகின்றன. அப்படியானால், முன்வினைகளின் பயனை மறுபிறவியில் அனுபவிப்பது யார் அல்லது எது?

- எம்.ஆர். கபாலி, சென்னை-17.

முற்பிறவியில் சேமித்த செயல்பாடு, மறுபிறவிக்கு விதையாகிறது. மனதோடு ஒட்டிக்கொண்டிருக்கும் கர்மவினை அவனை துயரத்திலோ, மகிழ்ச்சியிலோ ஆழ்த்துகிறது. நமது செயல்கள், பலனை அளித்து நிறைவுபெறும். பலனளிக்காமல் அழியாது என்பது கோட்பாடு. வாசனையோடு அல்லது கர்மவினையோடு இணைந்த மனம், நமது முயற்சியால் கரைக்கப்பட்டு மறைந்தால் மறுபிறவி இருக்காது!

'மனம்' என்று நாம் சொல்வது வாசனை கலந்த எண்ணக் குவியல். அது அழியும்போது மனம் இல்லாமல் போய்விடும். வாசனை அழிந்தால் பிறப்பதற்கு வாய்ப்பு இல்லை. நாம், நமது முன்வினைகளின் பலனை முற்றிலும் அழிக்கவேண்டும். முந்தைய கர்மவினை- பிந்தைய கர்மவினை- வருங்காலத்தில் கர்மவினையாக உருவாகும் நடைமுறைச் செயல்பாடுகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அத்தனையும் அழிக்கப்பட வேண்டும். இதைச் சஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமிம் என்ற சொற்களால் சுட்டிக்காட்டுகின்றன நமது நெறி நூல்கள். கடமையும் நன்னடத்தையும் தவமும், சேமித்து வைத்தவற்றைக் கரைத்துவிடும். தற்போது செயல்பாட்டில் இருக்கும் கர்மவினை, அனுபவித்து முடிந்துவிடும். வருங்காலத்துக்கு கர்மவினை மீதமில்லாமல் இருக்கவேண்டும். அதற்கு ஆசையுடன் பலனை எதிர்பார்த்துச் செயலில் இறங்கக்கூடாது. பற்றற்று, கடமையுணர்வோடு செயல்படவேண்டும். எதிர்பார்ப்பு இல்லாமல் செயல்படும்போது கர்மவினை நம்மோடு இணையாது. பற்றுதலே, கர்மவினை தொடரக் காரணம்.

மூன்று வழிகளில் கர்மவினையைக் கரைத்துவிட்டால், அவன் பிறக்கக் காரணம் இருக்காது. உடல், மனம், ஆன்மா அத்தனையும் பிரிந்து போனாலும் கர்மவினை மிச்சம் இருந்தால் அடுத்த பிறவியில் அவனைப் பற்றிக்கொள்ளும். ஒருவனுக்கு வெந்நீர் நன்றாகச் சுடவேண்டும் என்று விறகுக் கட்டைகளை அடுப்பில் திணிக்கிறான். பாத்திரத்தில் உள்ள தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. போதுமென்று தோன்றியவுடன் விறகுக் கட்டைகளைத் தண்ணீரால் அணைத்துவிடுகிறான். இப்போது நெருப்பு அணைந்தாலும் அதன் வெப்பம்- அதாவது அதன் இயல்பு பாத்திரத்திலும் தண்ணீரிலும் பரவி, அழியாமல் வெப்பத்துடன் தென்படுகிறது. நெருப்பு அணைந்தால் சூடு தணியவேண்டும். இங்கு நெருப்பு அணைந்த பிறகும் தண்ணீரில் சூடு தென்படுகிறது. உடல் அழிந்தாலும் உயிருள்ளபோது செய்த செயல்பாடுகள், தண்ணீருக்கு மாறிய சூடுபோல் அடுத்த பிறவியிலும் தொடரும். மாட்டுச் சந்தையில் எத்தனையோ மாடுகளுக்கு மத்தியில் தனது தாயை அடையாளம் கண்டுவிடும் இளங்கன்று. அதேபோல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முற்பிறவியில் செயல்பட்டவனை அடையாளம் கண்டு, பற்றிக் கொள்ளும் கர்மவினை. அதுவரை அது அழியாமல் இருக்கும். இந்த உலகைத் துறந்தவனுக்குத் துணை, அவன் செய்த செயல்பாடுகளே என்று சாஸ்திரம் கூறும் *(தர்ம: ஏகா பரமஹோ பரலோக யானே)*. 'வீடுவரை உறவு... கடைசி வரை யாரோ?' என்கிற கேள்விக்கு பதில் அவன் செய்த கர்மவினை. செயல்- அறிவுப் புலன்கள்- மனம்- புத்தி- சித்தம்- அகங்காரம் இவை அத்தனையையும் ஏற்படுத்தி அவனை மறுபிறவி ஏற்க வைக்கும் கர்மவினை. கர்மவினையை அழிக்க, எத்தனையோ வழிமுறைகளைப் பரிந்துரைத்திருக்கின்றனர் நம் முன்னோர். அவர்களது நூல்களைப் பார்த்தால் நமக்கு மலைப்பாக இருக்கும். வேதம், வேதாந்தம், மீமாம்சை, தர்க்கம், ஸாங்கியம், யோகம், வைசேஷிகம் - இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இத்தனை பொக்கிஷங்கள் இருந்தும், பயன்படுத்த மனம் இல்லாமல், கர்ம வாசனையைச் சேமித்து, திரும்பத் திரும்பப் பிறந்து இறந்து வாழும் நமது அறியாமையை என்னவென்று அழைப்பது!

கர்மவினையை அழித்தால் பிறவி இருக்காது. அழிக்காமல் இருந்தால் சங்கிலித் தொடர்போல் அவன் அனுபவித்துக் கொண்டே இருப்பான்... முடிவு இருக்காது!

சிவன் கோயில்களில் அங்கப் பிரதட்சிணம் செய்யாததன் காரணம் என்ன?

- ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்-2.

அங்கப் பிரதட்சிணம் என்பது நமது பற்றுதலில் விளைந்த பணிவிடை. பிற்பாடு அதற்கு சட்ட வடிவம் கொடுத்துவிட்டோம். சிவன் கோயில்களிலும் அங்கப் பிரதட்சிணம் செய்யலாம். நீங்கள் முன் நின்று ஆரம்பித்து வைத்தால், அதைப் பின்பற்றி மற்றவர்களும் செய்வார்கள். காலப்போக்கில் சிவன் கோயிலில் அங்கப் பிரதட்சிணம் செய்வது சிறப்பு என்றாகிவிடும். ஆகமங்கள், சாஸ்திரங்கள்-இவற்றின் கோட்பாடுகள் மெள்ள மெள்ள மறைந்து, பெரிய மனிதர்கள்- செல்வாக்கு மிக்கவர்கள் ஆகியோரது செயல்பாடுகளை, ஆகமத்தைவிட உயர்வாக மதிக்கும் எண்ணம் நம்மில் மேலோங்கி இருக்கிறது.

திருமணத்துக்கு முன்னரே, வரவேற்பு நிகழ்ச்சி கொண்டாடுகிறோம். தம்பதியாக மாறும் முன்பே தம்பதி என்று நினைத்து அவர்களை வாழ்த்துகிறோம். அதை, சரி என்றும் ஏற்றுக் கொள்கிறோம். தற்போது எது நமக்குச் சௌகரியமாக இருக்குமோ அதை ஏற்றுக் கொள்வோம். அது சாஸ்திரத்துக்கும் பொருந்தினால், 'நாங்கள் சாஸ்திர வரம்பை மீறமாட்டோம்!' என்று தற்பெருமை கொள்வோம். சாஸ்திரம் சொல்வது சௌகரியமாக இல்லை என்றால், ஆயிரம் கேள்விகள் கேட்டு அதை திணறடித்து விரட்டி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விடுவோம். தற்காலத்தில் ஏற்பட்ட அதிசயப் பண்பு, பந்தயம்- போட்டி என்று வந்தால் மலை ஏறவும் தயங்க மாட்டோம்.கடினமான போட்டியிலும் கலந்துகொள்வோம். மலையேறி சாமி தரிசனம் செய்ய 'ஹெலிகாப்டர்' தேடுவோம். நமது விருப்பத்துக்கு இணங்குபவராகக் கடவுள் இருக்கவேண்டும். இல்லை என்றால், அவர் கடவுளாக இருக்கும் தகுதியை இழந்தவர் என்ற விளக்கமளித்து பெருமைப்படுவோம்.

'யாருக்கு அங்கப் பிரதட்சிணம்- யாருக்கு இல்லை?' என்ற வாதப்பிரதிவாதங்களில் இறங்கி இறை வழிபாட்டை ஒரு சடங்காக மாற்றிவிடக் கூடாது. எந்த நடைமுறையைப் பின்பற்றினாலும் பக்தியோடு வழிபடுவது சிறப்பு. வெறும் அங்கப் பிரதட்சிணம் பயனளிக்காது. பக்தியோடு கலந்த அங்கப் பிரதட்சிணம் சிறப்பு. பணிவிடை எதுவானாலும் பக்திக்கு முதலிடம் வேண்டும். சுரத்தில்லாமல் செயல்படுவது பயனற்றது. 'ஓர் இலை- (துளசி அல்லது வில்வம்), ஒரு புஷ்பம்- (தாமரை, மல்லிகை), ஒரு பழம்- (வாழை, பலா, மா) அல்லது தண்ணீர்- இவற்றில் ஒன்றை எனக்குப் பக்தியோடு படைத்து விடு. உனது குடும்ப பாரத்தை நான் சுமந்து உதவுகிறேன்!' என்று கண்ணன் சொன்னான். அவன் சொன்ன பொருள்களில் ஏற்றக் குறைச்சல் கிடையாது.

பக்தியோடு தோய்ந்த எந்தப் பொருளும் தனக்குப் பிடித்தமானது என்பது கண்ணனின் எண்ணம். நடைப் பிரதட்சிணமானாலும், அங்கப் பிரதட்சிணம் ஆனாலும் பக்தி இருந்தால் மட்டுமே செலாவணியாகும். ஆகையால், பக்தியோடு சிவன் கோயிலிலும் அங்கப் பிரதட்சிணம் செய்வது தவறு அல்ல!

தற்போது எங்கும் 'விஷ்ணு சகஸ்ர நாம' பாராயணம் அமோகமாக நடைபெறுகிறது. இதில் ஸ்தோத்திரம், நாமாவளி என்ற பிரிவில் உள்ளது. பொதுவாக 'ஓம்' என முதலில் சேர்த்தபின், முடிவில் நம: என்று சொல்லும்போது நாமாவளி கூறப்படுகிறது. இதில் பல ஸ்தோத்திரங்கள் உள்ளன. விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம் (யாகம்) என வரும்போது, எந்த முறையில் விஷ்ணு ஸஹஸ்ர நாம மந்திரங்கள் வகுக்கப்பட்டுள்ளன? சண்டி ஹோமம், சுதர்சன ஹோமம் என மந்திரங்களைத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தனித்தனியாகச் சொல்லி பலர் ஹோமம் செய்கின்றனர். அந்த முறையில் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்துக்கு தனியாக ஹோமம மந்திரங்கள் உள்ளனவா? ஆனால், பலர் நாமாவளியையே 'ஓம்' எனச் சொல்லி முடிவில் 'ஸ்வாஹா' என்று முடிக்கின்றனர் இது சரியா? ஸ்தோத்திரங்கள் (108), நாமாவளி (1008) விளக்கம் தேவை.

- ஆர். பாலசுப்ரமணியன், சென்னை-53.

'**வி**ஷ்ணு சஹஸ்ர நாமம்' பாராயணம் செய்வதற்கானது. அதனால் வேள்வி செய்வது இல்லை. சுதர்சன ஹோமம், சண்டி ஹோமம் போன்றவை அல்ல இது. தற்காலச் சூழலில் விதிக்குப் புறம்பாகச் செயல்படுபவர்களும், அதை ஏற்றுக்கொள்ளும் அப்பாவி மக்களும் ஏராளம். மக்களின் விருப்பப்படி எப்படியும் வழிபடலாம் என்று கூற இயலாது. அதற்கும் ஒரு நடைமுறை வகுத்திருக்கிறார்கள். அதைத்தான் பின்பற்ற வேண்டும்.

108 பெயர்களைச் சொல்லி வழிபடுவது 'அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்திரம்.' ஆயிரம் நாமங்களைச் சொல்லி வழிபடுவது 'சஹஸ்ரநாம ஸ்தோத்திரம்.' 1008 என்பது தற்காலத்தவர்களின் படைப்பு. ஏறக்குறைய முப்பது வருடங்களுக்கு முன்பு சனிப் பெயர்ச்சி- குருப் பெயர்ச்சி யாகங்கள் தோன்றவில்லை. தின ராசி பலன்- வாஸ்து- ராசிக்கல் ஆகியவற்றுக்கெல்லாம் மவுசு இருக்கவில்லை. தற்போது அவை செழிப்புற்று விளங்குகின்றன. அதுபோல் முன்பு இல்லாத சஹஸ்ரநாம ஸ்தோத்திரம் சிலது மாய்ந்தும், சிலது தோன்றியும் இருப்பது இயற்கை. நாம் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விளக்கை ஊதி அணைக்கலாமா?

ஒரு பத்திரிகையில் 'வாசகரின் ஆன்மிக அனுபவம்' பகுதியில் பணம் மற்றும் நகைகளை திருப்பதி ஏழுமலையான் உண்டியலில் காணிக்கையாகப் போட்டால், பத்து மடங்காக நமக்குத் திருப்பித் தருகிறான் என்று பலர் நம்புவதாகவும் இதற்குச் சான்றாகப் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், அதில் காணிக்கை செலுத்தி பலன் பெற்ற வாசகர்கள் குறித்த விவரங்களையும் வெளியிட்டிருந்தார்கள். இது குறித்து தங்களது கருத்து என்ன?

- பி.சீனிவாசன், திருச்சி-14.

வாசகரின் ஆன்மிக அனுபவங்கள் ஒரு சில உண்மையாக இருக்கலாம்; சில உண்மை போல் தோற்றம் அளிப்பவை. அவை, சில அப்பாவிகளை உண்மை என்று ஏற்றுக்கொள்ளச் செய்பவை. அனுபவங்களை- ஆன்மிக அனுபவங்களை வார்த்தைகளால் விளக்க இயலாது.

இனிப்பை இனிப்பு என்றுதான் விளக்க இயலும். அதன் உணர்வு வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. கடவுள் வழிபாடு, பக்தி, பஜனை போன்றவை ஆன்மாவை அடையாளம் காணப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள். கடவுள் வழிபாடு என்பது ஆன்மிகத்தைச் சென்றடையும் வழி. ஆஸ்திகமும் பக்தியும் வழிபாடும் ஆன்மிக உணர்வை ஈட்டித் தரும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'பக்திதான் ஆன்மிகம்!' என்று நினைத்து பக்தியின் செயல்பாட்டில் கிடைத்த லௌகீகப் பொருளாதாரச் செழிப்பை வெளிப்படுத்துகிறார் வாசகர். ஆன்மிகம் உலகவியல் இன்பத்தைத் தருகிறது என்கிறார். பல பெரியோர்களது கொள்கைகளை, இவரது அனுபவம் அர்த்தமற்றதாக்குகிறது. கடவுளை வியாபாரப் பொருளாக நாம் மாற்றி இருக்கிறோம். இவரது அனுபவம் அவரை வியாபாரியாக மாற்றிவிட்டது. கடவுள் நிலைக்கு நாம் உயரவேண்டும் என்று எண்ணுகிறோம். வாசகர், கடவுளை நமது நிலைக்குக் கொண்டுவந்து காட்டுகிறார்.

பொருளீட்டுவதில் மனம் லயித்துவிட்டால், ஆன்மிகம் தோன்றாது. வியாபாரம் என்றால் உண்மையும் பொய்யும் கலந்திருக்கும். ஆன்மிகத்தில் உண்மை மட்டும் இருக்கும். அவர், என்ன தகவல் தருகிறார் என்று புரியவில்லை. பணத்தை முதலீடு செய்ய திருப்பதி உண்டியலைச் சுட்டிக்காட்டுகிறாரா அல்லது கடவுளும் ஒரு வியாபாரி என்று விளக்குகிறாரா என்று புரியவில்லை. கடவுள் முழுமை பெற்றவர். அவருக்கு எந்தத் தேவையும் இல்லை. எல்லாம் நிரம்பியவர். அவர் வட்டிக்கடை நடத்தவேண்டிய அவசியம் இல்லை. செய்யாத ஒன்றை, கடவுள் செய்கிறார் என்று தனது அனுபவத்தை விளக்குகிறார் அவர். அதை எப்படி நம்புவது?

'எனது கனவில் பிள்ளையார் தோன்றினார். அவரை வணங்கி வழிபட்டு, வாழ்வதற்கு வழி கேட்டேன். அவர், 'என் பெயரைச் சொல்லி பிறரது துன்பத்தைக் களைந்துவிடு. அவர்கள் தரும் பணத்தை வைத்து வாழ்க்கையை நடத்து' என்று சொல்லி மறைந்து விட்டார். அன்று முதல் அவர் பெயரைச் சொல்லி வழிபட்டு, அத்தனை பேரின் துன்பத்தையும் அகற்றி, அவர்களை வாழ வைக்கிறேன்!' என்று ஒருவர் தனது அனுபவத்தை விளக்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். இதற்கு ஆதாரம் அவரது வார்த்தைகள்தான். எல்லோருக்கும் இதில் நம்பிக்கை வராது. வேத சாஸ்திரம் தரிசனம் புராணம் ஆகியவற்றைப் படித்தவர்களது மனம் இதை ஏற்காது.

சாஸ்திரங்களில் நம்பிக்கை ஊன்றி இருப்பதால், இந்த அனுபவங்கள் உண்மையே ஆனாலும் மனம் புறக்கணிக்கும். அவரது அனுபவம் பொது நம்பிக்கைக்கு உகந்தது அல்ல. ஆன்மிக அனுபவங்களைப் படிப்பதில் தவறில்லை. சாஸ்திரம் என்கிற உரைகல்லில் உரைத்துப் பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும். எது செய்யவேண்டியது- எது செய்யக்கூடாதது, எதை ஏற்கலாம்- எதை ஏற்கக்கூடாது என்பதைத் தெரிந்துகொள்ள சாஸ்திரம்தான் ஆதாரம் என்று பரமாத்மா கண்ணன் சொல்கிறார். *(தஸ்மாச் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யா கார்ய வ்யவஸ்திதௌ)*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மடாதிபதிகள் கையில் ஒரு தண்டத்துடன் காணப்படுகிறார்களே... அது ஏன்?

- கே.எஸ்.எம், வந்தவாசி.

சந்நியாஸி தண்டம் தரிக்கவேண்டும். அது அறத்தின் அறிவுரை. பிரம்மச்சாரி- அதாவது கல்வி கற்பவனும் ஒரு தண்டம் வைத்திருப்பான். ஆட்சி புரியும் அரசனும் தண்டம் வைத்திருப்பான். அதுவும் அறம். சந்நியாஸிகளுக்கு ஒரு தனி அறம் உண்டு. அவன் அறிவாளி. ஸித்தி அடையும் வரை செயல்பட வேண்டும். சந்நியாஸி பற்று இல்லாமல் செயல்படவேண்டும் என்று கண்ணன் கூறுவான் *(சக்தா: கர்மாணி)*.

காஷாயத்தையும் தண்டத்தையும் தரித்தவனை (சந்நியாஸியை) பார்த்தால் வணங்கவேண்டும் என்று அறிவுறுத்தும் சாஸ்திரம் *(காஷாய தண்ட மாத்ரேண யதி:பூஜயோ நஸம்சய:)*. காஷாயம் எப்படியோ, அப்படியே தண்டமும் இருக்கவேண்டும்.

கோயிலுக்கு வெளியே அமர்ந்து பிச்சை எடுப்பவர்களுக்கு, தெய்வ வழிபாடு முடிந்த பின்புதான் தானம் செய்ய வேண்டுமா?

- பொன்விழி, அன்னூர்.

கோயிலுக்குச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தால், கடவுளைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருப்போம். அப்போது வேறெந்த அலுவலிலும் ஈடுபடுவது முறையில்லை.

கடவுளிடம் பக்தி வேண்டும். செயல்பாட்டில் பற்று வேண்டும். கடவுளை நினைக்கும் மனம் வேறொன்றில் திருப்பிவிடப்பட்டால், கடவுள் வழிபாடு சிறக்காது. ஏழைகளுக்கு தானம் அளிப்பது சமூக தர்மம். அதை எப்போது வேண்டுமானாலும் செய்யலாம்.

கடவுள் வழிபாட்டுக்குக் குறிப்பிட்ட நேரம் உண்டு. ஆகையால், கடவுளை வழிபட்ட பின் தானம் செய்யவும். தங்களது சிந்தனைக்கு ஒரு வார்த்தை... ஒரு கோணத்தில், கோயில் முன் அமர்ந்திருக்கும் பிச்சை எடுப்பவர்களை நாம்தான் மறைமுகமாக ஊக்குவிக்கிறோம். நமது நல்லெண்ணத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பிச்சை எடுப்பது என்பது இழுக்கு. ஆனால், வேறு வழியின்றி அதில் தள்ளப்பட்டவர்களுக்கு உதவுவது நல்லதே. ஆனால், நமது கடமைகளில் ஒன்றாகக் கருதி அதை எப்போதும் வளர்க்கக் கூடாது.

கல்யாணம், சமாராதனை (வேங்கடாசலபதி பூஜை) போன்றவற்றில் கடமையை முடித்த பிறகு அன்னதானம் செய்கிறோம். பஜனை முடிந்த பிறகு சுண்டல் விநியோகம். தெய்வ வழிபாட்டோடு இணையாத எந்தச் சடங்கையும் நமது பண்பாட்டில் பார்க்க முடியாது. கடமையை ஆற்றிய பிறகு கொடை என்பது பொருத்தம்.

விளக்கை ஊதி அணைக்கக் கூடாது என்கிறார்களே... அதன் தாத்பரியம் என்ன?

- ஆர். இராஜேஸ்வரி ராமகிருஷ்ணன், எரகுடி.

விளக்கு என்பது நமது பண்பாட்டில் மதிப்புக்கு உரிய ஒரு பொருளாகக் கருதப்படுகிறது. எப்படி பிள்ளையாரை வணங்கிச் செயலைத் தொடர்கிறோமோ, அப்படி விளக்கேற்றி விழாவைத் துவக்குவோம். விளக்கொளியை பரம்பொருளாக நினைக்கிறோம்.

'பரம்பொருளின் வடிவே! உண்மையை விளக்கும் கலங்கரை விளக்கமே! எது ஆன்மா, எது ஆன்மா அல்ல என்பதை நானே அறிந்துகொள்ளும் பகுத்தறிவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வழங்கி, என்னை அறிவாளியாக்கு!' என்று தர்மசாஸ்திரம் விளக்கின் உயர்வை விளக்கும் *(பரமாத்ம தனோ தீப:)*.

பொழுது புலர்ந்தவுடன் விளக்கொளியில் கண்விழிப்பர் நம் முன்னோர். கோயிலில் விளக்கைப் பார்த்தால், கடவுளைப் பார்த்த மாதிரி. சாமி புறப்பாட்டில் விளக்கு முன்னே செல்லும். இரவைப் பகலாக்க விளக்கு உதவுகிறது. அதை வாயால் ஊதி அணைப்பது அபசாரம். ஊதும்போது நம்மையும் அறியாமல் எச்சில் திவலைகள் விளக்கில் படுவதைத் தவிர்க்கவேண்டும். நெருப்பில் ஜ்வாலையை வரவழைக்க ஊதுவதுண்டு. அங்கு தர்மசாஸ்திரம் எச்சரிக்கும். அக்னியை வளர்க்க ஊதுவதைத் தவிர வேறு வழியில்லை என்கிற இக்கட்டான சூழலில், கையால் மறைத்து ஊதச் சொல்லுகிறது. காற்று கையில்பட்டு நெருப்பில் படவேண்டும். எச்சில் திவலைகள் கையில் பட்டுவிடும். காற்று மட்டும் நெருப்பை நெருங்கும்.

இந்த விளக்கத்தை வைத்துக்கொண்டு, நானும் கையால் மறைத்து விளக்கை அணைக்கிறேன் என்று விதண்டாவாதம் செய்யாதீர்கள்!

சுவர், மேல்நிலைத் தொட்டியின் பக்கவாட்டுப் பகுதி ஆகிய இடங்களில் அரசமரச் செடிகள் முளைக்கின்றன! சுவர்களில் விரிசல் ஏற்படும் அபாயம் இருப்பதால், இந்தச் செடிகளைப் பிடுங்கி எறியக்கூடாதா? மணமாகாத ஆண் பிள்ளைகள், இந்தச் செடிகளை அகற்றக்கூடாது என்ற கருத்து நிலவுகிறது! இதற்கு விளக்கம் தாருங்கள்!

- ஐ.எஸ். ஸ்ரீனிவாசன், சென்னை-82.

வீட்டுச் சுவர்களில் தோன்றிய அரசமரக் கன்றுகளை அகற்றலாம்; அது தவறாகாது. நாம் தன்னிச்சையாக அதை ஏற்படுத்தவில்லை. பறவையினங்களின் செயல்பாடு அங்கு அரசமரக் கன்று தோன்றக் காரணம். சிங்கம், மானைப் பிடிக்க முனைகிறது. பாம்பு, தவளையை விழுங்க விரைகிறது. இங்கு மானைக் காப்பாற்ற முயன்றால், சிங்கத்தின் உணவைப் பறிக்கிறோம் என்ற தவறு முளைக்கிறது. தவளையைக் காப்பாற்ற முயன்றாலும் அப்படித்தான். ஓர் அறத்தைச் செயல்படுத்தும்போது, மற்றோர் அறம் கைவிடப்படுகிறது. இதன் பெயர் தர்மசங்கடம். அறத்தைச் செயல்படுத்தியதால் சிக்கல் தோன்றியது என்று பொருள். இதில் ஏதாவது ஒன்றைத்தான் நம்மால் கடைப்பிடிக்க முடியும். எதைக் கடைப்பிடிப்பது?



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

துயரத்தில் ஆழ்ந்தவனை மீட்கவே நம் மனம் இயல்பாக எண்ணும். அந்த நேரத்தில் அறத்தையே மறந்துவிடும். நாம் இருக்க வேண்டிய வீட்டைக் காப்பாற்ற, அரசமரக் கன்றை அகற்றலாம். வலியத் துயரத்தை வரவழைத்துக் கொள்வது அறமாகாது. வயலில் களை எடுப்பது அதர்மமாகாது. தங்க ஊசி என்பதால் கண்ணைக் குத்திக்கொள்ள முடியுமா? அரச மரத்தை வெட்டி, அங்கு சுவர் எழுப்பக்கூடாது. நமது சுவரில் வந்த அரசமரக் கன்றை வெட்டி எறியலாம்.

'நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை!' என்பதன் பொருள் என்ன?

- க.சு. மணியன், பெரணமல்லூர்.

சொந்த வீட்டில் சுதந்திரம் இருப்பதால், முழு அளவில் நமது அன்றாட அலுவல்களைக் கடைப்பிடிக்க இயலும். அந்நியனது வீட்டில் தங்கநேர்ந்தால், அப்படிச் செய்ய இயலாது. அங்கு நமது ஆசாரத்தைக் குறைத்துக் கொள்ளலாம். உதாரணமாக வீட்டில் கணவன் உண்ட பிறகு மனைவி பசியாறுவாள். ஆனால், திருமண விருந்தில் இது சாத்தியம் இல்லை. இருவரும் சேர்ந்து சாப்பிடலாம். தவறில்லை. கிராமத்தில் செயல்படுத்தப்படும் நடைமுறையில் நான்கில் ஒரு பங்கு பட்டணத்தில் செயல்படுத்தினால் போதும் என்பார்கள் *(பத்தனே பாதமாசாரம்)*. 'பயணத்தில் உணவை கையில் வைத்துக்கொண்டு உண்ணலாம்... தவறில்லை!' என்று ஆசாரத்தை-நல்ல நடைமுறையைச் சுருக்கிவிடும் சாஸ்திரம்.

ஏகாதசியில் உணவின்றி இருக்கவேண்டும் என்று சாஸ்திரம் சொல்லும். தகுதியும், அதில் பற்றும் இருப்பவனுக்கு அது பொருந்தும். ஏழ்மையில் தவிப்பவனுக்கும், கள்ளம் கபடமற்ற அப்பாவிகளுக்கும் இந்த நியமங்கள் தேவை இல்லை. கடமையை ஆற்றவே அல்லல்படும் மக்களுக்கு நாள், கிழமை, விரதம், உபவாசம் போன்றவை தேவையில்லை. அவர்களது கடமையுணர்வு மட்டுமே, இவற்றின் பயனை அவர்களுக்கு அளித்துவிடும். ஆகையால் நலிந்தோர்க்கு விதிவிலக்கு அளிக்கிறது தர்மசாஸ்திரம்.

வீட்டுத் தோட்டத்தில் வில்வ மரம் வளர்க்க ஆசைப்படுகிறேன். ஆனால், வீடுகளில் வில்வ மரம் வைக்கக்கூடாது என்கிறார் பெரியவர் ஒருவர். விளக்கம் தேவை.

- கே.வி. மார்க்கபந்து, சென்னை-83.

வீடுகளில் வில்வ மரம் வைக்கக்கூடாது என்பது சாஸ்திரத்துக்குப் பொருந்தாத விளக்கம். இந்நாளில் விஷயம் தெரியாதவர்களின் விளக்க உரைகள் அதிகமாகக் காதில் படுகிறது. எதை விளக்குவதானாலும் காரிய காரணத்தோடு விளக்கவேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அதுமட்டுமே ஏற்றுக்கொள்ளும் தகுதியுடையது சாஸ்திரத்துக்குப் புறம்பான விளக்கங்களைத் தழுவி, துயரத்தில் மூழ்கியிருக்கும் இளைஞர் சமுதாயத்தை நீரில் அமிழ்த்துவது அறமல்ல. வீட்டைச் சுற்றி மரங்கள் இருக்கலாம். விருட்சாயுர்வேதம் என்ற நூலை ஆராய்ந்தால், வீட்டைச் சுற்றி மரங்கள் வளர்க்கலாம் என்ற முடிவுக்கு வருவோம். சில மரங்கள் கிட்டே இருக்கலாம். சில மரங்கள் எட்டி இருக்கவேண்டும் என்று அது கூறும்.

சார்ங்கதர பத்ததியில் 'உபவன வினோதம்' என்ற பகுதியில் நந்தவனத்தை உருவாக்கும் நடைமுறை இடம்பெற்றுள்ளது. 'வீட்டில் தோட்டம் எங்கு இருக்கவேண்டும்... என்னென்ன மரங்களை நடலாம்... என்ன உரம் போடலாம்... அவற்றின் இடைவெளி... வளர்க்கும் முறை... பயன்பாடு... என்று அனைத்தும் உள்ளது. அதில் வில்வ மரமும் உண்டு.

பெரியோர் சொல்வதைக் கேட்கவேண்டும். அவர் மனம் புண்படும்படி எதிர்த்துப் பேசக்கூடாது என்ற நல்லெண்ணத்தை பயன்படுத்தி, தேவையற்ற விளக்கங்களை அள்ளி வீசுவது பரிதாபம். பாமரர்களது கபடமற்ற நெஞ்சில் பொருத்தமில்லாத அறிவுரைகள் பதிவது தேவையற்ற கேள்விகளைத் தோற்றி வைக்கிறது. கடவுள் அருளட்டும்.

தென்னை, மா, பலா, வேம்பு போன்ற மரங்களின் வேர்கள் வீட்டைத் தாக்காத அளவில் எட்ட வளர்ப்பது அவசியம்.

வில்வம், வேப்ப மரம் போன்றவை மற்ற மரங்களை புழு-பூச்சி தாக்காமல் காப்பாற்றும் ஆற்றல் படைத்தவை. ஆகையால் சுகாதாரக் கண்ணோட்டத்தில் அவை இருப்பது நல்லது.

முருங்கை போன்ற இடையூறு விளைவிக்கும் மரங்களை இதோடு சேர்க்காமல் எட்டியே வளர்க்கவேண்டும். வில்வத்தில் அத்தனை உருப்படிகளும், மருத்துவ குணம் நிறைந்தவை. எப்படி வாழை முழுமையாகப் பயன்படுகிறதோ, அதுபோல் வில்வமும் மிகுந்த பயனுள்ளது. அதை வளர்க்கலாம். வீட்டையொட்டி வளர்ப்பது சிறப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிறைகளைப் பார்ப்பதன் தாத்பர்யம் என்ன?

சில கோயில்களில் சாமிக்குப் பக்கத்திலேயே அந்தந்த சுவாமியின் மனைவியர் இருக்கிறார்கள். ஆனால், பெருமாள் கோயில்களில் மட்டும் சுவாமியின் மனைவி சந்நிதானம், 'தாயார் சந்நிதி' என்று தள்ளி இருக்கிறதே ஏன்?

- கே. ஸ்ரீதர், கோவை-42.

லிங்க வடிவில் தோன்றிய ஈசன் 'சிவனே' என்று தனியாகவே சந்நிதியில் இருப்பார். அம்பாளுக்குத் தனி சந்நிதி இருக்கும். அதுபோல் தாயாருக்கும் தனி சந்நிதி இருக்கும். வள்ளி-தேவயானையோடு விளங்கும் முருகன், லக்ஷ்மி நாராயணன் போன்ற வடிவங்களுக்கு மட்டுமே சந்நிதி ஒன்றாக இருக்கும். பிரதான மூலவருக்குத் தனி சந்நிதி இருக்கும். பரிவாரங்களுக்குத் தனி சந்நிதி. கோயிலில் பிரதான தெய்வத்தை வைத்து சந்நிதிகள் தோன்றும்.

மதுரையில் மீனாட்சிக்குத் தனி சந்நிதி. சிதம்பரத்தில் நடராஜருக்குத் தனி சந்நிதி. ஆகம விதிகள் தனியாகவும் சேர்த்தும் சந்நிதிகளை வைக்கச் சொல்கிறது. வணங்கச் செல்லும் நாம், விதிகளை ஆராயத் தேவையில்லை. அவற்றிலுள்ள குறைபாடு பக்தனை பாதிக்காது. ஆகையால் ஆராய்ச்சியை விட்டுவிட்டு ஆன்மிகத்தில் நுழையுங்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கோயிலில் கருவறைக் கதவு அடைக்கப்பட்ட பிறகு, அந்தக் கருவறை உள்ள பிராகாரத்தை வலம் வரலாமா?

- பி. செல்வராஜ், மேலக்கிருஷ்ணன்புதூர்.

நடை சாத்தப்பட்டாலும் கடவுள் சந்நிதியையும் பிராகாரத்தையும் வலம் வரலாம். காலை பூஜை முடிந்த பின் கருவறையை மட்டும் சாத்திவிட்டுப் போவார்கள். கோயிலை முழுவதுமாக மூடுவதில்லை. கோயிலின் பிரதான வாயில் திறந்திருக்கும். பொதுமக்கள் வந்து போவதற்காகவே இந்த ஏற்பாடு. இப்படி வலம் வரும்போது நடை சாத்தப்பட்டிருந்தாலும், நம் மனம் முன்பு பார்த்த அந்த தெய்வத்தை நினைவு கூரும். கதவால் மறைக்கப்பட்ட கடவுள், மனக் கண்ணில் தென்படுவார். திறந்திருந்தால் கண்கள் பார்க்கும். ஆனால், மனம் ஒன்றியிருக்குமா என்பதற்கு உத்திரவாதம் இல்லை. சாத்தியிருந்தால் கண்கள் பார்க்காது. ஆனால், மனம் அவரை நினைக்கும். கதவு சாத்தியிருந்தாலும், உங்கள் வழிபாட்டுக்குக் குந்தகம் ஏற்படாது!

சுவரில் மாட்டப்பட்டிருக்கும் சுவாமி படங்களுக்கு நேராகக் கால் நீட்டி படுக்கலாமா?

- ச.ஆ. கேசவன், இனாம் மணியாச்சி.

சாமி படங்களை ஏன் சுவரில் மாட்டுகிறோம்? தரையை நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தால்தான். போதுமான வசதி இல்லாத அறையில் தங்கவேண்டிய நிர்ப்பந்தம்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சுவரில் சாமி படங்களை மாட்ட வைக்கிறது. ஆகையால், காலை நீட்டிப் படுப்பதில் தவறில்லை. ஆனால், அந்த எண்ணத்தில் சுவரில் சாமி படங்களை மாட்டாதீர்கள். எண்ணம் தப்பாக இருக்கக் கூடாது.

கிழக்கு நோக்கிக் கால் வைத்துப் படுக்கிறோம். அங்கு ஆதவன் இருப்பதால், அதை அபசாரம் என்று சொல்ல முடியுமா? நமது அறையில் கிழக்கு நோக்கிப் படுக்கத்தான் வசதி இருக்கிறது என்றால், அது தவறாகாது. அதுபோல் சாமிக்கு நேரே கால் நீட்டிப் படுக்காமல் இருக்க வசதி இருந்தால், அப்படிப் படுப்பதைத் தவிர்க்கலாம். தவறு இல்லையானாலும் 'தவறு' என்று மனம் எண்ணிவிட்டால் கலக்கமுறும். அது சிந்தனையை பாதிக்கும். படிப்பு, அனுபவம் இரண்டையும் பெற்று, மனம் தெளிவு பெறும் வரை மனதில் ஏற்படும் எண்ணத்துக்கு மதிப்புக் கொடுங்கள். அது தங்களை நல்வழிப்படுத்தும்.

சிலர் ஈர ஒற்றை ஆடையுடன் வீட்டில் சுவாமியை வணங்குகிறார்கள். இது தவறா? ஸ்நானத்துக்கு விதிகள் இருந்தால் கூறுங்களேன்?

- எஸ். விஜயா, திருச்சி-13.

ஆறு, குளம் ஆகியவற்றில் நீராட வேண்டும். நீராடல் உடல் தூய்மையோடு, உள்ளத் தூய்மையையும் அளிக்கும். உடல் முழுவதும் தண்ணீருக்கு உள்ளே அமிழும்போதுதான் நீராடல் முற்றுப் பெறும். தண்ணீரை மொண்டு தலையில் விட்டுக் கொள்வதும், உடம்பை மட்டும் தண்ணீரால் கழுவுவதும் ஒப்புக்குச் செய்யப்படும் நீராடல். தண்ணீரில் முழுகி நீராடுவது சிறப்பு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நீராடல் மனதுக்குப் புத்துணர்ச்சியை உண்டு பண்ணும். நீராடும் தறுவாயில் தண்ணீரின் குளிர்ந்த தாக்கத்தால் உறக்கத்தில் உடலில் பரவியிருக்கும் சூடு, ரோமக்கால்கள் வழியே வெளி வரும். 'அந்தச் சூடு அடிவயிற்றில் இருக்கும் அக்னியைத் தூண்டி விடுவதால், பசி ஏற்பட வழி வகுக்கிறது!' என்று ஆயுர்வேதம் கூறும்.

சுகாதாரத்துக்கும் நீராடல் தேவை. உடல் தூய்மை, உள்ளத் தூய்மையோடு இணைந்தாலே பயனளிக்கும். உள்ளே அழுக்கான பனியனை அணிந்துகொண்டு, வெளியே பகட்டான உடை அணிவது சுகாதாரத்தை பாதிக்கும். நீராடாமலே புது உடை அணிந்து கொள்வதும் அப்படியே. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்ற வார்த்தை பொருள் பொதிந்தது. நீராடும்போது மனம் கடவுள் பெயரைச் சொல்லவேண்டும். 'ராமா, கிருஷ்ணா, கோவிந்தா, கோபாலா...' என்று சொல்லும்போது மனதும் தூய்மை பெறுகிறது.

வேதம் பயின்றவர்கள், மந்திரங்களைச் சொல்லி நீராட வேண்டும். நீராடும்போது அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் கடுமையாக இருக்கும். புனிதமான வேதத்தைக் காக்க அவர்கள் உடலும் உள்ளமும் அப்பழுக்கு அற்றதாக இருக்க வேண்டும் என்பதால், நிபந்தனைகள் அதிகம். மற்றவர்களுக்கு சாஸ்திரம் விதியைத் தளர்த்திவிடும். அது அதன் இயல்பு. 'அறத்தைச் செயல்படுத்தும் சிறப்பு உருப்படி உடல்!' என்று காளிதாசன் கூறுவான். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். அதன் சுகாதாரத்துக்கு, இயற்கை தந்த அறிவுரை நீராடல்.

கண் உபாதைகளுக்குத் தயார் செய்யப்படும் மருந்துக்கு இயற்கையின் தூய்மையான தண்ணீரை எதிர்பார்க்கும் ஆயுர்வேதம். விண்வெளியிலிருந்து நேராக விழும் மழைத் தண்ணீரை வைத்து 'ஸ்படிகம்' என்னும் கண் மருந்தை ஆயுர்வேதம் தயாரிக்கும். இயற்கைத் தூய்மை, செயற்கைத் தூய்மையைவிடச் சிறந்தது. நீராடல் இயற்கைத் தூய்மையை உறுதிப்படுத்தும். உடல் நலம் குன்றியவர்களுக்கு தண்ணீரில் மூழ்குவது ஆபத்து எனில் நீராடுவதைத் தவிர்க்கவேண்டும். அதற்கு பதிலாக விபூதியை உடலில் பூசிக்கொள்ளலாம். இதுவும் நீராடலுக்குச் சமம் என்கிறது தர்மசாஸ்திரம்.

தண்ணீரால் நீராடுவதை 'வாருண ஸ்நானம்' என்றும் விபூதியைப் பூசிக்கொள்வதை 'ஆக்னேய ஸ்நானம்' என்றும் சொல்வார்கள். சுத்தம் செய்யத் தண்ணீர் பயன்படுவதுபோல், நெருப்பும் பயன்படும். தங்கத்தில் இருக்கும் அழுக்கை அகற்ற நெருப்பைப் பயன்படுத்துவார்கள். நெருப்பு அதாவது அக்னி சுத்தம் செய்யும். பசுமாட்டுச் சாணியை அக்னியில் பஸ்பமாக்கியதுதான் விபூதி. சாணி சுத்தம். அதோடு அக்னியின் தொடர்பும் சுத்தத்தைச் சிறப்பிக்கிறது. அதை அணியும்போது உடலும் உள்ளமும் தூய்மை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பெறும். கிராமங்களில் சாயங்கால வேளைகளில் மாட்டு மந்தைகள் வீடு திரும்பும். பசுக்களின் கால்கள் பட்டு மேலே கிளம்பிய தூசி காற்றில் நமது உடம்பில் பட்டால் உடலும் உள்ளமும் சுத்தமாகி விடும். 'கோதூளி ஸ்நானம்' என்று இதற்குப் பெயர். மண் இயற்கை சுத்தத்தோடு இருக்கும். குளம்பின் காலடி பட்டு, காற்றின் இணைப்பில் சுத்தப்படுத்தப்படுகிறது மண். அந்த மண் பட்டாலே உடலும் சுத்தமாகும் என்பது சாஸ்திரத்தின் கணிப்பு. இதற்கு 'வாயவ்ய ஸ்நானம்' என்று பெயர்.

சில நேரம் மழை பொழியும்போது வெயிலும் தோன்றும். அந்த வேளையில் தென்படும் மழைத் தண்ணீரை உடம்பில் பட வைப்பது, நீராடலுக்கு ஒப்பாகும். இதற்கு 'திவ்ய ஸ்நானம்' என்று பெயர். தலை முதல் கால் வரை மந்திரம் சொல்லி தண்ணீரைத் தெளித்துக் கொள்வதும், நீராடலுக்கு ஈடாகும். 'ராமா, கிருஷ்ணா, சிவசம்போ, ஹரே, மாதவா, கோவிந்தா...' என்று கடவுள் பெயரைச் சொல்லி தண்ணீரை உடம்பில் தெளித்துக் கொள்ளவேண்டும். மனம் கடவுள் பெயரைச் சொல்லும். கை தண்ணீரை உடம்பில் தெளித்துக்கொள்ளும். இதற்கு 'ப்ரோக்ஷண ஸ்நானம்' என்று பெயர். தர்மசாஸ்திரத்தின் செயல்பாடுகள் அத்தனையும் நீராடலுக்குப் பிறகே தொடங்குகிறது. தண்ணீரில் நீராட இயலாதவர்கள் மேற்குறிப்பிட்டவற்றில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து, உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக்கிக் கொள்ளவேண்டும் என்பது சாஸ்திரத்தின் பரிந்துரை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உலர்ந்த ஆடை இருந்தும், அதைக் கட்டிக்கொள்ளாமல் ஈரமான ஆடையோடு கடவுள் வழிபாடு செய்வது தவறு. இக்கட்டான சூழலில் பயன்படுத்தலாம் என்ற ஒரு சலுகையை, நாம் சட்டமாக்கக் கூடாது. எல்லா அறங்களிலும், ஆபத்துக் காலத்துக்கென்று சில சலுகைகள் இருக்கும். அதை பொது அறமாக நாம் மாற்றி அமைப்பது தவறு.

ஆதவன் தோன்றுவதற்கு முன்னே நீராடல் நிகழவேண்டும். 'எனது பாவத்தைப் போக்கவும், கடவுளை மகிழ்விக்கவும் நீராடலைச் செயல்படுத்துகிறேன்!' என்று சொல்லவேண்டும். காலத்தையும் தேசத்தையும் குறிப்பிட்டு நீராட வேண்டும். தண்ணீரை உடலில் தெளித்துக்கொள்ள வேண்டும். 'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா, கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே' என்று சொல்லி தெளித்துக் கொள்வது சிறப்பு. வேதம் பயின்றவர் சூக்தங்களையும் சேர்த்துச் சொல்லவேண்டும். கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ நீரில் மூழ்கவேண்டும். வேதம் கற்றவர் அப்போது அகமர்ஷண சூக்தத்தையோ, காயத்ரி மந்திரத்தையோ சொல்லலாம். கடைசிப் பட்சமாக ஓம் என்ற பிரணவத்தைச் சொல்லலாம். கடவுள் பெயரைச் சொல்லியும் முழுகலாம்.

முழுகிய பிறகு தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இறந்த முன்னோருக்கும், தண்ணீரை இரு கைகளாலும் அள்ளிவிட்டு வணங்க வேண்டும். குளியலறையில் தண்ணீரை மொண்டு குளித்தாலும், கிழக்கு நோக்கியோ, வடக்கு நோக்கியோ நின்று நீராட வேண்டும். கடவுள் பெயரைச் சொல்லி நீராடுவது சிறப்பு. மனம், சொல், செயல் ஆகியவற்றால் நிகழ்ந்த தவறுகள் ராம நாமத்தால் அகன்றுவிடும் என்கிறது சாஸ்திரம். *(மானஸம் வாசிகம் பாபம் கர்மணா ஸமுபார்ஜிதம்... ஸ்ரீராம ஸ்மரணே நைவ வ்யபோஹ தி நஸம்சய:)*



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இளம் பருவத்திலிருந்து இந்தப் பழக்கத்தைத் தொடர்ந்தால் செயல்படுத்துவது சுலபமாகிவிடும்!

மூன்றாம் பிறை, நான்காம் பிறை ஆகியவற்றைப் பார்ப்பதன் தாத்பர்யம் என்ன?

- மீனா ரெங்கநாதன், சென்னை-33.

மூன்றாம் பிறைச் சந்திரன், வளர்பிறை. கண்ணுக்குப் புலப்படும் பிறை. முன்பிறைகள் விண்வெளியில் பளிச்சென்று தெரியாது. வளரும் சந்திரனைப் பார்ப்பது நமது வளர்ச்சிக்கு உதவும் என்று தர்மசாஸ்திரம் சொல்லும். சந்திரன் தேய்ந்த வடிவில் தென்பட்டாலும், படிப்படியாக வளரும் திறமையோடு இருப்பவன் என்பதால், முளையில் இருக்கும் நமது முன்னேற்றமும் படிப்படியாக வளரும் என்பது திண்ணம். தேய்ந்தும் வளர்ந்தும் இருப்பது சந்திரனின் இயல்பு. அது நம் மனதுக்கும் பொருந்தும்; துயரத்தில் தேய்ந்தும், மகிழ்ச்சியில் வளர்ந்தும் தென்படும். சந்திரனை மனதோடு ஒப்பிடும் ஜோதிடம். மன வளர்ச்சிக்கு சந்திரனின் பங்கு முக்கியமானது என்றும் அது கூறும். சூரியனில் மறைந்து கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தவன் இப்போது உலகத்தின் பார்வைக்குத் தென்படுகிறான். அது மூன்றாம் பிறை. பஞ்சாங்கத்தில் மூன்றாம் பிறையை மக்கள் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் 'சந்திர தரிசனம்' அதாவது சந்திரனைப் பார்க்கும் வேளை என்று குறிப்பிட்டிருக்கும்.

ஆயிரம் சந்திரனைப் பார்த்தவன் சதாபிஷேகம் செய்து கொள்கிறான். நீண்ட ஆயுள் இருப்பவனுக்கு சதாபிஷேகத்தில் மகிழ வாய்ப்பு இருக்கும். மூன்றாம் பிறையைப் பார்த்தவர்களுக்கு ஆயிரம் என்ற எண்ணிக்கையுடன் சதாபிஷேக வைபவத்தையும் அவர்களுக்கு வழங்குவான் மூன்றாம் பிறைச் சந்திரன் என்ற நம்பிக்கை நம்மவர்களுக்கு உண்டு. பண்டைய காலத்தில் கிராமத்தில் வாழும் முதியோர்கள் சிரமம் பாராமல் மூன்றாம் பிறையைப் பார்த்து மகிழ்வர். அதைக் கடமையாகப் பின்பற்றுவார்கள். நம் குழந்தைகளுக்கும் அந்தப் பண்பு வளரவேண்டும்.

பார்த்துத் தெரிந்துகொண்ட விஷயங்கள் குழந்தைகளிடம் அதிகமாக இருக்கும். மனதைப் பண்படுத்தும் பழைய நம்பிக்கைகள் பலவற்றை நாம் உதாசீனத்தால் இழந்துவிட்டோம். சுறுசுறுப்போடு சிறுகச் சிறுக வளர்ந்தால் முழு வளர்ச்சியை எட்டிவிடலாம் என்ற படிப்பினையை மூன்றாம் பிறைச் சந்திரன் நமக்கு அறிவுறுத்துகிறான். ஈசனும் உமையும் கணேசனும் பிறைச் சந்திரனை தலையில் வைத்துக் கொண்டாடுகிறார்கள். சந்திர மௌலி, பாலச்சந்திரன் என்ற பெயர்கள் அவர்களுக்குப் பெருமை அளிக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஒருமுறை சந்திரலோகத்துக்கு விஜயம் செய்தார் கணபதி. கையில் கொழுக்கட்டை ஏந்திய கணபதியின் தோற்றத்தைப் பார்த்து ஏளனம் செய்தான் சந்திரன். அன்று பிள்ளையார் சதுர்த்தி. கோபமுற்ற கணபதி, 'சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாவார்கள்!' என்று சபித்தார். மனம் கலங்கிய சந்திரன் மன்னிக்கும்படி வேண்டி, அவரை வழிபட்டார். சாப விமோசனம் கிடைத்தது. அதோடு மூன்றாம் பிறையைப் பார்ப்பவர்களுக்கு முழு மகிழ்ச்சி பொங்கும் என்று அருளினார். சதுர்த்தி சந்திரனைப் பார்த்து வீண் பழிக்கு ஆளானான் கண்ணன். கணபதியை வேண்டி பழியில் இருந்து விடுபட்டான். சதுர்த்தி சந்திரனைப் பார்த்தவர்கள் கண்ணனின் ஸ்யமந்தக வரலாற்றைச் சொன்னால் பழியிலிருந்து விடுபடுவார்கள் என்று புராணம் தெரிவிக்கிறது. சொல்ல வேண்டிய செய்யுள் இதோ...

சிம்ஹ: ப்ரசேனமவதீத்
சிம்ஹோ ஜாம்பவதா ஹத:
ஸுகுமாரக மாரோதீ:
தவ ஹ்யேஷ ஸ்யமந்தக:

Sri Vedachalem Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Printed Books

சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

கற்றறிந்த அறிஞர்கள் மத்தியில் தலைசிறந்த ஆன்மிக ஞானம் பெற்றவர்.

சென்னை சமஸ்கிருதக் கல்லூரியில் முதல்வராக இருந்தவர். காஞ்சி சங்கர மடத்தின் பஞ்சாங்க கமிட்டி தலைவராக இருக்கிறார். சமஸ்கிருத மொழியில் ஆழ்ந்த புலமை பெற்ற இவர், இப்போதும் ஏராளமான மாணவர்களுக்கு சமஸ்கிருத உயர்கல்வி போதித்து வருகிறார். ஆயுர்வேத மருத்துவத்திலும் கரைகண்டவர் சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

வேதம், புராணம், தர்ம சாஸ்திரம், மன நலம், உடல் நலம், கலாசாரம் போன்ற பல துறைகளிலும் வாசகர்கள் எழுப்பும் ஏராளமான கேள்விகளுக்கு விளக்கமாகவும் ஆணித்தரமாகவும் இவர் கொடுத்து வரும் விளக்கங்கள் சிலிர்க்க வைப்பவை.

மூட நம்பிக்கைக்கு எதிரான விஞ்ஞானமே மெய்ஞானம் என்பது சாஸ்திரிகளின் ஒவ்வொரு விளக்கத்திலும் நமக்குப் புலனாகிறது.

ஐயம் போக்கும் ஆன்மிகம்

(பாகம் 3)

❁ ஓர் ஊரில், மண்டையில் தேங்காய் உடைக்கும் வழக்கத்தை மாற்றிக்கொள்ள மறுக்கிறார்களே... தங்கள் கருத்து என்ன?

❁ கடவுள் அளக்க முடியாத உருவம் உடையவர். அப்படி இருக்க... தெய்வத்தின் கைகளில் அநேக ஆயுதங்கள் இருப்பது ஏன்?

❁ மடாதிபதிகள், கையில் ஒரு தண்டத்துடன் காணப்படுகிறார்களே... ஏன்?

❁ பெண்கள் பூஜை அறையில் பூஜை செய்யும்போது மணி அடிக்கலாமா?

❁ 'பகைவனைக் கொல்!' என்கிறது பகவத் கீதை. 'பகைவனை நண்பனாக்கிக் கொள்!' என்கிறது திருக்குறள்... விளக்கம் தேவை?

❁ சித்தர், யோகி, சாது, மகான், ஞானி, முனிவர், ரிஷி- இவர்கள் சாமியார்களா? அப்படியெனில் ஏன் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள்?

❁ அமிர்த யோகம், சித்த யோகம், மரண யோகம் -இவற்றால் என்ன விளைவு?

❁ 'தவறு செய்யவில்லை' என்பதை, ஒளிரும் கற்பூரத்தில் கை வைத்துச் சத்தியம் செய்வதை ஏற்றுக் கொள்ளலாமா?

❁ சம்ஸ்கிருதத்தை ஏன் தேவபாஷை என்கிறார்கள்? தேவர்களுக்கு அது மட்டும்தான் புரியுமா?

- இதுபோன்ற எண்ணற்ற சந்தேகங்களுக்கு ஐயம் திரிபற பதில் அளிக்கிறார் ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

IYAM POKKUM ANMIGAM (Volume 3)

Rs. 75

ISBN 978-81-8476-068-2

9788184760682

விகடன் பிரசுரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi